மதியம் திங்கள், ஜூன் 9, 2008

கர்மகாண்டம்

அனைவருக்கும் வணக்கம்.
திரும்பி வந்தாச்சு!
இப்பதான் புதுவை நண்பர் பேசிட்டு போனை வைத்தார்.
அது எப்படி மழை பெய்யும்ன்னு சொன்னேன்னு அவருக்கு ஆச்சரியம்!

ஆறாம் தேதி வேத பாடசாலை துவக்கம் நல்ல படியா போச்சு. ஆறு குழந்தைகள் சேர்ந்து இருக்கிறாங்க. இப்பதான் அழுகை எல்லாம் நின்னு சரியாகி இருக்கு. எல்லாமே அம்மவை விட்டு விட்டு இருக்கோமேன்னுதான்!
கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம் மேதா தக்ஷிணா மூர்த்தி ஹோமம் எல்லாம் பண்ணோம்.

நேத்து கோடி காயத்திரி ஜபம் செய்த நிறைவா ஆயிரம் ஆவர்த்தி காயத்திரி ஹோமம்.
ப்ரோக்கிராம் என்னன்னா சங்கிராந்தி ஆரம்பித்து தனி சங்கல்பத்தோட காயத்திரி ஜபம் செய்யணும். தனியா குறிச்சு வைக்கணும். ஆளுக்கு இலட்சம் இலக்கு. ஜப காலம் 4 மாசம். முடிந்த பிறகு ஹோமம்.
பூர்வாங்கம் எல்லாம் முடித்து ஹோமம் ஆரம்பிக்க மணி காலை 9.
ஹோமம் முடிக்கிறப்ப பண்ணிரண்டரை.
பிறகு வைத்து இருந்த காயத்திரி படத்திற்கு பூஜை.
வந்து இருந்த எல்லாருக்கும் சாப்பாடு.
எல்லாம் ஏறக்கட்டி வீட்டுக்கு வர மணி 4.

முன்னிரவில் மேகங்கள் கூடி மழை பெய்ய ஆரம்பித்தது. பலத்த மழை சுமார் அரை மணி.

இந்த ஹோமம் நடக்கிறப்ப பாக்க வந்த நண்பர் கேட்டததைதான் மேலே சொன்னேன்.
இப்பதான் அவர் திருப்பி போன் பண்ணி கடலூர்ல பெஞ்ச மழை 4 செ.மீ ன்னு வானிலை இலாக்காவை கேட்டு தெரிஞ்சுகிட்டேன்னார்!

நாம் செய்ய வேண்டிய கர்மாக்களை செய்ய நமக்கு பலன் கிடைக்கும். வேற என்ன?
இப்படியாக கர்ம காண்டத்தை இன்னிக்கு துவக்கறோம்.

---

மதியம் செவ்வாய், ஜூன் 10, 2008

கர்ம வழி -சம்ஸ்காரங்கள்

பக்தி பற்றிய பதிவுகளை இப்ப நிறுத்திக்கறோம். தற்காலிகமாதான். இன்னும் நிறைய விஷயங்கள் பார்க்கலை. அது எல்லாம் அடுத்த சுற்றில பிழைத்திருந்தால் பார்க்கலாம்.

அடுத்த வழியான கர்ம வழியை இப்ப பார்க்கலாம்.
இதில் கொஞ்சம் சரியான புரிதல் வேண்டி இருக்கு.

பக்தியோ எல்லாருக்கும் பொதுவானது. அரசனுக்கு ஒரு பக்தி ஆண்டிக்கு ஒரு பக்தி இல்லை.
ஏன்னா பக்திக்கு முக்கியமா வேண்டிய மனசை பகவான் எல்லாருக்குமே கொடுத்து இருக்கான்.

கர்மா அப்படி இல்லை. செயல்கள் முக்கியமானதாலே அதற்கு தேவையான அறிவு, சக்தி, பணம் எல்லாம் பொருத்து, யார் யாருக்கு என்ன என்ன செய்கைகள் ன்னு வரையறுத்து வச்சிட்டாங்க.
பெரிய பெரிய வேலைகளா போனபோது இன்னின்னாருக்கு இன்னின்ன வேலைன்னும்

வரையறுக்க வேண்டி இருந்தது. இது ஊர் கூடி தேர் இழுக்கிறதுதான். தேர் ஓடி நிலைக்கு வரதுதான் முக்கியம். யார் இழுக்கிறாங்க என்பது இல்லை. அவரவர் உடல், புத்தி, பண பலத்துக்கு ஏற்ப அவரவர் பங்கு நிர்ணயம் செய்தாங்க. இதுவே வர்ணாஸ்ரம தர்மமாக இருக்கு. அந்த அந்த இடங்கள்ல தேவையானதை சுட்டிக்காட்டறேன்.
பாரம்பரியமா கர்மா என்பதை அந்த அந்த வர்ணத்துக்கு உரிய தர்மங்கள் பின்னணிலேயே எடுத்துக்கணும்.

ஹிந்துக்களுக்கு நாற்பது சம்ஸ்காரங்கள்னே விதிச்சாங்க.
(அதென்னப்பா சம்ஸ்காரம்? பண்புப்பதிவு.)
இந்த சம்ஸ்காரத்தோட நிலைமை இப்ப எப்படியிருக்குன்னு பாக்கலாமா?
முதல்ல ஒரு பட்டியல் போடலாம்

கர்பாதானம் - சந்ததி பெற உடல் உறவு.
பும்ஸவனம்
சீமந்தோன்நயனம் என்கிற பிறக்கப்போகிற குழந்தைக்கான கர்மா
ஜாதகர்மா என்கிற குழந்தைக்கான கர்மா
நாமகரணம் - பெயர் வைக்கிறது
அன்ன ப்ராசனம் - முதல் முதல் அன்னம் ஊட்டுகிறது
சௌளம் என்கிற குடுமி வைக்கிற கர்மா
உபநயனம் என்கிற வேத அத்தியயனம் செய்ய தகுதி பெறும் கர்மா

ப்ராஜாபத்ய விரதம்
ஸௌம்ய விரதம்
ஆக்னேய விரதம்
வைச்வதேவ விரதம்
அவை எல்லாம் அந்த அந்த வேத காண்டங்களை அத்தியயனம் செய்ய தகுதி வளத்துக்கிற கர்மாக்கள்.

ஸமாவர்தனம் பிரம்சர்ய ஆசிரமத்தை விடுகிற கர்மா
விவாஹம் அதாங்க "கல்யாணம்"
தேவ யக்ஞம்
பித்ரு யக்ஞம்
மனுஷ்ய யக்ஞம்
பூத யக்ஞம்
ப்ரம்ஹ யக்ஞம்.
{இதெல்லாம் என்னன்னு அப்புறம் பாக்கலாம்।}
உணவு சமைத்து செய்கிற பாக யக்ஞங்கள் ஏழு
ஹவிஸ் என்கிற அவி கொடுத்து செய்கிற யாகங்கள் மொத்தமாக ஏழு
சோம ரஸத்தை கொடுத்து செய்கிற ஸோம யாகங்கள் ஏழு.
இறந்த பின் பண்ணுகிற அந்த்யேஷ்டி என்கிற இறுதிக்கடன்
ஆக மொத்தம் 40।

யப்பாடா! பட்டியல் போடவே இந்த பதிவு சரியா போச்சு!

---

மதியம் புதன், ஜூன் 11, 2008

மாற்றங்கள்

ஆக மொத்தம் 40......

இப்ப நமக்கே தெரியும் இதெல்லாம் என்ன நிலைலே இருக்குன்னு। முதலாவது சும்மா குஷிக்காக ஜாம் ஜாம்னு நடக்குது. கடைசி வேற வழியில்லாம ஏதோ நடக்குது. விவாஹம் எப்படியோ நடக்குது. பலர் ஜாத கர்மா முதல் எல்லாத்தையும் கல்யாணத்துக்கு ஒரு நாள்

முன்ன செய்கிறங்க. :-(

வாழ்க்கையில ஏராளமான விஷயங்கள் கெட்டுப்போய்கிட்டே இருக்கிறது மாதிரி பலதும் காணாமப்போச்சு। சாஸ்திரோக்த (சாஸ்திர உக்த =சாஸ்திரங்கள் சொன்ன) படி எவ்வளவு நடக்கிறது என்று பாக்கவே பயமாயிருக்கு.

க்ஷத்திரியர்கள் சண்டைகள் போட்டு அதிலேயே காலம் கழிந்து ஆசாரங்களை விட்டாங்க. வைச்யர்கள் திரைக்கடலோடியும் திரவியம் தேடு ன்னு ஓடிஓடியே ஆசாரங்களை விட்டாங்க. சூத்திரர்கள் விதிக்கப்பட்ட பல ஆசாரங்களை tradition என்பதாலேயே பின்பற்றி வந்தவங்க. அவங்களும் மாறிகிட்டே இருக்காங்க.

அந்தணர்களை பத்தி பெரிய யோசனையா இருக்கு। வேதங்களும் சாஸ்திரங்களும் சொல்கிற படி பாத்தா எவ்வளவு பேர் க்வாலிஃபை ஆவாங்க என்பது தெரியலை। என்னையும் சேத்துதான் சொல்கிறேன்। ப்ராமணத்துவம் பிறப்பில் மட்டும் இல்லையேப்பா। நடத்தையும்தானே. சொத்து சேத்து வைச்சுக்காதே ன்னு ஆரம்பிச்சு சொல்ல ஆரம்பிச்சா "சரி, நான் ப்ராமணன் இல்லன்னு ஒத்துக்கிறேன். நீங்க உங்க வேலைய பாருங்க. நான் என் வேலையை பாக்கிறேன்!" என்று சொல்லிடுவாங்கன்னு நினைக்கிறேன்.

மாறுதல்தான் வாழ்கையின் இயல்பு என்றாலும் இந்த மாதிரி அடிப்படையானவை மாறி இருக்கக்கூடாது.
அதனால நான் பெரியவனா நீ பெரியவனா என்கிற சர்ச்சை இல்லாம நம்மால எவ்வளவு முடியும்னு பாத்துக்கிட்டு போகலாம்.

---

மதியம் வியாழன், ஜூன் 12, 2008

## ३ கடன்கள்

மேலே சொன்ன அத்தனையும் பண்பு பதிவுகள் ஏற்பட வாழ்நாள்ல ஒத்தர் செய்ய வேண்டிய கர்மாக்கள். இதெல்லாம் செய்தா என்ன கிடைக்கும்? அந்த அந்த கர்மாக்களுக்கு பலனா சொல்லி இருக்கிறது கிடைக்கும் என்றலும் நாம் முக்கியமா பார்க்க வேண்டியது ஆத்ம குணங்கள் அதாவது பண்புகள் வரும் என்கிறதுதான். அதனாலதான் அதுக்கெல்லாம் சம்ஸ்காரம்ன்னு பேர் வெச்சு இருக்காங்க.

நம்ம எல்லாருமே மூணு கடன்களோட பிறக்கிறோம். தேவ கடன், ரிஷி கடன், பித்ரு கடன். தேவ கடன் எப்படி வந்தது? தேவர்கள் இயற்கை சக்திகள் மேல இருக்கிற ஆளுமையாலே நமக்கு மழை பெய்ய வைச்சு நாம உயிர் வாழ உதவுகிறதால. இதை தேவர்களை ஆராதிப்பதால தீர்க்கணும்.

ரிஷிகள் நமக்கு வேத மந்திரங்களை கண்டு கொடுத்து உதவினதால அவங்களுக்கு கடன் பட்டு இருக்கோம். இத வேதங்களை அழிஞ்சு போகாம காப்பாத்தறதால தீர்க்கலாம். வேதம் கத்துக்க அதிகாரம் /கடமை இருக்கிறவங்க அதை செய்கிறதாலேயும் மற்றவங்களுக்கு சொல்லி கொடுக்கிறதாலேயும் தீர்க்கணும். மற்றவர்கள் இந்த முயற்சிகளுக்கு உடல் உழைப்பு பொருள் உதவி செய்யணும்.

மூன்றாவதா பலரும் சரியா செய்யாம அவஸ்தை பட்டுகிட்டு இருக்கிற நீத்தார் சடங்குகள். இந்த மூணையும் செய்கிற விதங்கள்ல வேறுபாடு இருந்தாலும் எல்லாருமே செய்ய வேண்டியவைதான்.

---

மதியம் வெள்ளி, ஜூன் 13, 2008

## கர்மாக்கள் வகை

கர்மாக்கள் சிலது தினசரி செய்ய வேண்டியவை. இத நித்திய கர்மாங்கிறாங்க. சிலது அப்பப்ப செய்ய வேண்டியவை. இவை நைமித்திய கர்மாக்கள்। பிறந்த நாள் மண நாள்- ஆமாங்க!

---

மாரியேஜ் அனிவர்சரி வைதிக விசேஷமானது- அப்படி பலதும்। சிலது சில விஷயங்களுக்கு ஆசை பட்டுகிட்டு அதுக்குன்னு செய்கிறது। உதாரணமா நோய் தீரணும் கல்யாணமாகணும் குழந்தை பிறக்கணும் இப்படின்னு சிலது. இதெல்லாம் காம்ய கர்மா.

சொல்லப்போற பல விஷயங்கள் பழக்கம் போயிட்டாலும் ஓரளவு எல்லாத்தையும் சொல்லத்தான் போறேன். செய்யறோமோ இல்லையோ முதல்ல தெரிஞ்சுப்போமே. அப்புறமா தேவையா இல்லையா முடியுமா முடியாதான்னு பாத்துக்கலாம்.
நம்ம பெரியவங்களும் நம்மோட ஒவ்வொரு செயலையுமே இறையுணர்வோட இணைச்சு இருக்காங்க।காலை ஏர்லி மார்ணிங் எய்ட் ஓ க்ளாக் எழுந்துக்கிறதுலிருந்து ஒவ்வொண்ணுமே.

வழக்கம் போல இத படிக்கிறப்ப இதெல்லாம் நம்மால முடியாதுப்பா ன்னு தோணும். நானும் வழக்கமான பதிலை சொல்றேன். முடியாதுன்னு நினைக்காம எவ்வளவு முடியும் னு பாப்போம்.

காலை சூரியன் உதயமாகும் முன்னே வானம் சிவப்பா இருக்கில்லையா. அதுக்கு அருணோதய காலம்னு பேர். அந்த நேரத்துலேயே குளிக்கிறது சிறப்பானது. ஆமாம் குளிக்கிறது கூட ஒரு கர்மாதான். புனிதமான நதிகளிலே தீர்த்தங்களில சில விசேஷமான காலங்களில குளிக்க சங்கல்பமே உண்டு.
புறத்தூய்மை நீரான் அமையும்ன்னு சொல்லி இருக்காங்களே.

---

மதியம் வெள்ளி, ஜூன் 13, 2008

சூரிய உபாசனை

குளித்த பின்னே சூரிய உபாசனை। இந்த உலகத்துக்கே சக்தி தரது சூரியன்தான்। அதன் ஒளிலதான் தாவரங்கள் உணவு தயாரிக்குது। இதை சாப்பிட்டு உயிர் வாழ்கிற ஜீவன்கள் அவற்றை உணவா கொள்கிற ஜீவன்கள் இப்படின்னு பாக்கப்போனா எல்லாருமே உயிர் வாழ்கிறது சூரியனாலதான். அந்தணர்கள் ஒரு சந்தியாவந்தனம் என்கிற கடனாகவே செய்தாலும் எல்லாருமே தண்ணீரை சூரியனை நோக்கி வீசி எறிந்து வணங்கி வழிபடலாம்.

பெண்களுக்காக சூரிய உபாசனை திடீர்னு சமீபத்தில கிடச்சது। பொதுவா இருக்கிற அதை இதோ பிடிங்க.

ஒரு முறை ஹிருதயம் வரை செல்லும்படி உள்ளங்கையில் கொஞ்சம் தண்ணீர் எடுத்து குடித்து விட்டு..

கிழக்கு நோக்கி நிற்கவும்.

பின் வரும் ஸ்லோகங்களை சொல்லி இதமர்க்யம் என்று வரும்பொழுது அர்க்கியம் கொடுப்பது. அதாவது தண்ணீரை இரண்டு கைகளாலும் தாங்கி ஸ்லோகம் சொல்லி முடித்தபின்:
1) நதி முதலிய நீர்நிலை எதிரே இருந்தால் அதில் எறிய வேண்டும்.
2) அல்லது அதற்கு வசதிப்படாவிட்டால், ஒரு சுத்தமான இடத்திலோ பாத்திரத்திலோ விரல்கள் நுனி வழியாக கீழே விட வேண்டும்.

க 3 ணாதி4 ப ஸூராத்4 யக்ஷ சிந்தாமணி க 3 ணேச'வர
ஸித்3 தி4 தா3 யக விக்4 னேச' க்3 ரு'ஹாணார்க்4 யம் நமோஸ்துதே.

க 3 ணபதயே நம: இத 3 மர்க்4 யம்.
க 3 ணபதயே நம: இத 3 மர்க்4 யம்.
க 3 ணபதயே நம: இத 3 மர்க்4 யம்.

ரஜ்ஜு-வேத்ர-கசா'பாணே காச்'யபே க 3 ருடா3 க்3 ரஜ

---

அர்க்க-ஸூதாருண-ஸ்வாமின் க்3 ரு'ஹாணார்க்4 யம் நமோஸ்துதே.

அருணாய நம: இத 3 மர்க்4 யம்.
அருணாய நம: இத 3 மர்க்4 யம்.
அருணாய நம: இத 3 மர்க்4 யம்.

ஏஹி ஸூர்ய ஸஹஸ்ராம்சோ' தேஜோராசே' ஜகத்பதே
அனுகம்பய மாம் ப 4 க்த்யா க்3 ரு'ஹாணார்க்4 யம் நமோஸ்துதே.

ஸூர்யாய நம: இத 3 மர்க்4 யம்.
ஸூர்யாய நம: இத 3 மர்க்4 யம்.
ஸூர்யாய நம: இத 3 மர்க்4 யம்.

இதன் பிறகு பின் வரும் மந்திரங்களால் பஞ்சாங்க நமஸ்காரம், அதாவது ஸாஷ்டாங்க நமஸ்காரம் போல் உடல் முழுதையும் நிலத்திலிடாமல் மண்டியிட்டு நமஸ்காரம் செய்வது. (பெண்கள் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாகாது, அது உசிதமாயிராது.)

1) மித்ராய நம: , 2) ரவயே நம:, 3) ஸூர்யாய நம:
4) பா4 னவே நம:, 5) க 2 கா3 ய நம:, 6) பூஷ்ணே நம:
7) ஹிரண்யக 3 ர்பா4 ய நம:, 8) மரீசயே நம:, 9) ஆதி3 த்யாய நம:
10) ஸவித்ரே நம:, 11) அர்க்காய நம:, 12) பா4 ஸ்கராய நம:

பின் பிரார்த்தனை:

காம-க்ரோதா4 தி3 பி4 ர்-மூடா4 பாதகம் நு கரோம்யஹம்
ஸர்வ-பாப-க்ஷயம்' க்ரு'த்வா ரக்ஷ மாம் த்3 யுமணே ப்ரபோ4
ஆயுர்-ஆரோக்3 யம் ஐச்'வர்யம்' ஜ்ஞானம் வித்தம் ப்ரயச்ச 2 மே
ஸ்வர்க 3 ம் அப்யபவர்க 3 ஞ்ச ஜக 3 தீச்'வர பா4 ஸ்கர

பின் ஒரு முறை உள்ளங்கையில் கொஞ்சம் தண்ணீர் எடுத்து குடிக்க வேண்டும்.

சாராம்சம்: ஹே ஸூர்யனே, என் பாபங்களை விலக்கி ஆயுள், ஆரோக்கியம், நோய் நிவர்த்தி, ஐஸ்வர்யம், அறிவு, மோக்ஷம் இவற்றை அருளுவாயாக.

முக்கிய குறிப்பு: இதை வீட்டுக்கு விலக்காக இருக்கும் 4 நாட்கள் செய்யலாகாது.

---

மதியம் திங்கள், ஜூன் 16, 2008

அக்னி உபாசனை.

அடுத்து அக்னி உபாசனை. சூரியன் மறைமுகமா உதவறான். அக்னியோட உதவி நேரடியானது.

பல விதமா இருக்கிற அக்னி உபாசனைல எல்லா கிருஹஸ்தர்களும் செய்ய வேண்டியது ஔபாசனம்.

திருமணத்துக்கு பின் ஒரு கர்மா மூலம் அக்னியை எற்படுத்திக்கொண்டு, அந்த அக்னியை அணையாமல் பாதுகாத்து வைத்துக்கொண்டு தினமும் காலையும் மாலையும் கொஞ்சம் களஞ்சு உலர்த்தின அரிசியால் ரெண்டு ஹோமம். காலை சூரியனையும் மாலை அக்னியையும் உத்தேசிச்சு. அதிகபட்சம் 15 நிமிஷம் ஆகும். என்ன, வீட்டு சொந்தக்காரர் ஒத்துக்கணும். வீட்ட காலி பண்ணா வெள்ளை அடிச்சு தரேன்னு சொல்லிப்பாக்கலாம்.

புகை வருமே, அது உடம்புக்கு கெடுதல்னு நினைக்க வேண்டாம். சாஸ்திரங்கள் எது நல்லது

செய்யும் எது கெட்டது செய்யும்னு தெளிவாகலே சொல்லி இருக்கு. சொல்லப்பட்ட பொருட்களை கொண்டு செய்கிற ஹோமங்களால உண்டாகிற புகை நல்லதே செய்யும்.

அந்தணர்களுக்கு வேத மந்திரங்களோட ஹோமம் என்றால் இதே மற்றவங்களுக்கும் உண்டு. வேதம் கற்றுக்கொள்ளாததால நமஹ என்றே ஹோமம்.
சாதாரணமாக பெண்களுக்கு ஹோமங்கள் செய்ய அதிகாரம் இல்லைன்னு சொல்கிறாங்க இல்லியா?

ஆனால் ஔபாஸனம் செய்ய அதிகாரம் இருக்கு. கணவன் வீட்டிலேயே இல்லைனாலும் இவங்களே 7 வேளை வரை மந்திரமில்லாமல் செய்யலாம்.
அக்னிக்கு முதல் உரிமை பெண்களுக்குதான். ஐயா வீட்டிலேயே 3 நாள் இல்லைனாலும் அக்னி இருப்பார். ஆனால் இல்லத்தரசி ஊரை விட்டோ, ஆற்றை தாண்டியோ போய் விட்டால் அக்னி இருக்க மாட்டேன்னு கிளம்பிடுவார். அப்புறம் திருப்பி உத்பத்தி செய்யணும்.

பெண்களை நசுக்கறாங்க ன்னு ஒரு புகார் இருக்கு இல்லையா? அதை விட ஏமாத்து வேலை இருக்க முடியாது. ரங்கமணிகளுக்கு *பத்னி இல்லாமல் ஒரு சிலது தவிர வேறு எந்த கர்மாவும் செய்ய அதிகாரம் இல்லை.*

ஒரு சிறுவன். குருகுலத்துல சேர்ந்தான். குரு இவனை தன்னோட அக்னிகளை பாதுகாக்க சொல்லி வேலை கொடுத்தார். இவனும் அதை விடாம குரு பக்தியோட செய்து வந்தான். மத்தவங்களுக்கு பாடம் எடுத்தாரே ஒழிய இவனுக்கு பாடமே எடுக்கலை. சிறுவனும் அதைப்பத்தி யோசனை எல்லாம் செய்யாம அக்னிகளை பாதுகாக்கிறதுலேயே இருந்துட்டான். சில பல வருஷங்கள் ஆச்சு. கூட சேர்ந்த மத்த பசங்க வேத பாடம் முடிச்சு போயாச்சு. இவன் இன்னும் அதே காரியம் செய்யறான்.

ஒரு நாள் குரு வெளியே போயிருந்த போது சிறுவன் வழக்கம் போல அக்னிகளை பாதுகாத்து வெச்சுட்டு அக்னிசாலையை விட்டு வெளியே போனான். அப்ப அக்னிகள் மூணும் ஒண்ணுக்கொண்ணு பேசிக்கிட்டாங்க. "இந்த பையன் பாவம், இன்னும் இங்கேயே இருக்கான். இவளவு நாளா நம்மை பாதுகாத்து பணிவிடை செஞ்சான். நாம என்ன செய்யலாம்?" அவங்களுக்குள்ளே பேசி ஒரு முடிவுக்கு வந்தாங்க. பையனை கூப்பிட்டாங்க. அவனும் பவ்யமா வந்தான். சும்மா அப்படியே பையனுக்கு வேதம் போதிச்சு பிரம்ம வித்யை வர அனுகிரஹம் செஞ்சிட்டாங்க. பூரணமான வேத அறிவு பையனுக்கு அப்படியே வந்து சேர்ந்தது.

வெளியே போன குரு திரும்பி வந்தார். பையனோட முகத்தில பிரம்ஹ தேஜஸை பாத்த உடனேயே அவருக்கு ஏதோ புரிஞ்சது. பையனை "என்னப்பா ஆச்சு நான் இல்லாதப்ப" ன்னு கேட்டார். அவன் அடக்கமா, " தெரியலை குருவே, அக்னிகள் தமக்குள்ளே ஏதோ பேசிக்கிட்டாங்க" ன்னு பதில் சொன்னான்.

அக்னி உபாசனையால பிரம்ஹ வித்யை கிடைச்சிட்டதுன்னு குருவும் உணர்ந்துகிட்டு அவனை ஆசீர்வாதம் பண்ணி அனுப்பினார்.

---

மதியம் செவ்வாய், ஜூன் 17, 2008

தேவ பூஜை

அடுத்து தேவ பூஜை। இறைவனுக்கு நிவேதனம் செய்யாத உணவை சாப்பிடக்கூடாது ன்னு பெரியவங்க சொல்றாங்க. பூஜை நமக்கு கிடைக்கிற நேரத்தை பொறுத்து சின்னதாவோ விஸ்தாரமாவோ வச்சுக்கலாம். இது கல்பங்கள் ன்னு சொல்கிற வழிமுறை புத்தகங்கள்ல சொன்னபடி இருக்குமானா நல்லது। இல்லை நம் வசதி போல அமைச்சுக்கலாம். பக்தி பத்தி பார்க்கிறப்ப வைதேய பக்தி, கிரம பக்தின்னு பாத்தமில்லை? அது போல.

நேரமே இல்லைங்கிறவங்க கூட சாமி படத்துகிட்ட ஒரு விளக்கு ஏத்தி வெச்சு, ரெண்டு வத்தி

ஏத்தி புகை காட்டி, மூணு பூ வெச்சு, நாலு உலர்ந்த திராட்சை, கற்கண்டு நிவேதனம் பண்ணி கீழே விழுந்து வணங்கிட்டு போய்கிட்டே இருக்கலாம். இதுக்கெல்லாம் அஞ்சு நிமிஷம் மேல ஆகுமா? மனசு வரணும். :-))

சீரியஸா பூஜை செய்ய நினக்கிறவங்க எவ்வளவு நேரம் கிடைக்குமோ அப்படி பூஜையை அமைச்சுக்கலாம். பஞ்சாதயனப்பூஜையே 2 மணி செய்யலாம்; 15 நிமிஷத்துலேயும் செய்யலாம். எல்லாம் அவரவர் மனசை பொறுத்தது.

எதானாலும் நல்லா யோசிச்சுட்டே இறங்குங்க. பூஜை இறைவனோட சேர்க்கிறத்துக்கு பதிலா கோபம் வரும் சுமையா மாறிடக்கூடாது. அவசரமா அவசரமா பூஜை செய்கிறதுல அர்த்தமே இல்லை.

இங்க பெண்கள்கிட்ட தாங்க்ஸ் வாங்கிகிட்டு ரங்கமணிகள் வயத்தில கொஞ்சம் புளியை கரைக்க போறேன்.

வீட்டு பூஜைய யார் செய்யணும்?
ஆண்கள்தான்.

ஆண்கள் செய்கிற எல்லா கர்மாக்களோட பலனும் மொத்த குடும்பத்துக்கே போய் சேரும். செய்கிறவருக்கு 50% பலன்தான். கர்மாவுக்கு உதவுகிறதாலேயே மீதி மனைவிக்கு போய் சேரும். இந்த விதி ஆண்கள் செய்கிற புண்ணிய காரியங்கள் அத்தனைக்கும் பொருந்தும். அப்ப பாவ காரியங்கள் பண்ணா அதே மாதிரிதானே? அப்படின்னு கேட்டா அப்படி இல்லே. ஆண்கள் செய்கிற பாவ காரியங்கள் பலன் முழுக்க அவருக்கேதான். இது அக்கிரமமா தோணுதா? கொஞ்சம் இருங்க.

சரி பெண்கள் செய்யற பாவ புண்ணியங்கள் பலன் யாருக்கு? புண்ணியங்கள் பலன் அத்தனையும் அவங்களுக்கேதான். போனா போகுது. பாவமும் அப்படித்தானே? இல்லியே! 50% பாபம் அவங்களோட கணவனுக்குதான். எங்க போறீங்க? கொடி தூக்கவா? இதுல இருக்கிற லாஜிக்கை சொல்லுங்களேன்.

---

மதியம் புதன், ஜூன் 18, 2008

பூஜை ஏன் இப்படி?

பூஜையை நம்ப பெரியவங்க வகுத்து வெச்சு இருக்கிறதுலேயும் ஒரு முறை இருக்கு.

ஒரு பெரியவர் - நமக்கு தெரிஞ்சவர் நம்ம வீட்டுக்கு வரார்।
அப்ப என்ன செய்வோம்?
வாங்க வாங்கன்னு கூப்பிடுவோம்।
பழைய வீடுகள்ல உள்ளே அழைச்சு போய் உட்கார வைப்பாங்க।கை கால் கழுவ, குடிக்க தண்ணீர் கொடுப்பாங்க।
நடந்த களைப்பு போக தண்ணீர் குடிச்ச பின்னே குளிக்க ஏற்பாடு। உடம்புக்கு தகுந்தாப்பலே கிணத்து தண்ணி இல்லைனா உடம்பு வலிக்கு இதமா வென்னீர்। அப்புறம் உடம்பு துடைச்சு உடுத்திக்க துணி। பிறகு அவர் மனசுக்கு பிடிச்ச மாதிரி கொஞ்சம் பேசறோம்। அப்புறமா சாப்பாடு। முடிஞ்சு வெத்திலை பாக்கு।சாப்பிட்டதற்கு தக்ஷிணை;। பெரியவராச்சா! நமஸ்காரம் செய்து ஆசீர்வாதம் வாங்கிக்கிறோம்। அவர் கிளம்ப வண்டி தயார் செய்து கொடுக்கிறோம்।

இதே போல பூஜையை யோசிச்சு பாருங்க.

இறைவனை தியானம் செய்து அழைத்து ஆவாஹனம்। ஆசனம் கொடுத்தல்; பாதங்கள்ல நீர் வார்க்கிறது। கைகள்ல நீர் வார்த்தல்। அப்புறம் ஆசமனம்- அதாவது தண்ணீர் கொடுத்தல்।

---

நீராட்டல்; ஆசமனம்; உபவீதம் என்கிற பூணூல் அணிவித்தல்; உடை அணிவித்தல்। நகைகள் பூட்டுதல்। பூக்களால அர்ச்சனை; தூபம் என்கிற வத்தி யால் புகை காட்டுதல்; நெய் விளக்கு காட்டுதல்; செய்து இருக்கிற உணவை நிவேதனம் செய்தல்; வெற்றிலை பாக்கு சமர்ப்பணம்; கூடம் காட்டுதல்; மந்திரங்களாலும் துதித்தல்; ஸ்வர்ண புஷ்பம் என்று தங்க புஷ்பத்தை சமர்ப்பித்தல்; சுத்தி வந்து நமஸ்காரம்; கண்ணாடி காட்டி, யானை/ ரதம் ஏதாவது ஒண்ணுல ஏத்திவிட்டு பிறகு செய்த பூஜை பலன் எல்லாத்தையும் இறைவனுக்கே சமர்ப்பிக்கிறோம்। இப்படி செய்கிறதை ஷோடோபசார பூஜை என்கிறாங்க.

ஏன் இப்படி எல்லாம் செய்கிறோம்?

இது நமக்காக। பின்னே, எல்லாம் இருக்கிற - எல்லாமாயும் இருக்கிற இறைவனுக்கு நாம் தரக்கூடியது என்ன இருக்கு? அவனுக்கு என்ன வேண்டும்? அவன்கிட்டேதான் எல்லாம் இருக்கே?
அவனுக்கு என்ன வேணும்ன்னு நமக்கு தெரியாது।
அவன் எப்படி இருக்கிறான்னு கூட தெரியாது। நமக்கு புரியணுமேன்னு அவனையும் நம்ம மாதிரி ஒரு உருவம் கொடுத்து வெச்சு இருக்கோம்। நமக்கு என்ன எல்லாம் வேணுமோ அதெல்லாம் அவனுக்கும் வேணும்ன்னு நினைச்சு கொடுக்கிறோம்।
இதெல்லாம் நம்மோட லிமிடேஷன்। அவனோடது இல்லை.

---

மதியம் வியாழன், ஜூன் 19, 2008

பூஜை தொடர்ச்சி

இதுல இருக்கிற லாஜிக்கை சொல்லுங்களேன்.....

ஆண்கள் பூஜை செய்ய பெண்கள் உதவணும். பூஜை செய்கிற இடத்தை மெழுகி கோலம் போட்டு, பூக்கள் போன்ற தேவையான பொருட்களை கொண்டு வந்து வைத்து நிவேதனம் செய்ய ஏதேனும் தயார் பண்ணி - இப்படி பல வேலைகளை ஒழுங்கா செய்து இருந்தாதான் நிம்மதியா பூஜையை ரங்கமணி செய்யலாம். இல்லாவிட்டால் எங்கே வில்வம் காணோம், நிவேதனம் கொண்டு வர இவ்வளவு நேரமா ன்னு ஆரம்பிச்சு பல பிரச்சினைகள் துவங்கி பூஜை செய்கிற குறிக்கோளே போயிடும். கடேசில கோபம்தான் மிஞ்சும்.
அதனால பூஜைக்கு உதவற தங்கமணிகளுக்கு 50% புண்ணியம்.

மனைவி செய்கிற புண்ணிய காரியத்திலே இந்த மாதிரி பங்கு ஏதும் இல்லாம போகிற வாய்ப்பே அதிகம். அதனால அவங்க புண்ணியம் முழுக்க அவங்களுக்கே.

மனைவி தப்பு பண்ணா சரியா சொல்லிக்கொடுத்து செய்ய வைக்காத தப்பு ரங்கமணிது. அதானால 50% பாபம் ரங்கமணிக்கு.

ரங்கமணி செய்கிற தப்புக்கு தங்கமணி பாவம், என்ன பண்ணுவா? முழு பொறுப்பு ரங்குக்கு. அதனால பாபம் முழுக்க அவனுக்கே!
என்ன தங்கமணிகளே சரிதானே?

பூஜைகள்ல ஆயிரத்து எட்டு விதங்கள் இருக்கிறதால அதுக்குள்ள இப்ப போகலை. அடுத்ததா...

வேத அத்யயனம் செய்தவர்கள் இதற்கு பிறகு வேத பாடங்களை சொல்லணும். அவரவருக்கு கிடைக்கும் அவகாசப்படி ஒரு பாரா முதல் ஒரு அத்தியாயம் வரை சொல்கிறதால ரிஷி கடன் தீரும்.
வேத அத்தியயனம் செய்யாதவர் இறையுணர்வோட பதிகங்கள், பாசுரங்கள், ஸ்லோகங்கள் என்று தெரிஞ்சத சொல்லலாம்.
இதெல்லாமும் எவ்வளவு நேரம்ன்னு வரையறை இல்லை. முடிந்த வரை அதிகமா சொல்ல முயற்சி செய்யனும்.

---

பிறகு ஜீவனத்துக்கு பொருள் சேக்க போகணும்।

அப்பாடா இதுக்கெல்லாம் நேரமே கொடுக்க மாட்டீங்களோன்னு நினைச்சேன்!

---

மதியம் வெள்ளி, ஜூன் 20, 2008

வேலை

பிறகு ஜீவனத்துக்கு பொருள் சேக்க போகணும்.

அப்பாடா இதுக்கெல்லாம் நேரமே கொடுக்க மாட்டீங்களோன்னு நினைச்சேன்!.....

அப்படி இல்லைங்க சாஸ்திரங்களும் கல்பங்களும் ரொம்பவே ப்ராக்டிகலானவை. நமக்கு ஏற்படக்கூடிய பல கஷ்டங்கள அப்பவே தெரிஞ்சு வழி முறைகள் வகுத்து கொடுத்து இருக்காங்க.

தர்மத்துக்கு விரோதம் இல்லாம பொருள் சம்பாதிக்கணும்.
வாங்கிற காசுக்கு வேலை கட்டாயம் செய்யணும்.
குல ஆசாரப்படி வேலைன்னு முன்னே சொல்லி இருக்காங்க.
பொதுவா கல்வி ஊட்டுதல் பிராமணர்களுக்கு. வியாபாரம் வைசியர்களுக்கு. தோள் வலிமையை ஒட்டிய வேலைகள் க்ஷத்திரியர்களுக்கு. உடல் உழைப்பு வேலை சூத்திரர்களுக்கு. கணக்கில இல்லாத பல வேலைகள் இப்ப வந்துட்டதாலே அங்கே எல்லாம் பூந்து பாக்க வேண்டாம்.

சேர்க்கிற பொருளை நிர்வாகம் செய்யறது தனியா பாக்கலாம். 1/6 ராஜாவுக்கு; அதாவது tax. இப்ப இருக்கிறா இருப்பில யாருக்கும் அரசாங்கங்கள் மேல நம்பிக்கை இல்லை. அதனால எப்படி குறைச்சலா வரி கொடுக்கலாம்ன்னு பாக்கிறோம். 1/6 தர்ம காரியங்களுக்கு. மீதி நமக்கு. இப்படி சேர்க்கிற பொருளை செலவு செய்கிறவனுடைய பொருள் பாபம் இல்லாதது என்கிறாங்க. இவங்ககிட்டே இருந்து யாரும் தைரியமா தானம் வாங்கிக்கலாம்.

இப்படி இல்லாவிட்டா அந்த பொருள் ஏதோ ஒரு வழில தண்டமாதான் போகும். அல்லது கர்ம வினை மூட்டைல சேந்துகிட்டே போகும்.

பொருள் சம்பாதித்துவிட்டு வந்து மதிய உணவுக்கு முன்னால சில கர்மாக்கள்.

---

மதியம் திங்கள், ஜூன் 23, 2008

5 யக்ஞங்கள்

அப்புறம் மதியம் வீட்டுக்கு வந்து குளிக்க வேண்டும். அந்தணர்களுக்கு மதியம் சூர்ய உபாசனை உண்டு. (மாத்யான்ஹிகம்).

காலை பிரம்ம யக்ஞம் செய்யவில்லையானால் இப்போது செய்யணும்.

பிறகு தேவ ரிஷி பித்ரு தர்ப்பணங்கள் செய்யனும். அதாவது தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் முன்னோர்களுக்கும் நீரால் அஞ்சலி கொடுத்தல். நீரை பூமியில்தான் வார்க்கணும். அப்படி ஒரு வேளை சந்தர்ப்பம் இல்லையானால் ஒரு பாத்திரத்தில் கொடுத்துவிட்டு பின்னால் பூமியில் கொட்டிவிடலாம்.

இதுவரை பூஜை செய்ய விட்டுபோனால் இப்போது செய்யலாம்.

அடுத்து பஞ்ச மஹா யக்ஞம் என்கிற கர்மாக்களை செய்யணும்.

பித்ருக்களுக்கு, தேவர்களுக்கு, மனிதர்களுக்கு, புழுக்களுக்கு என்று பலவற்றுக்கும்

---

அன்னமிடுதல். அந்தணர்களுக்கு வைச்வதேவம் என்கிற கர்மாவும் உண்டு. (இதை செய்தாலே பஞ்ச மஹா யக்ஞம் ஆகிவிடும் என்று ஒரு கருத்தும், இல்லை அது வேறு என்று ஒரு கருத்தும் இருக்கிறது.)

அக்னியில் ஒரு சமித்தாவது ஹோமம் செய்வது தேவ யக்ஞம்; பித்ருக்களுக்கு உணவளிப்பது பித்ரு யக்ஞம்; பூதங்களுக்கு பலி தருதல் பூத யக்ஞம். மனிதர்களுக்கு உண்விடல் மனுஷ யக்ஞம் என்று சுருக்கமாக சொல்லலாம்.

வைச்வதேவம்: அடுப்பு, உலக்கை/உரல், குழவி/அம்மிக்கல், நீர் பாத்திரம், முறம் மாதிரி சில இடங்கள்ல ஜீவ ஹிம்சை ஏற்படும். (இந்த காலத்துல காஸ்/ எலக்டிகல் ஸ்டவ், கிரைண்டர், மிக்ஸி, வாட்டர் ப்யூரிபையர் ன்னு சொல்லனுமோ?) இதெல்லாம் பயன்படுத்தாம இருக்கவும் முடியாது. இதுக்கெல்லாம் பிராயச்சித்தமா இந்த கர்மா. சில தேவதைகளை உத்தேசிச்சு அன்னம் இடுவாங்க.

அடுத்து பூத யக்ஞம். பலி இடுதல். நம்ம வீட்டை சுத்தி சில பூதங்கள் இருக்கும். பயப்பட வேண்டாம். அவை அனேகமா நல்லவைதான். மனித உடம்பு அல்லாத உடம்பில இருக்கிறதால பூதம்ன்னு சொல்றோம்.

இந்த கர்மா அவரவர் குல ஆசாரப்படியோ அல்லது அவரவர் சாகையில் எப்படி சொல்லி இருக்கோ அப்படி செய்யணும். என்னா அதுல நிறையவே வகைகள் இருக்கு. நீர் தேவதைகள், ஔஷதி தேவதைகள், வீடு, வீட்டு தேவதைகள், வாஸ்து தேவதைகள், இந்திரன், இந்திர புருஷர்கள், யமன், யம புருஷர்கள், வருணன், வருண புருஷர்கள், ஸோமன், ஸோம புருஷர்கள், ப்ரம்மா, ப்ரம்ம புருஷர்கள், விச்வே தேவதைகள், எல்லா பூத கணங்களும், திவா (நான் இல்லைங்க!) அதாவது பகலில் சஞ்சரிக்கிறவர்கள், நக்தம் - இரவு சஞ்சரிக்கிறவர்கள், வடக்கே ராக்ஷஸர்கள் தெற்கே பித்ருக்கள்- அவ்ளோதாங்க ஆராதிக்கிற பூதங்கள். இப்படி சௌனகர் சொல்லி இருக்கார் . சும்மா ஒரு சாம்பிளுக்கு எழுதினேன்!
:-))

காக்கைகளுக்கும் நாய்களுக்கும் உணவிடறதும் இதுலே சேத்துக்கலாம்.

அடுத்து மனுஷ்யயக்ஞம்.

---

மதியம் புதன், ஜூன் 25, 2008

அதிதி

அடுத்து மனுஷ்யயக்ஞம். அதாவது மனிதர்களுக்கு உணவளிக்கிறது. யாரும் வராங்களான்னு பால் கறக்கிற அவகாசம் வாசல்ல பாக்கணுமாம். அதிதி யாரும் கிடைத்தால் அத்ருஷ்டம். இல்லையானா இன்னைக்கு பாக்கியம் இல்லையேன்னு வருந்திவிட்டு சாப்பிட போகலாம்.

அந்த காலத்தில மக்கள் என்ன மாதிரி மனசோட இருந்திருக்காங்கன்னு தெரிய வரப்ப ஆச்சரியமா இருக்கு.

அதிதி என்பது யாருன்னா "அலோ! உங்க வீட்ல இன்னிக்கு சாப்பிட வரேன். உருளை கிழங்கு பொடிமாஸ் பண்ணி வைங்க" ன்னு சொல்லிட்டு வரவர் இல்ல. நெடும் தூரம் நடந்து களைத்தவன், அப்படின்னு ஆரம்பிச்சு ஒரு பட்டியலே இருக்குங்க. சுருக்கமா சொன்னா முன்ன பின்ன தெரியாத தகுதியான நபருக்கு உணவிடணும். சாப்பாட்டை பத்தி பிரச்சினையே இல்லைங்கிறது போது பல சமூக பிரச்சினைகள் வராதே.

இன்ன ஜாதியார்தான் அதிதி என்றும் இல்லை. வீட்டு ஆசார அனுஷ்டானங்களை ஒட்டி இலையை வேறு இடத்துல போட்டாலும் போடலாம், போடாம இருக்கக்கூடாது.

---

அந்தணர்களாக இருந்தா அதிதி பூஜையும் செய்வது உண்டு.

யதிகள் (சன்னியாசிகள்), பிரம்மசாரிகள், பிரவாசிகள் (யாத்திரையில் இருப்பவர்), தரித்திரமாக இருக்கிறார்களோ அவர்கள், இவர்கள் எல்லாம் பிக்ஷை பெற தகுதி உள்ளவர்கள். (அக்னியை பயன்படுத்தக்கூடாத) சன்னியாசிகளுக்கும், பிரம்மசாரிகளுக்கும் அன்னமாகவும், கிருஹஸ்தர்களுக்கு அரிசியாகவும் பிக்ஷை இடவேண்டும்.

அதிதிகள், வீட்டு பெரியவர்கள், சிறுவர்கள், சுவாசினி எனப்படும் திருமணமான பேரிளம் பெண்கள்.கர்ப்பிணிகள்.உடல்நிலை சரியில்லாதவர்கள், வீட்டு வேலைகாரர்கள் இவர்களுக்கு எல்லாம் உணவு போட்டு விட்டுதான் வீட்டு யஜமானன் சாப்பிடணும்.

---

மதியம் வியாழன், ஜூன் 26, 2008

அதிதி பூஜை

வைச்வதேவத்தின் முடிவில் வருகிறவன் நல்ல அதிதியாம். அவனை குலம், கோத்திரம், ஆசாரம்,வேதம், சாஸ்திரம் முதலியது விசாரிக்காமல் அதிதி பூஜை பண்ணு என்கிறது சாஸ்திரம்.
அவனை வியாசராகவே பார்க்கிறாங்க பல ரிஷிகள். இவருக்கு அதிதி பூஜை செய்வது யூபம் (யக்ஞங்கள்ல நடுகிற ஒரு கம்பம்) இல்லாத யக்ஞமே என்கிறாங்க.

அதிதி பூஜையாவது எதிர் கொண்டு அழைக்கிறது, களைப்பு தீர தண்ணீர் தருகிறது, கால் அலம்பி விடுகிறது, கையில் ஜலம் கொடுக்கிறது, நடந்து வந்தவன் காலுக்கு தைலம் கொடுக்கிறது (வலிக்கா? தெரியலை) ஆசனம் கொடுக்கிறது, உணவிடுகிறது, களைப்பாற படுக்கை இப்படி விவரிக்கிறாங்க.

சாங்கமாக அத்தியயனம் செய்த வேத பிராமணன், ஆச்சார்யன், ருத்விக் (யக்ஞம் செய்விப்பவர்) ராஜா, மாமனார், மாதுலன் (மாமா) ஆகியோருக்கு மது பர்க்கம் கொடுக்கணுமாம் (கடந்த ஒரு வருஷதுக்குள்ள வராமல் இருந்தால்.) மது பர்க்கம் என்பது தேனுடன் பாலோ தயிரோ சேர்த்தது.

எதிர் கொண்டு அழைக்கிறதால சூர்யனும், நல்ல வார்த்தைகளால ஸரஸ்வதியும், நல்வரவு சொல்கிறதால் அக்னியும், ஆசனம் கொடுப்பதால இந்திரனும், கால்களை அலம்புவதால பித்ருக்களும், உணவால பிரஜாபதியும், படுக்கை தருவதால ப்ரம்மா விஷ்ணு மஹேஸ்வரர்களும் ப்ரீதி அடைகிறங்களாம்.

இதையே உன் வசதிக்கு தகுந்தபடி பண்ணு; பத்னி மக்களுக்கு குறைவானாலும் பரவாயில்லை; அதிதிகளுக்கும், வீட்டு வேலைகாரர்களுக்கும் கொடுக்காம இருக்காதே என்கி றாங்க. உணவிட முடியலையா தண்ணீர் கொடு; படுக்கை இல்லையா, படுக்க இடம் கொடு போதும்; இப்படி வசதி இல்லாதவங்களுக்கும் சொல்லி இருக்கு.

யார் அதிதி பூஜை செய்கிறார்களோ அவர்கள் அடையும் லோகங்களை வேதம் படித்தவன், யாகங்கள் செய்பவன், தபஸ் செய்பவன் கூட அடைவதில்லை ன்னு சாதாதபர் சொல்கிறார்.

மாலை வைச்வதேவம் போது வராவிட்டாலும் அப்புறமும் வந்தால் அவன் அதிதியே. இவன் சூர்யோடன் எனப்படுவான். இவனை நிச்சயமா மறுக்கக்கூடாது. பாவம் அவன் ராத்திரி வேளையில் எங்கே போவான்? அப்படி செய்தால் பகல் அதிதியை மறுப்பவன் அடைகிற பாவத்தை விட 8 மடங்கு பாபம் சேரும்.

அதே கிராமத்தில் வசிப்பவனாகவோ ஒரே நபர் இரண்டாவது நாள் வந்தாலோ அதிதி ஆக மாட்டார். ஒரே கிராமத்தில் இருந்து கொண்டு அதிதி பல வேஷம் போடுபவனை நிந்திக்கிறது

சாஸ்திரம். அதே போல குலம், கோத்திரம் எல்லாம் சொல்லி அதனால சாப்பாடு போடு என்று கேட்பவன் வாந்தாசீ - வாந்தி எடுத்ததை புசிப்பவன்- ஆகிறான் என்கிறது. அடுத்த ஜன்மத்தில் அன்னமிட்டவன் வீட்டில் பசுவாக பிறப்பான்.

யார் அதிதி பூஜை செய்யாமல் மறுக்கிறார்களோ அவர்கள் புண்ணியம் அத்தனையும் ஆசையுடன் வந்த அதிதி கொண்டு போகிறான். வந்தவன் பாபங்கள் அனைத்தும் மறுத்தவனுக்கு சேருகிறது. அவன் வீட்டில் பித்ருக்கள் பதினைந்து வருஷங்கள் வர மாட்டார்கள். அவன் என்ன யாகங்கள் செய்தாலும் நூறு குடங்கள் நெய்யால் ஹோமங்கள் செய்தாலும் பலன் கிடைக்காது.

இப்படியாக மனுஷ யக்ஞம் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது.
இந்த காலத்தில் இது சிரம சாத்தியமாக இருந்தாலும் அந்த காலத்தில் எந்த மாதிரி வேல்யூஸ் நம் முன்னோர்கள் வைத்து இருந்தார்கள் என்பது சிந்தனை செய்ய வேண்டியது.

---

மதியம் வெள்ளி, ஜூன் 27, 2008

உணவு உண்ணல்

சரி சாப்பிட உக்காரலாமா?

உணவு உண்ணல்

அட, இது எப்படி கர்மால சேத்தி?

எப்படி கர்மால சேத்தின்னு யோசனை செய்யறீங்களா?
உண்பது பிராண அக்னி ஹோத்திரம்ன்னு சொல்கிறாங்க.

கை கால்கள் வாய் இவற்றை சுத்தம் செய்துகிட்டுதான் சாப்பிட உக்காரணும்.சாதாரணமாக இரண்டு வேளை சாப்பாடு சாஸ்திர சம்மதம்.
சந்தோஷமா சாப்பிடணும். கோபத்தோடயோ சண்டை போட்டுக்கிட்டோ சாப்பிட உக்காரக்கூடாது.

மற்றவர்களுக்கு உணவிட்ட பின்னே ஆசமனம் செய்து / நீர் அருந்தி விட்டு ஏகாந்தமாக அமரணும்; குறிப்பா அதிகமா சாப்பிடுகிறவர்கள். கால்கள் பூமியில் படுகிற மாதிரி உக்கரணும். மேல் துணி இருக்கணும்.
உட்காருகிற ஆசனம் மண்ணாலோ, பலாசத்தாலோ, இரும்பாலோ செய்ததா இருக்ககூடாது. பிளவு பட்டு இருக்கக்கூடாது.
தட்டு போடுகிற இடத்தை சுத்தம் செய்யணும்.

தட்டு தங்கம் (ஆஹா! அப்படி கொடுத்து வெச்சவங்க யாரும் உண்டா?!) வெள்ளி, வெண்கலம் (கிருஹஸ்தர்கள் மட்டும்) ஆகியவற்றில் இருக்கலாம். வாழை இலை மிக உசிதமானது. புரச இலை தாமரை இலை இவற்றை கிருஹஸ்தர் தவிர மத்தவங்க உபயோகிக்கலாம். (இந்த தையல் இலை என்கிறது புரச இலைகளால தைத்ததுதான்.)
இரும்பு (stainless steel), மண் பாத்திரம் (ceramic plate), உடைந்த பாத்திரம் இதெல்லாம் தவிர்க்கணும்.

அன்னம் பரிமாரிய பின் நீரால அதை பிரதக்ஷிணம் செய்து சற்று தெளிக்கணும். பரிசேஷணம் குல ஆசாரம். அதற்கு தனித்தனியாகவே நீரை எடுக்கணும். ஒரு உள்ளங்கை நீர் எடுத்து 3 சுத்து சுத்தி ப்ரோக்ஷணம் செய்வது கூடாது.
மற்றவர் நீர் ஊற்ற உள்ளங்கையில் கொஞ்சம் நீர் வாங்கிக்கொண்டு பருக வேண்டும்.
கொஞ்சம் கொஞ்சமாக நெய் கலந்த அன்னத்தை பல் படாம 5 பிராணன்களுக்கு ஆஹூதியாக விழுங்க வேண்டும்.

திரும்பியும் கொஞ்சம் நீர் வாங்கிக்கொண்டு பருக வேண்டும்.

அப்பாடா இப்ப சாப்பிடலாமா?

கொஞ்சம் இருங்க, கொஞ்சம் அன்னத்தை எடுத்து தர்மராஜனுக்கு, சித்ரகுப்தனுக்கு, பிரேதங்களுக்கு என்று பலி வைக்க வேண்டும்.
அன்னத்தை வணங்கிய பின்னே சாப்பிட ஆரம்பிக்கலாம். சாப்பிடுகிறபோது அன்னத்தை இறைக்ககூடாது; திட்டக்கூடாது. "அன்னம் ந நிந்த்யாத்" என்பது உபநிஷத் வாக்கியம். மௌனமாகவே சாப்பிடணும். பேசிக்கொண்டே சாப்பிடுகிறவன் வாழ் நாளை ம்ருத்யு கொண்டு போகிறானாம். ஆனால் கிருஹஸ்தன் அவன் கூட சாப்பிடறவங்க இருந்தா, அவங்களை உபசரிப்பதற்காக பேசலாமாம். "அடியே, பக்கத்து இலைக்கு இன்னும் கொஞ்சம் பாயஸம்" என்பது போல சொல்லாம்! போடுகிற பதார்த்தங்களை வேண்டாம் என்றோ, போதும் என்றோ சொல்ல பேசலாம்.

மதியம் திங்கள், ஜூன் 30, 2008

உண்ணல் (தொடர்ச்சி)

வாய் கொள்கிற அளவு எடுத்துக்கணும். அதை அப்படியே வாயில் இடணும். வாய்ல போட்டது திருப்பி இலைக்கு வரக்கூடாது. அதிகமாக எடுத்து வாயில போட்டு மீந்ததும், கடித்து மீந்ததும் இலைக்கு வரக்கூடாது.
சத்தம் போட்டு உறிஞ்சி கடித்து சாப்பிடக்கூடாது. இது போல சிலதை எடிகெட்ஸ் னு இப்ப கடைபிடிக்கிறாங்க.
தண்ணீரை தூக்கியே குடிக்கணும். குடித்து மீந்ததும், எச்சில் பட்டதும் திருப்பி குடிக்க உகந்தது இல்லை.

பலரும் பந்தியில சாப்பிடும் போது நடுல யாரும் எழுந்து போகக்கூடாது. அப்படி எழுந்தால் பந்தி முழுதும் எச்சிலாகும். ஒரு வேளை அவசியம் எழுந்துக்க வேண்டினால் பந்தியை பிரித்துவிட்டு எழுந்துக்கணும்.
சாப்பிடும் போது ஒத்தரை ஒத்தர் தொடக்கூடாது. இடது கையால் தானே பறிமாறிக்கொள்ளக்கூடாது. அப்படி செய்தா அந்த பாத்திரமும் எச்சிலாகும்.

சாதாரணமா இடது கையால எதுவும் குடிக்கக்கூடாது. சாப்பிடும் போது விதி விலக்கு. வலது கையால இலையை தொட்டுக்கொண்டு இடது கையால தண்ணீர் குடிக்கலாம்.

உப்பு, ஊறுகாய், காய்கறி, நெய், எண்ணை, பாயஸம் (நெறய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய மு.ப போட்டது, போடாதது எல்லாமே-) அன்னம் இதெல்லாம் கரண்டி இல்லாம பறிமாறக்கூடாது.

எண்ணையில் பக்குவம் செய்தவற்றை கையால போடலாம். பழம், பட்சணங்களை சிறுவர்களுக்கும் விருந்தினர்களுக்கும் போட்டு விட்டே, தான் போட்டுக்கொள்ளலாம்.

பாயஸம், நெய், தேன், தயிர், பழம் எல்லாம் மிச்சமில்லாமல் சாப்பிடலாம். மற்றதில் கொஞ்சம் கொஞ்சம் மிச்சம் வைக்கணும்.

---

மதியம் செவ்வாய், ஜூலை 1, 2008

மேலும் நியமங்கள்

மேலும் நியமங்கள்:

நின்று கொண்டு, நடந்து கொண்டு, தலையில் துணி கட்டிக்கொண்டு, தெற்கு முகமாக உட்கார்ந்து சாப்பிட்டால் அவன் உணவை ராக்ஷசர்கள் சாப்பிடுகிறர்கள்.

---

சாப்பிடும்போது கால்களை தொடக்கூடாது. கட்டிலிலோ கையில் வைத்துக்கொண்டோ சாப்பிடக்கூடாது. பாதுகை போட்டுக்கொண்டு சா.கூ. வண்டிகளில் இருந்து கொண்டு சா.கூ. காய்கள், வேர்கள், பழங்கள், கரும்பு - இதெல்லாம் பற்களால கடிச்சு சா.கூ. (துண்டாக்கி பரிமாறினால் பிரச்சினையே இல்லை.)

தவறி வெளியே விழுந்ததும் சாப்பிட தக்கதல்ல.

அசுத்தனாக எதையுமே சா.கூ. படுத்துக்கொண்டு; கால்களை நீட்டுக்கொண்டு; மனசை (ஏதேனும் படிக்கிறது போல) வேறு எங்கேயோ வைத்துக்கொண்டு; இப்படியெல்லாம் சாப்பிடக்கூடாது.

சந்தியா காலம், பிரதோஷ காலம், இருட்டில் விளக்கு இல்லாமல், இரவு பத்து மணிக்கு மேல்; இப்படியெல்லாம் சாப்பிடக்கூடாது.

அன்னத்தில் கேசம், எறும்பு, அசுத்தத்தில் வாழும் புழு இப்படி ஏதேனும் இருந்தால் அதனுடன் சம்பந்தப்பட்ட அன்னத்தை எடுத்துவிட வேண்டும். மீதியை பிறகு நீரால் தெளித்து எடுத்துக்கொள்ளலாம். கையில் எடுத்ததில் அசுத்தம் இருந்தால் அதை விட்டு விட வேண்டும். ஒரு வேளை அவை வாய்க்குள் போய் விட்டால் துப்பி விட்டு, தண்ணீரால் கொப்பளித்துவிட்டு, நெய் சாப்பிட வேண்டும்.

எவ்வளவு சாப்பிடலாம்?

பொதுவாக பசிக்கு தகுந்தபடி உணவு.

சன்னியாசி 8 கவளங்கள். வான பிரஸ்தன் (இப்ப ரிடயர்ட் ஆசாமி ) 16. க்ருஹஸ்தன் 32. ப்ரஹ்மசாரி, அக்னிஹோத்திரம் செய்பவர், காளை மாடு இவர்களுக்கு இப்படி சட்ட திட்டமில்லை. ரெண்டு வேளை மட்டும் என்கிற சட்டம் கூட இல்லை. எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஏன்னா அப்படி தேவையான அளவு சாப்பிட்டாதான் அவங்க அவங்க வேலையை திறமையோட செய்ய முடியுமாம்.

ஏன் இப்படி சாப்பாட்டை பத்தி இவ்வளவு எழுதுகிறேன் என்று தோணலாம்.
பல கர்மாக்களை செய்யாமல் இருக்கிறோம். சாப்பிடுவதை மட்டும் எப்படியும் செய்தே தீர வேண்டும் இல்லையா? அதனால செய்கிற இந்த கர்மாவை சரியாக செய்யலாமே என்னுதான். புத்தகங்களை படித்து அத்தனையும் எழுதினால் பதிவுகள் மிக நீளமாக போகும்.

அதனால அடுத்த பதிவுல எதெல்லாம் சாப்பிடலாம், சாப்பிடக்கூடாதுன்னு பாத்துட்டு மேலே போகலாம்.

---

மதியம் புதன், ஜூலை 2, 2008

சாப்பிடக்கூடியவை கூடாதவை:

சாப்பிடக்கூடியவை கூடாதவை:
இதைப்பத்தி முன்னேயே பாத்து இருக்கோம்.
http://anmikam4dumbme.blogspot.com/2008/04/blog-post_17.html

ஜாதியினால் சில உணவு வகைகள் நல்லது இல்லை. சில அவை செய்யும் காரியத்தால் நல்லது இல்லை. சிலது காலத்தினால்; சிலது சேர்க்கையினால்; சிலது சஹ்ருல்லேகம்; சில சுபாவத்தால்; இப்படி பலதும் உண்ண தகுதியை இழக்கின்றன.

வெங்காயம், சிவப்பு முருங்கை, உள்ளிப்பூண்டு, பலாண்டு, நாய்க்குடை, தாமரை தண்டு,

சுரைக்காய் இவை ஜாதியால் உண்ண தகுந்தவை இல்லை. அதாவது allium cepa family முழுக்க உண்ண தகுந்தது இல்லை. இப்படி.

கெட்ட எண்ணங்களோட ஒருவர் உணவை பார்த்தாலே அது காரியத்தால கெடுகிறதாம். நெய், எண்ணை முதலியனவால செய்த பலகாரங்கள் ரொம்ப நாள் வைத்திருந்தா கெட்டு போகும். பழைய சோறும் அப்படிதான். தயிர், தேன், பக்ஷணங்கள் இதெல்லாம் காலத்தால கெட்டு போகா.

கள்ளு, வெங்காயம் இதெல்லாம் சேர்த்தவை; சீமப்பால் கலந்தது (அதாவது கன்று போட்டு 10 நாளுக்குள்ள கறக்கிற பால்) இதெல்லாம் சேர்க்கையால் கெட்டவை.
எப்பவாவது இதை சாப்பிடலாமா கூடாதான்னு சந்தேகம் வந்தா அது ஸஹ்ருல்லேகம் என்கிறாங்க. இந்த "சந்தேக பிரியாணி" எல்லாம் சாப்பிடக்கூடாது.

பராசரர் இந்த பட்டியல்ல வெளுப்பு கத்தரி, மரத்தின் பிசின், (இதுல பெருங்காயம் வந்துடும்) கோவில் சொத்து, ஒட்டக/ ஆட்டு பால் இதெல்லாம் சேத்து, தெரியாத்தனமா இதெல்லாம் சாப்பிட்டாக்கூட பிராயசித்தம் செய்யணும் என்கிறார்.

தேவலர் மரப்பிசின்ல பெருங்காயத்துக்கு எக்ஸெப்ஷன் தரார்.

யவை/ கோதுமையால செஞ்சதுக்கு காலம் கடந்தது என்கிற குற்றம் இல்லையாம். ( அப்ப சப்பாத்தி ரொட்டி எல்லாம் பரவாயில்லை.)

தயிர் தவிர புளிச்சது எதுவும் சாப்பிடக்கூடாது. (யப்பாடா எவ்ளோ தரம் இதை தட்டறது? பரவாயில்லைன்னு சா.கூ வே எழுதறேன்.!) ஆபத் தர்மமா வேற சோறு கிடைக்காத போது புளிச்சதை தண்ணீரால அலம்பி சாப்பிடலாம்.
புளிப்பு இஞ்சி, தயிர், கஞ்சி, எள்ளு, சாதம்(!), நெல்லிக்காய் இதெல்லாம் ராத்திரியில் சா.கூ.

சில விஷயங்கள் ஒண்ணா சேந்தா கெட்டு போகும். வெண்கல பாத்திரம் + இளநீர்/ கருப்பஞ்சாறு; தாமிர பாத்திரம்+ தயிர்,பால்; உப்பு + பால்/நெய் இதெல்லாம் கெட்டு போகிற சேர்க்கைகள். (பல கோவில்களிலேயும் தெரியாத்தனமா காப்பர் சொம்பில பால் எடுத்து அபிஷேகம் நடக்குது)

என்னயா இது? கூடாது கூடாதுன்னு எல்லாம் சொன்னா எப்படி? கூடும்ன்னு சொல்லுங்கிறீங்க. சரி சரி.

அகத்தி, துளசி, நெல்லி, சுண்டைக்காய் அவை யாரோட வயத்தில இருக்கோ அவனுக்கு ஹரி பக்கத்தில இருக்காராம். யார் சாப்பாடு, பக்ஷணம், லேஹ்யம் எல்லாத்தையும் நமோ நாரயணான்னு சொல்லி தொட்டு சாப்பிடரானோ அவன் நல்ல லோகத்த அடைகிறானாம். நாராயண!

இந்த பட்டியல்ல பலதும் நமக்கு பிடிச்சவையா இருக்கலாம். அதனால அதுக்கெல்லாம் "அதுக்கு மருத்துவ குணம் இருக்கு" என்பது போல வக்காலத்து வாங்க வேண்டாம். சாப்பிடலாமா வேண்டாமான்னு அவரவர் முடிவு செஞ்சுக்கலாம்.- இந்த பதிவுகள்ல வர மத்த விஷயங்கள் போலவே!

ரெண்டு வருஷம் முன்னால வேத வகுப்புகள் எடுக்கிறப்ப வகுப்புல தர்ம சாஸ்திரமும் பாத்துகிட்டே போவோம். இதே விஷயம் வந்தது. சா.கூ பட்டியலை படிச்சுகிட்டே போனோம். ஒருத்தர் "சரிதான் சரிதான்"னு எல்லாத்துக்கும் தலையாட்டிகிட்டே வந்தார். வெங்காயம்ன்னு சொன்னவுடனே சுரு சுருன்னு கோபம் வந்துட்டது. அதெப்படி சொல்லலாம், அதுக்கு மருத்துவ குணம் இருக்குன்னு சண்டைக்கு வந்துட்டார்!

ஏன்? முன்ன சொன்னதெல்லாம் அவர் சாப்பிறதில்லை. வெங்காயம் ரொம்ப பிடிக்கும்! அவ்ளோதான். :-))

---

மதியம் வியாழன், ஜூலை 3, 2008

சாப்பிட்டு முடிச்சாச்சா

சாப்பிட்டு முடிச்சாச்சா?

கொஞ்சம் தண்ணீர் குடிச்சு நகர்ந்து போய் 18 முறை வாய் கொப்பளிக்கணும். (ரொம்ப நாள் முன்னே பல் வைத்தியர்கிட்டே போக வேண்டி இருந்தது. என் விஸ்டம் பல் தொந்திரவு செய்யுதுன்னு அதை பிடுங்கிட்டார். அப்புறம் நாலு நாள் பல் தேய்க்காதே. அதுக்கு பதிலா 18 தரம் கொப்பளிச்சுடுன்னார்!) தண்ணியை இடது பக்கமா துப்பணும்.

சர்யாதி என்கிற அரசனையும் சுகன்யா என்கிற அவரோட பெண்ணையும் ச்யவனர் என்கிற ரிஷியையும் (அதே ச்யவன ப்ராஷ் ரிஷிதான்!) இந்திரன், அச்வினி குமாரர்களையும் நினைத்துக்கொண்டு கண்களை நனைக்கணும். ஈரமான கட்டை விரல்களால கண்களை தேய்க்கனுமாம். அப்ப கண் நோய்கள் வராதாம். கௌதமர் சொல்கிறார்.

நல்ல வெத்திலை, நல்ல சுண்ணாம்பு, நல்ல பாக்கு இதெல்லாம் சேத்து தாம்பூலம் எடுத்துக்கலாம். இது ஜீரணத்துக்கு உதவும். வெள்ளிக்கிழமை கட்டாயம் செய்யணும் என்கிறார்கள் சிலர். லக்ஷ்மி காடாக்ஷம் கிடைக்குமாம்.

எப்போதுமே வெத்திலை பாக்கு சாப்பிட்டால் ஆயுஸ், புத்தி, பலம், ப்ரக்ஞை, வீரியம், இதெல்லாம் நசிக்கப்படும். நாக்குக்கு ருசியே தெரியாம போகும்.

200 அடிகள் நடக்கணுமாம். பிறகு உட்கார்ந்து வேலை செய்யலாம். வேதம்/ இதிகாஸ புராணம், சாஸ்திரம் இதெல்லாம் படிக்கலாம்.

அப்புறமா குடும்பத்துக்கு வேண்டியதை எல்லாம் கவனிக்கணும் - லௌகிக சமாசாரங்கள்.

---

மதியம் வெள்ளி, ஜூலை 4, 2008

மாலை

அப்புறமா குடும்பத்துக்கு வேண்டியதை எல்லாம் கவனிக்கணும்.

மாலை சூரிய உபாசனை முடித்து, அக்னி உபாசனையும் முடித்து, வைச்வதேவம் செய்து இரவு சாப்பாடு முடித்து உறங்கச்சொல்றார் வ்யாசர்.

மாலை ஔபாசன அக்னியில் ஹோமம் செய்கிறவன் அடைகிற பலன் மேரு மலை அளவு தங்கம் தானம் செய்வது; பல நூறு வாஜபேய யாகங்கள் செய்வது; கோடி கன்யாதானம் செய்வது இதுக்கெல்லாம் சமம் என்கிறார்.

இரவு பூஜை சிலர் செய்வர்.

கை, கால்களை கழுவி சுத்தம் செய்து துடைத்துக்கொண்டு, படுக்கையில் இடது பக்கமாக படுக்கணும். வடக்கு பக்கம் தவிர எந்த திசையும் பரவாயில்லை. தண்ணீர் சொம்பை தலை பக்கமா வைத்துக்கொள்ளணும். கருட மந்திரங்கள்/ வேத மந்திரங்கள் இதால ரக்ஷை செய்து கொண்டு படுக்கலாம்.

சுகமா தூங்குகிறவங்க அகத்தியர், மாதவர், முசுகுந்தர், கபிலர், அஸ்தீகர் இந்த 5 பேர். இவங்களை நினைச்சுகிட்டு தூங்கினா நல்லா தூங்கலாமாம்!

---

ருது காலத்தில் பத்னியை அடைய வேண்டும். மற்ற காலங்கள்ல காமம் இருந்தால் அடையலாம். (இது இந்திரன்கிட்டே அவங்க வாங்கின வரத்தால). சில நாட்கள் கூடாது என்கிறது சாஸ்திரம். இந்த கூடாத நாட்கள் எல்லாம் பாத்தா குடும்ப கட்டுப்பாடு தானே வந்துடும்! இரவோட பின் பாகத்தைதான் இதுக்கு பரிந்துரைக்கிறாங்க!

இப்படி எல்லாம் நித்திய கர்மா என்கிற தினசரி கர்மாக்களை கடை பிடிக்கிறவங்க எல்லா புருஷார்த்தங்களையும் (மனிதன் அடைய வேண்டியன எல்லாம்) அடைகிறாங்களாம்.

---

மதியம் வியாழன், ஜூலை 10, 2008

தினசரி கர்மா அல்லாத நித்திய கர்மா

நித்திய கர்மா குறித்து கொஞ்சம் குழப்பம் இருந்தது. அதனால் பதிவு ஒரு நாள் தள்ளி போட்டேன்.
நித்திய கர்மா என்கிறது தினசரி கர்மா என்று சாதாரணமா அர்த்தம் பண்ணிகிட்டாலும் எப்போதுமே வரும் கர்மா என்பதே சரியான அர்த்தம்.
தினசரி கர்மாவா இல்லாம நித்திய கர்மாவா வருகிறவை பலதும் இருக்கு. நீத்தார் சடங்குகளை தவிர்த்த மற்றது எல்லாம் சிலரே செய்யறாங்க. அதெல்லாம் 40 சம்ஸ்காரங்களை பாக்கிறப்ப வந்துடும்.

நீத்தார் சடங்குகள்ல அமாவாசை தர்ப்பணம் முக்கிய எல்லாருக்கும் தெரிஞ்சது. இது சேத்து ஷண்ணவதி தர்ப்பணம் ன்னு வருஷத்துக்கு 96 நாட்கள் தர்ப்பணங்கள் இருக்கு. செய்கிறவங்க ரொம்பவே கம்மிதான். அமாவாசை தர்ப்பணமே சிராத்தம் செய்கிறதுக்கு பதிலா செய்கிறதுதான். 96 நாட்கள் தர்ப்பணமே அரிதா இருக்கிறப்ப மிகவும் அரிதாதான் 96 சிராத்தம் இருக்கு.

பட்டியல் போடுவோமா?
வருட பிறப்பு -1
அயன பிறப்பு (தக்ஷிணாயனம், உத்தராயணம்) -2
ஸௌர மாத பிறப்பு -12
அமாவாசை -12
மன்வாதி 14
யுகாதிகள் 4
பூர்வேத்யு, அன்வஷ்டகா, அஷ்கா. 12
( இதெல்லாம் ஹேமந்த சிசிர ருதுக்கள்ல வருகிற க்ருஷ்ணபக்ஷ அஷ்டமிகள், அதன் முன் திதி, பின் திதி. )
மஹாலய பக்ஷம் 15
வ்யதீபாதம் 12
வைத்ருதி 12

> இல்லீங்க, இதெல்லாம் நம்ம பார்லிமெண்ட் கட்சி நிலவரம் இல்ல.
> :-))
> எப்படி 96 சிராத்தம் வந்தது? என்கிறதுக்கு கணக்கு.

கூடவே வருடா வருடம் வருகிற திதிகளில (ஆப்திக) சிராத்தம் - இப்படி 96 இருக்காம்.

நிறைய பேர் இந்த காலத்தில கஷ்டப்படிகிறது நீத்தார் என்கிற பித்ருக்கள் கடனை சரியா செய்யாத்தாலன்னு சில பெரியவங்க சொல்றாங்க.
இந்த சிராத்தங்கள்ல குழந்தை இல்லாதவர்களுக்கு உதவக்கூடிய ஒரு நடைமுறை கூட

---

இருக்கு. இது பலருக்கும் தெரியாம போச்சு.

குறிப்பிட்டதெல்லாம் நித்திய கர்மா. அப்படி இல்லாம காம்ய சிராத்தம் கூட உண்டு. அதாவது சில விஷயங்கள் வேண்டும்ன்னு பித்ருக்கள் ஆசிகளை வேண்டியும் பலன் கிடைக்கவும் செய்கிறது.ஸ்வர்க்கம், பிள்ளை, பெண்கள், ஓஜஸ், சௌர்யம், பூமி, பலம், புத்திரர்கள், சிறப்பு, சௌபாக்கியம், ஸம்ருத்தி, ரோகமின்ன்மை. கீர்த்தி ... இப்படி பல விஷயங்களை வேண்டி இதை செய்யலாம்ன்னு யாக்ஞுவல்கியர் சொல்றார். இந்த இந்த கிழமைகள், இந்த இந்த நக்ஷத்திரங்கள், யோகம், கரணம் இப்படி எல்லாம் சொல்லி அந்த அந்த நேரத்துல எந்த விஷயம் வேண்டி சிராத்தம் செய்யலாம்ன்னு பட்டியல் இருக்கு. தேவையானவங்க தேடி கண்டு பிடிச்சுக்கலாம்.

பாத்தீங்களா, திடீர்ன்னு நித்தியத்துலேந்து காம்யத்துக்கு போயிட்டோம்? ஏன்னா அதுதான் அடுத்த டாபிக். சிராத்தம் பத்தி பேசறப்பவே சொல்லிடலாமேன்னுதான்...

நடுல நைமித்திகம்ன்னு ஒண்ணு இருக்கு. அதாவது ஒரு நிமித்தத்தை முன்னிட்டு வருகிறது. அது எப்பவுமே வரதில்லை. ஏதாவது ஒரு அசாதாரண சந்தர்பத்தில வரது. உதாரணமா அக்னிஹோத்ரியோட அக்னிஹோத்திர சாலை எரிஞ்சு போச்சுனா இந்த தேவதைய உத்தேசிச்சு ஒரு இஷ்டி செய்யணும்ன்னு இருக்கு. இது போல இருக்கிற சிலது நைமித்திகம்.

அடுத்து காம்ய கர்மாக்களுக்கு போவோம்.

---

மதியம் வெள்ளி, ஜூலை 11, 2008

மேலும் விளக்கங்கள்

விளக்கங்களை பின்னூட்டத்திலே வைக்கதான் நினச்சேன்.
ஆனா இது கொஞ்சம் பெரிசா போனதாலே பதிவாக்கிட்டேன்.

கீதா அக்கா கேட்டாங்க:

//மன்வாதி 14
யுகாதிகள் 4
பூர்வேத்யு, அன்வஷ்டகா, அஷ்கா. 12//

யுகாதி:

வைகாசி, வளர்பிறை மூன்றாம் நாள் (த்ருதீயை), - கிருத யுகம் ஆரம்பித்தது.
கார்த்திகை- வளர்பிறை ஒன்பதாம் நாள் (நவமீ) -த்ரேதா யுகம் ஆரம்பித்தது.
பாத்ரபத (புரட்டாசி ) தேய்பிறை பதிமூன்றாம் நாள் (த்ரயோதசீ) - த்வாபர யுகம் ஆரம்பித்தது.
மாக (மாசி) பௌர்ணமி - கலி யுகம் ஆரம்பித்தது.

{சரியா சொல்ல போனா சந்திரனை அடிப்படையா கொண்ட மாதங்களில் கணக்கு. அதாவது தெலுங்கு வருஷ மாத கணக்கு}

இவை யுகாதி.

மன்வாதி = மந்வந்தரங்கள் ஆரம்பித்த தினங்கள்.

[சுக்ல -வளர்பிறை; க்ருஷ்ண – தேய் பிறை. தெரியும்தானே?]
ஆச்வயுஜ (ஐப்பசி) சுக்ல 9
கார்த்திக சுக்ல 12
சைத்ர (சித்திரை) சுக்ல 3

பாத்ரபத (புரட்டாசி) சுக்ல 3
பால்குன (பங்குனி) பௌர்ணமீ
புஷ்ய (தை) சுக்ல 11
ஆஷாட (ஆடி) சுக்ல 10
மாக (மாசி) சுக்ல 7
சிராவண (ஆவணி) க்ருஷ்ண 8
ஆஷாட (ஆடி) பௌர்ணமீ
கார்த்திக பௌர்ணமீ
பால்குன (பங்குனி) பௌர்ணமீ
சைத்ர (சித்திரை) பௌர்ணமீ
ஜ்யேஷ்ட (ஆனி) பௌர்ணமீ

இதெல்லாம் மன்வாதிகள்.

இந்த யுகாதி மன்வாதிகளில் செய்கிற சிராத்தங்கள் 2000 வருஷங்கள் பித்ருக்களை திருப்தி செய்த பலன் தருமாம்.

//பூர்வேத்யு, அன்வஷ்டகா, அஷ்கா. 12. இது கொஞ்சம் இல்லை, நல்லாவே புரியலை, ஆனால் தேய் பிறை அஷ்டமி, முன் திதி, பின் திதியில் செய்யறவங்களைப் பார்த்ததுண்டு. காரணம் தெரியாது. அப்போ ரொம்பச் சின்ன வயசுங்கறதாலே இதெல்லாம் சொல்ல மாட்டாங்க. //

அதுவேதான்.

<<( இதெல்லாம் ஹேமந்த சிசிர ருதுக்கள்ல வருகிற க்ருஷ்ணபக்ஷ அஷ்டமிகள், அதன் முன் திதி, பின் திதி. )>>

இப்படி சொல்லி இருக்கேன்.

ஆ, புரியுது.

க்ருஷ்ணபக்ஷம்ன்னு சொல்கிறதுக்கு பதில் தேய்பிறைன்னு சொல்லி இருக்கலாம். இதுதானே சொல்ல வந்தீங்க? அப்புறம் மாசங்களும் மார்கழி, தை, மாசி, பங்குனி ன்னு சொல்லி இருக்கலாம். ரைட்!

//மஹாலய பக்ஷம் 15//
இது ஓகே, நல்லாவே தெரியும்,

:-)

//வ்யதீபாதம் 12
வைத்ருதி 12//

இது புரியலை! //

இதை விளக்குவது கொஞ்சம் கஷ்டம். (ஏன்னா தெரியாதுன்னு அர்த்தம்! :-)
பஞ்சாங்கத்தை பாத்தால் இதை குறிச்சு இருப்பாங்க.
7-7-2008 அன்னிக்கு வ்யதீ. சிரா ன்னு போட்டு இருக்கும். அது வ்யதீபாத சிராத்தம்.17-7-2008 வை.சிரா. இது வைத்ருதி சிராத்த நாள். திருப்பி 2-8-2008 வ்யதீபாதம்.ள்
--
சேர்ப்பு:

சூரிய கதி (நகர்வு) சந்திர கதி இரண்டையும் ஸ்பிரிங்க் ஈக்வினாக்ஸ் லேந்து கணக்கிட்டு இரண்டின் லாங்ஜிட்யூடையும் கூட்டி கூட்டுத்தொகை 180 டிகிரியா இல்லை 360 டிகிரியா என்பதை பொருத்து வ்யதீபாதம், வைத்ருதி இரண்டும் கணக்கு போடறாங்க.
அப்பாடா! ரொம்பவே தெளிவாயிடுச்சு!
:-)))))))

---

மதியம் புதன், ஜூலை 16, 2008

புத்திரன் இல்லாதவருக்கு நீத்தார் கடன்...

அம்பி கயாவில் தனக்குத்தானே கர்மம் செய்வது பற்றி கேட்டார்.

புத்திரன் அல்லது வேற தாயாதி இல்லாதவர் கதி என்ன என்பது அடிப்படையான கேள்வி. கயாவில் ஆத்ம பிண்டம் தனக்குத்தானே போடுவது சரிதான். அத்தோட வேற என்ன செய்யலாம் என்பதுதான் இன்றைய பதிவு. பெரிசா இருக்கிறதால ரெண்டா கூட வரலாம். இப்ப சந்தோஷம்தான அம்பி?
:-))

இது சரி என்கிறதால எங்க அப்பாவுக்கு கயாவில பிண்டம் போட்டாச்சு, இனி சிராத்தம் செய்ய வேண்டாம்ன்னு நினைக்கிறது தப்பு. கீதா அக்கா சரியாவே இதை சொல்லிட்டாங்க.

காலம் மாறிகிட்டு இருக்கு. பலர் வெளி நாட்டில இருக்காங்க. அது எல்லாம் கர்ம பூமியா பெரியோர்கள் ஒத்துக்கிறது இல்லை. இப்ப இருக்கிற நவீன சிந்தனைகள் தாக்கம் இருக்கிறவங்க நாளை கர்ம சிரத்தையோட நீத்தார் கடன்களை செய்வாங்களான்னும் தெரியாது. அதனால சிரத்தை இருக்கறவங்க தங்களுக்கு என்ன செய்து கொள்கிறதுன்னு யோசனை செய்ய வேண்டியதுதான்.

விடை கருட புராணத்தில இருக்கு.
--
பெரிய திருவடியான கருடாழ்வான், ஸ்ரீமந் நாராயண பகவானை தொழுது "வைகுண்ட நாதரே! மனிதர்களுக்கு மிகவும் கொடிதான பிரேத ஜன்மம் வராமல் ஒழியும் மார்க்கம் எது என்பதை தேவரீர் தயை செய்துக்கூறி அருள வேண்டும் " என்று விண்ணப்பித்தான். சர்வாந்தர்யாமியான பகவான் கருடனை நோக்கி கூறலானார்:
“ ஓ கருடா மனிதர்கள் இறந்தவுடன் செய்ய வேண்டிய கருமங்களைப் பற்றி கூறுகிறேன். கேட்பாயாக.

பிரேத ஜென்மத்தை தவிர்க்க விரும்பிய யாவரும் தான் இறப்பதற்கு முன்னதாகவே தமது கையாலேயே வ்ருஷோற்சர்கம் செய்ய வேண்டும். 5 வயதுக்கு மேற்பட்ட யார் இறந்தாலும், அவர் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி, அவருக்கு பிரேத ஜன்மம் ஏற்படாமல் இருக்க வ்ருஷோற்சர்கம் செய்தல் அவசியம்.(இதை வ்ருஷப உத்சர்ஜனம் என்றும் சொல்கிறாங்க) பிரேத ஜன்மம் வராமல் இருக்க இதை தவிர வேறு ஒரு கர்ம வழியும் இல்லை. உயிரோடு இருக்கும் போதோ அல்லது இறந்த பிறகோ யாருக்கு வ்ருஷோற்சர்கம் செய்யப்பட்டதோ அவருக்கு பிரேத ஜன்மம் வருவதில்லை. இதை செய்யாமல் வேறு எந்த தான தர்மம் செய்தாலும் விரதங்களை அனுஷ்டித்தாலும், வேள்விகளை செய்தாலும் பிரேத ஜன்மம் பீடிக்காமல் ஒழியாது"

கருடன்: "பகவானே! இதை ஒரு மனிதன் இறப்பதற்கு முன்பானால் எப்போது செய்ய வேண்டும்? இறந்த பிறகானால் எப்போது செய்ய வேண்டும்? அதனால் ஏற்படும் பயன் யாது? அதை சொல்லி அருள வேண்டும்.”

பகவான்: கழுலனே, இறந்தவரை குறித்து இதை செய்யாமல் சிராத்தம் முதலிய எதை

செய்தாலும் அவற்றால் அவனுக்கு பலன் ஏதும் ஏற்படாது. எவனுக்கு இறந்த 11 ஆம் நாள் விருஷோற்சர்கம் செய்யப்படவில்லையோ அவனுக்கு பிரேத ஜன்மம் நிச்சயமாக ஏற்பட்டே தீரும். அது உறுதி. செய்யப்பட்டால் அவன் பெரியோர்கள் அடையும் உலகை அடைவான்...... எமனால் பீடிக்கப்படாமல் அவன் நல்ல உலகை அடைவான். புத்திரனாவது, மனைவியாவது, பெண் வயிற்று பிள்ளையாவது விருஷோற்சர்கம் செய்யலாம். புத்திரன் இருப்பின் அவன் மட்டுமே அதை செய்ய வேண்டும். வேறு யாரும் செய்யலாகாது....

கழுலனே , அயலூருக்கு பயணம் செய்பவன் கட்டு சோற்றை கையிலே கொண்டு செல்வானாகில் எப்படி பசியைப்பற்றிய கவலையே இல்லாமல் செல்வானோ, அதுபோல ஒருவன் உயிரோடு இருக்கும் காலத்தில் அன்னதானம், கோதானம் முதலியவற்றை செய்து விடுவானாகில் மரணமடைந்து செல்லும்போது பசி, தாகம் ஏதும் அடையாமல் நல்லுலகை சேர்ந்து சுகிப்பான்.
(தொடரும்...)

---

மதியம் புதன், ஜூலை 16, 2008

புத்திரனில்லாதவர்.. தொடர்ச்சி

கோதானம் செய்பவன் நல்ல பசு மாட்டை கன்றோடு, நல்ல நாளில், நல்ல க்ஷேத்திரத்தில், நல்ல பாத்திரத்துக்கு தானஞ்செய்ய வேண்டும். தானம் வாங்குபவர் நல்ல பாத்திரமாக இல்லாவிட்டால் கொடுத்தவன் வாங்கியவன் அனைவருமே நரகத்தை அடைவர். வாங்கியவன் அதை சரியாக பராமரிக்க வேண்டும். அதை விற்று பலர் அதை பங்கு போட்டுக்கொள்ள கூடாது. ...

புண்ணியமில்லாத காலம், இடம்; நல்ல பாத்திரம் அமையாதது போன்ற குறைகள் இருந்தாலும், விருஷோற்சர்கம் என்கிற கர்மா, அதன் மகிமையால், உத்தமமான க்ஷேத்திரத்தில், உத்தம காலத்தில், உத்தமமான பாத்திரத்துக்கு கொடுத்ததற்கு என்ன பலன் உண்டோ அதே பலன் நிச்சயமாக கைகூடும்....இன்று இருப்போர் நாளை இருப்பார் என்று எண்ணுவது திடமில்லை. மனித உடல் அநித்தியமாகையால் நல்ல காரியங்களையும் நற்கருமங்களையும் நாளை செய்வோம் என்று நினைக்காமல், எண்ணிய அன்றே செய்வது நல்லது.

> புத்திர பாக்கியம் உடையவன் தன் கையால் எந்த ஒரு நற்கருமத்தையும் செய்யாமல் இறப்பனேயாகில் அவன் நற்கதியை அடையமாட்டான்.

புத்திரனே இல்லாதவன் நல் வினைகளை செய்து மரிப்பனாகில் அவன் நற்கதியை அடைவான். யாகங்கள், கோதானம் முதலிய சிறந்த தானங்களை செய்வதைவிட விருஷோற்சர்கம் செய்வது நல்லது.சி

கார்த்திகை பௌர்ணமியிலாவது, வேறு ஒரு எந்த நல்ல தினத்திலாவது உத்தராயணத்திலாவது, த்வாதசியிலாவது தூய மனதோடு, உத்தமமான திருத்தலத்தில், நல்ல திதி, யோக, நக்ஷத்திரத்தில், நல்ல முறையில் வேத சாஸ்திரம் நன்கு கற்ற அந்தணர்களை கொண்டு சுபம் , ஹோமம் முதலியவற்றை செய்வித்து தன்னை தூய்மையக்கிக்கொண்டு நவ கிரகங்களை பூசித்து, மாதுர் தேவதைகளை பூசித்து பூர்ணாஹுதி கொடுத்து, மஹா விஷ்ணுவை குறித்து சிராத்தம் செய்து, மந்திர நீரால் ரிஷபக்கன்று ஒன்றை நீராட்டி, ஆடை ஆபரணம் கந்த புஷ்பங்களால் நன்கு அலங்கரித்து, மேலும் 4 கன்று களோடு அந்த காளைக்கன்றினை அக்னியை வலம் வரச்செய்து வட திசை நோக்கி நின்று அந்த ரிஷபக்கன்றை நோக்கி "தருமமே, நீயே ரிஷபமானாய். பிரமனாலே ஆதியிலே படைக்கப்பட்டய்!" என்று சொல்லி, இறந்தவனுக்காக தானஞ்செய்தால் அவனைக்குறித்தும், செய்பவன் தனக்குத்தானே செய்வனானால் தன்னை குறித்தும் அதன் வாலில் மந்திர நீர் விட்டு அந்த நீரை தன் கரத்தால் ஏந்தி தன் சிரசின் மீது ப்ரோக்ஷித்துக்கொண்டு கன்றுகளை விட்டு விட வேண்டும்.

இப்படியாக ஒரு நல்ல வழிகாட்டி இருக்கிறாங்க. மேலும் கூடுதலாக பொது பயன்பாட்டுக்காக நீர் நிலைகள் அமைக்கிறது; பசுக்கள் மேய புல்வெளிகள் அமைக்கிறது; சத்திரம் கோவில்

---

கட்டுவது; வைத்திய சாலை, பள்ளிக்கூடம் அமைக்கிறது இது போன்றவை எல்லாமுமே நல்ல கதியை தரும்.

---

மதியம் வியாழன், ஜூலை 17, 2008

கோவில் காளை

கோவில் காளைன்னு கேள்வி பட்டு இருக்கோமில்லியா?
கிராமத்திலே யாருக்கும் அடங்காம - யாரும் அடக்க நினைக்காம – பொறுப்பில்லாம, எங்கே வேண்டுமாலும் போய் என்ன வேண்டுமானாலும் செய்கிற இளைஞர் ஒத்தர் இருப்பார். அவரை "என்னடா, கோவில் காளைமாதிரி சுத்தி திறியறியே" என்பாங்க.

அந்த கோவில் காளை இந்த விஷயம்தான்.

அந்தணர்கள் மட்டும் செய்கிற கர்மா இல்லை வ்ருஷோற்சர்கம். எல்லாருமே செய்வது. நல்ல காளை கன்னுக்குட்டி லட்சணமா பிறந்தா "நேர்ந்து கொண்டு" அது கொஞ்சம் வளர்ந்த பிறகு பூஜை செய்து வலது பக்கம் பின்னால் சூலம் மாதிரி சூடு போட்டு விரட்டி விடுவார்கள். அது சும்மா ஜாலியா எங்கே வேண்டுமானாலும் சுத்தி திரியும். எங்கே வேண்டுமானாலும் போய் மேயும். யாரும் அதை விரட்ட மாட்டாங்க. காரணம்?

மந்தையா மேய்கிற பசு மாடுகளை கர்ப்பம் ஆக்குவது இதுதான். இது நல்லா இருந்தாதானே பிறக்கிற கன்றுகளும் நல்லா இருக்கும்? அதனால யாரும் ஒண்ணும் செய்ய மாட்டாங்க.

முன்னே எல்லாம் எல்லாரும் மாட்டுக்கொட்டில், பசுக்கள் எல்லாம் வைத்து இருந்தாங்க. நிறைய பசுக்கள் இருப்பது பெரிய செல்வமா கருதினாங்க.
இப்ப நிறைய சமுதாய "முன்னேற்றம்" வந்து விட்டது. மாடு மேய்க்கவோ பராமரிக்கவோ யாரும் தயார் இல்லை. அப்படியும் சில பேர் பால் வியாபாரத்துக்காக வைத்து இருப்பவங்க யாரும் காளை கன்னுக்குட்டி பிறந்தா வைத்துக்கொள்வதில்லே. கசாப்பு கடைக்கு வித்துடறாங்க.
இப்பதான் பசுக்கள் கர்ப்பம் அடையறது ஊசி மூலமாதானே?
அதனாலே இப்ப இந்த கர்மாவை செய்கிற அந்தணர்கள் கூட ப்ரத்யக்ஷமா செய்கிறதில்லை. தேங்காயை வைத்து மந்திரங்களை சொல்லி உருட்டி விடராங்க.

கொஞ்ச நாள் முன் வரை கோவிலுக்கு காளை கன்னு விட்டுகிட்டு இருந்தாங்க. அவங்களும் வாங்கிக்கொண்டு பராமரிச்சாங்க. பிறகு கோவிலேயும் வைத்து பராமரிக்காம ஏலத்துல விட ஆரம்பிச்சாங்க. இதைப்பத்தி சில கசமுசா எழ இப்பெல்லாம் வாங்கிறதில்லைன்னு கேள்வி. இல்லை நிறைய சட்ட திட்டங்கள் போடராங்களாம்.
சொல்ல வந்தது என்னன்னா கொஞ்சம் சிரம சாத்தியமாவே இருக்கிற இப்பவே முடிஞ்சா செய்துடுவோம்.

செய்யக்கூடிய இடங்கள் யாருக்கும் தெரிய வந்தா தயை செய்து சொல்லுங்க.
இன்னும் கொஞ்சம் நாள் போனா இதுவும் கஷ்டமாயிடும்.

---

மதியம் வெள்ளி, ஜூலை 18, 2008

நித்திய கர்மா தொடர்ச்சி -வருட நோக்கில்

குருவே நம:

தடுத்து எம்மை ஆட்கொண்ட குருவுக்கு நமஸ்காரம்.
எடுத்து நல்வழி காட்டிய குருவுக்கு நமஸ்காரம்.
உள்ளிருந்து இயக்கும் குருவுக்கு நமஸ்காரம்.
கேள்வி ஞானம் அளித்த குருவுக்கு நமஸ்காரம்.

---

இந்த பதிவுகளில் ஏதோ நல்லது எழுதுவது அவர் அனுகிரகம்.
தவறுகள் இருப்பின் அடியேன் புரியாமை.

குருவே நம:

---

நீத்தார் கடன்கள் குறித்து எழுதிகிட்டே போலாம். அது நிறையவே இருக்கு. சிரத்தையோட செய்கிறதுதானே சிராத்தம்.அதனால சிரத்தை இருக்கிறவங்க மேலே தேடிப்பிடிச்சுக்கலாம். இது மிகவும் முக்கியமான விஷயமா இருப்பதாலும்; நாங்கள் பார்த்த அளவில் இந்த விஷயத்தில் பலர் கோட்டை விட்டு விட்டு அவஸ்தை படுகிறதாலும்; உண்மையான கேள்விகள் வந்ததாலும் கொஞ்சம் இங்கேயே தாமதிச்சோம். நாம இதுக்கு இப்ப ஒரு கமா போட்டுட்டு அடுத்ததை பாக்கப்போறோம்.

நித்திய கர்மான்னா தினசரி கர்மா இல்லைங்கிறது ஏற்கெனவே பாத்தாச்சு. தினசரி கர்மா இல்லாத நித்திய கர்மாவை பாக்கலாம். வருஷம் முழுக்க அப்பப்ப வருகிற கர்மாக்கள் இருக்கு இல்லையா?

தினசரி பூஜை ஒரு பக்கம் இருக்க அப்பப்ப வருகிற பூஜைகள் இருக்கே! அதுவும் ஒரு பெரிய லிஸ்ட்தான். விரத பூஜா விதானம்ன்னு ஒரு புத்தகமே போட்டு இருக்காங்க. அதுல செய்முறைகள் முழுக்கவே போட்டு இருக்காங்க. ஒவ்வொரு திதி சம்பந்தமாகவும் போட்டு அப்புறம் வருஷதுக்குள்ள வரதை ஒவ்வொண்ணா போட்டு இருக்காங்க. இதெல்லாம் அனேகமா எல்லாருக்குமே தெரியும் இல்லையா? எந்த எந்த பூஜைக்கு என்ன என்ன நைவேத்தியம்ன்னு யோசனை பண்ணா பட்டியல் முழுதும் கிடைச்சுடும்!

அப்புறம் வருடா வருடம் 3-4 தரம் வருகிற கிரகணங்கள், அதை ஒட்டிய ஜப, ஹோம, தர்ப்பண, தானங்கள் எல்லாம் நித்தியம்தான். சாதாரணமா செய்கிற கர்மாக்களை விட கிரகண காலத்தில் செய்கிற கர்மாக்களுக்கு அதிக பலன் சொல்லி இருக்காங்க. .

அதனால

இந்த காலங்களை பயன்படுத்திக்கணும்.(வருகிற பௌர்ணமி கிரகண புண்ணிய காலம் வருது.) குறைந்தது நம்முடைய ஜபத்தை இந்த நேரங்களிலே செய்யலாம்.

---

மதியம் திங்கள், ஜூலை 21, 2008

கர்ப்பாதானம்

அடுத்து ஒருவர் வாழ்நாளில் வரும் கர்மாக்களை பாக்கலாம்.
இவற்றுக்கு சம்ஸ்காரங்கள் என்று பெயர். சம்ஸ்காரம் என்றால் "பண்படுத்துதல்" என்பதுதான் பொருள். மனிதனின் வாழ்க்கையை இவை பண்படுத்துவதால அப்படி பெயர் கொடுத்து இருக்காங்க.
மனித வாழ்க்கைக்கான சம்ஸ்காரம் பிறக்கிற முன்னேயே ஆரம்பிக்குது.
அதனால முதல்ல...
--
கர்ப்பாதானம்

இது குழந்தை பெற்றுக்கொள்ள ஏற்பட்ட கர்மா. இதுக்கெல்லாம் ஒரு கர்மாவான்னு கேட்டா, ஆமாம். நல்ல குழந்தை பெற்றுக்கொள்வது முக்கியமானதாலே அதுக்குன்னு பல சட்ட திட்டங்கள் உண்டு. கர்ப்பம் உண்டாகக்கூடிய காலம் ருதுக்காலம் ன்னு பேர். இந்த காலத்தில கர்ப்பம் தரிக்க நல்ல நாள் குறிப்பாங்க.

---

இதுக்கெல்லாம் நல்ல நாளா?

ஆமாம். பராசரர் நல்ல குழந்தை உண்டாவதற்கான நாளை கண்டு கொண்டதால தன் மனைவியுடன் கூட அவசரமா போகும் போது மழையால தடை வந்தது. நேரம் தப்பி விடுமோன்னு மச்சகந்தியை பரிமளகந்தியாக்கி, அவளோட கூட, வியாசர் பிறந்தார். அதனால நேரம் முக்கியம்தான்.

இதுல சொல்கிற மந்திரங்கள் நல்ல ஆண் குழந்தை பிறப்பை வேண்டிதான் இருக்கு. ஏன் ஆண் குழந்தைனா தனக்கு பின் ஆண் சந்ததி இருப்பதால பித்ரு காரியங்கள் தடங்காம நடக்கும் என்பதாலதான்.

பொதுவா இந்த நேரத்தில சொல்கிற மந்திரங்களோட அர்த்தம் இப்படி இருக்கு. "அரணியில் கட்டையை கடைவதால் ஏற்படக்கூடிய அக்னி போல, நீண்ட ஆயுளும் பலமும் கூடிய ஆண் குழந்தைகள் பிறக்கட்டும். நான் கடவுளின் ஒரு பகுதி. என் பித்ருக்களின் கட்டுகளை நீக்குவதற்காக நல்ல மகன்களை பெறுவேன். தேஜஸும் செல்வமும் கொண்ட புத்திரர்கள் உண்டாகட்டும். அவர்கள் தகுந்தவர்களுக்கு தேவையான தான தருமங்களை செய்து நீண்ட காலம் வாழட்டும். மோட்சத்தை அடையட்டும். இறைவன் உன்னை கர்ப்பம் தரிக்க தகுதி உள்ளவளாக செய்யட்டும். கெட்ட சக்திகள் உன்னை விட்டு அகலட்டும். உன் குழந்தைகள் ஊனம் ஏதும் இல்லாது இருக்கட்டும். நீ தெய்வீக காமதேனு போல இருப்பாயாக.

---

மதியம் செவ்வாய், ஜூலை 22, 2008

பும்ஸவனம்

## பும்ஸவனம்

இது கர்ப்பம் தெரிந்த உடனே செய்யப்படவேண்டியது. ஒரு ஆண் குழந்தையை பெறுவதற்கான கர்மா. புஷ்ய நக்ஷத்திரத்துல செய்ய வேண்டியது. (அதாங்க பூசம்). எப்படியானாலும் ஆண் நக்ஷத்திரத்துல செய்யணுமாம்.
ஒவ்வொரு கர்ப்பத்துக்கு முன்னேயும் செய்யணுமா என்கிறதுல ரிஷிகளுக்கு கொஞ்சம் அபிப்பிராய பேதம் இருக்கு. அவரவர் குடும்ப பழக்கமும் க்ருஹ்ய சூத்திரமும்தான் இதை முடிவு செய்யணும்.

ஔபாசன அக்னில ஹோமம் உண்டு .

முக்கிய காரியமா இந்த கர்மாவில மரத்தின் கிழக்கிலோ அல்லது வடக்கிலோ உள்ள இரு காய்களுடன் கூடிய ஆலங்கொழுந்தை எடுத்துவந்து மந்திரத்தோட மூக்கில வலது பக்கம் பிழிகிறாங்க. அது தொண்டைக்கு வரும்போது அவள் அதை விழுங்கணும். ஆண் குழந்தையோ அல்லது நல்ல பிரஜையோ பிறக்க வேண்டிக்கிறாங்க.
ஏன் ஆல மொக்கு? சுஷ்ருதர் கர்ப்பிணிகளுக்கு இது பல பிரச்சினைகளை சரி பண்ணும் என்கிறாராம்.

கூடவே வலது கையிலே ஒரு மந்திரிச்ச கயிறும் கட்டுவாங்க.

மந்திரங்களோட பொதுவான அர்த்தம்:

ஈசான தேவதை நம் வேண்டுதல்களை நிறைவேற்றட்டும். தாதா உலகை குழந்தைகளாலும் மற்ற செல்வங்களாலும் வாழ்த்தட்டும். அவர் இந்த வீட்டையும் குழந்தைகள் தந்து வாழ்த்தட்டும்.யமனை வென்றவர்கள் இந்த வீட்டில் வசிக்கட்டும். அக்னி எனக்கு குழந்தைகள் கொடுத்து அருளட்டும். இந்திரன் அதே போல் அருளட்டும். அழகான குழந்தைகள் எனக்கு பிறக்கட்டும்.

---

மதியம் புதன், ஜூலை 23, 2008

சீமந்தம்

## சீமந்தம் என்கிற சீமந்தோநயனம்:

இது சம்ஸ்காரங்களில் மூன்றாவது.

சீமந்தோநயனம் அப்படினா வகிடு பிளக்கிறதுன்னு அர்த்தம்.
முதல் கர்ப்பத்தின் ஐந்தாம் மாசம் முதல் எட்டாம் மாசம் வரை செய்யலாம்.
இதுல முக்கியமா வெள்ளை நிறம் இருக்கிற முள்ளம் பன்றி முள், நெற்கதிர், அத்தி (ஔதும்பர) மரத்தோட சிறு கிளை இவைகளால பெண்ணோட வகிடு பிரிக்கிறாங்க. (அதாவது நெற்றியில் ஆரம்பித்து மேல் நோக்கி இழுக்கணும்) இப்படி செய்கிறதால் பெண்ணின் மனதிலே இருக்கிற கிலேசங்கள் அகலும். சந்தோஷமா இருப்பாங்க. குழந்தையும் நல்லா இருக்கும்.

இதில கூப்பிடுகிற தேவதை ராகா. இந்த தேவதை பௌர்ணமி சந்திரனுக்கு தேவதை. அப்ப கர்ப்பம் பயனுள்ளதா இருக்கும்; முள்ளம்பன்ரி முள் போல கூர்மையா புத்தி இருக்கும்; பூர்ண சந்திரம் போல குழந்தை அழகா இருக்கும்.

### மந்திர அர்த்த சுருக்கம்:

ராகா தேவதையை வேண்டுகிறேன். இந்த கர்மா பழுதில்லாமல் இருக்கட்டும். என் மகன் கூர்மையான புத்தியுடன் இருக்கட்டும். ராகா நமக்கு நிறைய செல்வங்களையும் ஆயிரம் வகையில் அபிவிருத்திகளும் கொடுத்து வளர்க்க வேணும்.

இந்த கர்மா போது வாத்தியங்கள் குறிப்பா வீணை வாசிக்க சொல்கிறங்க. தான் வசிக்கும் இடத்தில் இருக்கிற நதியின் பெயரை சொல்லி ஒருமந்திரத்தை வீணை வாசிக்க தெரிந்தவர்களை கொண்டு வாசிக்க சொல்ல வேண்டும். இது மன அமைதி தரதோட பால் தரும் திறனை அதிகப்படுத்துகிறதாம். பெண்களும் வீரனான குழந்தையை பெற்று எடுப்பாய் ன்னு பாடுவாங்களாம்.

பெண்ணின் தலையில் நெற்கதிரை வைக்கணும். எஜமானனும் கர்ப்பிணி மனைவியும் அன்னைக்கு நக்ஷத்திர உதயம் வரை மௌனமா உபவாசம் இருக்கணும். முடிவில ஒரு காளை கன்னுகுட்டியை தொடணும்.

இனி குழந்தை பிறந்த பிறகு செய்கிற கர்மாக்கள்.

---

மதியம் வியாழன், ஜூலை 24, 2008

ஜாத கர்மா

## ஜாத கர்மா:

முன் காலத்திலே குழந்தை பிறப்பதாக அறியப்படும் நாளுக்கு ஒரு மாசம் முன்னாலேயே எங்கே குழந்தை பிறப்பு இருக்கலாம்ன்னு தீர்மானம் செய்து முடிவு பண்ணுவாங்க. அனேகமா அது நிர்ருதி திசைல இருக்கும் (தென் மேற்கு).பிரவசத்துக்கு சில நாட்கள் முன்னே பெரியவங்களை, தெய்வங்களை எல்லாம் வணங்கிட்டு பாட்டு மணிசத்தத்தோட நுழைவாங்க. என்ன லேகியங்கள், மருந்துகள், உணவு சாப்பிடிடலாங்கிறதுல நிறைய கட்டு பாடுகள். அறை புதுசா பிறக்கிற குழந்தைக்கு இதமா கொஞ்சம் இருட்டாவே இருக்கும்.

குழந்தை பிறக்க கஷ்டமானாலோ இல்லை வலி சரியா எடுக்கலைனாலோ சில வேத மந்திரங்கள் ஓதப்படும்.

குழந்தை பிறந்த சேதி கேட்ட உடன் தகப்பன் அப்படியே ஓடிப்போய் ஒரு குளத்திலேயோ நதியிலேயோ குதிக்கனும். (இல்லைங்க, தற்கொலை முயற்சி இல்லே!) அப்ப தண்ணி பனை மர உயரத்துக்கு எழும்பனும். (ஒபெலிஸ்க் குதிச்சாதான் இது சாத்தியம் என்கிறார் நண்பர்) இதனால பித்ருக்கள் சந்தோஷமாகிறாங்க.

சூதிக அக்னின்னு ஒரு அக்னி பிரசவ ரூமிலே மூட்டி கடுகு, நெல் தானியங்கள் ஹோமம் செய்வாங்க. இந்த சமயத்தில செய்கிற தான, தர்மங்கள் சுபமானது; நிறைய பலன் தரக்கூடியது.

மந்திரம் சொல்லி தேனை குழந்தை வாயிலே ஒரு தங்க காசால் ஒரு சொட்டு விடுவாங்க. இதனால் குழந்தை புத்திசாலியா இருக்கும். குழந்தை காதிலே நீண்ட ஆயுசை வேண்டி தகப்பனால் சில மந்திரங்கள் ஓதப்படும்.
இதுக்கு பிறகுதான் தொப்புள் கொடியை துணிப்பாங்க.

இப்ப இதெல்லாம் சரியா செய்கிறது குறைஞ்சு போச்சு. இந்த கர்மாவை பெண்ணுக்கு கல்யாணம் போதும் பையனுக்கு உபநயனம் போதும் செய்கிறாங்க. என்ன பிரயோசனம்? கர்மாக்களை அததற்கு உரிய காலத்திலே செய்தால்தான் பலன் கிட்டும்.

--

மதியம் வெள்ளி, ஜூலை 25, 2008

நாம கரணம்

## நாம கரணம்:

குழந்தைக்கு பெயரிடுதல். எளிய கர்மா. இரட்டைபடை எழுத்துக்கள் இருக்கணும் என்கிறாங்க பெரியவங்க. (க்,ச் மாதிரி புள்ளி எழுத்து கணக்கில்லே) பெண் குழந்தைகளுக்கு ஆ அல்லது ஈ யில் முடிவதாக வைப்பாங்க.

வைக்கிற பேரு கேட்க இனிமையா இருக்கணும். மாடர்ன்னா வைக்கிறேன்னு பலரும் அர்த்தமே இல்லாத சொற்களை பேராக்கறங்க. நல்ல அர்த்தம் இருக்கணும். தாத்தா பாட்டி பேர்களும் இறைவன் பேர்களும் எப்பவுமே நல்லது. எந்த நக்ஷத்திரத்துக்கு எந்த எழுத்திலே பேர் ஆரம்பிக்கணும்ன்னு கூட நியதிகள் இருக்கு. பஞ்சாங்கத்திலே போட்டு இருக்கும். பலருக்கும் அந்த காலத்திலே இரண்டு மூணு பேர் வைப்பாங்க. அபிசியலா ஒண்ணு. கூப்பிடற பேர் இன்னொன்னு. வைக்காத பேரான அம்பின்னும் கூப்பிடறதுண்டு. வழக்கமா மூத்த பிள்ளையை இப்படி "அம்பி"ன்னு கூப்பிடுவாங்க.! :-))
கடவுள் பேரை வைக்கிறதாலே ஒரு லாபம். அடிக்கடி கடவுளை கூப்பிட்டுகிட்டே இருக்கலாம். அஜாமிளன் கதை தெரியுமில்லையா?

வழக்கமா 11 ஆம் நாள் பெயரிடறாங்க. பிரசவம் முடிந்து சுத்தி செய்து அப்புறம் தகப்பன் குழந்தை காதிலே "உன் பெயர் ........" அப்படின்னு சொல்லுவார். மத்த பெரியங்களும் அதேபோல சொல்லி ஆசீர்வாதம் செய்வாங்க.

---

மதியம் திங்கள், ஜூலை 28, 2008

புராணங்கள்

இது ஒரு அவசர கால பதிவு.
திருப்பி வாய்க்காலுக்கு தோண்டறாங்க.
அதனால எதுக்கும் இருக்கட்டும்ன்னு இப்ப இதை பதியறேன்.

சில நாட்கள் முன் ஒரு பதிவில் ஒரு கேள்வியை படிக்க நேரிட்டது. புராணங்கள் பற்றி சில கேள்விகள் எழுப்பபட்டு இருந்தது. கேட்கப்பட்டவர் அப்புறமாக பதில் சொல்லுவார், அதற்கு திறமை இருக்கு என்றாலும் -. இதே போல நான் பங்கு கொள்கிற குழுவிலும் கேள்விகள்

விமர்சனங்கள் இருந்தன. அதனால் இதை எழுத ஒரு உந்துதல் இருந்தது.

மனிதன் தன் வாழ்கையை எப்படி அமைத்துக்கொண்டால் சுகமாக இருக்கலாம் என்பது வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் சொல்லப்படுகிறது. இந்த விஷயங்கள் எல்லாருக்கும் போய் சேர வேண்டி புராணங்கள் எழுந்ததாக சொல்லப்படுகிறது. இவை மொத்தம் 18 அனேகமாக எல்லாமே கதை ரூபத்தில் இருக்கும்.

நாத்திகர் பலருக்கும் கை கொடுப்பது இவைதான். "இங்கே அப்படி, அங்கே இப்படி இருக்கு. கீழ் தரமா இருக்கு இல்லையா?" என்று இவர்கள் கேட்கும் பல கேள்விகள் ஆன்மீகத்தில் நாட்டம் உள்ள பலருக்கும் தர்ம சங்கடம் விளைவிக்கின்றன. ஈடுபாடு அதிகம் இல்லாதவரும் "அட! சரிதானே!" என்று நினைக்கறது இயல்புதானே. ஆத்திகர் புராணங்களை நம்பறாங்களோ இல்லையோ நாத்திகர் நம்பறாங்க. அப்பதானே அதுல ஓட்டை, உடசல், ஆபாசம்ன்னு கண்டுபிடிக்கலாம்? போகட்டும்.

சரி. எழுப்பப்படுகிற கேள்விகளுக்கு என்ன பதில்?

தேவ லோகம் என்கிற பரிமாணத்தில இருக்கிறது என்ன என்று நம்மால புரிந்து கொள்ள முடியாது. அதற்கான உபகரணங்கள் நம்மகிட்ட இல்லை. பிறந்ததிலிருந்து பார்வை இல்லாதவர் எப்படி ஒளி என்கிற ஒரு விஷயத்தை புரிந்து கொள்ளவே முடியாதோ, அது போல அவர்களுக்கு இருக்கிற தன்மையையோ இயல்பையோ விதிகளையோ நாம் புரிந்து கொள்ள முடியாது. ஆக நம் மனித உலக விதிகளை அவங்களுக்கு பொருத்தி பார்க்க இயலாது. அது சரியில்லை.

இருந்தாலும் நாம் ஏதோ ஒரு விதத்திலே இவங்களை புரிந்து கொள்ள அவசியம் இருக்கிறது. ஏன் என்றால் இவர்களால நமக்கு நல்லது நடக்க முடியும். தீமையும் நடக்க முடியும். அதனால நம் குறை பட்ட அறிவால கொஞ்சமாவது புரிந்து கொள்ளணும்.

உதாரணமாக அக்னியின் ரூபத்தை வேதம் சொல்கிறது - இரண்டு தலை நான்கு கொம்பு மூன்று கால்கள் ஏழு கைகள் - நம்மால இதையல்லாம் எப்படி பகுத்தறிவுக்கு பொருத்தி பார்க்க முடியும்? "இந்த மாதிரி எல்லாம் உடம்பு இருக்குமா?" என்றால் அக்னிக்கு மனிதனுக்கு இருப்பது போன்ற உடம்பு இல்லையே? கை போல செயல்படுவது கை என்று சொல்கிறாங்க. இதெல்லாத்தையும் ஒரு உவமையாதான் சொல்ல முடியும். ஒரு பிறப்பு தரும் இடத்தை யோனி என்பார்கள். மனித பிறவிக்கு இருக்கிறது போல இல்லை இது.

இரண்டு இயற்கை சக்திகள் இணைந்து மூன்றாவது சக்தி தோன்றுகிறது. அப்போதும் அந்த இரண்டு சக்திகளும் இருக்கும். அவை தனித்தும் இயங்கும். இன்னொன்றுடன் சேர்ந்தும் இயங்கும். மூன்றாவது சக்தியை தோற்றுவித்து அதுவும் இயங்கும்.

இதையெல்லாம் எப்படி புரிய வைக்கிறது. அப்படியே சொன்னால் குப்பனுக்கும் சுப்பனுக்கும் புரியுமா? சுலபமா புரிய வைக்க வழி நம்ம வாழ்கையில நடக்கிறதா பாவிச்சு சொல்வதுதான். ஒரு அப்பாவும் அம்மாவும் குழந்தை பெற்றுக்கிறதை விட இயல்பா என்ன இருக்க முடியும்? இப்படி கதை சொல்கிறதுல சில சிக்கல்கள் வரும்போது சிலர் வாய்க்கு அவல் கிடைச்சிடும்.

ஒவ்வொரு புராண கதையும் ஏதோ ஒரு விஷயத்தை சொல்ல வருகிறது. புத்திசாலிகள் சாரத்தை எடுத்துகிட்டு சக்கையை விட்டுவிடனும். சொல்ல வந்த விஷயத்தை எடுத்துகிட்டு மேலோட்டமா தெரிகிற - நம் மனசால மலினமா ஆக்கப்பட்டதை உதாசீனம் செய்யணும். புராணங்கள் புத்திசாலிகள் இல்லாதவங்களுக்குன்னுதானே சொன்னீங்கன்னு கேட்டா, ஆமாம். ஆனா அவங்க பல விஷயங்களை இயல்பா எடுத்துகிட்டு போயிடுவாங்க. இடக்கு மடக்கா கேள்விகள் கேட்கிறது "அறிவு ஜீவிகள்" தான். எல்லாம் பார்வையிலே இருக்கிறது. விஷ்ணு என்கிற சக்தி சிவன் எங்கிற சக்தியோட சேர்ந்து ஐயப்பன்னு ஒரு சக்தி உருவாகிறது, அவங்களுக்கு ஒன்றும் ஆச்சரியமோ

அருவருப்போ தராது. குழம்புகிறது தான்தான் புத்திசாலின்னு நினைக்கிறவங்கதான்.

இந்த நாத்திகவாதிகள்தான் இப்படின்னா சில ஆத்திகர்களும் சரியான புரிதல் இல்லாம கஷ்டப்பட்டு மத்தவங்களையும் கஷ்டப்படுத்துவது உண்டு. இப்ப அது குறைஞ்சுகிட்டு வருகிறது.

இப்ப சிவ புராணத்தை எடுத்துகிட்டா சிவன்தான் முழுமுதற் கடவுள். அவர் நெருப்பு தூணாக நிற்க பிரம்மாவும் விஷ்ணுவும் முடியையும் அடியையும் தேடுகிறாங்க.
இதே விஷ்ணு புராணத்தை எடுத்துகிட்டா விஷ்ணுதான் முழுமுதற் கடவுள். சிவன் ஏதாவது வரத்தை கொடுத்திட்டு அவருக்கே அது பிரச்சினை ஆகி விஷ்ணுதான் காப்பாத்துவார்.
அது போலதான் விநாயக புராணத்திலேயும். பிள்ளையார்தான் எல்லாத்துலேயும் முதல்.

இப்படி எந்த புராணத்தை எடுத்துகிட்டாலும் ஏதோ ஒரு தெய்வத்தை கொண்டாடி மத்ததை கொஞ்சம் இறக்கும். அந்த அந்த கடவுள் மேல ஒரு மதிப்பு சிரத்தை வரணும்னு இப்படி கொஞ்சம் தூக்கி மற்றதை குறைத்து சொல்கிறாங்க. எல்லாத்தையும் எழுதினது வியாஸர்தானே.

அதனால "என் கடவுள்தான் உயர்ந்தவர், உன் கடவுள் மட்டம்" என்கிற பேச்சிலே பொருள் இல்லை. யார் யாருக்கு எப்படி இறைவனை பார்க்க ஈடுபாடு இருக்கிறதோ அப்படித்தான் இறைவனும் காட்சி தருவார்.

எல்லாம் சரி புராண கதைகள் உண்மையா பொய்யா என்றால் பதில் சொல்வது கடினமே. கதைகள் உண்மை நிகழ்ச்சிகளாகவும் வெறும் கதையாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் அதை நம்புவதில் லாபம் இருக்கிறது. நம்பிக்கை ஒரு ஈடுபாட்டை தருகிறது. அதனால் சொல்லப்பட்டது கடைபிடிக்கப்படும் சாத்தியக்கூறு அதிகமாகிறது. அது நல்லது. அதற்காகதானே கதையே. அதனால நாம் புராணங்களை படிக்கும் போது சக்கையை விட்டு சாரத்தை பார்க்க ஆரம்பிக்கலாம்.

---

மதியம் செவ்வாய், ஜூலை 29, 2008

குடுமி வைத்தல் -சௌளம்

சௌளம்

இது குடுமி வைப்பது. ஆண் குழந்தைகளுக்கு மட்டுமேன்னு சொல்ல வேண்டியது இல்லை. பிறந்த வருஷத்திலேயோ அல்லது மூன்றாவது வருஷமோ செய்யலாம்.

லௌகிக அக்னியில் ஹோமங்கள்.
அக்னிக்கு மேற்கே கிழக்கு பார்த்து குமாரனை உட்கார வைத்து, மந்திரம் சொல்லி தலையை வென்னீர் கலந்த நீரால் நனைத்து,

மூன்று மூன்று தர்பங்களை இடையில் வைத்து, நான்கு மந்திரங்களால், ஒவ்வொரு மந்திரத்துக்கும் ஒவ்வொரு திசையிலும் முடியை வெட்ட வேண்டும். வலது புறம் தாயாரோ அல்லது ஒரு பிரம்ம சாரியோ நின்றூ கொண்டு வெட்டியதை வாங்கிக்கொள்ள வேண்டும். அடுத்து காளையின் சாணியில் அவற்றையும் நெல்லையும் சேர்த்து அத்தி மரத்தின் அடியிலோ அல்லது நாணல் (பாத்து இருக்கீங்களாப்பா? ;-)) புதரின் அடியிலோ வைக்கணும். இதனால் முன்னேயே வாங்கிக்கொள்ளும் போதே ஒரு மடக்கில் நெல்லும் சாணமும் சேர்த்து அதிலேயே வாங்கிக்கொள்வதுண்டு.

குடுமி வைத்துக்கொள்வது இப்போது மிகவே அரிதாகி வருகிறது. நம் ஆத்ம சக்தியை விரயமாகாமல் இது கட்டிப்போடுகிறது. யாருக்கு கேசம் பிரிந்து இருக்கிறதோ அவர்களை தீய சக்திகள் எளிதில் அண்டுகின்றன. ஆண்களைப்பற்றி கேட்கவே வேண்டாம். பெண்களும் இப்போதெல்லாம் தலையை விரித்துப்போட்டுக்கொள்வது "நாகரீகம்" ஆகிவிட்டது. கேசத்தின் நுனி வெளியே தெரிவதாக இருந்தால் அது மேல் நோக்கி இருக்க வேண்டும். மடித்து உள்ளே

போட்டுவிட்டால் (கொண்டை போல) பிரச்சினை இல்லை. இன்னும் கிராமத்து பெண்கள் தலை வாரி நுனியை மேல் நோக்கி மடித்து கட்டுவதை பார்த்து இருக்கிறேன். வெளியே தெரியாமல் இருக்கத்தான் ரிப்பன் வந்தது. இப்போது வழக்கொழிந்து போய்விட்டது. பிரச்சினைகளும் அதிகமாகி விட்டதல்லவா?

குடுமி வைத்தபின் அதை நீக்கிக்கொள்வது ஆத்ம ஹத்தியாக கருதப்படுகிறது (தற்கொலை). பாரத போரின் முடிவில் அச்வத்தாமாவை என்ன செய்வது, குரு புத்திரனாயிற்றே என்றூ யோசித்து அவன் சிகையை மட்டும் வெட்டிவிட்டதாக மஹாபாரதத்தில் வருகிறது அல்லவா?

யாருக்கு எப்படி இருக்கிறதோ எனக்கு ஒவ்வொரு பக்ஷமும் வபனம் செய்து கொள்ளாவிட்டால் உடம்பு உபாதையால் கஷ்டப்படுகிறேன். இது அனுபவம்.

---

மதியம் புதன், ஜூலை 30, 2008

உபநயனம் 1

உபநயனம்:

வேதத்தை கற்பதற்கு வேத விதிப்படி செய்கிர சம்ஸ்காரம் இது।

உபநயனம் ன்னா கிட்டே கொண்டு போகிறது ன்னு பொருள்। எந்த கர்மாவால வேத வித்தைக்காக மாணவன் குருகிட்டே அழைத்துக்கொள்ள படுவானோ அதுக்கு உபநயனம் ன்னு பெயர். அந்தண க்ஷத்திரிய வைச்யர்களுக்கு தாயால முதல் பிறப்பும் உபநயனத்தால இரண்டாவது பிறப்பும் ஏற்படுகின்றன. இதனால இவர்களுக்கு த்விஜர் (இரு பிறப்பாளர்) என்று பெயர்.

இந்த கர்மா ஆண் பிள்ளைகளுக்குத்தான். பெண்களுக்கு இதற்கு பதிலா திருமணம் ன்னு சொல்லிட்டாங்க.

உண்மையில இதை செய்து வைக்க வேண்டியவர் வேதம் சொல்லித்தரப்போற குரு.

இப்ப இது பெரும்பாலும் வெத்து சடங்கா போயிட்டதால பையனோட அப்பாவே செய்கிறார். செய்து வைக்க அப்பா இல்லைனா அப்பப்பா; அவர் இல்லைனா செய்து வைக்க தகுதி உள்ளவங்க இந்த வரிசைல : அண்ணா, தாயாதி, அதே கோத்திரத்தை சேர்ந்தவங்க இப்படின்னு பட்டியலே இருக்கு. சன்யாசிகள் செய்து வைக்கக்கூடாது. மனைவி இல்லாதவர் செய்து வைக்கிறதும் அதமம்.

கொஞ்சம் கூட ஞானம் இல்லாதவர் செய்து வைக்கிறதும் உபநயனத்தால கொஞ்சம் கூட ஞானத்தை நாடாததும் இருட்டிலிருந்து இருட்டுக்கு போகிறது போலவாம். ஏழு வயதில் அந்தண சிறுவனுக்கும் அவன் நல்ல புத்தி கூர்மை இருந்தா ஐந்து வயசிலேயும் உபநயனம் செய்விக்கலாம். சக்தியை அனுசரித்து பதினாறு வயது வரை தள்ளிப்போடலாம்.

மாணவன் யாரிடமிருந்து தர்மத்தையும் அனுஷ்டானங்களையும் கத்துக்கொள்கிறானோ அவரே ஆசாரியர். உடம்பை மட்டும்தான் அப்பா அம்மா தராங்க. வாழ்கைக்கு தேவையான ஞானத்தை தரவர் ஆச்சாரியர்தான். அதனால அவருக்கு எப்பவுமே தீங்கு நினைக்கறதோ அபசாரம் செய்கிறதோ கூடாது.

உபநயன காலத்தில் குருவானவர் மாணவனை ஒரு கல்லின் மேல் காலை ஊன்றி நிற்கச்சொல்லி ஆசீர்வதிக்கிறார். “ இந்த கல்லைப்போல வலிமை கொண்ட உடலும் உறுதி கொண்ட நெஞ்சமும் உடையவனாக நீ இருக்க வேண்டும். உன் விரதங்களுக்கு ஊறு செய்பவர்களை எதிர்த்துப்போராடி நீ விரட்டி அடிக்க வேண்டும். சந்தியாவந்தனத்தையும் மற்ற கடமைகளையும் தவறாமல் செய்வாயாக. அறியாமையில் இருந்து விழித்து எழு. உறங்காதே.!"

---

உபநயன காலத்தில் அளிக்கப்படுகிற காயத்ரீ மந்திரம் எல்லா மந்திரங்களிலும் சிறந்ததாக சொல்கிறங்க. அதனாலேயே இதுக்கு பிரம்மோபதேசம் ன்னு பேர். பிரபஞ்ச சாரத்துல சங்கரர் சொல்றார்: இகத்திலேயும் பரத்திலேயும் நல்வாழ்கையை நாடும் த்விஜர்களால் இந்த மந்திரம் ஜபித்தற்கு உரியது.

மதியம் வியாழன், ஜூலை 31, 2008

உபநயனம்-உ

காயத்ரி ஜபத்தால் மனது ஒருமை படுவதுடன் ஜபம் செய்பவர் புத்தி, மேதா விலாஸம் ஆகியன மிகச்சிறந்த விருத்தியை அடைகிறது. ஞான ஒளியை தருவது இது. காயத்ரி ஜபமும் மற்ற நல்ல கர்மங்களும் மேலும் நல்ல ஞாபக சக்தியையும், நீண்ட ஆயுளையும், வலிமையையும் தருகின்றன.

காமம் உள்புகுந்தபின் மந்திரம் நிலைக்காது. அதனால்தான் காம விகார உணர்வுகள் உள்ளே போகும் முன்னே காயத்ரீ உபதேசமும் ஜபமும் ஆரம்பித்துவிட வேண்டும் என்கிறார்கள். அதனால்தான் சிறு வயதிலேயே இதை செய்து கொள்ள சொல்கிறார்கள். எண்ணை பூசிக்கொண்ட கை பலாச்சுளைகளை பிரிப்பது போல மந்திரம் நிலைத்த பின் மனதை காமம் அதிகம் பாதிக்காது.

பத்து வயதில் க்ஷத்திரியனும் 11 இல் வைச்யனும் உபநயனம் செய்ய காலம். மற்ற மதத்தவர் கூட இதே வயதில் இது போன்ற கர்மா செய்கின்றனர். பார்சிகள் குழந்தையின் 6 வயது 3 மாதங்களில் நவ்ஜோத் என்று செய்கிறார்கள்.
மனிதனுக்கு இதற்கு முன்னால் செய்யப்பட்ட கர்மாக்கள் அனைத்துமே இதற்கு தகுதியை உண்டாக்கத்தான்.

உடல் சுத்திக்காக முதலில் வபனம் (முடி திருத்தம்); நீண்ட ஆயுளுக்காவும், தன் பிள்ளைபோல மாணவனை காப்பாற்றவும் அக்னியை வேண்டுகிறார்கள். முன் சொன்னபடி கருங்கல் மீது ஏறி மந்திரங்கள் சொல்லி ஆசீர்வாதம் செய்த பின் ஆடை, மேகலை, மான்தோல், தண்டம் முதலியன பல தேவதைகளின் அருளை வேண்டிக்கொண்டு மாணவனுக்கு தரப்படும்.

வாமன அவதாரத்தின் போது அவருக்கு நடந்த உபநயனம் விரிவாக பாகவதத்தில் எட்டாம் ஸ்கந்தம் 18 வது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது. சூரியன் அவருக்கு நேரில் காயத்திரியை உபதேசம் செய்தான். உபவீதத்தை ப்ரஹஸ்பதியும்; மேகலையை கச்யப ப்ரஜாபதியும்; நீண்ட ஆயுள், யஷஸ் தரும் மான்தோலை பூமிதேவையும்; நல்ல புத்தி, வேதத்தை காத்தல் இவை பொருட்டு பலாச தண்டத்தை ஸோமனும்; இந்திரிய நிக்ரஹத்தை தர கௌபீனத்தை அதிதியும்; குடையை தேவலோகமும்; தீர்த்த பாத்திரத்தை ப்ரம்மாவும்; சுத்தம் தரும் குச புற்களை ஸப்த ரிஷிகளும்; ஜப மாலையை ஸரஸ்வதியும் பிட்சை எடுக்கும் பாத்திரத்தை குபேரனும்; உலகுக்கே தாயாரான உமாதேவி பிக்ஷையும் அளித்ததாக சொல்லி இருக்கிறது.

இந்த தேவதைகளின் அருளினால் வாமனர் பிரகாசித்ததாக சொல்லப்படுகிறது.
மேலும் ஹோமங்கள் செய்வதில் பயனாகும் மந்திரங்கள் மாணவனின் நீண்ட ஆயுள், செல்வம், ஐச்வர்யம், மேதாவிலாசம், புகழ் இவற்றை வேண்டி அக்னியை பிரார்த்திப்பதாக உள்ளது. பின் ஸமித்துக்களை மாணவன் ஹோமம் செய்கிறான். இந்த ஸமிதாதானம் ப்ரம்மசாரியால் தினமும் செய்யப்பட வேண்டியது.

முப்புரி நூலை எப்போதும் தரித்து இருக்க வேண்டும். அந்தணர் அல்லாத பலர் இதை சில விசேஷங்களுக்கு மட்டும் போட்டுக்கொண்டு (திருமணம், அந்திம காரியம்) மற்ற நேரங்களில் அணிவது இல்லாமல் போய் விட்டது. பூணூல் மூன்று இழைகள் கொண்டதாக செய்து அதை கட்டைவிரல் அல்லாத மற்ற 4 விரல்களில் 96 முறை சுற்றி துணித்து; இந்த நூலை நனைத்து

மீண்டும் மூன்றாக முறுக்கி (இப்போது 9 இழை ஆகிவிட்டது) மூன்றாக சுற்றி முடி போட வேண்டும். இது பிரம்ம கிரந்தி. இதில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் உள்ளனர். பூணூலின் நீளம் தொப்புள் வரை இருக்க வேண்டும்.

இந்த பூணூல் என்கிற பிரம்ம சூத்திரம்தான் ஒருவன் தபஸை காப்பாற்றுகிறது. இந்த பூணூல் இல்லாது செய்யும் கர்மாக்கள் பலன் சரியாக தருவதில்லை. தேவ காரியங்கள் செய்யும் போது இடது தோளில் இருந்து வலமாகவும், பித்ரு கார்யங்களில் வலது தோளில் இருந்து இடமாகவும் அணிய வேண்டும். மற்ற நேரங்களில் சாதாரணமாக மாலை போல் அணிய வேண்டும் என்றாலும் பலரும் இதை பின் பற்றுவதில்லை.

---

மதியம் வெள்ளி, ஆகஸ்ட் 1, 2008

உபநயனம் -3

முஞ்சம் புல் என்கிற புல்லை முப்புரியாக முறுக்கி அதை இடுப்பில் 3 முறை சுற்றி நாபிக்கு நேராக முடியிட வேண்டும். அதர்வண வேதத்தில் இதற்கு மூத்திர கோளாறுகளை தடுக்கும் சக்தி இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது.

மான் தோல்: இதை முழுதாக தோளில் போட்டுக்கொள்ள வேண்டும். இந்த காலத்தில் எங்கே! மான்களும் அரிதாகி விட்டன. பயன்படுத்தினால் சட்டமும் பாயும்! போட்டுக்கொள்ளலாமே தவிர அதில் படுக்கவோ, உட்காரவோ கூடாது. ஆயுர்வேதத்தில் இதற்கு க்ஷய ரோகத்தை நீக்கும் குணம் சொல்லப்படுகிறது.

தண்டம்: தன் நெற்றி உயரம் அளவுள்ள பலாச (முறுக்கன், புரசு- பூவரசு அல்ல) தண்டத்தை கையில் வைத்துக்கொள்ள வேண்டும். தேவர்கள் காயத்ரீயின் பொருளை விசாரம் செய்த போது இந்த மரம் அதை கவனமாக கேட்டுக்கொண்டு இருந்ததாம். அதனால் காயத்ரீயின் 3 பாதங்களையும் அறிந்து கொண்டு மும்மூன்று இலைகள் உள்ள காம்புகளாக தளிர் விட்டதாம். இதன் தண்டத்தை கைக்கொண்டவன் பொய் வார்த்தைகளை கேட்க மாட்டான்; ஞாபக சக்தி பெருகும் என சொல்லப்படுகிறது.

பின் ஆசாரியன் அனுமதி பெற்று பிட்சை எடுக்க வேண்டும். முதல் பிட்சை அன்னையிடமும் பின் பிட்சை மறுக்காத தன் பெரிய தாயார் அக்கா இவர்களிடமும் பெறலாம். இது தவிர அப்பா முதலானவர்களிடமும் வாங்கலாம். மூன்றோ தேவையானால் அதிகமான பேர்களிடம் பிட்சை பெறலாம். முடிந்த பிறகு ஆசாரியனிடம் அதை கொண்டு காட்டி அவர் அனுமதித்தபின் சாப்பிடலாம்.

உபநயன தினத்திலிருந்து 3 நாட்கள் உப்பு, உரப்பு இவற்றை விலக்க வேண்டும். 3 நாட்கள் அரிசியாகவும் பின் அன்னமாகவும் பிசை பெற வேண்டும். சந்தியா உபாசனையை தொடர்ந்து செய்ய வேண்டும்.

சுருக்கமாக கர்மா வழிமுறை பின்வருமாறு:

பூர்வ அங்கமாக உதகசாந்தி என்கிற வேத மந்திரங்களின் தொகுப்பை பாராயணம் செய்தல்; மந்திர ஜபம்; அங்குரார்ப்பணம்; ப்ரதிசரபந்தம்; அப்ப்யுதயம்; புண்யாஹம் என்கிற சுத்தி கர்மா.

விக்னேஸ்வரபூஜை; புண்யாஹம்: முப்புரி நூல் தரித்தல்; (இதுவல்ல முக்கிய கர்மா); உப்பு காரம் இல்லாத நெய்யும் பாலும் சேர்த்த அன்னத்தால் குமார போஜனம் - பையனுடன் சில பிரம்மசாரிகளுக்கு உணவிடல்; சௌளத்தில் சொன்னபடி மீண்டும் திக் வபனம் (முடி திருத்தம்); குளியல்; கோமணம் கட்டுதல். பக்கதில் பையனை இருத்திக்கொண்டு ஆசாரியன் லௌகீக அக்னியை இட்டு ஹோமம். முன் சொல்லிய பலாச தண்டம் முதலானதை அளித்தல்; முன் சொன்னது போல அம்மியில் நிற்கவைத்து ஆசீர்வாதம்; ஆசார்யனுக்கும் மாணவனுக்கும்

---

இடையில் ஒரு உரையாடல்; பின் மாணவன் கையை பிடித்துக்கொண்டு ஆசார்யன் ஹோமம் செய்வித்தல்; மீதி ஹோமத்தை ஆசார்யன் முடித்தல்;

ப்ரம்ஹோபதேசம் - இதுதான் இந்த கர்மாவில் முக்கிய பாகம்.
கூடியிருக்கும் பெரியோரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு நவக்ரஹங்களுக்கு திருப்தி செய்து ஆசார்யனின் பாதங்களை கழுவி பூசித்து "ஸாவித்ரீயை உபதேசம் செய்யுங்கள்" என வேண்டுதல். அவரும் உபதேசிப்பார். பட்டால் தங்களை மூடிக்கொண்டு அது நடக்கும். முடிந்து பலாச தண்டம் எடுத்துக்கொள்ளுதல்; மாணவனே குருவுக்கு தக்ஷிணை தருதல்; குரு மேற்கொண்டு பல மந்திர உபதேசங்கள், சூரிய வழி பாடு துவக்கம். பிறகு ப்ரம்மசர்யம் எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என சில கட்டளைகள் இடுகிறார்.

நீ ப்ரம்மசர்யத்தை அனுஷ்டிப்பவனாக இருக்கிறாய்
அப்படியே செய்கிறேன்.
என்னால் அனுமதிக்கப்பட்டவனாக நீர் அருந்து
அப்படியே செய்கிறேன்.
கர்மாவை செய் (சமித்துக்கள் சேகரித்து கொண்டு வருவது, சமிதாதானம் செய்தல் போன்றவை)
அப்படியே செய்கிறேன்.
பகலில் தூங்காதே
அப்படியே இருக்கிறேன்.
தினந்தோறும் உணவுக்காக பிக்ஷை எடு
அப்படியே செய்கிறேன்.
எனக்கு கட்டு பட்டவனாக, என் உத்திரவு இல்லாமல் பிறருக்கு ஹோமம் செய்வித்தல், வேதம் சொல்லிக்கொடுத்தல் ஆகியவற்றை செய்யாதிரு.
இதற்குப்பின் பிக்ஷை எடுத்தல்.
நான்கு நாட்கள் அதே துணியை உடுத்தி இருக்க வேண்டும். 4 வது நாள் ஆசாரியன் வேறு துணியை கொடுத்து அதை வாங்கிக்கொள்வார்.

நான்காம் நாள் பலாச கர்மா ....

---

மதியம் திங்கள், ஆகஸ்ட் 4, 2008

உபநயனம்-4

நான்காம் நாள் பலாச கர்மா

மாணவன் மூன்று நாட்கள் அரிசியே பிசை எடுக்க வேண்டும். 4 ஆம் நாள் முதல் அன்ன பிட்சை. இதுவரை ஆபஸ்தம்பர் கூறியபடி கர்மாவுடைய வரிசையை பாத்தோம். இனி சொல்கிறது மற்றவர் எழுதியபடி.

கர்மா எது, எப்போ, எப்படி செய்யணும்னு கொஞ்சம்தான் வேதத்திலோ சாஸ்திரத்திலோ இருக்கும். முழு விவரங்கள் பாக்க கிருஹ்ய ஸூத்திரங்களைதான் பாக்கணும். அவரவர் ஸூத்திரப்படி கர்மாக்களை செய்யணும்.
அப்படி பார்க்கும்போது பலாச கர்மா சிலருக்கு இருக்கும்; சிலருக்கு இருக்காது.

4 ஆம் நாள் ஆசார்யனுடன் கிழக்கு அல்லது வடக்கு திசை சென்று ஒரு புரச மரத்தின் அடியில் 3 மண் திட்டுகள் செய்ய வேண்டும். முறையே பிரணவம், ஷ்ரத்தா தேவி, மேதா தேவி ஆகிய தேவதைகளை ஆவாஹனம் செய்து மந்திரங்களால் போற்றி முன் எடுத்துக்கிட்ட பலாச தண்டத்தை அங்கேயே விட்டுவிட்டு வேறு தண்டம் எடுத்துக் கொண்டு ஆசாரியனுடன் திரும்பணும்.

உபதேசம் செய்யப்போறவர் விசேஷமாக அதிக ஜபம் செய்து உபதேசம் செய்தால் நல்ல பலன் இருக்கும். அதுக்கு தனியா சங்கல்பமே இருக்கு.

---

இல்லாட்டா இருட்டுலேந்து இருட்டுக்கு போகிற மாதிரி ஆகிடும். அதனால் உபதேசம் செய்ய நல்ல குலத்திலே பிறந்து நல்ல அனுஷ்டானம் உள்ளவரை பார்த்து தேர்ந்து எடுக்கணும். சுமங்கலி பிரார்த்தனை முன் கூட்டியே தவறாமல் செய்யணும். சமாராதனையும் அவரவர் குல வழக்கப்படி செய்யணும். (சாதாரணமா அந்தணர்களுக்கு உணவளிக்கிறதுதான் சமாராதனை.)

அங்குரார்ப்பணம் என்பது புண்யாஹம் செய்து 5 பாலிகை கிண்ணங்களில் நெல், உளுந்து, எள்ளு, பச்சை பயறு, கடுகு ஆகியவற்றை மந்திர பூர்வமாக இட்டு பூஜை செய்தல். ஓஷதி ஸூக்தமும் சொல்லுவர். 5-7 சுமங்கலிகளும் ஜலம் தெளிப்பர். பின் தினசரி காலையும் மாலையும் ஜலம் தெளித்து பூஜை செய்து 5 ஆம் நாள் தேவதைகளை அனுப்பி வைத்து, நதியிலோ குளத்திலோ கரைத்துவிடுவர்.
பிரதிசர பந்தம் என்பது ரக்ஷை கட்டிக்கொள்ளல்.

---

மதியம் செவ்வாய், ஆகஸ்ட் 5, 2008

வேத விரதம்

நாற்பது சம்ஸ்காரங்கள்ல அடுத்தது வேத விரதம். எங்கேயோ கேள்வி பட்டா மாதிரி இருக்கு இல்ல? சாதாரணமா வேத படிப்புக்கு போகாதவங்க திருமணத்துக்கு முன்னால இதை செய்து கொள்ளறாங்க. ஆங்... விரதம்ன்னு சொல்வாங்களே..அதேதான். ஏன், எதுக்கு செய்கிறோம்னே தெரியாம போய்கிட்டு இருக்கிற கர்மாக்கள்ல இதுவும் ஒண்ணு. போகட்டும்.

உபநயனமான மாணவன் தினசரி சந்தியா உபாசனை, காயத்ரீ ஜபம், ஸமிதாதானம் என்கிற அக்னி கார்யம் செய்து வரணும். முதல் வருட உபாகர்மா என்கிற "ஆவணி அவிட்டம்" போன பிறகு வேதவிரதம் செய்து வேத அத்தியயனம் ஆரம்பிக்க வேண்டும்.

தேர்ந்தெடுத்த நாள்ல மாணவன் ஸமிதாதானம் முடித்து பெரியவங்க அனுமதி வாங்கிகிட்டு செய்யணும்.

இந்த வேத விரதங்கள் நான்கு. ப்ராஜாபத்யம், ஸௌம்யம், ஆக்னேயம், வைச்வதேவம். அதாவது வேதத்தில் 4 பாகங்கள். ஒவ்வொன்றும் ஒரு தேவதையை ஒட்டி; ப்ரஜாபதி, சோமன், அக்னி, விச்வேதேவர்கள்.

இவற்றை ஒவ்வொண்ணா ஆரம்பிச்சு முடிக்கிறதும் உண்டு; ஆனால் வழக்கில் இல்லை. எல்லாத்தையும் சேர்த்து செய்வதுவும் உண்டு.

சங்கல்பம் செய்து, பிள்ளையாரை பூசித்து, செய்திருக்கக்கூடிய பாபங்களை தொலைக்க ஹிரண்ய தானம் (தக்ஷிணை) கொடுத்து; ஷவரம் செய்து கொண்டு குளித்து காண்டரிஷி தர்ப்பணம். (பிரம்ம யக்ஞம் முடித்து செய்கிறோமே அதேதான்).
மாணவன் இன்னும் வேதம் கற்கவில்லை, இல்லையா. அதனால ஹோமம் செய்ய இன்னும் அருகதை ஏற்படலை. அதனால் ஆசார்யன்தான் ஹோமம் செய்யப்போகிறார். மாணவன் அவரை தொட்டுக்கொண்டு இருப்பான். வேத மந்திரங்களை கண்டு கொடுத்த ரிஷிகளை குறித்து முதலில் தர்ப்பணம் ஆயிற்று. இப்போது ஹோமம் அவர்களை குறித்தே.

ஆரம்பித்த ஹோமத்தை ஆசாரியனே முடித்து வைப்பார். மாணவன் மந்திரங்கள் சொல்லி பின் துணியால் போர்த்துக்கொண்டு இருந்து சூரிய அஸ்தமனம் போதுதான் வீட்டில் பிரவேசிக்கணும். கண்ணை மூடிக்கொண்டு சிறிது நேரம் இருக்க வேண்டும்.
அன்று இரவு உறங்கி காலை எழுந்து வீட்டுக்கு வெளியே அக்னி, சூர்யன், பூர்ணகும்பம், ஆகாசம். மலை, கன்றுக்குட்டி எல்லாத்தையும் பார்த்து மந்திரங்கள் ஜபிக்க வேண்டும். பிறகு வேத பாடங்கள் தொடர்ந்து நடந்து முடிந்தபின் உத்சர்ஜனம் என்கிற கர்மா. இது முந்தைய கர்மா போலவே ஆனாலும் மந்திரங்கள் மாறும்.

---

( ஒரு ரிஷிகள் குழுவுக்கு ஹோமம் செய்து அவர்கள் கண்டு கொடுத்த மந்திரங்களை பயிற்சி செய்து, உத்சர்ஜனம் செய்து பின் அடுத்த ரிஷிகள் குழு குறித்து ஹோமம். இப்படியே நான்கும்.)

அதாவது காப்பி ரைட்ஸ் ஐ அக்னாலெட்ஜ் செய்கிறது போல அந்த அந்த வேத பாகத்தை பாடம் கேட்குமுன் அந்த மந்திரங்களை பிரபஞ்சத்திலேந்து கிரகித்து நமக்கு கொடுத்த ரிஷிகளுக்கு தர்ப்பணம், ஹோமம் செய்து திருப்தி செய்து பிறகு வேதம் கற்க வேண்டும். அந்த பாட பகுதி முடிந்த பின்னே அவருக்கு ஒரு நன்றி சொல்வது போல மீண்டும் தர்ப்பணம், ஹோமம்; அப்புறம் அடுத்த ரிஷிக்கு இதேபோல. இப்படியாக 4 பாகங்களையும் முடிக்க வேண்டும். இப்போதெல்லாம் வேத பாட சாலைகளில் கூட இந்த கிரமத்தில் பாடங்கள் நடக்கலை.

--

இப்போது நடப்பது: திருமணத்துக்கு முன்னே நமக்கு என்ன நடக்கிறது என்றே தெரியாமல் வாத்தியார் எதோ செய்து வைக்க; வேத பாடம் சொல்ல வேண்டிய இடம் வரும் போது சொல்லி வைக்காமல்; "அப்பா! நாங்க வேதம் சொல்கிறோம். நீ கேட்டுக்கொண்டு இரு. அல்லது காயத்ரீ ஜபம் பண்ணிக்கொண்டு இரு"ன்னு சொல்லிட்டு அவங்க ஜபம் செய்ய அப்போதான் வருகிற ஒவ்வொரு உறவினரும் "அலோ" சொல்லி திருமணம் செய்து கொள்ள போகிறவரோட கை குலுக்கி சிரித்து பேச; இதெல்லாம் பாத்து நொந்துபோய் வாத்தியார்கள் வேத ஜபத்தை முடித்துக்கொள்ள, "ஒண்ணரை மணியாவது ஆகணுமே! எப்படி அதுக்குள்ள" ன்னு சிலர் முறைக்க; பெரும்பாலானவர்கள் அப்பாடா முடிஞ்சதுன்னு சந்தோஷப்பட ...போதும், வேணாம். சூரி சாருக்கு பிபி எகிறிடும். :-(

சிரத்தை இருப்பவர் வேத அத்தியயனம் செய்தவரானால், குறைந்தது வேத அத்தியயனம் பூர்த்தி ஆனபின் இந்த நான்கையும் செய்ய வேண்டும். இதைப்பத்தி முக்காலே மூணு வீசம் பேருக்கு தெரியலை என்பதால்தான் இப்படி விவரம் எழுதுகிறேன்.

வேத அத்தியயனம் செய்யாதவர் இப்போதாவது முன்திட்டமிட்டு ஒரு முழு நாளை ஒதுக்கி முழு கர்மாவையும் செய்ய வேண்டும்.

அதாவது ஒவ்வொரு காண்ட ரிஷிக்கும் ஹோமம் செய்து அந்த வேத பாகம் (குறைந்த பட்சம் எவ்வளவுன்னு கணக்கு இருக்கு) சொல்லச்சொல்ல திருப்பி சொல்லி, -அதாவது வேத அத்தியயனம் செய்கிறோம்- பின் பூர்த்தி ஆனதும் அடுத்த ரிஷிக்கு- இப்படி 4 கும் செய்து பிறகு வ்ரத உத்சர்ஜனம் செய்ய வேண்டும். காலை 6 மணிக்கு ஆரம்பித்தால் மதியம் 3 மணிக்கு முடிக்கலாம். அல்லது நிதானமா 2,3,4 நாட்கள்ள செய்யலாம்.

--

இப்படியாக வேத அத்தியயனம் பூர்த்தி ஆன பின் திருமணத்துக்கு ரெடி!

---

மதியம் புதன், ஆகஸ்ட் 6, 2008

ஸமாவர்த்தனம்.

இப்படியாக வேத அத்தியயனம் பூர்த்தி ஆன பின் திருமணத்துக்கு ரெடிதான் ஆனாலும் இப்ப (தியரில) குருகுலத்திலதானே இருக்கிறார்? (ஆமாங்க, வேதம் படித்தவருக்கு மரியாதை கொடுக்கணும் இல்லையா? அதான் "ர்".)
வேத பாடம் பூர்த்தி செய்து ஸமாவர்த்தனம் செய்து கொள்கிறார்.

உடம்பு முழுவதும் சவரம் செய்துகிட்டு குளிச்சு, இடுப்பில இருக்கிற மேகலையை ஒரு பிரம்ஹசாரிகிட்டே கொடுப்பார். அவர் அதை தர்ப்பை புதரிலோ, அத்தி மரத்து கீழேயோ மறைச்சு வெச்சுடுவார். தண்டம், மான் தோல் எல்லாம் விட்டு விட வேண்டியது. வாசனை பொடி போட்டுகிட்டு ஜம்முனு குளியல். இது வரை இடுப்பில ஒரே ஒரு துண்டுதான் ; இப்ப ரெண்டு துணி உடுத்திக்கிறார். பூணூல் ஒரு ஜோடியா போட்டுக்கிறார். சந்தனம் பூசிகிட்டு, பூ

வைச்சுகிட்டு, (ஆமாம், பூவேதான்) கண்ணுக்கு மையிட்டு கண்ணாடில முகம் பார்க்கணும்.

சுத்தமான இடத்திலேந்து அக்னி கொண்டு வந்து பிரஜாபதிக்கு சின்ன ஹோமம்.

ஆசார்யன் மங்கல சிராத்தமான புண்யாஹம் செய்துவித்து ஆசீர்வாதம் செய்து "போய் வாப்பா" ன்னு விடை கொடுத்துடுவார். மாணவர் பாதரக்ஷை (செருப்பு) போட்டுகிட்டு, குடை, தடி எல்லாம் எடுத்துக்கிட்டு கிழக்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ போய், அப்புறமா வீட்டுக்கு போவார்.

இதான் ஸமாவர்த்தனம்.

இது இப்ப நடக்கிற விதத்தை கேட்டா அட, இதுதானான்னு ஆச்சரியப்படுவீங்க.

இப்பதான் வேதம் படிக்கவே போகலையே. அதுக்கு பதிலா திருமணத்துக்கு முந்தின நாள் குறைந்த பட்ச வேத அத்தியயனம் செய்கிறதுன்னு பார்த்து இருக்கோம். அதெல்லாம் என்ன, எப்படி செய்யறாங்களோ, இப்ப திருமணத்து அன்னைக்கு காலை குளிச்சு புதுசா வேட்டி கட்டி, (இப்பதான் பஞ்சகச்சம்ன்னா என்னன்னு புரியும்) பூஜை முடிச்சு, "மாப்பிள்ளை" புது செருப்பு போட்டுகிட்டு, குடை, வாக்கிங் ஸ்டிக், பகவத்கீதை புத்தகம் எல்லாம் எடுத்துண்டு கிளம்பிடுவார். ம்ம்ம்ம்...... அதேதான் -காசி யாத்திரை. போகிற ஆசாமியோட நண்பர்கள் " இதாண்டா கடேசி சான்ஸ். தப்பிக்கனும்னா இப்பவே எங்களோட வந்துடு. தெரு முனைல கார் இருக்கு" ன்னு கலாட்டா பண்ணுவாங்க. நல்ல புத்திமதி சொன்னா இந்த காலத்துல யார் ஏத்துக்கிறாங்க? "மாப்பிள்ளை" இதை கேக்காம அசட்டு சிரிப்பு சிரிச்சுகிட்டே மாட்டிப்பார்! “மாமனார்" வழி மறிச்சு "பாத்தா நல்ல பிள்ளையா இருக்கேயே. என் பொண்ண கல்யாணம் பண்ணி தரேன். சமத்தா குடித்தனம் நடத்து" ன்னு சொல்லுவார். விதி யாரை விட்டது? மாப்பிள்ளையும் சரின்னு திரும்பிடுவார்.

இதான் இப்ப நடக்கிற ஸமாவர்த்தனம்.

---

மதியம் வியாழன், ஆகஸ்ட் 7, 2008

விவாஹம்

விவாஹம் என்கிற கர்மா அடுத்தது.
இது வர ப்ரேக்ஷணை என்பதுடன் ஆரம்பிக்கிறது. அதாவது வேத பாடம் முடித்து வீடு திரும்பிய மாணவர் இரட்டைப்படை அந்தணர்களை தக்ஷிணை தாம்பூலம் எல்லாம் கொடுத்து மகிழ வைத்து "எனக்கு தகுந்த கன்னிகையை பெண் பார்த்து வாங்க" ன்னு வேண்டிக்கிறார். அவங்களும் சரின்னு போய் பெண்ணை தேடி கண்டு பிடித்து சம்பந்தம் பேசி "இன்ன இன்ன குலத்தில் வந்த இன்ன வரனுக்கு உங்க இன்ன இன்ன பெண்ணை".. "தர்ம பிரஜையின் பொருட்டு" கொடுக்கும்படி கோருவார்கள்.

கன்னிகையின் அப்பா "சோபனம்" ன்னு சொல்லி சம்மதிப்பார். அந்தணர்கள் திரும்பி வந்து தாங்கள் போன காரியம் நல்லபடி முடிந்ததை தெரிவிப்பாங்க. பிறகு கல்யாண ஏற்பாடுகள் நடந்து கன்யாதானம் நடக்கும்.

கன்யாதானம்

விக்னேஸ்வர பூஜை முடித்து பெண்ணின் தந்தை மஹாவிஷ்ணுவை திருப்தி படுத்த கன்யாதானம் செய்வதாக சங்கல்பம் செய்கிறார்.

விஷ்ணுவுக்கு பூஜை நடக்கிறது. விஷ்ணு எங்கே வந்தார்? மாப்பிள்ளைதான் விஷ்ணு. அப்படி பாவித்துதான் கன்யாதானம். அவருக்கு, ஆசனம் கொடுத்து, நல்வரவு சொல்லி, கையில் ஜலம் கொடுத்து, அவரோட பாதங்களை அலம்பி "இன்ன இன்ன குலத்தில் பிறந்த இந்த பெண்ணை இன்ன இன்ன குலத்தில் பிறந்து விஷ்ணு சொரூபமாக விளங்கும் உனக்கு கன்னிகாதானம்

செய்து கொடுக்கிறேன்"ன்னு 3 தரம் சொல்லுவார்.

கிழக்கே பாத்து பெண்ணோட அப்பா நிற்க வரன் மேற்கு நோக்கி நிற்க பெண்ணோட தாய் வடக்க பார்த்து நிப்பாங்க. பெண்ணை தகப்பனார் தாரை வார்த்து கொடுக்கிறார். வரனும் வாங்கிக்கிறார்.

பிறகு வரனும் பெண்ணும் புதுப்பாயில் உட்கார்ந்து அக்னி வளர்க்கிறார்கள்.

கன்னிகையின் அப்பா மதுபர்க்கதானம் செய்கிறேன் ன்னு சங்கல்பம் செய்கிறார். பாத பூஜை செய்து கையில் நீர் வார்த்து அதை அவர் கீழே விட்ட பின் மதுபர்க்கம் தானம் செய்கிறார். மதுபர்க்கம் ன்னா என்ன?

தயிரில் தேன் கலந்து ஒரு பழைய பித்தளை தட்டால மூடி எடுத்து வருவாங்க. அதுதான் மதுபர்க்கம். சிலர் நெய்யும் சேர்பதுண்டு. இன்னும் சிலர் பொரியும் சத்துமாவும் கூட கலப்பாங்க. மாப்பிள்ளை இன்னும் கொஞ்சம் தெம்பா கர்மா செய்யட்டுமே ன்கிற நல்ல எண்ணமா இருக்கலாம்!

மாப்பிள்ளை அதை வாங்கி மந்திரம் சொல்லி சாப்பிடறார். 3 முறை. (இதுக்குத்தான் இடுப்பில கர்சீப் வெச்சுக்கன்னு சொல்லிகிட்டே இருப்பாங்க. மாப்பிள்ளைகள் எங்கே கேக்கிராங்க! அந்த நேரத்தில தேடரதுதான் வழக்கம்.) அப்படியே கொஞ்சம் தண்ணியும் கைல வாங்கி குடித்த பின் வரனுக்கு ஒரு பசு மாட்டை கொடுக்கிறாங்க. அதை அவர் ரொம்ப பெருந்தன்மையோட ப்ரீயா விட்டுடறார்.

வரனுக்கு இப்ப சாப்பாடு போடறாங்க. (இல்லை சமயத்துல அல்வா கொடுத்தாலும் கொடுத்துடுவாங்க. எல்லாம் நேரம்!)

அப்புறம் மேற்கொண்டு கர்மா. இப்பதான் வரன் முதல் முதலா பொண்ண பாக்கறார். தானே பாத்து மந்திரங்கள் சொல்கிறார்.
ரெண்டு பேரும் உக்காந்து விவாஹ சங்கல்பம் செய்யறாங்க.

கன்னிகைக்கு சில சுத்தி சம்ஸ்காரங்கள் நடக்குது. மாப்பிள்ளை மந்திரம் சொல்லி தர்ப்பை புல்லால புருவ மத்தியை தடவி மேற்கே போடுவார். இந்த நேரத்துல கன்னிகை "அப்பா அம்மாவை பிரியறோமே" ன்னு நினைச்சு கண்ணீர் விட்டா கூட மந்திரம் உண்டு! அந்தணர்கள் கன்னிகைக்கு மந்திர "குளியல்" செய்து வைப்பர். தர்ப்பை புல்லால ஒரு பிரிமணை மாதிரி செய்து தலையில் வெச்சு மந்திரம் சொல்லி ஒரு சின்ன நுகத்தடியின் வலது ஓட்டைய பிரிமணை மேலே வைப்பாங்க. இன்னும் ஒரு மந்திரம் சொல்லி கொஞ்சம் தங்கமும் அந்த ஓட்டைல வைப்பாங்க. (சாதாரணமா தாலியையே வைக்கிறாங்க. அப்படிதான் செய்யணும்னு ஒண்ணும் இல்லை. மேலும் இப்ப சொல்கிறது எல்லாம் க்ருஷ்ண யஜுர் வேத ஆபஸ்தம்ப சூத்திரப்படி. சூத்திரங்களை பொருத்து நடைமுறை மாறும்.)

ஐந்து மந்திரங்கள் சொல்லி துளித்துளியா நுகத்தடி ஓட்டை வழியா மந்திர நீர் விடறாங்க. பிறகு புதுசா புடவை கொடுத்து உள்ளே போய் ஈரத்தை தடைச்சு கொண்டு புது புடவை அணிந்து வர அனுப்பறாங்க.

எல்லாரும் பொண்ணு திரும்பி வர வரை பொறுத்துக்கொண்டு இருக்கணும்.

---

மதியம் வெள்ளி, ஆகஸ்ட் 8, 2008

விவாஹம்-உ

இதோ பொண்ணு திரும்ப வந்தாச்சு. அந்த புதுப்புடவை கட்டிக்க மந்திரம் உண்டு. அதை சொல்லி வெச்சுதான் உள்ளே அனுப்பினாங்க.

அடுத்து மாங்கல்ய தாரணம். முன் காலத்துல எல்லா சினிமாலேயும் இடம் பெற்ற "மாங்கல்யம் தந்துனானேன" என்ற இது வேத மந்திரம் இல்லை. ஸ்லோகம்தான். அதே போல மாங்கல்ய தாரணம் முக்கிய கர்மா இல்லே. அதுவும் எப்படியோ முக்கியத்துவம் வாங்கிடுத்து.

அப்புறம் பெண் இடுப்பிலே மந்திரம் சொல்லி தர்ப்பையால் ஆன கயிற்றை மூன்று முறை சுத்திவிடறாங்க. வரன் பெண்ணோட கையை பிடிச்சு அக்னிகிட்டே அழைச்சு வரார். புதுப்பாயில் வடக்கிலே வரனும் அவனுக்கு வலது புறமா பெண்ணும் உட்காரனும். அக்னி காரியம் ஆரம்பித்துவிட்டு ஹோமம் செய்ய போற பொரியை சுத்தி செய்து, பெண்ணை மந்திரிக்கிறார்கள். இங்கேதான் நாத்திகர் பலராலும் பலவிதமா விமர்சனம் செய்ய படுகிற ஸோம பிரதம: என்ற மந்திரம். (அதைப்பத்தி எழுத இது சரியான இடமில்லை. தேவையானால் வேறு இடம்/ நேரத்துல எழுதலாம்.)

வரன் கவிழ்த்த தன் வலது கையால் நிமிர்ந்துள்ள கன்னிகையின் வலது கரத்தை முழுதும் கட்டை விரலையும் சேர்த்து பிடிக்க வேண்டும். இதுக்கு 4 மந்திரங்கள். இப்படி கையை பிடிச்ச பிறகு அக்னிக்கு வடக்கிலே வரன் கன்னிகையின் வலது காலை தன் இடது கையால் தொட்டு கிழக்கே பார்த்தோ இல்லை வடக்கே பார்த்தோ 7 அடிகள் எடுத்து வைக்க வேண்டும். ஒவ்வொரு அடிக்கும் ஒரு மந்திரம். 7 அடிகள் ஒருத்தருடன் நடந்தால் அவர் நண்பன் ஆகிவிடுகிறார் என்பது சாஸ்திரம். (சாவித்திரி கதை தெரியும் இல்லையா?) இத்தனையும் செய்யும் போது வலது கையை விடவே கூடாது. இந்த சப்தபதீதான் திருமணத்தோட முக்கிய கர்மா. சட்டப்படிகூட.

அடுத்து அக்னியை வலம் வந்து அமர்ந்து ஹோமம் செய்ய வேண்டும். அதை முடித்துக்கொண்டு அக்னிக்கு வடக்கே வைத்து இருக்கிற அம்மி மேலே வரன் கன்னிகையோட வலது கையை பிடிச்சுக்கொண்டு; இடது கையால் பெண்ணோட வலது பாதத்தை, கால் கட்டை விரலை பிடித்து ஏற்றி வைக்கணும். அப்புறம் அக்னி முன் உட்கார்ந்து பெண்ணோட இரண்டு கரங்களையும் அஞ்சலியா பிடிச்சு வலது கையில கொஞ்சம் நெய் தடவி அதன் மேலே பொரி 2 முறை வைத்து மேலே கொஞ்சம் நெய் ஊற்றி அக்னியில் அவள் கையால் ஹோமத்தை வரன் செய்விக்க வேண்டும். இது சில விதங்கள்லே மாறானது. முதல்ல ஔபாஸனம் தவிர வேறு ஹோமங்கள் பெண்கள் நேரடியாக செய்வதில்லை. அதே போல கையாலும் செய்வதில்லை. பெண்ணோட தம்பிதான் பொரி எடுத்து போடணும் என்பதெல்லாம் பிற்சேற்கை. சாத்திரம் சொன்னதில்லை. அப்புறம் மந்திரம் சொல்லி அக்னியை மூணு முறை வலம் வந்து திருப்பி அம்மி மிதித்தல். இதே போல 3 முறை.

அடுத்து ஹோமத்தை பூர்த்தி செய்து தக்ஷிணை எல்லாம் கொடுத்து, ஆசீர்வாதம் எல்லாம் முடிஞ்சா கல்யாணம் முடிந்தது. எல்லாரும் சாப்பிட போகலாம் (மொய் எழுதிட்டு!).

---

மதியம் திங்கள், ஆகஸ்ட் 11, 2008

விவாஹம் பூர்த்தி

அடுத்து வரன் வீட்டுக்கு வந்து பிரவேச ஹோமம்.

விவாஹ அக்னில 13 ஹோமங்கள்.

முடியும் போது வதுவுக்கு நீண்ட ஆயுளுடன் கூடிய குழந்தை பிறக்க வேண்டி மந்திரம் சொல்லி ஒரு ஆண் குழந்தையை அவள் மடியில் விடுவர். வரனிடம் மந்திரம் சொல்லி பழங்களை கொடுப்பர்.

நக்ஷத்திரங்கள் உதிக்கும் வரை மௌனமாக இருந்து உதித்த பின் கிழக்கு நோக்கியோ அல்லது வடக்கு நோக்கியோ வெளியே போய் மந்திரம் சொல்லி த்ருவ நக்ஷத்திரத்தையும் அருந்ததியையும் பார்க்க வேண்டும்.

அப்பாடா அம்மி (அம்பி இல்லை) மிதிச்சு அருந்ததி பாத்தாச்சு!

அடுத்து ஆக்னேய ஸ்தாலீபாகம் செய்து ஔபாஸனம் என்கிற அக்னி கார்யம் துவங்கணும். இதை நித்திய கர்மாக்கள்ள ஏற்கெனவே பாத்து இருக்கோம்.

இப்படி 3 நாள் போகணும். இந்த நாட்கள்லே தரையில்தான் படுக்கை; பிரம்மசர்யம்; உப்பு புளி இல்லாத ஆகாரம். இருவர் படுக்கைக்கும் நடுவே சந்தனம் பூசிய தண்டத்தை துணியோ நூலோ சுத்தி வைக்கணும். இதில கந்தர்வ ராஜனான விச்வாவசு ஆவாஹனம் செய்து இருப்பர். இதை பத்திரமா வைத்து பூசிக்கணும்.

நாலாம் நாள் விடியற்காலையில் இந்த கந்தர்வ ராஜனை எழுப்பி மந்திரம் சொல்லி அனுப்பிவிட்டு தண்டத்தை அலம்பி வேற இடத்திலே வைக்கணும். பிறகு அக்னியில் ஹோமம். இதுதான் சேஷ ஹோமம். முடிந்த பிறகு மந்திரங்கள் சொல்லி வதுவும் வரனும் ஒத்தரை ஒத்தர் பார்பாங்க. பிறகு வதுவை மடியில் உட்கார்த்தி வைத்துக்கொண்டு மந்திரம் சொல்லி ஹோமம் செய்து மீதியா இருக்கிற நெய்யால வதுவோட மார்பில் வரன் தடவி விடுவார். பின் கட்டை விரலாலே தன் மார்பிலேயும் தடவிப்பார். மோதிர விரலாலே வதுவின் மார்லேயும் திருப்பி தடவுவார்.

பிறகு நாந்தீ சிராத்தம், புண்யாஹம். நாந்தீ சிராத்தத்தை பாணிக்ரஹனத்துகு முன்னே அப்பாவும், பின்னே வரனும் செய்யணும்.

இது முடிந்து பலதானம். லக்ஷ்மீ நாராயணனையும் உமாமஹேசனையும் நினைத்துக்கோண்டு அந்தணர்களை வரித்து வெற்றிலை பாக்கோட பழங்கள் தானம் செய்வர்.
பின் தாம்பூலம் தரித்து (இப்பதான் ரைட்ஸ் கிடைக்குது) ஆசீர்வாதங்கள் நடந்து ,

கௌரீ கல்யாணம் பூர்த்தி!

இதற்குப்பின் செய்கிற அத்தனை கர்மாக்களையும் இருவரும் சேர்ந்துதான் செய்ய வேண்டும். பதி பத்தினீகள் இடையே பிரிவுகள் இல்லை.

ஒரு தடவை இந்த காலத்திலே செய்ய வேண்டிய விவாஹத்தில் வரிசையை பட்டியலா பாத்துடலாமா?

1. (பொண்ணு பாக்கச்சொல்லி) வரன் செய்கிற வேண்டுதல் - வர ப்ரேக்ஷணை
2. நிச்சயதார்த்தம் - வாங் நிச்சயம்
3. காசி யாத்திரை- விரத பூர்த்தி (ஆமாம், முன்னேயே செய்து இருக்க வேண்டியது இப்போவாவது செய்யணும். அதனால பட்டியல்லே வந்தாச்சு)
4. வர பூஜை; கன்யாதானம்.
5. அக்னி பிரதிஷ்ட்டை
6. மது பர்க்கதானம்
7. தேவதா பிரார்த்தனை
8. திருமண சங்கல்பம்
9. கன்யா சம்ஸ்காரம்
10. கூரை புடவை அணிதல்; அலங்காரம்
11. தாலி கட்டுதல்- மாங்கல்ய தாரணம்
12. அக்னி வளர்த்தல்
13. கைத்தலம் பற்றுதல் -பாணி க்ரஹணம்
14. சப்த பதீ

15. அக்னி வலம் வருதல்
16. கல் மேலே ஏறுதல்; பொரி ஹோமம் (அச்மாரோஹணம், லாஜ ஹோமம்)
17. ஜய என்கிற இந்திரன் முதலான தேவர்களுக்கு ஹோமம் செய்து பூர்த்தி செய்தல் (ஜயாதி ஹோமம்)
18. பிரவேச ஹோமம்; துருவ அருந்ததீ நக்ஷத்திரங்களை காணல்
19. ஆக்னேய ஸ்தாலீபாகம்
20. ஔபாஸனம்
21. சேஷ ஹோமம்
22. நீத்தார் அருள் கோரி நாந்தீ சிராத்தம்
23. பலதானம்
24. தாம்பூலம் தரித்தல்
25. ஆசீர்வாதம்.

இதுதான் சாத்திரப்படி கிரமம். இதிலே பல விஷயங்கள் விட்டு போச்சு - ஊஞ்சல் எங்கே, நலங்கு எங்கேன்னு பலதை நினைச்சீங்கன்னா அதெல்லாம் லௌகீகமா பின்னாலே வந்தவை. அப்ப அதெல்லாம் பண்ணனுமா வேண்டாமான்னா..

சூத்திரக்காரர் ஒரே போடா போட்டு தங்கமணிகள் கிட்டேந்து தப்பிச்சுகிட்டார். "பெண்கள் கூறியதையும் செய்க" ன்னு ஒரு வாக்கியத்தை போட்டுட்டார். அப்ப செய்யத்தானே வேணும்?

---

மதியம் செவ்வாய், ஆகஸ்ட் 12, 2008

விவாஹம் -சில குறிப்புகள்

போன பதிவுகள்ள பாத்த அத்தனை அங்கங்கள்லேயும் எது இருக்கோ இல்லையோ 5 முக்கியமானவை.
வாங்நிச்சயம், கன்யாதானம், வரன் பூஜிக்கப்பட்டு கன்னியை ஏற்றுக்கொள்ளுதல், கைப்பிடித்தல், சப்தபதீ.

அது சரி யார் இதை எல்லாம் இப்படின்னு முடிவு பண்ணாங்க?

ரிக் வேதத்தில் பத்தாவது மண்டலத்திலே 85 வது சூக்தத்தில் ஸோமன் என்கிற தேவன் விவாஹம் செய்து கொள்கிறதைப்பத்தி சொல்லி இருக்கு. ஸூர்யை என்பவளை திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டு இரண்டு அச்வினீ தேவர்களையும் ஸவிதாவின் வீட்டுக்கு அனுப்பி வைத்தான். ஸவிதா கன்னிகாதானம் செய்ய ஒப்புக்கொண்டார். பிறகு சூரியனுடைய வீட்டுக்கு ஸோமன் சென்றான். அங்கு மிக மதிப்புடன் வரவேற்றனர். பிறகு அக்னி சாட்சியாக ஸூர்யையை கைப்பிடித்தான்.

இதையேதான் நாம் பின் பற்றி வருகிறோம்.

கன்யாதானம் செய்பவர் சங்கல்பம் செய்யும்போது "முன் 10 தலைமுறைகளிலும் பின் 10 தலைமுறைகளிலும் இந்த தலைமுறையிலும் ஆக 21 தலைமுறைக்கு இக்குலத்தினரின் ஆனந்தம் நிலையாக இருக்க வேண்டும்" என மஹாவிஷ்ணுவை பிரார்த்திக்கிறார். அதனால் மஹாவிஷ்ணுவே மாப்பிள்ளை வடிவில் வந்து கன்னிகையை ஏற்பதாக எண்ணி அவருடைய பாதங்களை பூஜிக்கிறார்.
"பொன் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட இந்த கன்னிகையை மகாவிஷ்ணு சொரூபமாகிய உமக்கு தானம் செய்கிறேன். பித்ருக்கள் கரையேறவும் பிரம்மலோகத்தை அடையவும் விரும்பி இந்த தானத்தை செய்கிறேன். இதற்கு இந்த உலகை தாங்கும் தேவதைகள் சாட்சி என்று கன்னிகாதானம் செய்பவர் கூறுகிறார்.

கன்னிகையை சுத்தி செய்யும் கர்மாவான நுகத்தடி ஓட்டை வழியாக நீர் வார்த்தல் குறித்து ஒரு கதை உள்ளது.

அத்ரி மகரிஷியின் பெண்ணான அபலா பிரம்மஞானி. தன் உடலில் இருந்த தோல் வியாதியின் காரணமாக திருமணம் ஆகாமல் இருந்தாள். அவள் இந்திரனை குறித்து தவம் இருந்தாள். சந்தோஷமடைந்த இந்திரன் தன் தேரின் நுகத்தடி துவாரத்தின் வழியாக நீர் விட்டு அவளுடைய ரோகத்தை சரி செய்தான். அவளும் சூரியனுக்கு ஒப்பான காந்தி உடையவளாகவும், தோஷம் இல்லாதவளாகவும் ஆனாள். (ஆற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்படும் போது மிதந்து வந்த ஸோம லதையை கடித்து இந்திரனுக்கு சேரட்டும் என்று நினைத்து அதன் ரசத்தை துப்பினாள் என்று கதை உண்டு.) ரிக் வேதத்தில் கூறப்பட்ட இந்த கதையில் அபலா செய்த ஸ்தோத்திரத்தில் இருந்து இந்த இடத்தில் கூறும் மந்திரங்கள் எடுக்கப்பட்டு உள்ளன.

> கைப்பிடிக்கும்போது "நான் உன்னை கைப்பிடிப்பது நல்ல மக்களை பெற்று, வெகுகாலம் வாழ்ந்து, கிழத்தனம் வந்த போதும் அன்பு குறையாமல் மங்களமான கிருஹதாஸ்ரம தர்மத்தை கடை பிடிப்பதற்காக" என்று வரன் சொல்லுகிறார்.

சீதா கல்யாணத்திலும் ஜனகர் ராமனிடம் " இந்த சீதா என்ற என் பெண் உன் "ஸஹதர்மசாரீ" என்கிறார்.

---

மதியம் புதன், ஆகஸ்ட் 13, 2008

உபாகர்மா/ சந்தேகவிளக்கங்கள்

வருகிற சனிக்கிழமை யஜுர் வேத உபகர்மா வருகிறது.
அதை ஒட்டி சில வார்த்தைகள் சொல்ல தோன்றியது.

முக்கால்வாசி பேர் இந்த கர்மா எதுக்குன்னு கேட்டா "பூணூல் மாத்திக்க" என்று சொல்கிறார்கள்.
அதற்குத்தான் நிறையவே சந்தர்பங்கள் இருக்கே? பூணூல் மாத்திக்க உபாகர்மா வரை காத்திருக்க வேணாமே? எப்போ அது அழுக்கானாலும், நைந்து போனாலும், தீட்டு ஆனாலும் மாத்தத்தானே வேணும்?

அப்ப இந்த கர்மா எதுக்கு?

வேத அத்தியயனம் செய்தவர்கள் இந்த நாளில் திருப்பியும் வேத ஆரம்பம் செய்யணும். அதுதான் இதன் விசேஷம்.

திருப்பியும்?
ஆமாம். திருப்பியும்தான்.

சாதாரணமாக இந்த நாளில் வேத அத்தியயனம் ஆரம்பித்து தை மாதம் உத்சர்ஜனம் - முறைப்படி விட்டு விட வேண்டும். பிறகு காவியம், இலக்கணம் போல மற்ற பாடங்களை படிக்கணும். அடுத்த உபாகர்மா போது திருப்பி ஆரம்பிக்கணும்.

சரி, நான்தான் வேதமே கத்துக்கலையே/ முடிச்சாச்சே என்றால் -
சந்தியா உபாசனையில் வேத மந்திரங்களே வருகின்றன. அது இருந்தால் வேதம் அத்தியயனம் செய்பவனாகவே பொருள்.
வேத அத்தியயனம் வாழ்நாள் பூராவும் செய்ய வேண்டியது. பிரம்ம யக்ஞமாகவாவது சொல்ல வேண்டியது இல்லையா? அதனால் இந்த நாளில் குரு முகமாக அதை புதுப்பித்து கொள்ள வேண்டும்.

---

நிறைய பேர் வாத்தியாரிடம் பூணூல் வாங்கி வைத்து வீட்டிலேயே போட்டுக்கொள்கிறார்கள். அது சரி, ஆனால் வேத ஆரம்பம் விட்டு போகிறதே? வியாஸ பூஜை செய்து, காண்ட ரிஷிகளுக்கு தர்ப்பணம், ஹோமம் செய்து அதை செய்ய வேண்டுமே! அதை கவனிக்க வேண்டும். சிரத்தை உள்ளவர்கள் முன் ஏற்பாடு செய்து கொண்டு இதை சரியாக செய்வார்களாக.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

ஜீவா ஒரு கேள்வியை எழுப்பினார்கள். ஜோடி பூணூல் எப்ப மூணாகும்?
பலரும் பல விதமாக சொல்லி கேள்விப்பட்டதால் சாஸ்திரத்தை பாத்துவிட்டு பதில் எழுதலாம் என்று தாமதித்தேன்.

சாதாரணமாக ஒரு ஜோடி பூணூல்தான். பிரம்மசாரி ஒன்று, கிருஹஸ்தன் 2 (ஒரு ஜோடி) வானபிரஸ்தன் 1 என்கிறார் பிருகு.
தேவலர் பிரம்மசாரி ஒன்று, ஸ்நாதகன் 2 (ஒரு ஜோடி) என்கிறார். மேல் வஸ்திரம் இல்லாவிடில் மூன்றாவது என்கிறார்.
ஸ்ம்ருதிசாரத்தில் ஒரு வேதம் கற்றவனுக்கு ஒன்று. அதற்கு மேல் எவ்வளவு வேதம் கற்கிறானோ அவ்வளவு போட்டுக்கொள்ளலாம் என்கிறார்.

{அதாவது ஒருவனுக்கு அவனுடைய சாகை = கிளையை தவிர மற்ற கிளைகளை கற்க அதிகாரம் தன் கிளையை கற்று பூர்த்தி செய்தால்தான் கிடைக்கிறது. உதாரணமாக யஜுர் வேதி தன் வேதத்தை முற்றும் கற்றுவிட்டு அப்புறமாக ரிக் /ஸாம/ அதர்வண வேதங்களை கற்கலாம். நேரடியாக அவற்றை கற்க ஆரம்பிக்ககூடாது. ஒரு கிளை வேதம் கற்று முடிக்கவே 7 வருஷம் ஆகும். முன் காலத்தில் 2 (த்விவேதி), 3 (த்ரிவேதி), 4 (சதுர்வேதி) கற்றவர்கள் உண்டு. சதுர்வேதிமங்கலம் என்று ஒரு ஊரை கேள்வி பட்டு இருப்போமே? அந்த கிராமத்தில் நான்கும் கற்றவர் அதிகம் இருந்ததால்தான் அந்த பெயர்.}

பரத்வாஜரும் கர்மாக்களில் இரண்டு உபவீதம்; மேல் வஸ்திரம் இல்லாவிட்டால் கூடுதலாக இன்னும் ஒன்று என்கிறார்.

சாதாரணமாக உபவீதம் போலவே மேல் வஸ்திரத்தை போட்டுக்கொள்ள வேண்டும். அறியாமையில் எப்படியோ சில இடங்களில், ஆசாரங்களில் மேல் வஸ்திரத்தை இடுப்பில் கட்டுவது வந்து விட்டது. அப்படி இல்லாவிட்டால் மரியாதை குறைவு என்றே நினைக்க ஆரம்பித்துவிட்டனர்.

இதனால் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாங்கள் பெரிய பேர் வாங்கிய க்ஷேத்திரம் ஒன்றுக்கு போயிருந்தபோது அங்கே தன்வந்திரி ஸந்நிதியில் நான் போட்டிருந்த உத்தரீயத்தை கழட்டி இடுப்பில் சுத்திக்கொள்ள சொன்னார்கள். என்ன செய்வது? இடுப்பில் கட்டிக்கொண்டு சீக்கிரம் வெளியே வந்துவிட்டேன். இந்த மாதிரி தர்ம சங்கடம் ஏற்படாமல் இருக்க 3 வது பூணூல் போட்டுக்கொள்ளலாம். அப்போது மேல் வஸ்திரத்தை நீக்கினாலும் தோஷம் வராது.

ஆக 3 வது என்பது by choice.

---

மதியம் வியாழன், ஆகஸ்ட் 14, 2008

விவாஹம்- குறிப்புகள் 2

இதுதான் திருமணம் ஆனதுக்கே அடையாளம் என்று சொல்லிய ஸப்தபதீ சமயத்தில் என்ன சொல்கிறார்கள்?

"ஏழு அடிகள் என்னுடன் வைத்த நீ எனக்கு நட்பில் சிறந்தவள் ஆகிவிட்டாய். இந்த உறவில்
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

இருந்து ஒரு பொழுதும் உன்னை விலகமாட்டேன். நம்மை தெய்வம் ஒன்று கூட்டி வைத்து இருக்கிறது. நாம் எல்லா செயல்களையும் பிரியத்துடனும் நல்ல மனத்துடனும் செய்து வாழ்வோம். கருத்தில் ஒற்றுமை உடையவர்களாக இருப்போம். விரதங்களை ஒன்றாக அனுஷ்டிப்போம். நீ சாஹித்தியமானால் நான் சங்கீதம். நீ சங்கீதமானால் நான் சாகித்தியம். நான் வானுலகம்; நீ பூவுலகம். நான் உயிர்சத்து; நீ அதை தரிப்பவள். நான் மனது; நீ வாக்கு. சொல் போன்ற நீ பொருள் போன்ற என்னை அனுசரிப்பவளாக இருப்பாயாக. ஆண் மக்களை பெற்று செழிப்பான வாழ்க்கை நடத்த இன் சொல் படைத்தவளே! வருவாய்.

அம்மி மிதிக்கும்போது சொல்வது:

“ இந்தக்கல்லின் மீது ஏறி நில்; கல்லைப்போல நீ உன் விரதத்தில் திடமாக இருக்க வேண்டும். உன் விரதங்களுக்கு ஊறு செய்பவர்களை எதிர்த்து நின்று அவர்களை வெல்ல வேண்டும்.”

"இம்மைக்கும் மறுமைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான் நம்மை உடையவன் நாராயணன் நம்பி செம்மையுடைய இரு கையால் தாள் பற்றி அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்" என்கிறாள் ஆண்டாள். இந்து மக்களின் விவாகத்தில் எத்தனையோ நூற்றாண்டுகளாக வரும் பழக்கங்கள் இவை.

திருமணம் முடிந்து இருவரும் வரனின் வீட்டுக்கு போகிறார்கள். வீட்டில் பிரவேசித்த உடன் செய்வது பிரவேச ஹோமம். அதில் முதல் மந்திரம்: ”வீட்டுக்கு வந்துள்ள மகிஷீ -ராணி போன்ற இவள்- சுவர்கத்தை அனுபவிப்பதான ஸந்ததியுடன், நல்ல செல்வம் படைத்தவளாக, இந்த ஔபாஸனாக்னியை நூறு வருஷங்கள் பூஜை செய்பவளாக இருக்கட்டும்.”

பிரவேச ஹோமம் நடந்தபின் நக்ஷத்திரங்கள் உதிக்கும் வரை மௌனமாக இருந்து அவை உதித்தபின் துருவ நக்ஷத்திரத்தையும் அருந்ததீ நக்ஷத்திரத்தையும் தரிசனம் செய்வர். இந்த கன்னிகையும் அருந்ததி போல பதிவிரதையாக இருக்க வேண்டும். வது- வரனுடைய தாம்பத்ய வாழ்க்கை துருவ நக்ஷத்திரத்தை போல நிலை பிழறாமல், தர்மத்திலிருந்து வழுவாமல் இருக்க வேண்டும்.

திருமணம் வெறும் ஒப்பந்தம் இல்லை; ஆயுள் முழுதும் நீடிக்கும் உன்னதமான உறவு என்பதை காட்ட சில மந்திரங்களின் பொருளை பார்த்தோம்.

இந்த காலத்தில் உபநயனமும் திருமணமும் செய்யப்பட்ட போதிலும் அவற்றில் சிரத்தை குறைந்து கொண்டே வருகிறது. வேங்கடாத்திரி என்ற கவி 500 வருஷங்களுக்கு முன்னேயே "உபநயனமும் விவாகமும் வெறும் உத்ஸவங்களாகவே உள்ளன.” என்று சொல்லி இருக்கிறாராம். அப்படின்னா இப்ப கேட்கவே வேண்டாம்.

--

மதியம் வெள்ளி, ஆகஸ்ட் 15, 2008

யக்ஞங்கள்

அடுத்து அவரவர் வாழ்க்கையை ஒட்டி ஏதோ ஒரு வேலையில் ஈடுபடுவோம். அங்கேயும் கர்ம யோகம் வருகிறது. அதை அப்புறமா பாக்கலாம். இப்ப நித்திய கர்மாவைதானே பாத்துக்கொண்டு இருக்கிறோம்! அதிலேயும் 40 சம்ஸ்காரங்களை பாக்கிறோம்.
இந்த வரிசையில் அடுத்து ஒருவர் வாழ்க்கையிலே வருவது நாம் முன்னேயே பாத்த பஞ்ச மஹா யக்ஞங்கள். நினைவு இருக்கு இல்லியா? தேவ – பித்ரு- பூத- மனுஷ்ய- ப்ரும்ம யக்ஞங்கள். மொத்தம் 19 ஆயிடுத்து.

இதற்கு மேலே மற்ற யக்ஞங்கள்:

ஏன் யக்ஞங்கள் செய்யணும்?
யக்ஞங்கள் செய்யறதாலே ஏற்படுகிற பலன்களை பாத்தா விடை கிடைச்சுடும் இல்லியா?

வேதத்திலேயே என்ன கிடைக்கும்னு சொல்லி இருக்குன்னு பாக்கலாம். எங்கே யக்ஞங்கள் நடை பெறுகின்றனவோ அங்கே உண்மையான பிரார்த்தனையாலும், மந்திர சாமர்த்தியத்தாலும் பின் வருபவை ஏற்படும்.

1. ப்ராம்ஹணன் வம்சத்தில் வேத சாஸ்திரம், அதனுடைய அனுஷ்டானம் (பின் பற்றல்) இவற்றில் ஆர்வம் உள்ளவன் பிறப்பான்.
2. அரச குலத்தில் வீரனும், அம்பு விடுவதில் சாமத்தியம் உள்ளவனும், பல் சூரர்களை காப்பாற்றி தன்னையும் காப்பாற்றி கொள்ளகூடிய ராஜ குமாரன் பிறப்பான்.
3. நன்கு பால் கறக்கும் பசுக்கள்.
4. பாரம் சுமக்கும் காளை.
5. நன்கு ஓடக்கூடிய குதிரை.
6. வலிமை, அழகு மிகுந்த உடலை உடைய ஸ்த்ரீ.
7. ரதத்தில் இருந்து சத்ருக்களை ஜெயிக்ககூடிய வீரன்.
8. இளம் வயதில் நல்ல படிப்பும் புத்தியும் உடைய யுவன்.
9. எல்லா விஷயங்களிலும் வீரனான புத்திரன்.
10. விரும்பும்போது நல்ல மழை.
11. நல்ல பழங்களை உடைய பயிர்கள்.
12. கிடைக்காதவை கை கூடுவதும், கிடைத்ததை நன்றாக அனுபவிப்பதுமான யோக க்ஷேமம்.

முன் காலத்தில் ராஜாக்கள் அச்வ மேதம் செய்யும் போது சொல்லப்பட்ட மந்திரங்கள். இக்காலத்தில் சிராத்தத்தில் அந்தணர்களை இப்படி வேண்டுவதும் அவர்களும் அப்படி ஆகட்டும் என்று சொல்வதாகவும் இருக்கிறது. கேட்பவர்களுக்கும் சொல்கிறவர்களுக்கும் இதன் பொருள் தெரியுமா என்பது சந்தேகமே.

மேலே பாக யக்ஞங்கள் 7.

அஷ்டகா, ஸ்தாலீபாகம், பார்வணம், ஆக்ரஹாயணீ, சைத்ரீ, ஆச்வயுஜீ.

சரு சமைத்து யக்ஞங்கள் செய்கிறதாலே பாக யக்ஞங்கள். நள பாகம், பீம பாகம்... சரி. அடுத்த பதிவில் இவற்றை பார்க்கலாம்.

--

மதியம் திங்கள், ஆகஸ்ட் 18, 2008

பாக யக்ஞங்கள்

மேலே பாக யக்ஞங்கள் 7.

அஷ்டகா, ஸ்தாலீபாகம், பார்வணம், ஆக்ரஹாயணீ, சைத்ரீ, ஆச்வயுஜீ.

சரு சமைத்து யக்ஞங்கள் செய்கிறதாலே பாக யக்ஞங்கள். நள பாகம், பீம பாகம்... சரி.

இவை அத்தனையுமே ஒபாஸன அக்னியை பிரதானமாக உடையவை. அதாவது ஔபாஸனம் செய்கிறவர்தான் செய்ய முடியும்.

மாக மாதத்தில் அஷ்டகா முதலிய சிராத்தங்கள் செய்யணும்; அதற்கு முன் இரவு ஔபாஸனம் முடிந்த பின் ஒரு வகை அடை செய்து அஷ்டகா என்கிற தேவதைக்கு ஹோமம். மீதியை அடுத்த நாள் செய்கிற அஷ்டகா சிராத்தத்தில் வரிக்கிற 8 அந்தணருக்கும் கொடுப்பர்.நவமி

சிராத்தத்தில் 5 அந்தணர்களை வரித்து சிராத்தம். அன்வஷ்டகை சிராத்தத்துக்கு பதில் ஔபாஸன அக்னியில் தயிரை கைகளால் ஹோமம் செய்வர்.

### ஸ்தாலீபாகம்

ஒவ்வொரு பிரதமை அன்றும் ஔபாஸன அக்னியில் அரிசியை சமைத்து அதனால் ஹோமம். இந்த ஸ்தாலீபாகம் செய்ய தெரிந்தவர் எல்லா ஹோமங்களையும் செய்ய முடியும். ஏன் என்றால் மற்ற ஹோமங்களின் வரிசை கிரமத்துக்கு இதுவே ஆதாரம். இது தெரிந்து விசேஷ ஹோமத்தில் என்ன வேறுபாடு என்று தெரிந்தால் போதும்.

### பார்வணம்:

இதை மாஸி சிராத்தம் என்றும் சொல்வர். ஸ்தாலீபாகம் எல்லா ஹோமத்துக்கும் முன் மாதிரியாக இருப்பது (ப்ரக்ருதி) போல எல்லா சிராத்தங்களுக்கும் இதுவே முன் மாதிரி. தகப்பனார் உயிரோடு (ஜீவ பித்ரு) இருப்பவர் செய்ய தேவை இல்லை. இதுதான் அமாவாஸை தர்ப்பணமாக வேற உரு எடுத்து இருக்கு.

### ஸ்ராவணீ:

ஸர்ப்பபலி என்றும் சொல்வர். ஆவணி மாத பௌர்ணமியில் செய்வர். அன்று இரவு சரு, நெய் ஹோமம் செய்து, பலாஸ பூக்களை இரு கைகளாலும் ஹோமம் செய்து; புற்று இருக்குமிடத்திலோ சுத்தமான இடத்திலோ அரிசி மாவு கோலம் போட்டு ஸர்ப்ப மந்திரங்கள் சொல்லி போற்றுவது; இதை மார்கழி பௌர்ணமி வரை செய்வர். இது ஸர்ப்ப தோஷங்களுக்கும் சாந்தியாகும்.

### ஆக்ரஹாயணீ:

ஸர்ப பலியை மார்கழி பௌர்ணமியில் பூர்த்தி செய்வது. அதே போன்றது.

### ஆச்வயுஜீ:

புது அரிசியில் /சியாமை தான்யத்தால் பாகம் செய்து ஸ்தாலீபாக ஹோமம். சிசிர ருதுவில் செய்வர். கார்த்திகை பௌர்ணமி முக்கிய காலம்.

பாக யக்ஞங்களின் சிறப்பே ஹவிர்/ ஸோம யக்ஞங்களை போல இல்லாமல் சுலபமாக செய்யக்கூடியவை. அப்படி இருந்தும் இவை வழக்கொழிந்து போய் விட்டன.

---

மதியம் செவ்வாய், ஆகஸ்ட் 19, 2008

## ஹவிர், ஸோம யக்ஞங்கள்

அடுத்து ஹவிர் யக்ஞங்கள்
அக்னி ஆதானம், அக்னி ஹோத்ரம், தர்ச பூர்ணமாஸம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், நிரூட பசுபந்தம், ஸௌத்ராமணி

சாதாரணமாக ஸோம யாகம் செய்த்வர்களே இதற்கு தகுதி உடையவர்கள்.
கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி என 3 அக்னிகளை பெறுவது அக்னி ஆதானம் என்ற கர்மாவால். 2 நாள் ஆகும்.
முன் சொன்ன கர்மாவை செய்து பெற்ற மூன்று அக்னிகளையும் தினசரி காலையும் மாலையும் ஆராதிப்பது அக்னி ஹோத்ரம். பசும் பாலை காய்ச்சியோ, அரிசியாலோ ஹோமம்.
ஒவ்வொரு பிரதமை அன்றும் அரிசி மாவை வறுத்து (உண்மையில் நெல் குத்தி அரிசி செய்து குத்தி மாவாக்கி என்று கிரமம். இப்போது வசதிக்காக முன்னேயே மாவு செய்து அதையே மந்திரம் சொல்லி கர்மா செய்து கொண்டதாக ஆக்கிவிடுகிறார்கள். இதற்கு கல்பத்தில் அனுமதியும் இருக்கு.) நீர் விட்டு கிளறி இறக்கி புரோடாஸம் என்கிறதாக உருண்டை பிடித்து அதை ஹோமம் செய்வர். அமாவாஸை அடுத்து வருவதில் தயிரும் பாலும் கூட ஹோமம் உண்டு.

---

இவை தர்ச பூர்ண ஸ்தாலீபாகம் போல். இவற்றை இஷ்டி என்பர். எல்லா இஷ்டிகளுக்கும் இவையே முன் மாதிரி. இஷ்டின்னு எங்கேயோ கேட்டாப்பல இருக்கு இல்லை? ஆங்! தசரதர் புத்ர காமேஷ்டி பண்ணாரே!

அதே போல் புதிய அரிசி/ச்யாமை கொண்டு சிசிர ருதுவில் ஆக்ரேயண இஷ்டி.
சாதுர்மாஸ்யம் பல இஷ்டிகள் சேர்ந்த கர்மா.
நிரூட பசுபந்தமும் ஸௌத்ராமணியும் ஆண்டுக்கு ஒரு முறை செய்வன.

ஸோம ஸம்ஸ்தைகள் ("யாகங்கள்")
அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், வாஜபேயம், அதி ராத்ரம், அப்தோர்யாமம்.
ஸோம யாகங்களையும் மிக சிலரே செய்கின்றனர். அதுவும் ஏழு ஸம்ஸ்தைகளையும் செய்பவர் அரிது.
ஸோம ரஸம் என்றால் ஏதோ மதுபானம் என்பது போல ஒரு மாயையை உண்டாக்கி இருக்கிறார்கள். ராமர் ஸோம பானம் செய்தார் என்றால் மதுபானம் செய்யவில்லை. ஸோம யாகம் செய்தார் என்றே பொருள்.
ஸோமலதை என்ற தெய்வீக மூலிகை கொடியை வாங்கி கசக்கி பிழிந்து ரஸம் எடுத்து அதை பல பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு விரிவாக ஹோமங்கள் செய்வர். இந்த ஸோம லதை கொடி நாளடைவில் கலிப்பிரவாகத்தில் காணாமல் போய் விட்டது. அதனால் அடுத்த திரவியமான பூந்திக்கொடிதான் இப்போது பயன்படுகிறது. (சாத்திரங்கள் வகுத்தவர்கள் மிக புத்திசாலிகள். இப்படி நடக்கலாம் என்று பல விஷயங்களை ஊகித்து எல்லாவற்றுக்கும் பிராயச்சித்தங்கள் சொல்லி இருக்கிறார்கள். இது அந்த புத்தகங்களை படிப்பவருக்குதான் விளங்கும். எல்லா ஹோமங்களுக்கும் பயன்படுத்த முக்கிய திரவியம் என்று ஒன்றும் அது கிடைக்காத பட்சத்தில் கௌண திரவியம் என்று ஒன்றும் சொல்லி இருக்கிறார்கள்.)

---

மதியம் வியாழன், ஆகஸ்ட் 21, 2008

அந்திம கர்மா

அந்திம கர்மா

இது வரை பார்த்த எல்லாமே ஒருவன் தானே செய்ய வேண்டியவை. தன் நலம் இல்லாமலே வாழ்ந்து கடேசில தன் உடம்பையும் அர்ப்பணம் செய்யணும். ஆனால் உசுரோட இருக்கரப்ப எப்படி செய்யமுடியும்? அதனால இறந்த பின் அவரோட மகன் செய்யணும்.

இது அவரவர் ஆசாரம், க்ருஹ்ய ஸூத்திரம் பொருத்து பல நாட்கள் செய்வது. 13 நாட்கள் கருட புராணத்துல சொல்லி இருக்கு.
இது அத்தனையும் இங்கே போடுவதா உத்தேசம் இல்லை. கருட புராண பதிவு ஒண்ணு அப்பப்ப எழுதிகொண்டு இருக்கேன். அது பூர்த்தியான பிறகு சொல்லறேன். அதில பல விஷயங்கள் வரும்.

இங்கே சாதாரணமா நடக்கிற தப்புகளை மட்டுமே சொல்லி மேலோட்டமா கர்மாவை பாத்து போக உத்தேசம். அதே சமயம் கீ அக்கா எழுப்பின "பெண்கள் அந்திம காரியம் செய்யலாம்?" என்ற விஷயத்துக்கும் பதிலை பாத்துடலாம்.

ஒருவர் இறந்த பின்னால என்ன நடக்கும் என்பது ரொம்பவே சிக்கலான புரிந்து கொள்ள முடியாத விஷயம். இதை நான் சொல்லலை. யமதர்மன் நசிகேதன்கிட்டே சொன்னார். நசிகேதனோ விடாப்பிடியா தெரிஞ்சுக்கணும்ன்னு இருந்தார். யமன் ஏதேதோ ஆசையெல்லாம் காட்டிப்பார்த்தார். நிறைய பொருள், பொன், மங்கை, பணியாளர்கள் எல்லாம் தரேன்ன்னு லஞ்சம் கொடுக்கப்பார்த்தார். எதுக்கும் நசிகேதன் அசையலை. அதனாலதான் நமக்கு கடோபனிஷத் கிடைச்சது.

---

இறந்தபின் என்ன ஆகும்கிறது பிலாஸபி. அது இப்ப இங்கே வேண்டாம். கர்மாவை மட்டுமே பார்ப்போம். பின்ன ஏன் இங்கே சொன்னேன்னா, இது முழுக்க முழுக்க நம்பிக்கை அடிப்படையில சிரத்தையோட செய்ய வேண்டிய காரியம். இதை விக்ஞான ரீதியிலே பாத்தா குழம்பும். அதை நினைவு படுதறேன்; அவ்வளோதான்.

மரண தருவாய்லே இருக்கோம் என்று தெரிந்தவன் குளித்து, நெற்றிக்கிட்டு கொண்டு, புண்யாஹம் என்கிர சுத்தி கர்மா செய்து துளசீ நீரோ, கங்கை நீரோ அருந்தி, சுத்தனாகி இறைவன் சன்னிதியிலோ நதிக்கரையிலோ பெரியோர் அனுமதி பெற்று, பிராயச்சித்தங்கள் செய்து கொள்ள வேண்டும். அட, சாக கிடக்கிரவன் எப்படி இந்த மாதிரி செய்ய முடியும்னா, சக்தி இடம் தர வரை என்று அர்த்தம். குளிக்க முடியாதா? மந்திர நீரை தலையில் தெளிச்சுக்கலாம். இப்படி முடிந்தவரை இதை செய்து கொள்ள வேணும். ஒண்ணுமே முடியாது என்றால் புத்திரன் செய்யணும்.

என்ன பிராயச்சித்தம்? காவேரி குளியல்தான். (காவேரி கரைவாசிங்க காலரை தூக்கி விட்டுக்கோங்கப்பா!) ஆனா இது வேற செய்ய சக்தி இல்லாதவங்களுக்கு. சக்தி உள்ளவர் (பணம் இருக்கிறவங்கன்னு பொருள்) சக்திக்கு ஏற்ப தச தானங்கள் செய்யணும்.
பசு, பூமி, எள், தங்கம், நெய், வஸ்திரம், தான்யம், வெல்லம், வெள்ளி, உப்பு - இவைதான் அந்த 10 பொருட்கள். பூமி கொடுக்க சக்தி இல்லைன்னா சந்தனக்கட்டை கொடுப்பது வழக்கம். வேறு ஏதாவது செய்ய தோணித்துன்னா அதையும் செய்யணும். தீட்டுன்னாக்கூட இதை செய்ய அனுமதி இருக்கு. இப்படி தானம் செய்கிறவங்க சிரமம் இல்லாம யமலோகம் போவாங்களாம். (யமலோகம்? ஆமாம். எல்லாருமே இங்க போய் அடன்டண்ஸ் கொடுத்துட்டுதான் மத்த இடத்துக்கு போகணும்.)

---

மதியம் வெள்ளி, ஆகஸ்ட் 22, 2008

அந்திம கர்மா-2

பிராணன் போகும் போது மூத்த மகன் அருகில் இருந்தா வலது காதில மந்திரம் சொல்ல வேண்டும். இந்த மந்திரம் உடம்பில இருக்கிற ஐந்து பிராணன்களையும் ஒன்றில் ஒன்றாக ஐக்கியம் செய்யும். அப்புறம் பஞ்சாக்ஷரீ, அஷ்டாக்ஷரீ மந்திரங்களை ஜபம் செய்யலாம். இறை நாம ஜபங்கள், கீர்த்தனைகள் செய்யலாம். இறக்கிறவர் எதை நினைத்து கொண்டு இறக்கிறாரோ அதுவாகவே மீண்டும் பிறப்பதாக ஐதீகம். அதனால இறை நினைவை அவருக்கு கொடுக்கணும். யாருக்கு இறக்கிற தருவாய்ல இறை நினைவோ ஓங்கார த்யானமோ இருக்கோ அவங்களுக்கு அடுத்த பிறவி இருக்காது. பிராணன் போன பின்னே தர்பை புல்லை பரப்பி தெற்கு தலையா படுக்க வைக்கணும். (இதை நினைத்து கொண்டு தெற்கே தலை வைத்து படுக்கக்கூடாது என்று நினைக்கலாகாது) எல்லாரும் தெற்கு நோக்கி வணங்கணும்.

யார் இறுதி சடங்கை செய்யணும்ன்னு வரிசை பட்டியலே உண்டு. சாதாரணமா அவருடைய தாயாதிகளே அருகதை உள்ளவங்க. குழப்பம் இருந்தா பெரியவங்களை கேட்டு செய்யணும். ஸ்த்ரீகள் விஷயத்தில அவரோட கணவன் வழியாதான் கிரமம்.

எந்த அக்னிலே செய்கிறது?
அவரவர் ஔபாஸன அக்னிலேதான். இறந்தவர் அப்போது ஔபாஸனம் செய்யாமல் இருந்தாலும் அப்போதைக்கு சூத்திரப்படி அக்னி உண்டாக்கிகிட்டு ஔபாஸனம் செய்து ஆரம்பிக்கணும். இறந்தவருக்கான அக்னி காரியம் வரும்போது எல்லாமே சாதாரண அக்னி காரியத்துக்கு நேர் மாறா சிராத்தத்திலே செய்கிற மாதிரி போகும். இந்த வகை காரியம் பித்ரு மேதம் என்பர்.
வேத பாடம் முடித்தவர்களுக்கு பிரம்ம மேதம் என வேறு வழி உண்டு. அனேகமா மந்திரங்கள் தான் வேறே. கர்மா ஒண்ணுதான்.
அக்னிஹோத்திரம் செய்து 3 அக்னிகளை ஆரதிப்பவங்களுக்கு 3 அக்னிகளினாலும் சம்ஸ்காரம்.

---

ஔபாஸன அக்னி இல்லாதவர்களுக்கும் மத்தவங்களுக்கு சாதாரண (லௌகீக) அக்னியாலே காரியம்.

மேதம் ன்னு சொல்கிறதாலே அச்வமேதம் மாதிரி இதுவும் ஒரு உயர்ந்த கர்மான்னு தெரிஞ்சு கொள்ளலாம். இறந்தவர் உடலே ஹவிஸ். உண்மையிலே அனாதை பிரேதத்தை சம்ஸ்காரம் செய்வது அச்வமேதத்துக்கு ஈடு என்கிறார்கள்.

இந்த இடத்திலே இன்னும் ஒண்ணை பார்க்கணும். கர்மா ஆரம்பிக்கும் முன்னாலே சந்தியா உபாசனை நேரம் வந்தால் அதை முடித்துவிட்டே கர்மாவை துவங்கணும். ஆமாம், பிரேதம் இருக்கும் வீட்டிலேயேதான். இதிலிருந்து அது எவ்வளவு முக்கியம்ன்னு தெரிந்து கொள்ளலாம்.

இறந்த 10 மணி நேரத்தில் கர்மா -தகனம்- செய்யணும். இல்லாட்டா அது பழைய சோறு போல ஆகும். அப்படி இருக்கிறதை நாம் ஹோமம் செய்ய மாட்டோம் இல்லியா? இப்பல்லாம் இது கொஞ்சம் பிரச்சினை ஆகிகொண்டு இருக்கு. பலர் வெளி ஊர் அல்லது வெளி நாட்டிலே இருந்து கொண்டு "இதோ வரேன், அப்படியே ஐஸ்ல வையுங்க" ன்னு சொல்லறாங்க. புதுசா குளிரூட்டும் சவப்பெட்டிகள் எல்லாம் கூட வந்தாச்சு.

இரவு 9 ¾ மணிக்குள்ள தகனம் செய்யலாம். அப்படி முடியாட்டா அடுத்த நாள் காலைதான். நேரம் ஆயிடுத்து வேற வழி இல்லாமன்னா சவத்தை பஞ்சகவ்யத்தால் குளிப்பாட்டி, மந்திர நீரல் தெளித்து பின் தகனம் செய்யணும். இல்லாவிட்டால் காரியம் பயனில்லாது போகும். இந்த விஷயம் இப்ப நடை முறையில் இல்லாம போய் கொண்டு இருக்கு. சிரத்தை உள்ளவங்க இப்பவே சொல்லி வைங்க - தாமதிக்க வேண்டாம்னு.

அதே போல இறந்த 3 1/2 மணி நேரம் தாமதிச்சே தகனம் செய்யணும். அது ஜீவனை யம தூதர்கள் யமலோகம் கொண்டு போய் verification – இந்த ஆள்தானான்னு சரி பார்த்து வருகிற நேரம். அனேகமா சரியாவே இருக்கும். அரிதா சில நேரங்கள்ல தப்பாயிடும். அப்போ அந்த ஜீவனை திருப்பி கொண்டு வந்து உடலிலே வைக்க அந்த யமதூதர்களால முடியும். மயானத்துக்கு போகிற போது திடீன்னு சவம் முழிச்சு கொண்ட கதைகள் கேள்வி பாடு இருப்பிங்களே; காரணம் இதுதான். கேள்விப்பட்ட கதைகள்ள எங்கோ கொண்டு போனதாயும் அங்கே யாரோ கீரை சாதம் கொடுத்ததாயும் திருப்பி வந்து விட்டதாயும் சொல்ல கேள்விப்பட்டு இருக்கேன். இது போலவே near death experience ன்னு ஆங்கிலத்துல சொல்கிற படி சில நோயாளிகள் இதயம் நின்னு போய் "நாங்க" செய்கிற முயற்சில, கிட்டத்தட்ட முடியாதுன்னு விடும் நேரம் திடீர்ன்னு பிழைக்கிறதும் உண்டு! )

---

மதியம் திங்கள், ஆகஸ்ட் 25, 2008

அந்திம கர்மா- 3

மரணம் ஏற்படும்போது உள்ள நேரம், சம்பவம் முதலியதை முன்னிட்டு சில பிராயச்சித்தங்கள் உண்டு.

கை, கால் கட்டை விரல்களை வெள்ளை நூலால இறுக முடிந்து, ஒரே ஒரு வழலை கோரை மாலையை அணிவிக்கணும். இப்ப செய்கிற மாதிரி மாலையா குவிச்சுட கூடாது. ஆனா சமுதாயத்திலே செய்தி கேட்டும் போய் ஒரு மாலை போட்டு "மரியாதை" செய்கிற பழக்கம் இருக்கும் போது எப்படி இதை தவிர்ப்பதுன்னு புரியலே. அத்தி கட்டை பாடை மேலே வைத்து புது துணியால கால் முதல் தலை வரை மூடணும். முன் அணிந்து இருந்த துணியை எடுத்து அவர் நினைவா வைச்சுக்கொள்ளலாம்.

பிரேதத்தின் முன் தீவட்டி பிடித்து செல்ல சாஸ்திரத்தில் ஒரு பிரமாணமும் இல்லை. பேரன்மார்கள் நெய் தீவட்டி எடுத்து செல்வதாக வழக்கத்தில் இருக்கு. இப்படி அமையலைன்னா அதுக்கு வருத்தப்பட வேண்டாம் என்பதற்காக சொன்னேன்.
அரிசியை ஒரு முறை களைந்து அக்னியில அதை மண் பாத்திரத்தில் வேக வைத்து

---

எடுத்துக்கொண்ட பின்னே;
தேவையான சாமான்களை சேகத்து எடுத்துக்கொண்டு அக்னி சட்டியை ஏந்திக்கொண்டு முன்னால் கர்த்தா முன்னால் போவார். இந்த தேவையான பொருட்களை எடுத்து போகிறவர்கள், பாடையை சுமப்பவர்கள் நீங்கலா, தாயாதிகள் மூத்தவர் முதலில் என்ற வரிசையில் போகணும். மற்றவர் அதன் பின்னாலே எந்த வரிசைல வேணும்னாலும் போகலாம்.

வீட்டுக்கு வெளியே பிரேதம் போன பின் வீட்டு ஸ்திரீக்களும் சிறுவர்களும் புழுதியை தலை தோளிலே பூசிக்கொள்ளணும். கேசத்தை பிரித்து விரித்த தலையோட இருக்கணும்.
இப்ப இந்த அமங்களமான தலை விரிகோலமே பாஷன் ஆகிவிட்டது.

மாயனம் போகும் வழியில் கால் பாகம் போன பின் அக்னியை கீழே வைத்து தெற்கே பிரேதத்தை இறக்கி வைத்து வலது பக்கம் வெந்த அரிசியை மண் கட்டிகள் மேலே வைத்து ஸ்த்ரீக்களும் (கீ அக்கா நோட் திஸ்!) தாயாதிகளும் மேல் துணியை வேறிடம் வைத்து, ஒரே துணியுடன் வலது பாதி சிகையை முடிந்து, வலது கைகளால் வலது துடைகளை தட்டிக்கொண்டு, இளையவன் முன் போக இடப்பக்கமா சுத்தி வருவர். (துடையை தட்டக்கூடாதுன்னு பெரியவங்க சொல்வாங்க இல்லை?) பிறகு இடது சிகையை முடிந்து வலதை பிரித்து வலப்பக்கமாயும் 3 முறை சுத்தி வருவாங்க. பின் கர்த்தா தெற்கு முகமாக உக்காந்து இடது புறமா மண்டி போட்டு 3 குவியலா மண் கட்டிகளை வைத்து அதன் மேலே எள்ளும் நீரும் விடுவார். அரிசியில் 1/3 எடுத்து மூன்றா பிரித்து 3 மண் கட்டிகள் மேலேயும் போட்டு தெற்கே ஒரு முறை போட்டு திருப்பி எள் நீர் இறைத்து விடுவர்.
இது போல 3 இடங்கள்ளே நின்னு இந்த விஷயத்தை செய்வர்.

இதற்குள்ளே மாயனத்துக்கு கிட்டே வந்திருப்பர். கடைசி முறை இதை செய்தபின் சரு இருந்த மண் பாத்திரத்தை சுக்கு நூறாக- தண்ணீர் தேங்காதபடி- உடைப்பர். (கொசுவுக்கு இடம் கொடுக்காம இருக்கவோ?!) நாலாம் முறை மௌனமாகவே தூக்கிக்கொண்டு தகனம் செய்கிற இடத்துக்கு போகணும். பிரேதத்தை தெற்கு தலையா இறக்கி வைத்துவிட்டு இன்னும் கொஞ்சம் வடக்கே போய் திரும்பணும்.

---

மதியம் செவ்வாய், ஆகஸ்ட் 26, 2008

அந்திம கர்மா-4

சிதை அடுக்க தகுதியான இடத்தை கர்த்த புரசு / வண்னி கொத்துக்களால பெருக்கணும். (மந்திரம் உண்டு). சில்லரை நாணயம் ஏதேனும் நடுவில் வைத்து தர்ப்பைகளை பரப்பி தகுதியான காய்ந்த கட்டைகளால சிதையை அடுக்கணும். கிழக்கே சுத்தமான இடத்திலே அக்னியை வைத்து காரியம் ஆரம்பிக்கணும். சவத்தை பாடையிலிருந்து இறக்கி பின் பாடையை நாசம் செய்யனும். கை கால் கட்டுக்களை பிரிக்கணும். சிதை உள்பட எல்லாவற்றையும் நீர் தெளித்து பிரேதத்தை சிதை மீது வைப்பர்.

வாய், கண்கள், காதுகள், மூக்கு துவாரங்கள் ஆகியவற்றில் தங்க காசு வைப்பர். அல்லது நெய் விடுவர். தாயாதிகளும் கர்த்தாவும் பிரேதத்தின் வாயில் எள்ளும் அரிசியும் (கையை மரித்து) வைப்பர். பின் கர்த்தா அக்னியை மிச்சமில்லாமல் எடுத்து கொண்டு மந்திரம் சொல்லி கிழக்கில் மேற்கு முகமாக நின்று அக்னியை சிதையில் இடுவார்.

பிறகு வடக்கே வந்து தெற்கு நோக்கி மந்திரம் சொல்லுவார். பிறகு கிழக்கே பாத்து 9 ஹோமம். ஹோமம் செய்த கரண்டிகளை அக்னியில் போட்டுவிட்டு கிழக்கு நோக்கி உட்கார்ந்து ஜபம்.

இது முடிந்தா அனேகமா கர்மா முடிந்தது. மேற்கே வடக்கு நோக்கி கால்வாய் மாதிரி பூமியில் வெட்டி கல்லு, மண்ணு போட்டு, குடம் தண்ணீர் ஊத்தி, மந்திரம் சொல்லி -அதால எல்லா தாயாதிகளும் தலைல தெளிச்சுப்பாங்க. இது குளிக்கிறா மாதிரி. பிறகு வன்னி அல்லது பலாச கிளைகளை வடக்கு தெற்காக நட்டு அவற்றின் நடுவில தர்ப்பையால தோரணமா கட்டி அதன் கீழே தாயாதிகள் போவாங்க. இது சுத்தி செய்கிற கர்மா. அந்த கிளைகளை உடைச்சுபோட்டு, நீரை தொட்டு, சூரியனை துதித்து, சவத்தை பாக்காமல் விலகி முழுக்கு போட நீர் இருக்கிற

இடத்துக்கு போகணும்.

வயதானவர்கள் துக்கத்துக்கான அடையாளங்களை கைக்கொள்ளுவர். கர்த்தா தெற்கு நோக்கி வணங்கி அந்தணர்களிடம் கர்மா நல்லபடியாக நடந்ததாக சொல்ல வேண்டும் என வேண்டி தக்ஷிணை கொடுத்து குளிக்கப்போவார். வீட்டுக்கு போய் அக்னியை பார்க்கிறது, நெய்/வேப்பிலை சாப்பிடறது, கல் மேல நிக்கிறது போல சம்பிரதாயங்களை ஸ்திரீக்கள் சொன்ன படி செய்து வீட்டுக்குள் போவர்.

இனி மேல் உள்ள இதன் தொடர்பான கர்மாக்களை இங்கே இப்ப பார்க்கப்போறதில்லை. அது ரொம்பவே பெரிசு. முதல்ல இவ்வளோ எழுதறதாவே இல்லை. ம்ம்ம்ம்ம்ம்ம்.

இதில நடை பெறுகிற தவறுகளை பாத்துட்டு முடிச்சுக்கலாம்.
1. முதலில் சொன்னபடி காலம் கடந்து தகனம் செய்தல். காலம் கடந்தா பூத பிசாசங்கள் உடலை கொத்துகின்றனவாம். அதனால் துன்பம் ஏற்படும். கர்மாவும் சரியா செய்தது ஆகாது.
2. மாலைகளா போட்டு "அலங்காரம்" செய்கிறது.
3. சவம் போகிற பாதை எல்லாம் அந்த நேரத்துக்கு தீட்டு உண்டாகும். குறிப்பா கோவில்கள் சாத்தப்படணும். சவம் போன பிறகு சுத்தி கர்மா செய்தே நடை திறக்கனும். பல இடங்கள்ளே சன்னதி/ பிரகார தெருக்களிலேயே சவத்தை எடுக்காம காத்து இருக்கிறாங்க. வருமானத்துக்காக பாத்து கோவில்களையும் திறந்து விடறாங்க.,
4. நம்மில் 99.99% பேருக்கு சிகையே இல்லை. அப்ப எப்பவுமே தலைவிரி கோலமாதான் இருக்கோம். ஒரு பக்கம் பிரித்துங்கிற பேச்சுக்கே இடமில்லை.
5. பலர் (எங்க ஊர்லே) அக்னியை பிரேதத்தின் மார்பிலே போடறாங்க. ஏன், என்ன பிரமாணம்ன்னு கேட்டா தெரியலை. இதுதான் வழக்கம் என்கிறாங்க. வெட்டியானை விசாரிச்சா ஐயர்மாரை தவிர எல்லாரும் கீழேதான் கொளுத்துவாங்க என்கிறான். அவர்கள் அந்தப்பக்கம் போன பின் வெட்டியானே ஒரு முஷ்டி தர்ப்பை/ வைகோலை கொளுத்தி கீழே வைக்கிறான். அப்ப எல்லாருக்கும் கொள்ளி போடறது வெட்டியான்தான். :-(
6. வெட்டியான் எல்லாத்திலேயும் காசு பாக்கத்தான் பார்கிறான். கொடுக்கிற காசுக்கு பொருட்கள் வாங்கறதில்லை. எப்படி குறைந்த அளவு விராட்டியிலே அதிக இடம் மூடறதுன்னு அவங்களை பாத்து தெரிஞ்சுக்கலாம். இதனால சவத்தை முழுக்க எரிக்க முடியாது. பின்னே? நாம போன பிறகு தேவையான அளவு கெரோசின் ஊத்தி எரிய விடுவாங்க. இது ரொம்பவே பாபம். பின்னே என்ன செய்கிறது?
எல்லாரும் வீட்டுக்கு உடனேயே போகணும்ன்னு இல்லை. தைரியமா இருக்கிற சிலர் நின்னு முடிகிறவரை பார்த்துவிட்டு போகலாம். ஏன் தைரியம்ன்னு சொல்கிறேனா? நெருப்பால தசைகள் எரிக்கப்படுகிறபோது தசைகள் சுருங்கும். அதனால கை கால்கள் மடங்கும் / நீளும். இது தெரியாதவங்க உசுர் இருக்கோ என்னவோன்னு பயந்து போயிடுவாங்க.

முடிந்தவரை தகனம் செய்கிற இடத்திலே புதுசா மணல் கொட்டி நிறைய மரக்கட்டை/ விராட்டி அடுக்கி சவத்தின் மேலே ஒரு கிலோ சர்க்கரையும் தூவி, கீழே நெருப்பு வைக்கணும். கர்மா முடிந்து இந்த நெருப்பை கர்த்தாவே சுற்றிலும் பரவ செய்யலாம். வெட்டியானிடம் முன்னேயே பேசி ஏற்பாடு செய்துகொண்டு அங்கேயே நின்று தகனம் பூர்த்தி ஆவதை பார்த்துப்போகலாம்.

---

மதியம் திங்கள், செப்டம்பர் 8, 2008
முதல் நாள் காரியம்
முதல் நாள் காரியம் (தொடச்சி) :

மத்தியானத்தில் புது துணி, எள், தர்ப்பை, சொம்பு எடுத்து நீர் நிலைக்கு போகணும். அதன் கரையில் கல் புதைக்க குழி தோண்டணும். கல் புதைக்க அனுமதி வாங்கி சங்கல்பம் செய்து தெற்கு முகமாய் இடது காலை மண்டி போட்டு அமர்ந்து தர்ப்பையால் சுற்றப்பட்ட 3 கற்களை குண்டத்தில் வைத்து இறந்தவரை (ப்ரேதத்தை) அதில் ஆவாஹனம் செய்ய வேண்டும்.

பத்து தர்ப்பைகளுடன் ஒரு புது துணியை மூன்றாக மடித்து சுருட்டி உள்ளங்கையால் இன்னாருக்கு என சொல்லி 3 முறை நீர் வார்க்க வேண்டும்.

அதே போல பின்னர் எள்ளும் நீரும் இறைக்க வேண்டும்.
(இதை ஒட்டிதான் "எனக்கும் அவனுக்கும் சம்பந்தம் இல்லை எள்ளும் தண்ணியும் இறச்சாச்சு" என கோபத்தில் சொல்வதுண்டு. பெரிய பாபம்.)

அப்புறம் அத்தனை நீரையும் கொட்டிவிடவேண்டும்.

இப்படி இரண்டாம் நாள் ஆரம்பித்து ஒவ்வொரு நாளும் துணியுடன் நீரும் ஒவ்வொரு நாளும் ஒன்று அதிகமாய் எள்நீரும் கொடுக்க வேன்டும்.

பின் வீட்டுக்கு போய் திண்ணையிலோ அல்லது வெளியிலோ இடது பக்கத்தில் குழி தோண்டி கல் புதைக்க வேண்டும். சிறு குழி தோண்ட வேண்டும். ப்ராயச்சித்தமாக ஹிரண்யம் தானம் செய்து கல் ஊன்றுவர். முன் போலவே துணியுடன் நீர் வார்ப்பது. இதனால் பிரேத சரீரம் உருவாகிரது. சாதாரண தீயில் கர்த்தா தானே சரு சமைக்கணும். அதில் நெய் விட்டு வடக்கே இறக்கி திருப்பி நெய் சேர்த்து குழியின் அருகில் தெகிழக்கில் பசு சாணத்தால் தரையை மெழுகி நீர் தெளித்து தெற்கு நுனியாக தர்ப்பைகளை பரப்பி எள் நீர் வார்ப்பது. பின் சருவில் எல் கலந்து முஷ்டி அளவு அல்லது கோழி முட்டை அளவு எடுத்து பிண்ட தானம் செய்வர். (மாலையானால் கட்டைவிரல் அளவு.) அதன் மீது எள்ளும் நீரும் வார்ப்பர். படைத்தவற்றை ஏற்கும்படி வேண்டிக்கொள்வர். சரு பாத்திரத்தை நீரிட்டு அலம்பி அந்த நீரால் ஒரு முறை இடமாக (அப்ரதக்ஷிணமாக) நீரால் சுற்றுவர்.

ஏக்கோத்தர விருத்தி ச்ராத்தம்: ஆம ரூபமாக செய்வதாக சங்கல்பம் செய்து 3 அந்தணர் சாப்பிடக்கூடிய அளவு அரிசி தானம் செய்வர்.

இப்படி 10 நாட்கள் பிண்டமும் பலி தானம் கொடுத்து; ஒவ்வொரு நாளும் ஒன்று அதிகமாய் எள்நீரும் கொடுக்க வேண்டும்.

நவ ச்ராத்தம்:
குண்டத்தின் மேல் 2 உரிகளை கட்டி ஒன்றில் நீரும் மற்றதில் பாலும் தரையில் இள்நீரும் வைப்பர். பிண்டத்தையும் பலியையும் துணியில் வைத்து குடுமி முடிந்து குலத்துக்கோ ஆற்றுக்கோ சென்று நீரில் தெற்கு முகமாக நின்று பிண்டத்தையும் பலியையும் தலைக்கு மேலாக பின் பக்கம் ஆகாயத்தில் எறிவர். அப்படியே முழுக்கு போடுவர்.
முதல் நாள் செய்யப்பட்ட அதே திரவியம்தான் கடைசிவரை சரு செய்ய பயனாகும். முதல் நாள் போட்ட அதே இடத்தில்தான் மற்ற நாட்களும் பிண்டம் நீர் போடுவர்.
நீர் நிலையில் உள்ள கல்லுக்கு நீர் இறைத்தல் மட்டும். வீட்டில் உள்ள கல்லில் பிண்டமும் உண்டு. நீர் நிலை இல்லை என்று வீட்டிலேயே இரண்டு கற்களையும் ஊன்றியது உண்டு. இப்போதெல்லாம் ஃப்லாட் ஆகிவிட்டபோது என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை.

---

மதியம் செவ்வாய், செப்டம்பர் 9, 2008
இரண்டாம் நாள்
இரண்டாம் நாள்:

முற்பகலில் எரிந்தபின் தங்கி இருக்கக்கூடிய எலும்புகளை சேகரிப்பர். உடலில் எரிய சிரமமாக உள்ளது இதுதான். அதனால் கொஞ்சம் தங்கிவிடும். பால், நீர், நெய், தர்ப்பை, அத்திக்கொத்து, கண்டங்கத்தரிக்காய், கருப்பு சிவப்பு நூல்கள். கற்கள், நீர் குடங்கள், மண்வெட்டி, பானை இவற்றை எடுத்து செல்வர். நாம் காவல் இல்லாததால் வெட்டியான் உள்ளிட்ட பலர் சவத்தை தொட நேர்ந்து இருக்கும். அதற்கு பிராயச்சித்தங்கள் செய்து;

சிதையில் அக்னி அணைந்து போயிருந்தால் அதற்கும் பிராயசித்தம் செய்வர்:

---

பால் அல்லது பஞ்ச கவ்யத்தால் அக்னியில் (சாம்பலில்) தெளிப்பர்.

சாம்பலை எடுத்து சமித்தின் மீது வைத்து சிதைக்கு தெற்கே எங்காவது மும்முறை பூமியில் கோடு கிழித்து சாதாரண அக்னி வைப்பர்.
மந்திரம் சொல்லி அதில் சமித்தை வைப்பர். மௌனமாக நீரால் சுற்றி ஹோமம் செய்வர். 4 முறை நெய் எடுத்து பிரஜாபதி குறித்து ஹோமம்.
பிராயசித்த ஹோமங்கள் செய்து அக்னியை சிதையில் வைப்பர்.

தெற்கு பார்த்து நின்று நீர் அதிகமாக கலந்த பாலை சிதையில் அத்தி கொத்துக்களால் மந்திரம் சொல்லி அக்னியில் தெளிப்பர். தெற்கிலிருந்து நிறைய அக்னி எடுத்து தனியாக வைத்து அதில் நெய்யால் 3 ஆகுதி ஹோமங்கள். பிறகு ஒத்தைப்படை நீர்குடங்களால் நீரிட்டு அக்னியை முழுதும் அணைக்க வேண்டும்.

(அதாவது அக்னி அணையாமல் இருந்து இப்படி செய்ய வேண்டும். அனேகமாக அணைந்துவிடுமாதலால் அதற்கு பிராயச்சித்தம் செய்து மீன்டும் அக்னியை உண்டாக்கி கர்மா தொடர்கிறது.)

கர்த்தா இடது கையில் கறுப்பு சிவப்பு நூல்களால் கண்டங்கத்தரியை கட்டுக்கொண்டு மேற்கே பார்த்து அமர்ந்து இடது காலை ஒரு கல் மீது ஊன்றிக்கொண்டு பார்க்காமலே இடது கையால் பற்கள் தலை எலும்புகள் ஆகியவற்றை மந்திரம் சொல்லி எடுப்பார். பின் கை கால் எலும்புகள், இடுப்பு எலும்புகள் துடை முழங்கால், பாத எலும்புகள். இப்படி மந்திரத்துடன் எடுத்து பின் மந்திரமில்லாது மீதியையும் எடுத்து ஒரு சட்டியிலோ துணியிலோ போடுவார்.

பிறகு சிதையில் உள்ள சாம்பலை எடுத்து த்றகே ஒரு உருவமாக செய்வர். இதன் மேல் 5 வித திண்பண்டங்கள் - பொரி, கடலை, அப்பம், முறுக்கு, இளநீர் ஆகியவற்றை சமர்பிப்பர்.

பின் எலும்புகள் உள்ள கலசத்தை துணியாலோ வாணாயாலோ மூடிவிட்டு அதை எடுத்துக்கொண்டு எழுந்து மந்திரம் சொல்லி பின் இவற்றை அடக்கம் செய்ய போவர். வன்னி மரத்தடி, பலாமரத்தடி, மஹா நதி இவற்றின் அருகே குழி பறித்து தெற்கு முகமாக உட்கார்ந்து குழியில் தர்ப்பைகளை தெற்கு நுனியாக பரப்பி அக்மர்ஷண சூக்தம் சொல்லி குழியில் அஸ்தி கலசத்தை வைத்து பால், நெய், சந்தன நீர், பஞ்சகவ்யம் ஆகியவற்றல் அபிஷேகம் செய்து மண்ணால் மூடுவர். கங்கை முதலிய புனித நீர்களையும் இதில் விடலாம். முதல் நாள் செய்தது போல முழுக்கு போட வேண்டும்.

முன் காலத்தில் ஆற்று வெள்ளம் ஏற்பட்டு எலும்புகள் காணாமல் போக வாய்ப்பு இருந்தது. அப்படி ஆனால் அதே இடத்தில் உள்ள மண்ணையோ மீதி சாம்பல் மிஞ்சினால் அதையோ வைத்து கர்மா செய்வர்.

---

மதியம் புதன், செப்டம்பர் 10, 2008

பத்தாம் நாள் காரியம்.

## தசாஹம்

பத்தாம் நாள் தாயாதிகள் அனைவரும் உடம்பு முழுதும் சவரம் செய்து கொண்டு குளித்துவிட்டு விரித்த தலையுடன் ஒரே ஒரு துணிமட்டும் அணிந்து தெற்கு முகமாக நதி கரையில் கல் ஊன்றிய இடத்தில் உள்ள குண்டத்தில் 30 துணியுடன் நீர் வார்த்தலும் 75 முறை எள்ளும் நீரும் வார்த்தலும் செய்வர்.

பிறகு கர்த்தா 3 முறை குளித்து அதே குண்டத்தில் 3 முறை துணியுடன் நீர் வார்த்தலும் 12 முறை எள்ளும் நீரும் வார்த்தலும் செய்வார். வீட்டுக்கு போய் அங்குள்ள கல் ஊன்றிய இடத்தில் தினம் போல துணியுடன் நீர் வார்த்தல், எள்ளும் நீரும் வார்த்தல், ஏக்கோத்திர வ்ருத்தி

சிராத்தம் ஆகியன செய்து ப்ரபூத பலி தானம் செய்வார்.

ஒத்தைப்படை கோடுகள் வரும்படி கோலம் போட்டு (அதனால் வீடுகளில் சாதரணமாக அப்படி கோலம் போடுவது இல்லை) தெற்கு நுனியாக துணியை பரப்பி தர்ப்பைகளையும் பரப்பி எள்ளும் நீரும் விட்டு மௌனமாக அன்னம் அப்பம் கொழுக்கட்டை, லட்டு, முறுக்கு, நெய், தேன், தயிர் எல்லாம் வைப்பர். அதன் மேல் மீண்டும் எள்ளும் நீரும் விட்டு குலம் தழைக்க வேண்டிக்கொள்வர். பாத்திரங்களை எள்நீரால் சுற்றி, அலம்பி, நிமிர்த்தி வைத்து, தெற்கு முகமாய் நமஸ்கரிக்க வீட்டு காரியங்கள் முடிகிறது. பெண்கள் துன்பத்தை காட்டுவர். பின் அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, கல்லை எடுக்க தானங்கள் செய்து, பித்ருவை போக வேண்டிய இடத்துக்கு போகச்சொல்லி பிரார்தித்து, கண்களை மூடிக்கொண்டு கற்களை எடுத்து; விழித்து, அவற்றை துணியில் வைத்து கையலம்பி, சகதி மண், தானியங்கள் இவற்றை எடுத்துக்கொண்டு போய் ஒரு குழியில் எல்லாவற்றையும் போட்டு மூடுவர்.

இதே போல நதி கரையில் காரியங்களை செய்வர். பெரியோரை வலம் வந்து பிரார்தித்து மீண்டும் சர்வாங்க சவரம் செய்து குளிக்க தீட்டு கழிகிறது.

---

மதியம் வியாழன், செப்டம்பர் 11, 2008

பத்தாம் நாள் காரியங்கள் -தொடர்ச்சி

அடுத்து சாந்தி ஹோமம்.

இது வரை தீட்டு இருந்தது, தர்ப்பைகள் தெற்காக வைக்கப்பட்டன. பவித்ரம் செய்தால் அதில் ஒத்தைபடை தர்ப்பைகள். நமஸ்காரம் தெற்கு நோக்கி.
ஆனால் இப்போது தீட்டு போய் விட்டது. இனி தேவ காரியங்கள் போல. அதற்கு தகுந்தாற்போல சாதாரணமாகவே நடைமுறை.

சாந்தி ஹோமத்துக்கு விசேஷமாக வேண்டியவை எருது (தோல்) கொத்துமல்லி, நீர்வஞ்சி, கல், நட்டு வைக்க செடிக்கிளை, நொச்சி மாலைகள் ஆகியன. அக்னி வழக்கம் போல பிரதிஷ்டை செய்து மேற்கே தோலை விரித்து தாயாதிகள் அதில் உட்கார்ந்து நொச்சி மாலை அணிவர். ஹோம கிரமத்தில் சில மாறுதல்கள் உண்டு. ஹோமமும் இலையின் கீழ் பாகத்தால் செய்வர். 10 ஹோமங்கள். ஒவ்வொன்றும் முடிந்தபின் இலையிலிருந்து சொட்டு நெய்யை வடக்கில் ஒரு பாத்திரத்தில் விடுவர்.

இதற்கு முன் கிழக்கே ஒரு எருதை நிறுத்தி இருக்க வேண்டும். அதற்கு பதில் சிவப்பு எருதின் தோலை வைக்கிறார்கள். இப்போது அதற்கு பதில் மட்டை தேங்காயை வைக்கிறார்கள் போல் இருக்கு. எருதையே நிறுத்தி வைத்து இப்போது அதை தொட்டுவிட்டு அதன் பின்னே அனைவரும் வரிசை ஏதும் இல்லாமல் கிழக்கு நோக்கி மந்திரம் சொல்லிக்கொண்டு போவர்.

கர்த்தா நீர்நொச்சி கொத்தை எடுத்துக்கொண்டு எல்லாருக்கும் பின்னால் எருது, தான் உட்பட எல்லார் அடிசுவட்டையும் அழித்துக்கொண்டு போவார்.
இறந்தவருக்கும் உயிரோடு இருப்பவருக்கும் இது எல்லை, என எண்ணி தாயாதிகளுக்கு தென்புறமாக கல்லை நடுவர். பிறகு சுமங்கலிகள் உள்ளங்கைகளால் கீழே நீர் விடுவர். பின் அந்த ஸ்த்ரீக்கள் அந்நீரால் முகத்தை துடைத்துக்கொள்வர். அப்படி யாரும் இல்லையானால் கர்த்தாவே அப்படி செய்வார்.
இப்போது அனைவரும் மை இட்டுக்கொள்வர்.

அப்புறம் கர்த்தா மாயானத்திலோ அல்லது வேறிடத்திலோ ஒரு மரக்கிளையை நடுவார். பின் அனைவரும் நொச்சி மாலைகளை கழற்றி எறிவர்.

ஆனந்த ஹோமம் அடுத்தது.

---

இவ்வளவு நாட்கள் சோகமான காரியங்களையே செய்து கொண்டு இருந்தார்கள். இப்போது ஆனந்த ஹோமம்.
தானங்கள் செய்து அதிக சம்ஸ்காரங்கள் இல்லாமல் ஹோமம்.
லௌகீகமான (=சாதாரணமான) அக்னியில் அன்னம் சமைத்து கர்த்தாவும் தாயாதிகளும் அதை சாப்பிடுவர். பின் புண்யாஹம் செய்து அந்த புனித நீரை உட்கொள்வர்.

இந்த ஆனந்த ஹோம அக்னியை வீட்டுக்கு எடுத்து சென்று அங்கு வைத்துக்கொள்வர்.
இரவில் பொரி, அப்பம் முதலியன தானம் செய்ய சொல்லி இருக்கு.

இப்படியாக 10 நாள் காரியங்கள் முடிந்தது.

---

மதியம் வெள்ளி, செப்டம்பர் 12, 2008

பதினோராம் நாள்

பதினோராம் நாள்

பகலில் வீட்டை பசுஞ்சாணத்தால் மெழுகி துணிகளை வண்ணானால் சுத்தம் செய்து வாங்கி;

பகலின் இரண்டாம் பாகத்தில் குளித்து வீட்டு/ ஆத்ம சுத்திக்காக புண்யாஹம் செய்து வீட்டுப்பொருள்களை புனித நீர் தெளித்து நவ சிராத்தம் செய்து வ்ருஷோத்சர்கம் செய்ய வேண்டும். இத பத்தி ஏற்கெனவே பார்த்து இருக்கோம் இல்லையா? அப்ப செய்யாது போனால் இப்போது இறந்தவருக்காக கர்த்தா செய்வார்.

http://anmikam4dumbme.blogspot.com/2008/07/blog-post_17.html

இப்படி செய்ய முடியாதவர்கள் 11 அந்தணர்களுக்கு அன்னத்துக்கு அரிசி தானம் செய்ய சொல்கிறார்கள். ஒரு வேளை ஏதும் ஒரு காரணத்தால் இது இப்போது செய்ய முடியாவிட்டால் 12, 23, 27 நாட்களில் செய்ய சொல்லி இருக்கிறது.

மாட்டுத்தொழுவத்தில் ஹோமத்துக்கு தயார் செய்து கொண்டு; தானியத்தின் மீது கும்பம் ஸ்தாபித்து ருத்திரனை ஆவாஹம் செய்து பூசிப்பர். ஹோமம் செய்ய சரு மாவு. இதற்கான மந்திரங்களில் பல "கோ சூக்தம்" என்ற வடிவில் (உதக சாந்தியில்) உள்ளது. பின் ருத்திர ஹோமம். பின் காளையை நிறுத்தி பூசித்து; 11 அந்தணர்களை வரித்து 11 முறை ருத்திர ஜபம். (குறைந்தது ஒரு முறை) காளையை அலங்கரித்து அதையும் அக்னியையும் சேர்த்து வலம் வந்து மந்திரம் சொல்லி எள் கலந்த நீரை பருக வைப்பர். வலது முன் காலின் அடியில் லிங்கம் அல்லது சங்கு சின்னம் மஞ்சளால் செய்து வலது காதில், இடது காதில் மந்திரம் சொல்லி பின் பசுக்களிடையே சுதந்திரமாக அதை விட்டு விடுவர். அது போகும் போதும், போன பின்னும் அதை நோக்கி மந்திரம், பிரார்த்தனை உண்டு.

இதில் நடந்து இருக்கக்கூடிய குற்றங்களுக்கு எள், துணி, பணம், நீர்குடம், பசுமாடு தானம் செய்வர். (பசுவுக்கு பதில் மட்டை தேங்காயும் பயனாவது உண்டு.)
பின் ருத்திர பலி தருவதுடன் ஹோமமும் காரியமும் பூர்த்தி ஆகிறது.

---

மதியம் செவ்வாய், செப்டம்பர் 16, 2008

ஏகோத்திஷ்ட சிராத்தமும்...

ஏகோத்திஷ்ட சிராத்தமும் சபிண்டீகரணமும் இரண்டு வகை. ஒன்று காரிகையில் சொன்னபடி. இரண்டு மாஸி சிராத்த கிரமத்தில். அவரவர் வீட்டு பழக்கப்படி.

இதை செய்யாவிட்டால் எல்லா சம்ஸ்காரங்களையும் மீண்டும் செய்ய சொல்லி இருக்கிறதால் இதை அவசியம் செய்ய வேண்டும்.

குளித்து மத்தியான அனுஷ்டானங்கள் முடித்து திருப்பி குளித்து;

சங்கல்பம் செய்து இரண்டு அக்னிகளை ஸ்தாபித்து; வடக்கில் ஹோமத்துக்கு அக்னி, அதற்கு வலதாக பிண்டப்பிரதானத்திற்கு மேடை, அதற்கும் வலதில் அந்தணருக்கு பதிலாக அக்னி. இதை மேற்கு நோக்கி அமர்ந்துள்ள தகப்பனாராக த்யானம் செய்வர். அதனால் அவருக்கு மேற்கேதான் ஆசனம், பாத்யம் (காலில் நீர் அளித்தல்) அர்க்யம் (கைகளில் நீர் வார்த்தல்) ஆசமனம் முதலான உபசாரங்கள், எள் நீர் அளித்தல் எல்லாம்.

மாஸி சிராத்த கிரமத்தில் இந்த உபசாரங்கள் இல்லை. முகமன் கூறி வரவேற்பது மட்டுமே.

மற்றப்படி ஒரு அந்தணரை வரித்து சிராத்தம் செய்வது போலவே - திருப்தி கேட்பது உட்பட. எள்ளும் நீரும் இறைத்துவிட்டு நமஸ்காரம் இல்லாமல் "இது ஜனார்த்தனனுக்கு பிரியமானது" என சொல்லி உணவளிக்கும் இடத்தில்; எள்ளும் நெய்யும் கலந்த பாயஸ அன்னத்தால் தெற்கு நோக்கி 32 ஆஹுதிகள். பானீயம் - திருப்தி கேட்டு தக்ஷிணை தாம்பூலம் உட்பட மீதி உபசாரங்களையும் முடிப்பர்.

பிண்ட ப்ரதானம்: அக்னியில் உள்ள அந்தணரையும் அனுப்பிவிட்டு தெற்கில் தெற்கு நுனியாக தர்ப்பைகளை பரப்பி எள்ளும் நீரும் விட்டு ஹோமம் செய்து மிஞ்சிய அன்னத்தால் குதிரை குளம்பு அளவு அன்னம் எடுத்து பிண்டம் போட்டு மேலே மீண்டும் எள்ளும் நீரும் விட்டு முடிப்பர். ஏதேனும் அன்னம் மிஞ்சினால் அதை நீரில் போட்டுவிட வேண்டும்.

மொத்தம் 16 சிராத்தங்கள் வரும்.

முதல் மாதம் குறைவாக இருக்கும் போது ஒன்று (ஊன மாசிகம்) மூன்றாம், ஆறாம் மாதங்கள், வருட முடிவில் அதே போல ஒன்றொன்று, (மொத்தம் 3) ஒவ்வொரு மாதமும் இறந்தவர் திதியில் =12 ; இப்படி மொத்தம் 16. தேச காலம் அனுகூலமாக இல்லாவிட்டாலும் நோய் வரலாம், மரணம் வரலாம் என்ற சந்தேகங்கள் இருந்தாலும், இவை எல்லாவற்றையும் சேர்த்து சபிண்டீகரணத்துக்கு முன் ஒன்றாக 11 நாளில் செய்கிறார்கள். அப்படி செய்யும் போது 16 பிண்டங்களையும் ஒன்றாக சேர்த்து செய்வர். இப்படி இல்லாமல் மாதா மாதம் மாசிகம் செய்து வருட முடிவில் சபிண்டீகரணம் செய்வதானால் பிண்ட தானத்தை தனித்தனியாக செய்வர்.

(குழப்பிக்கொள்ள வேண்டாம். எப்படியும் மாதா மாதம் மாசிக சிராத்தம் உண்டு. இப்போது சொல்வது பிண்ட ப்ரதானம் மட்டுமே)

12 ஆம் நாள் விதி:

ஸபிண்டீகரணம். இறந்தவர் பிரேதத்வம் நீங்கி பித்ரு ஆவதற்கு இது செய்யப்படுகிறது.
12 ஆம் நாளும் செய்யலாம். அல்லது 4 ஆம் மாதம், 6 ஆம் மாதம், 11 ஆம் மாதம் அல்லது வருட முடிவிலும் செய்யலாம்.
ஒரே மகனாக இருந்தாலும், சுயமாக அக்னி ஆராதனை செய்பவனாக இருந்தாலும் 12 ஆம் நாள் செய்வதே உசிதம். சரீரம் ஸ்திரம் இல்லை என்பதால் இப்படி.
இந்த சபிண்டீகரணம் செய்யாமல் வேறு எந்த சுப காரியமும் செய்யலாகாது.
இன்னும் பல கௌண காலம் சொல்லி இருக்கிறது.
பிரம்மசாரி, ஸன்யாசி, போல சிலருக்கு நாராயண பலிதான். ஆகவே சபிண்டீகரணம் இல்லை.
இரண்டு சிராத்தங்களை ஆரம்பித்து ஒன்றை பார்வண ரீதியிலும் ஒன்றை ஏகோத்திஷ்ட ரீதியில் பிரேத வர்ண சிராத்தமும் செய்வர். இந்த 2 உம் சேர்ந்தே சபிண்டீகரணம்.

முதலில் விச்வேதேவர், பிறகு பித்ருக்கள் கடைசியில் பிரேதம் அதாவது பித்ரு (தகப்பனார்) வரணம் செய்து காரியம்.
விஷ்ணுவும் பார்வண ரீதி சிராத்தத்தில் உண்டு.
ஹோமம் செய்து மீதியுள்ள அன்னத்தையும் எள்ளை கலந்து 7 பிண்டங்களாக பிடித்து உச்சிஷ்ட சன்னதியில் அக்னிக்கு தெற்கே போன பதிவில் சொல்லிய படி பிண்டமிடுவர்.

அந்தணர் அனுமதி பெற்று பிரேத அர்க்கியம் கொடுத்து மௌனமாக நீட்டமாக பிண்டம் பிடித்து மூன்றாக்கி அவற்றை பிதா முதலியவர் எதிரில் வைத்து;
பிரேதம் வைதரணி நதியை கடக்க வைதரணீ கோ தானம் செய்து;
(பார்க்க கருட புராணம்: யம லோகம் செல்லும் வழியில் வைதரணி நதி குறுக்கிடும் அதை தாண்ட வேண்டும். அது துர் நாற்றமும், அதிக வேகமும், கருத்த தண்ணீர் ரத்தம் உள்ளதாயும், எலும்பு மயிர் இவற்றுடன் கூடிய அலைகளுடனும் இருக்கும்.)
பிரேத பிண்டங்களை பிதா முதலியவர் பிண்டங்களுடன் ஒன்றாக சேர்ப்பர். அதன் மீது எள்ளும் நீரும் இறைப்பர்.

இதை மூத்த மகனே செய்ய வேண்டும். மற்றவர் அல்ல.

சோத கும்பம்:
அந்தணர் வரணம் இல்லாமல் மூன்றா புருஷர்களை உத்தேசித்து நீர் கடத்துடன் செய்யும் சிராத்தம். செய்பவருக்கும் சாப்பிடுபவருக்கும் ஒரு நியமமும் இல்லை. இதை 12 ஆம் நா சபிண்டீகரணம் செய்த பின் ஆரம்பித்து தினசரி வருஷ சிராத்தம் முடிய செய்வர்.
தினசரி முடியாதவர்கள் சேர்த்து அமாவாஸை அல்லது மாசிகம் போது செய்வர்.

ஆசௌசம் 12 நாள் வரையிலும் கூட உண்டு. ஸபிண்டீ செய்யும் முன் தேவ பூஜை, வேறு பித்ரு காரியம், ஹோமம், தானம், ஜபம் இவற்றை செய்யலாகாது.

ஆப்திக சிராத்தம்:

இதைப்பற்றி முதலில் எழுதுவதாக உத்தேசம் இல்லை. எனினும் மௌலி கேட்கிறர். சரி எழுதி விடலாம் என்று தோன்றியது. நமக்கு தெரிந்து கடைப்பிடிக்க கூடியதை மட்டுமே எழுத உத்தேசம். நடைமுறைகள் அதிகமாக எழுதவில்லை.
------
இதை பார்வண சிராத்தம் என்பர். (பார்வணம் என்பது 3 தலை முறையை உத்தேசித்தது. ஏகோத்திஷ்டத்தில் இப்படி இல்லை)
யாருக்கு எந்த மாசத்தில் எந்த திதியில் மரணம் ஏற்பட்டதோ அதே மாத அதே திதியில் செய்ய வேண்டும். ஏனெனில் திதிதான் பலமுடையது என்கிறார் நாரதர்.
சந்திரன் நகர்வை முக்கியமாக கொண்டு நிர்ணயிப்பது சாந்த்ர மாஸம். சூரியனை கொண்டு நிர்ணயிப்பது ஸௌர மாஸம்.
சாந்திர மாசம் தர்சாந்தம் (அமாவாஸையில் முடிவது) பூர்ணிமாந்தம் (பௌர்ணமி அன்று முடிவது) என 2 வகை.
இதில் எதை பின் பற்றுவது?
ஜ்யோதிஷர்கள் நர்மதையை எல்லையாக சொல்லி அதற்கு தெற்கே தர்சாந்தம், வடக்கே பூர்ணிமாந்தம் என சொல்கின்றனர்.
விரதங்களுக்கு சாந்திர மாதம் உயர்ந்தது; ஆனால் சிராத்தத்துக்கு சௌர மாதம் என்கிறது சந்திரிகை.
சாந்திரமானத்தில் அடிக்கடி அதி மாசம் வருவதால் அது நிலை இல்லாதது என்பதை சுட்டிக்காட்டி அது இப்படி சொல்கிறது.

ஒரு வேளை சௌர மாதத்தில் 2 திதிகள் வந்தால்? அதாவது சுக்ல பட்ச சதுர்த்தி 2 என்பது போல வந்தால்? பின் திதி தோஷம் (க்ரஹணம், மாத பிறப்பு போல) இல்லாமல் இருந்தால்

அதில் செய்ய வேண்டும். இரண்டிலும் தோஷம் இருந்தால்? முந்தைய திதி.
சிராத்தம் செய்ய வேண்டிய மாத்தியானிக காலம் கழிந்த அபராஹ்ணம் என்ற காலத்தில் குறிப்பிட்ட திதி இருக்க வேண்டும்.
இது போல நிறைய சமாசாரங்கள் இருக்கின்றன.

ப்ரதி வருஷம் சிராத்தம் செய்யாதவர் கோடி ஜன்மங்கள் சண்டாளனாக பிறப்பானாம். ஸம்வர்த்தகர் சொல்கிறார்.

முக்கியமான விஷயம் சகோதரர்கள் சொத்தை பிரித்துக்கொண்டுவிட்டால் - அதாவது குடும்பம் தனியாக பிரிந்து விட்டால் சிராத்தம் தனித்தனியாகதான் செய்ய வேண்டும். பலர் அன்று மட்டும் ஒன்று சேர்ந்து செய்கின்றனர். (மத்த நாட்களில் இருக்கிறாயா இல்லையா என்று கூட பார்ப்பதில்லை!) இது தவறு.
அதே போல ஏதேனும் ஆபத்து வந்தாலும் ஆம ரூபமாக செய்யக்கூடாது. அந்த திதி சௌகரியப்படாவிட்டால் அடுத்த அமாவாசை அல்லது க்ருஷ்ண ஏகாதசியில் செய்வர்.

96 சிராத்தங்கள் குறித்து முன்னேயே பார்த்து இருக்கிறோம்.
புண்ணிய தீர்த்தங்களில் செய்யும்போது வரணம் செய்யும் அந்தணரை பரீட்சிக்க வேண்டியதில்லை.
இல்லாவிட்டால் அவசியம் பரீட்சிக்க வேண்டும். {அப்படி செஞ்சா யாரும் கிடைப்பாங்களா? :-( நம்பிக்கையுடன் உறுதியோடும் செய்தால் கிடைப்பார்கள்.} அவன் குலம் நல்ல குலமா? அவன் வேதம் பயின்றவனா? ஆசாரங்கள் நல்லதாக இருக்கின்றனவா?
வேத அத்தியயனம் பிள்ளை செய்யவில்லை; அவன் அப்பா செய்து இருக்கிறார்.
வேத அத்தியயனம் பிள்ளை செய்து இருக்கிறார்; அவன் அப்பா செய்யவில்லை.
இப்படி 2 பேரில் யார் பரவாயில்லை?
ஆச்சரியமான பதில்; முதல் ஆசாமிதான்.

காயத்ரி செய்வதில் நாட்டம் உள்ளவன், ஆசாரத்துடன் இருப்பவன் சிறந்தவன். நான்கு வேதங்களும் கற்றாலும் எல்லா இடங்களிலும் சாப்பிட்டுக்கொண்டு, எல்லாவற்றையும் விற்றுக்கொண்டு, நேரத்துக்கு குளியல் சந்த்யா உபாசனம் இல்லாதவன் லாயக்கு இல்லை.

அக்னி ஹோத்ரி, நியாய சாஸ்திரம் அறிந்தவன், ஆறு அங்கங்களையும் அறிந்தவன், மந்திர பிராம்மணம் அறிந்தவன், தர்மங்களை ரக்ஷிப்பவன்; குரு, தேவதை, அக்னி இவர்களை பூஜிப்பவன், ஞானீ, சிவ பூஜை செய்பவன், விஷ்ணு பக்தி உள்ளவன் இவர்கள் வரிக்கக்கூடியவர்கள்.

அமாவாஸை பிரதமை ஆகிய காலங்களில் வேதம் சொல்கிறவன், சதாசாரம் இல்லாதவன், கண்டவர் அன்னத்தால் உடல் வளர்ப்பவன் இவர்கள் லாயக்கு இல்லை.
நான் வருகிறேன் கூப்பிடு என்று தானாக அழைத்துக்கொள்கிறவன் கூடாது என்று சொல்லப்பட்டாலும் சாஸ்திர பிரமாணம் தெரியவில்லை.

---

மதியம் வெள்ளி, செப்டம்பர் 19, 2008

சிராத்தம் -நியமங்கள்

சிராத்தம் வருகிற மாசத்திலோ பட்சத்திலோ சவரம் செய்து கொள்ளுதல், வேறு வீடுகளில் சாப்பிடுதல், ஸ்திரீ ஸங்கம் இவற்றை தியாகம் செய்ய வேண்டும்.
பசும் சாணத்தால் சிராத்தம் செய்யும் பூமியை மெழுகி எள்ளை இறைக்க வேண்டும்.
உளுந்து இல்லாமல் சிராத்தம் செய்யப்பட்டதாகாது. தேனை பித்ருக்கள் விரும்புகிறார்கள்.

சுருக்கமாக சிராத்த விஷயம்:
1. 12 நாழிகைக்கு மேல் (ஒரு நாள் = 60 நாழிகை. 12 நா = காலை 11 மணி) ப்ராம்மணர்களுக்கு

ஸ்னானத்துக்கு தைலம் சூர்ணம் முதலியன கொடுக்க வேண்டும். அவர்கள் குளித்த பின் கர்த்தாவும் குளிப்பார். துவாதசியானால் நெல்லி சூர்ணம் கொடுக்க வேண்டும்.
2. ஆவாஹனம், அர்க்யம், சங்கல்பம், பிண்ட தானம், எள்நீர் கொடுத்தல், ஆசனம், பாத்யம், அன்னதானம் இவற்றில் நாம கோத்திரங்களை சொல்ல வேண்டும்.
3. தேவர்களின் ஆவாஹனத்தில் இரண்டு பாதங்கள், முழங்கால்கள், தோள்கள் தலை இவற்றில் அக்ஷதை போடவும்.
4. பித்ருக்கள் ஆவாஹனத்தில் தலை தோள்கள், முழங்கால்கள் என இறங்கு வரிசையில் எள்ளை போடவும்.
5. வீண் பேச்சு கூடாது.
6. தேவர்களுக்கு கட்டை விரலை பிடிக்காமலும் பித்ருக்களுக்கு பிடித்தும் மந்திரம் சொல்வர்.
7. சமையலின் குற்றங்களை சொல்லகூடாது

இவை போல பல உண்டு.

பித்ருக்களை வஸுக்களாயும், தாத்தாவை ருத்திரர்களாயும், அவருடைய அப்பாவை ஆதித்யர்களாயும் வேதம் சொல்லுகிறது.
ஒரு வேளை மற்ற புண்ய காலங்களில் (96) சிராத்தம் செய்ய முடியாவிட்டால் ஆம ரூபமாக, ஹிரண்ய ரூபமாக (அந்தணர்களுக்கு தக்ஷிணையாக) கொடுத்து செய்யலாம். சக்தி இல்லாதவன் பசுக்களுக்கு ஒரு நாளுக்கு போதுமான புல்லை போடலாம். பிண்டங்கள் போடலாம். தில (எள்) தர்ப்பணம் செய்யலாம்.

யார் சிராத்தம் செய்ய முடியாமல் - சக்தி இல்லாமல் இருக்கிறானோ அவன் அதற்கு பிரதிநிதியாக என்ன உள்ளது என்று பார்த்து அதை செய்தால் முக்கியமாக செய்ய வேண்டியபடி செய்த பலன் கிடைக்கிறது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.

யார் சிரத்தையுடன் பித்ருக்களையும் அக்னியையும், தேவர்களையும் பூஜிக்கிறார்களோ அவர்கள் எல்லா பிராணிகளுக்கும் உள்ளிருக்கும் இறைவனை பூஜிக்கிறார்கள். ஆயுள், புத்திரர்கள், புகழ், சுவர்க்கம், யசஸ், புஷ்டி, பலம், பாக்கியம், பசுக்கள், சுகம், தனம், தான்யம் இவற்றை அடைகிறார்கள்.
ஆகவே கிருஹஸ்தன் சிராத்தத்தை சரியாக செய்ய வேண்டும்.

இத்துடன் 40 சம்ஸ்காரங்கள் குறித்த பதிவுகள் முடிந்தன.
அடுத்து காம்ய கர்மாவை கொஞ்சமாக பார்த்துவிட்டு பொதுவாக கர்மா குறித்து பார்க்கலாம்.

---

மதியம் ஞாயிறு, செப்டம்பர் 21, 2008

காம்ய கர்மா:

காம்ய கர்மா:
ஏதோ ஒரு விஷயத்தை வேண்டி ஒரு கர்மா செய்கிறோம். இது காம்ய கர்மா.
ஜீவனத்துக்கு பணம் வேண்டிதான் வேலை பார்க்கிறோம். அப்ப இதுவும் காம்ய கர்மாதான். சில பேருக்கு அப்படி வேலை பார்க்க தேவையில்லாமல் இருப்பர். இருந்தாலும் வீட்டில் சும்மா இல்லாமல் ஏதோ ஒரு வேலை பார்ப்பார்கள். அதற்கு சம்பளம் என்று ஒன்று இருந்தாலும் அதைப்பத்தி கவலை படாம வேலை பார்ப்பார்கள். உதாரணமா சொன்னா பல பெண்கள் படிப்பு முடித்து ஆசிரியை வேலை பார்ப்பதுண்டு. அப்படி சம்பாத்திக்க கட்டாயமோ இல்லை அவசியமோ இல்லாவிட்டாலும் சமூகத்துக்கு ஏதோ ஒரு உதவி செய்யணும் என்று செய்வர். அல்லது இலவச ட்யூஷன் எடுப்பார்கள். அப்போது இதே ~~அகாம்ய~~ நிஷ்காம்ய கர்மா ஆகிவிடும்.

எப்போதுமே ~~அகாம்ய~~ நிஷ்காம்ய கர்மா காம்ய கர்மாவை விட உயர்ந்தது.

அது நல்லாவும் நடக்கும். ஏன்? அப்படி கர்மா செய்கிறபோது பணம்/ சம்பளம் பத்தி யோசனை இல்லை. மனசு முழுக்க காரியத்தில் ஈடுபடும். அப்படி செய்யும் காரியம் பரிமளிக்கும்.

---

காரியம் செய்யும் போது என்ன சங்கல்பம் செய்கிறோம்? “பகவத் ஆக்ஞையா" “ பரமேஸ்வர /நாராயண ப்ரீத்யர்த்தம்" இப்படி எல்லாம் சொல்லிதான் இன்ன காரியம் செய்கிறேன் என்று சங்கல்பிக்கிறோம். ஏன் கர்மா செய்கிறோம்? அது பகவானுடைய உத்தரவு. எதற்கு செய்கிறோம்? அது அவனுக்கு பிடிக்கும் அதனால். அதே போல கர்மா முடிந்து "உடலால், வாக்கால், மனதால், இந்திரியங்களால், புத்தியால் இல்லை வெறும் சுபாவத்தால் என்னவெல்லாம் செய்கிறேனோ அனைத்தையும் நாராயணனுக்கே சமர்ப்பணம் செய்கிறேன்.” என்று செய்த கர்மாவில் பலனை விட்டு விடுகிறோம். இப்படி செய்யும் போது அது ~~அகாம்ய~~ நிஷ்காம்ய கர்மா ஆகிறது.

இப்படி சொல்வதால் அகாம்ய கர்மா மட்டுமே செய்யவேண்டும் என்று இல்லை. லௌகீக வாழ்க்கையில் சில பொறுக்க முடியாத தொந்திரவுகள் வந்தால், சில நியாயமான ஆசைகள் நிறைவேறாமல் போகும்போது இப்படி கர்மாக்கள் செய்யலாம்.
இதிலேயே ஆசை என்று ஒன்று, ஆஸ்தை என்று ஒன்று.

ஆசைல தனக்கு, தன் குடும்பத்துக்கு என்று கொஞ்சம் குறுகிய நோக்கம் இருக்கு.
ஊரில் மழையே இல்லை. வெயில் வாட்டி எடுக்கிறது. மழை பெய்யணும்னு ஏதோ ஒரு கர்மா - ஏகாதச ருத்திர அபிஷேகம் போல- செய்யறோம். ஊருக்கு மழை பெய்யணும் என்பது ஆஸ்தை.

மனுஷனுக்கு காம்யங்கள் -ஆசைகள்- ரொம்பவே அதிகமா இருக்கு. அப்ப அதற்கான கர்மாக்களும் எக்கச்சக்கமா இருக்கு. ஏதோ வேதம் பிலாஸபிதான் ன்னு நினைக்கிறோம். உண்மையில அதுல நிறைய கர்மாக்கள் சொல்லி இருக்கு. எல்லாத்துக்கும் பலன் சொல்லி இருக்கு. வேதம் இந்த மாதிரி வாழ்க்கைக்கும் பின்னால வரப்போற வாழ்க்கைக்கும் சேத்துதான். பிலாஸபி -வேதாந்தம் (வேத அந்தம்) -கடேசில வரதுதான். அது நிரந்தர தீர்வு. முன்னாலே வருகிறதெல்லாம் தற்காலிக தீர்வுகள்.

---

மதியம் செவ்வாய், செப்டம்பர் 23, 2008

காம்யம் -நிஷ்காம்யம்

காம்ய கர்மாக்கள் பலவிதம். பூஜைகள், ஜபங்கள், ஹோமங்கள், தர்ப்பணங்கள். கிரிவலம், தானங்கள், நெறையவே இருக்கு. சாஸ்திரங்களில் சொல்லி இருக்கிற பிராயச்சித்தங்களும் இப்படித்தான்.

நிஷ்காம்ய கர்மாவுக்கும் இதுக்கும் செய்கிற விதத்திலேயும் வித்தியாசம் உண்டு. இன்ன விஷயம் நிறைவேற இப்படி இதை செய்கிறேன் என்று சங்கல்பம் செய்தால் அதை அப்படியே நிறைவேத்தனும். அதில லீ வே எடுத்துக்க முடியாது.

ஒருவர் ஒரு கஷ்டத்துக்காக ஒரு மடாதிபதியை போய் பார்த்தார். அவர் அதுக்கு ஒரு தீர்வு சொன்னார். ஒவ்வொரு சஷ்டியும் திருச்செந்தூர் போய் இன்னது செய்யது வரணும்; அப்படி தொடர்ந்து இவ்வளவு தரம் செய்யனும். சரின்னு இவரும் அப்படியே செய்து வந்தார். முக்கால்வாசி பூர்த்தி ஆயிடுத்து. இன்னும் 4-5 தான் பாக்கி என்ற நிலைல இவர் மடாதிபதியை போய் பாத்து அடுத்த சஷ்டி போக முடியாது. சென்னைல முக்கிய வேலை இருக்குன்னார். மடாதிபதி போய்த்தான் ஆகணும்னார். இவர் இல்லை அதுக்கு பதிலா இன்னும் 2 தரம் போய்வரேன் என்றார். இல்லை, அதுக்கு அடுத்த நாள் போறேன் என்றார். மடாதிபதி ஒத்துக்கலை. என்னால நிச்சயம் போக முடியாது, என்ன செய்யறதுன்னு கேட்டார் இவர். அப்படின்னா பரவாயில்லை, திருப்பி முதல்லேந்து ஆரம்பிச்சு செய் என்றார் மடாதிபதி.

நிஷ்காம்யத்துல இப்படி சட்ட திட்டம் இல்லை.

சரி நாம செய்கிற எல்லா விஷயமுமே காம்யம்தானா? ஞான வைராக்கிய சித்யர்த்தம் என்று

---

பண்ணினால்? அது மோட்சத்தை தேடுகிற மார்க்கம்; அது காம்யம் இல்லை.

சமீபத்தில ஒரு கூட்டத்தில ஸ்வாமி ஓங்காரனந்தா சொன்னார்: ஒரு கோவிலுக்கு போய் ஒரு சின்ன அஷ்டோத்திர பூஜை செய்யக்கூட இருக்கிற எல்லார் பேரும் சொல்கிறோம். வீர்ய விஜய ஆயு ஆரோக்கிய என்று முழ நீள சங்கல்பம் செய்கிறோம்.
ஸோம யாகம் செய்வதை பாருங்க. யக்ஞேஸ்வர ப்ரீத்யர்த்தம், ஸோமேன யக்ஷ்யே.. அவ்ளோதான்.!
பலன் செய்கிறவருக்கும் கிடைத்தாலும் பொதுவாகவே எல்லாருக்கும் பலன் கிடைப்பதால் இது நிஷ்காம்யம் ஆகிவிட்டது.

---

மதியம் புதன், செப்டம்பர் 24, 2008

பிறப்பால் கர்மா

சாஸ்திரப்படி ஒருவருடைய கர்மா என்னன்னு சொல்லி இருக்குன்னு பாக்கலாம். இந்த காலத்திலே இது பொருந்துமா என்பது அவரவர் முடிவு செய்ய வேண்டியது.

அந்தணருடைய கர்ம அதிகாரம் வேத அத்தியயனம் (கற்பது) செய்தல், வேத அத்யாபனம் (சொல்லிக்கொடுத்தல்), யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் வாங்கிக்கொள்ளுதல். இவ்வளவே.

இப்படி கர்ம அதிகாரம் உள்ள இவருக்கு இருக்க வேண்டியவை: தவம், இந்திரிய அடக்கம், தயை, தானம், ஸத்யம், தர்மம், சாஸ்திரம், அன்பு, வித்யை, அறிவு: பரலோகம், ஈஸ்வரன், வேதம் பிரமாணமானது என்பதில் நம்பிக்கை.

க்ஷத்திரியர்களுக்கு: வேத அத்தியயனம் (கற்பது) செய்தல், யாகம் செய்தல், தானம் கொடுத்தல் இவை மூன்றும் உண்டு. ஆனால் முக்கிய தர்மம் பிரஜைகளை காப்பதுதான்.
இவன் எப்படி இருக்க வேண்டும்? மிகுந்த உத்ஸாகம், தானசீலம், நன்றி மறவாமை, பெரியோரை சேவித்தல், வணக்கம் இவை உள்ளவன். ஸத்வ குணம், உண்மையான வாக்கு, சுத்தம், கார்யங்களை சீக்கிரமாக செய்தல், மறதி இன்மை, பெருந்தன்மை, கடினசித்தம் இன்மை; தார்மிகன், சூதாட்டம் போன்ற கெட்ட பழக்கங்கள் இன்மை, நல்லறிவு, சூரனாக இருத்தல், ரஹசியங்களை /தந்திரங்களை அறிந்து இருத்தல், ஆத்ம வித்யை, அர்த்த சாஸ்திரம், பசு பாலனம் இவற்றை அறிந்து இருத்தல், இப்படி இருக்கணும்.

இவன் அந்தணர்களிடம் பொறுமையுடனும், நண்பர்களிடம் வக்கிரமில்லாமலும், எதிரிகளிடத்தில் ப்ரதாபம் உள்ளவனாயும், வேலைக்காரர்கள், ஜனங்கள் இவர்களிடத்தில் அப்பாவை போல அன்பு உள்ளவனாயும் இருக்க வேண்டும்.
இப்படி இருப்பதற்காக அரசனுக்கு பிரஜைகளின் புண்ணியத்தில் 1/6 பங்கு கிடைக்கும். (அதே போல அவர்கள் பாவத்திலும்...முழுப்பாவமும் கிடைக்கும்!). அதனால் வஞ்சகர்கள், திருடர்கள், சூதுக்காரர்கள், கொள்ளையர்கள், கணக்கர்கள் இவர்களிடம் துன்பப்படும் மக்களை கவனித்து காக்கவேண்டும்.

அரசன் சாதுக்களை சிறப்பிக்க வேண்டும். லஞ்சத்தால் பிழைப்பவர்களை சொத்து பறிமுதல் செய்து நாட்டை விட்டு விரட்டவேண்டும். வேதம் உணர்ந்தவர்களை தானங்களால் ஆதரித்து நாட்டில் வசிக்க செய்ய வேண்டும். இப்படி எல்லாம் யாக்ஞவல்கியர் சொல்றார்.

---

மதியம் வியாழன், செப்டம்பர் 25, 2008

பிறப்பால் கர்மா -2

வைச்ய தர்மம்.

பசுக்களை பரிபாலித்தல், தானம், யாகம், அத்யயனம் இவற்றை செய்தல்; தரையிலும் நீரிலும்

யாத்திரை செய்து வியாபாரம், வட்டிக்கு கடன் கொடுத்தல், விவசாயம் இவை வைச்யர்களுக்கான விருத்திகள். (மனு)

பராசரர் ரத்தின பரீட்சை என்று ஒண்ணு சேத்துக்கிறார்.

மனு மேலே சொல்கிறார்: முத்துக்கள், பவழங்கள், உலோகங்கள், துணிகள் வாசனை பொருட்கள், ரஸ பொருட்கள் இவற்றோட தார தம்மியம் தெரியணும். விதைகள் விதைக்கும் விதிகள், மண்ணின் குண குற்றங்கள், அளவிடும் முறைகள் தெரியணும். சரக்குகளின் உயர்வு தாழ்வுகள், தேசங்களின் குண தோஷங்கள், சரக்குகளின் லாப நஷ்டங்கள், பசுக்களை விருத்தி செய்யும் முறைகள் தெரியணும். ஊழியர்களுக்கு உரிய சம்பளம் கொடுத்தல், மனிதர்களின் மொழிகள், சரக்குகளை காப்பாற்றும் விதம், அவற்றுடன் சேர்க்கக்கூடிய பொருட்கள், வாங்கல்-விற்றல் இதெல்லாம் தெரியணும். இப்படி பணம் சேர்க்க நல்லமுயற்சிகள் செய்யணும். சேர்த்ததை தாராளமா எல்லா பிராணிகளுக்கும் தானம் செய்யணும்.
சூத்திர தர்மம்: மற்ற மூன்று வர்ணத்தவருக்கான வேலையை செய்வதே இவர்கள் தர்மம். ஆங்கிலத்தில் லெக்வொர்க் என்கிறார்களே அது. அதற்கு தகுந்த உடல் வலிமையும் சக்தியும் இவர்களுக்குத்தான் இருக்கு.

இப்படி செய்ய வேலை கிடைக்கலை/ விருப்பமில்லை என்றால் சில பொருட்களை வியாபாரம் செய்யலாம்: உப்பு, தேன், தைலம், தயிர், மோர், நெய், பால் இதெல்லாம் வியாபாரம் செய்யலாம். ஆனாலும் மது, மாமிசம் இவற்றை வியாபாரம் செய்யலாகாது.

இப்படி வேலை செய்து கொண்டு, மிருதுவான வார்த்தைகளுடனும், அகங்காரம் இல்லாமலும் இருப்பவர் உயர் நிலையடைவார்கள்.

இவர்களுக்கு மற்றவர்களுக்கு விதிக்கப்பட்ட பல கட்டுப்பாடுகள் இல்லை. பூண்டு முதலியன சாப்பிடுவதால் பாபமில்லை. உபநயனம் முதலிய சம்ஸ்காரங்களுக்கு தேவையும் இல்லை; அதிகாரமும் இல்லை.

தர்மத்தை அறிந்தவர்களும், தர்மம் செய்ய விரும்புவர்களுமான சூத்திரர் மந்திரங்களை தவிர்த்து நமஹ என்று பாக யக்ஞங்களை செய்தால் பாபமடைய மாட்டார்கள். அதாவது அக்னயே ஸ்வாஹா என செய்வதற்கு பதில் அக்னயே நமஹ என்று ஹோமம். பும்சவனம் முதல் சௌளம் வரையான சம்ஸ்காரங்கள் அந்தந்த காலத்தில் செய்ய வேண்டும்.

தேவலர் கூடுதலாக, உழவு, பசுபாலனம், சுமை தூக்குதல்,வியாபாரம், சித்திரம் எழுதுதல், சில்பங்கள் வடித்தல், நடனம், பாட்டு, வாத்தியங்களை வாசித்தல் இவற்றையும் தர்மமாக சொல்கிறார்.

இவர்கள் அதிகமாக தனம் சேகரிக்கக்கூடாது. யாரை அண்டி இருக்கிறார்களோ அவர்கள் சூத்திரரை வயதாகி வேலை செய்ய முடியாத காலத்திலும் சம்ரக்ஷிக்க வேண்டும். ஒரு வேளை சம்ரக்ஷித்தவர் க்ஷீண திசையடைந்தால் சூத்திரர் அவரிடம் பெற்ற தனத்தால் அவருக்கு உதவி செய்யலாம்.

தர்மம் தவறுபவர்களுக்கு கடுமையான பிராயச்சித்தங்களும் சொல்லி இருக்கு.

---

மதியம் ஞாயிறு, செப்டம்பர் 28, 2008
வேண்டுகோள்
நல்லது.
இப்படியெல்லாம் சாஸ்திரங்கள் விதிச்சாலும் இப்ப நிலைமை தலை கீழாக மாறிவிட்டது.

வர்ண கலப்பு என்பது மஹாபாரத காலத்திலேந்தே தொடங்கி நாளாக ஆக அதிகமாக ஆகிட்டே இருக்கு. இந்த நிலைல பொதுவா சொல்ல முடியலை. அவரவர் முடிவு செய்ய

வேண்டிய கட்டாயம் இருக்கு.

எங்க குல தெய்வத்தை கண்டு பிடிச்சு அங்கே போன போது சில நடை முறைகள் தெரியவந்தது. அந்த கோவிலுக்கு பூஜை செய்ய அதிகாரம் உள்ளவங்க சுமார் 50 குடும்பங்கள். எல்லாருமே ஏதோ ஒரு வேலைல இருக்காங்க.

இத்தனை பேருக்கும் வருஷத்திலே ஒரு வாரம் பூஜை செய்ய முறை. அந்த சமயம் லீவு போட்டுட்டு பூஜைக்கு வந்துடுவாங்க. மத்த சம்யம் எப்படி இருக்காங்களோ, அந்த ஒரு வாரம் மட்டும் சுத்த பத்தமா இருப்பாங்க. ஒரு வாரம் பூஜை கவனிச்சுட்டு அவங்க அவங்க வேலைக்கு போயிடுவாங்க.
இதுல ஒரு விசேஷம் இருக்கிறதா தெரியுதே! அவங்க அத்தனை பேருக்கும் அந்த கோவில்ல வேலை கிடைக்காதுன்னு யாரும் விட்டுட்டு போகலையே! நல்லா சம்பாதிக்கிற வேற வேலைல இருந்தாலும் இதை செய்யணும்ன்னு தோணுதே!

இப்படியே எல்லாரும் இருக்க முடியுமோன்னு யோசனை!
என்ன வேலை பாத்தாலும் அவரவர் ஸ்வ தர்மமான வேலைல ஒரு 'டச்' இருந்து கொண்டு இருக்கலாமோன்னு.....

குறிப்பா இங்கே அந்தணர்களை பத்தி சொல்லணும்.
மற்ற வேலைகளை பிறர் செய்கிறதாலே எந்த வேலையும் அழிஞ்சு போச்சான்னு பாத்தா.. ஒரு சில கலைகளை தவிர எல்லாமே இன்னும் இருக்கு. வைச்யர்கள் வியாபரத்தை விட்டா என்ன இப்ப எல்லாருமே வியாபாரம் செய்கிறாங்க. ஆட்சி முறை மாறி போனதிலே க்ஷத்திரியர்கள் போலீஸ், ராணுவம் இப்படி போகலைனாலும் அதுக்கு ஆள் இன்னும் இருந்துகிட்டுதான் இருக்கு. இப்படி லௌகீக சமாசரங்கள் யாராலோ பூர்த்தி செய்யப்படுது. பிரச்சினை அதிகம் இல்லை.

ஆனால் அந்தணர்கள் ஸ்வதர்மத்தை விட்டதுல வேதம் நம்மகிட்டேந்து பிரிஞ்சு போய்கிட்டே இருக்கு.
அப்ப வேதம் அழிஞ்சு போயிடுமா?

போகாது. ஏன்னா அது ஈஸ்வரனின் உயிர் மூச்சு. ஈஸ்வரன் இருக்கும்வரை அது இருக்கும். அப்படின்னா அது எப்பவுமே இருக்கும்.
பின்னே? அது நம்மகிட்டேந்து விலகி போயிடும். அப்படி நடந்தா அது நம்மோட நல்லதுக்கு இல்லை.

அந்தணர்கள் விதி வசத்தால எந்த வேலைல வேண்டுமானா இருக்கட்டும். கொஞ்ச நேரம் ஒதுக்கி வேதம் கத்துக்கொள்வது; கற்று கொண்டு இருந்தா அதை பாராயணம் செய்வது- மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுப்பது; இரண்டுமே முடியாத பட்சத்தில் வேத பாடசாலைகள் தழைக்க முடிஞ்சதை செய்வது- இப்படி ஏதேனும் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

---

மதியம் திங்கள், செப்டம்பர் 29, 2008
கர்ம வழி-பொது 1
காக்காவுக்கும் குருவிக்கும் கல்யாணம், ..கெட்டி மேளம் கோவில்ல, வெத்திலை பாக்கு கடையில ன்னு பாடினா மாதிரி...

பகவத் கீதை வெண்பா அழகிய மணவாளருடையது...
கீதை உரை பக்தி வேதாந்த புத்தக நிறுவனம் வெளியிட்ட பகவத்கீதை உண்மையுருவில் என்ற புத்தகத்திலிருந்து... இதை கடுகு.காம் இலிருந்து சுட்டு இருக்கேன். (நிறைய நகைச்சுவை கதை கட்டுரைகள் எழுதினவரா இவர்?)...
சில விஷயங்கள் வேளுக்குடியாரின் பிரவசனங்களில் இருந்து...

---

சிலது என் தங்கமணியோட பேசினது....
சிலது என் அருமை புத்திரன் விளக்கம் கொடுத்தது...

எல்லாருக்கும் நன்றி.
~~~~~~~~~~~~~~
பொதுவாக ஒருவருடைய வேலையை பத்தி இப்ப பாக்கலாம்.
வர்ணத்துக்குன்னு கார்யங்கள் சொன்னாலும் இந்த கால கட்டத்துல நம்மை பகவான் ஏதோ ஒரு வேலைல கொண்டு வெச்சு இருக்கான். அது அவங்க அவங்க தர்மத்துக்கு விரோதமா இல்லையா என்ற ஆராய்ச்சி ஒரு பக்கம் இருக்கட்டும்.

எந்த வேலைல இருந்தாலும் சில விஷயங்களை கடைபிடிச்சா அது கர்ம யோகமா ஆயிடும். கர்ம யோகம்னா உடனே பலருக்கும் நினைவுக்கு வரது பகவத் கீதைதான். அதை அடிப்படையா வெச்சே மேலே பாத்துகிட்டு போகலாம்.

எல்லாருக்கும் தெரிஞ்ச ஆனால் பலரும் தப்பா புரிஞ்சுகிட்ட ஸ்லோகம் 2 ஆம் அத்தியாயத்தில வர 47 ஆம் ஸ்லோகம் "கர்மண்யேவாதிகாரஸ்தே" என்பதுதான். இதை ஆரம்பத்திலேயே பாத்தாச்சு.

ஆமாங்க, வழி 2, 2-அ

இப்ப கொஞ்சம் விரிவா பாக்கலாம்.

கீதை 2:47

கருமத்தே யுன்ற னதிகாரங் கண்டாய்
வருமப் பயனிலணு மன்னா-தொருமித்து
மற்றதனுக் கேதுவா மன்னேல் கருமமலா
வெற்றமைவில் வேண்டா விருப்பு

விதிக்கப்பட்ட கடமையைச் செய்வதில் மட்டுமே உனக்கு அதிகாரம் இருக்கிறது. செயலின் பலனில் அதிகாரம் இல்லை. இருப்பதாகவும் எண்ணாதே. செயலற்ற நிலையையும் விரும்பாதே. வெற்றி, தோல்விகளை எண்ணாமல் நடுநிலையுடன் செயல்படு. இத்தகைய மனநிலையே யோகம் எனப்படும்.

காரியம் செய்வதிலதான் உனக்கு அதிகாரம் - ரைட்ஸ்- இருக்கு. அதை செஞ்சா என்ன ஆகும் என்பதில உனக்கு ரைட்ஸ் இல்லை.
எந்த பயனிலும் ஆசை வைக்காதேன்னும் சொல்லலை. அடுத்து வர ஸ்லோகங்களை பாத்தா இது புரியும். ஆத்மாவை உணந்து கொண்டு பிரம்மத்தை அடைய பலனைத்தவிர கீழான விஷயங்களில் ஆசை கூடாது.
பலனை பெறும்போது இது நான் செய்ததால கிடச்சது என்று நினைக்காதே.
ஏன்?
நாம் மட்டுமே விளைவை நிர்ணயிப்பது இல்லை.
சாஸ்திரங்கள் என்ன சொல்லுதாம்? ஒரு காரியம் நடக்க 5 விஷயம் வேலை செய்யுதாம். 1. பரமாத்மா 2. ஜீவாத்மா 3. உடல் 4. இந்திரியங்கள் 5. பிராணன்.
என்னதான் பெரிசா திட்டம் போட்டாலும் அது பகவானோட திட்டத்துக்கு பொருந்தாட்டா அதை செய்ய முடியாது.
ஊருக்கு போய் ஒரு இடத்திலே பேசணும். நான் நினைச்சேன். ஆனா திடீர்னு சுரம் வந்ததால போகவே முடியலை. இப்படி உடல் ஒத்துழைக்கலை.
போனேன், போகிற வழில குளிர் காத்து, தொண்டை கட்டிக்கொண்டது. பேச்சே வரலை.
இப்படி பலவிதமா தடங்கல்கள் ஏற்படலாம். அதை எல்லாம் தாண்டி வேலை நடந்தா அதில
~~~~~~~~~~~~~~

முழு காரணம் நாம் ன்னு சொல்லிக்கிறதுல அர்த்தமே இல்லை.

சாதாரணமா நம்ம மனசு எப்படி இருக்கு?

---

மதியம் செவ்வாய், செப்டம்பர் 30, 2008
கர்ம வழி-பொது 2
சாதாரணமா நம்ம மனசு எப்படி இருக்கு?

செய்யற வேலை நல்லா முடிஞ்சுட்டா அதுக்கு நாம் உரிமை கொண்டாடுறோம்.
அது தப்பா போச்சுனா யார் மேல பழி போடலாம்ன்னு பாக்கிறோம்.

வேளுக்குடியார் சுவாரசியமா உதாரணம் சொன்னார். உபன்யாஸத்துக்கு கிளம்பினாராம். ஏழு மணிக்கு நிகழ்ச்சி. போகும்போது ஒரே ட்ராபிக் ஜாம். நேரமாயிடுத்து. சபா காரியதரிசி ஏன் லேட்டுன்னு கேட்டாராம். அதுக்கு இவர் பல காரணங்களோட தயாரா இருந்தார். அழச்சுகிட்டு போக வேண்டியவர் நேரத்துக்கு வரலை; வர வழில ஒரே ட்ராபிக் ஜாம். இப்படி எல்லாம் சொல்லி அதனால தாமதமாயிடுத்து என்றார். அடுத்த நாள் சபாவுக்கு சரியான நேரத்துக்கு போனாராம். காரியதரிசி அட இன்னிக்கு நேரத்துக்கு வந்துட்டீரே ன்னார். அதுக்கு "நான் எப்பவும் சரியான நேரத்துக்கு வந்துடுவேனே" என்றார். என்ன சொல்லி இருக்கணும்? அழைத்து போகிறவர் சரியான நேரத்துக்கு வந்தார். வழில டிராபிக் ஜாம் இல்லை. கார் மக்கர் செய்யாம சரியா ஓடித்து... ஆனா இப்படி எதுவுமே சொல்லலையே!

ஆக பலனுக்கு நாம் எப்போதுமே முழு காரணமில்லை

.
--
இதை ஏற்கெனவே பாத்தாச்சு. இருந்தாலும் கொஞ்சம் திருப்பி பாக்க...
பலனை எதிர்பாக்காதேன்னா அனேகமா யாருமே அப்படி செய்ய மாட்டாங்க. யாரா இருந்தாலும் எதோ ஒரு பலன் - விளைவு நடக்கும்ன்னுதானே வேலை செய்யறோம். அத எதிர் பாக்காதேன்னு சொன்னா யார் வேலை செய்வாங்க?

ஒரு வேலையை செய்யலாம், செய்யாம விடலாம் அல்லது வேற மாதிரி செய்யலாம். அதுக்கு உனக்கு அதிகாரம் இருக்கு! ஒரு போதும் பலன்ல அதிகாரமில்ல.
பலன் இப்படிதான் இருக்கணும்னு சொல்கிறத்துக்கு நமக்கு அதிகாரம் இல்ல. ஏன்னா பலன் நம்ம மட்டுமே பொருத்தது இல்ல. நேரம், இடம், நாம் செய்யற வேலைல பங்கு இருக்கிற மத்தவங்க எப்படி என்ன செய்யறாங்க இதெல்லாம் வருது இல்லையா?
நாம நல்லா படிச்சு பரீட்சை எழுதலாம். அதை திருத்தறவருக்கு அது சரியா போய் சேரனும். அவர் அப்ப நல்ல மூட்ல இருக்கனும். ஏதாவது பக்கத்தை பாக்காம விட்டுடக்கூடாது. மார்க் கூட்டி போடறது சரியா இருக்கனும். அத சரியா கணினில பதியனும். நம்ம மார்க் வந்து சேரத்துக்குள்ளே இப்படி எவ்ளோ விஷயம் இருக்கு?
எதுவுமே இப்படித்தான் இருக்கணும்ன்னு நினைக்கிறப்போதான் நமக்கு பிரச்சினை வருது. நடக்குமோ நடக்காதோன்னு தூக்கம் கெட்டு போகுது. நடக்கலேனா என்ன செய்யறதுன்னு ரொம்ப யோசனை செய்ய ஆரம்பிக்கிறோம். நினைச்சபடி நடக்கலைனா அதுக்கு தடையா இருந்தது எதுவோ, அது மேல கோபம் வருது. அதப்பத்தி ஒண்ணும் செய்ய முடியலைனா விரக்தி வருது.

நம்மால முடிஞ்ச வரை செஞ்சோம். அப்புறம் அவன் விட்ட வழின்னு யார் நினைக்கிறாங்களோ அவங்க அவ்வளவு கஷ்டப்பட மாட்டாங்க. மனசு அமைதியா இருப்பதாலே அவரால வேலையை நல்லாவே செய்ய முடியும்.
--
மூணாவது வரி

"செயல்பாட்டின் பயனுக்கு நீ காரணமா ஆகாதே."

இது எப்படி சாத்தியம்? முதல்ல செயலை பண்ணு. அதுக்கு அதிகாரம் இருக்கு. பலன் இப்படிதான் வேணும்ன்னு சொல்லாதே. பலன்ல அதிகாரம் உனக்கு இல்லைன்னாரே! இப்ப செயல்பாட்டோட பலனுக்கு காரணமாகாதேன்னா?? அப்ப பலனுக்கு நம்மதான் காரணம்ன்னு ஆயிடுமே? முரணில்லையா?

இல்லை. பலனுக்கும் ஓரளவு நாம்தானே காரணம். மேலே சொன்ன 5 காரணங்கள்ல ஜீவாத்மாவும் ஒண்ணுதானே?

உதாரணத்தால விளக்கலாம்.

அக்னி காரியம் பண்ணுகிறோம். பலனை கருதாம பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ன்னு சொல்லி செய்கிறோம். அப்படி செய்கிறபோது தானாக சில பலன்கள் விளையும். அக்னி காரியத்தின் பல பலன்களில் பணம் கிடைக்கிறது ஒண்ணு. இது நமக்கு வேணுமா இல்லையா ன்னு பாத்து, தேவை இல்லைனா வேற பலனை கூட ஈச்வரன் கொடுக்கலாம். அது ஒரு வேளை நமக்கு தெரியாமலே இருக்கலாம்; தேவைன்னு தோணாமலே இருக்கலாம். “எல்லாம் உனக்கு தெரியும்பா, நீயே கொடுக்கிரதை கொடு; இல்லை கொடுக்காட்டா கூட பரவாயில்லைன்னு நினச்சு யார் பலனை யோசிக்காம கர்மா செய்கிறானோ அவனுக்கு தேவையானதை ஈச்வரன் கொடுத்து எல்லாமே நல்லபடியா இருக்கும்.

ஆனா ஒரு வேளை ஒரு வேளை நாம் பணம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போட -சங்கல்பம் செய்தோ, செய்யாமலோ, எதிர்பார்ப்போடயோ செய்தா? பணம் கிடைச்சுடும். செய்கிற கர்மா சரியா செஞ்சா பலன் கிடைச்சே ஆகணுமே! ஆனா அதால நல்ல விளைவுகள் ஏற்படும்ன்னு சொல்ல முடியாது.

"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்த கூலி தரும்" இல்லையா?

இததான் பலனுக்கு காரணமாக ஆகிடாதேன்னு சொன்னது. இன்ன பலன் வேணும்ன்னு உத்தேசிக்கிறதாலேயே நாம் பலனை நிர்ணயம் செஞ்சிடறோம். அப்படி செய்யாதேன்னுதான் இங்கே சொன்னது.

இப்படி எல்லாம் கேட்டபிறகு நமக்கு தோணலாம். அட, பலன்ல உரிமை கிடையாதுன்னா வேலை பண்ணுவானேன்? இது பெரிய பிரச்சினையப்பா. பேசாம சும்மா கிடந்துடலாம். ஏன் வம்பு!

---

மதியம் புதன், அக்டோபர் 1, 2008

## கர்ம வழி-பொது 3

இப்படி எல்லாம் கேட்டபிறகு நமக்கு தோணலாம். அட, பலன்ல உரிமை கிடையாதுன்னா வேலை பண்ணுவானேன்? இது பெரிய பிரச்சினையப்பா. பேசாம சும்மா கிடந்துடலாம். ஏன் வம்பு!

அதுக்காகதான் பகவான் சொல்கிறான்:

> "உனக்கு செயலின்மையில் சம்பந்தம் ஏற்படக்கூடாது.”

உண்மைல செயலின்மையும் ஒரு செயல்தான். செய்ய வேண்டிய செயல்களை செய்யாவிட்டாலும் குற்றம்தானே? commision by omision என்பாங்களே அது போல.

இதுக்கு முன்னேயும் பின்னேயும் சொல்லி இருக்கிறதை கொஞ்சம் பாத்தா கர்மா பத்தி

இப்போதைய கான்டெக்ஸ்ட் இன்னும் புரியும்.

சுலோகம் 2: 39
சாங்கியத்தின் தன்மையின்மேற் புந்தித் தகவுரைதே
னீங்குகனம யோகத் தியல்பிவிதன் - பாங்கியம்மக்
கேளாயிப் புத்தியினைக் கிட்டவினைக் கட்டினைநீ
மூளாம னிற்றி முயன்று.

ஸாங்க்ய தத்துவத்தின் ஆய்வறிவை உனக்கு இதுகாறும் விளக்கினேன். பலன் விளைவுகளுக்காயன்றி ஒருவன் செயல்படும் யோகத்தைப் பற்றிய அறிவை இப்போது கேள். ப்ருதாவின் மகனே, இவ்வாறான அறிவோடு செயல்பட்டால், செயல்களின் விளைவெனும் விலங்கினின்றும் நீ விடுதலை பெறுவாய்.

**இதுக்கு முன்னாலே கொஞ்சம் ஆராய்சி அறிவைப்பத்தி சொன்னார். அறிவு கிடச்ச பிறகு செயல்கள் எப்படி இருக்கணும்னு சொல்லப்போகிறார்.

சுலோகம் 40
போகமிகு செல்வத்துப் பூண்டதன் னெஞ்சழித்தார்க்
கேக வகையுற்ற வெழிற்புந்தி - யோக
மமைவுறா துள்ளத்தி லாதலால் வேதச்
சமைவுதான் கேளாய் தரித்து.

இம்முயற்சியில் குறைவோ இழப்போ இல்லை. இவ்வழியில் சிறிது முன்னேற்றமும், மிகப் பயங்கரமான பயத்திலிருந்து ஒருவனைக் காக்கும்.

** இந்த உலக விஷயத்துக்கும் நல்லது. பரமார்த்திகமாயும் நல்லது. ஏதோ கொஞ்சம் வேலை செய்தாலும் அதுக்கான பலன் கிடைக்கும். “தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்த கூலி தரும்" இல்லையா? அப்படி வேலை செய்வதால் உலக ரீதியாகவாவது கொஞ்சம் பலன் கிடைச்சுடும். ராஜ யோகத்தைப்பத்தி இப்படி நினைச்சுகூட பாக்க முடியாது. சரியான வழிகாட்டி இல்லாம கொஞ்சம் தப்பா போனாலும் மோசமா பின் விளைவுகள் இருக்கும். ஞான யோகத்தைப்பத்தி கேக்கவே வேண்டாம். குழம்பிப்போய் இருக்கிற நம்பிக்கை/அறிவும் போயிடும்.

சுலோகம் 41
முக்குணத்தோர் பண்புரைக்கு மூண்டுமறை நீமன்னா
வக்குணத்து மன்னே லவாநெஞ்சா - யிக்குணத்தாற்
சாருதுய ரற்றெனேஉஞ் சத்துவத்தி னப்புறத்தி
லாருமியோ கக்கேகம மற்று.

இவ்வழியிலுள்ளோர் உறுதியான நோக்கமுடையோர். அவர்களது இலட்சியம் ஒன்றே. குருக்களின் செல்வனே, உறுதியற்றவரது அறிவோ பல கிளைகளை உடையதாக ஆகின்றது.

வழில உறுதியா இருக்கிறவங்கதான் ஆத்ம தரிசனம் மட்டுமே இலக்குன்னு இருப்பாங்க. மத்தவங்க வழிகள்ல இப்படி போலாமா அப்படி போலாமான்னு குழம்பிபோய் திசை திரும்பி போயிடலாம்.

கர்ம யோகம் ஆரம்பிச்சு கொஞ்ச நாள்ள மாறி சன்னியாசம்தான் உயர்ந்ததுன்னு சன்னியாசம் நோக்கி போய்; கொஞ்ச நாள்லே அட,சேவை பண்ணலாம் அதுதான் நல்லதுன்னு மாறி; பிறகு - அட, இதுவும் லௌகீகம்தானே- தியானம் பண்ணு, அட, இது கஷ்டம், நாம சங்கீர்த்தனம் செய்யலாம், இப்படி மாத்தி மாத்தி செஞ்சா?

அவரவர் குணத்தை பாத்து இதாண்டா உனக்கு, இதே செய்ன்னு ஒண்ணை கொடுத்துட்டா மனசு நிலைப்பட்டு ஒரே வழில போகும். அப்ப இதுல இருக்கிற லாபமோ நஷ்டமோ ஒரு வழி கிடைச்சுதுன்னு அதிலேயே நம்பி திடமா போய் இலக்கை அடைவான்.

இப்படி தேர்ந்தெடுக்கிற வழில திடமா இருக்கணும்.

---

மதியம் வியாழன், அக்டோபர் 2, 2008

கர்ம வழி பொது -4

சுலோகங்கள் 42-43

காமத்தை யுன்னிக் கணிசித்து மேலுலகைச்
சேமத்தை யிட்டுச் செனித்துழலு - மீமத்
தியற்றிதரும் போகத்தி லின்பத்தை நோக்கி
முயற்றியுட னேயெழுவர் மூண்டு.

சிற்றறிவுடைய மாந்தர் வேதங்களின் மலர்ச் சொற்களால் கவரப்படுகிறார்கள். இவ்வாக்கியங்கள் உயர் கிரகங்களுக்கு ஏற்றம் பெறுதல், நற் பிறவி அடைதல், அதிகாரமடைதல் முதலான பலன் கருதிச் செய்யும் செயல்களைச் சிபாரிசு செய்கின்றன. புலன் நுகர்ச்சியையும், செல்வமிகு வாழ்வையும் விரும்புபவர் இதைவிட உயர்ந்ததேதுமில்லை என்று கூறுகின்றனர்.
--
"ஞானிகள் அல்லாதவர்கள் மலர் போல கவர்ச்சியா இருக்கிற இந்த சின்ன விஷயங்களின் பலன்ல ஆசை வைக்கிறாங்க." இப்படி சின்னது / தாழ்ந்ததுன்னு சொன்னது என்ன? தாழ்ந்த பலன் கொடுப்பது எது? கண்ணன் எதை சொல்கிறான்?

யாக யக்ஞுங்களைதான் சொல்கிறான்.

வேதங்கள் பலர் நினைக்கிற மாதிரி வெறும் பிலாஸபி இல்லை. இந்த உலகத்துல நாம் சாதாரணமா வேண்டியது எல்லாம் கிடைக்க என்ன செய்யணும்னும் சொல்லி இருக்கு. அதெல்லாம் கர்ம காண்டம் என்பாங்க.

கிருஷ்ண யஜுர்வேதத்திலே மந்திர பாகங்களும் கர்மாவை விவரிக்கிற ப்ராம்ஹணம் என்கிற பாகங்களும் தனியாக இல்லாமல் கலந்தே இருக்கு. மற்றதில் அப்படி இல்லை. தனித்தனியாவே இருக்கு. யாக யக்ஞுங்களை விரிவா சொல்கிற கல்ப கிரந்தங்களுக்கு முக்கியத்துவம் வந்த பின் அதெல்லாம் மட்டுமே படிச்சு ப்ராம்ஹணத்தை படிக்கிற பழக்கம் விட்டுப்போச்சு. நாளாக ஆக அது வேதமே இல்லைன்னு தோண ஆரம்பிச்சது. உபநிஷத்துக்கள் வேதாந்தம் (வேத அந்தம்- கடைசி) ஆனதால பிராம்ஹணத்துக்கும் அப்புறம் வரதால இது வேதம் இல்லைன்னு தோணி போச்சு. (இப்ப தலை கீழா இருக்கு. வேதம்ன்னா உபநிஷத் தவிர மத்தது இருக்கிறது நிறைய பேருக்கு தெரியலை போல இருக்கு)

இதுக்காகதான் இங்க இப்படி க்ருஷ்ணன் சொல்கிறதுக்கு முக்கியத்துவம் வருது. வேதத்தில் கர்ம காண்டத்திலே சொல்கிறதை பாத்து மயங்கி அங்கேயே நிக்காதே. அத விட உசந்த விஷயம் வேதாந்த்தத்திலே இருக்கிறதை பாத்து அதிலே ஆசை வை.

மக்கள் போக விஷயங்கள் ஐச்வரியங்கள் எல்லாம் கிடைக்க கர்மங்களை செய்கிறாங்க. யாக யக்ஞுங்கள் பலமானவை. ஸ்வர்கம் கிடைக்க செய்கிற ஜோதிஷ்டோமம் போன்றவை; புத்திர காமேஷ்டி செய்தால் குழந்தை பிறக்கும்; சேணயாகம் செய்தால் விரோதி ஒழிந்து போவான்; வாயவ்ய யாகம் செய்தால் செல்வம் பெருகும். இதெல்லாம் சரிதான், ஆனா இதில எல்லாம் ஆசை வைக்காதே.

---

ஸ்வர்கம் கிடைச்சாலும் அனுபவிச்சுட்டு திருப்பி பிறந்துதான் ஆகணும். ஒரு விரோதி ஒழிஞ்சா இன்னொருத்தன் வருவான். செல்வம் வந்தாலும் அத அனுபவிக்க கொடுத்து வெச்சு இருக்கணும். அதே நேரம் வர மாதிரியே அது போகவும் போயிடும். அதனால இதெல்லாம் நிலையானதில்லே! நிலையான இன்பம் மோக்ஷம்தான்.

ஓட்டப்பந்தயம் நடக்கிறது. பலர் ஓடறாங்க. குறி என்ன? ஓடிப்போய் கடைசி எல்லை கோட்டை தாண்டணும். வழியில் நிறைய பேர் உற்சாகப்படுத்த கை தட்டுவர்; தண்ணீர் கொடுப்பர்; பழ ரசம் கொடுப்பர். இவர்களை பார்த்து கொண்டே "ஆஹா! இவ்வளோ பேர் நம்ம பாராடறாங்களேன்னு குஷில நின்னா ஓட்டம் பூர்த்தி ஆகாது. கடேசில ஜெயிக்காட்டா நம்மள கண்டுக்க கூட மாட்டாங்க. சிலர் கேலி கூட செய்யலாம். யார் இவர்கள் கைதட்டறதையும் கேலி செய்யறதையும் பொருட்படுத்தாமல் இறுதி கோட்டை அடைய ஓடறாங்களோ அவங்களே நினைச்சதை சாதிப்பாங்க.

---

மதியம் வெள்ளி, அக்டோபர் 3, 2008

கர்மா பொது 5

சுலோகம் 44

போகமிகு செல்வத்துப் பூண்டதன் னெஞ்சழிந்தார்க்
கேக வகையுற்ற வெழிற்புந்தி - யோக
மமைவுறா துள்ளத்தி லாதலால் வேதச்
சமைவுதான் கேளாய் தரித்து.

புலன்நுகர்வு, செல்வம் இவைகளை மிகவும் விரும்புவதால் மயங்கியவர்களின் மனங்களில், பரமப்பிரபுவின் பக்தித் தொண்டிற்கான நிலையான உறுதி உண்டாவதில்லை.

**
கண்ணன் சொல்கிறான்: வேதத்தை கத்துக்கொண்டு அதை பின் பற்றி செல்வம் சேர்க்கணும்; சுவர்க்கத்தை அடையணும்ன்னு நினைக்கிறாங்க. ஆனா அப்படி நீ நினைக்க தேவை இல்லை. சுவர்கத்தை அடைய செய்வது எல்லாம் காம்ய கர்மாக்கள். அதை மட்டுமே செய்கிறவங்களுக்கு மோட்சத்தில நாட்டம் வராது. உபநிஷத் சொல்கிற மோட்சத்துலதான் ஆசை இருக்கணும்.

அர்ஜுனனுக்கு சந்தேகம் வருது.
ஆயிரம் தாய் தந்தையர்களை விட அதிகமா வேதம் அன்பு காட்டுகிறதா சொல்கிறாங்க. அப்படிப்பட்ட வேதம் சொல்கிறதைதானே செய்யறேன்? வேதம் செய்யக்கூடாததை செய்யவா சொல்லும்? சாஸ்திரத்திலே சொன்னதை விடலாமா? வேதத்தில் சொன்னதை விடலாகாதே? வேதம் பொய் சொல்லாதே? அதை விடச்சொன்னா அது தப்பில்லையா?

சுலோகம் 45
முக்குணத்தோர் பண்புரைக்கு மூண்டுமறை நீமன்னா
வக்குணத்து மன்னே லவாநெஞ்சா - யிக்குணத்தாற்
சாருதுய ரற்றெனேஉஞ் சத்துவத்தி னப்புறத்தி
லாருமியோ கக்கேகம மற்று.

வேதங்கள் பொதுவாக மூன்று பௌதிக இயற்கைக் குணங்களைப் பற்றியவை. அர்ஜுனா! இவை மூன்றிற்கும் மேற்பட்டவனாவாயாக. எல்லா இரட்டைகளிலிருந்தும், அடைதல் காத்தல் இவைகளுக்கான கவலைகளிலிருந்தும் விடுபட்டுத் தன்னில் நிலை பெற்றிருப்பாயாக.

---

**கர்ம காண்டத்தில் முக்குண மயமான விஷயங்களைதான் சொல்லி இருக்கும். தமோ குணத்தினனுக்கு சண்டையிட யாகம். ரஜோ குணம் உள்ளவனுக்கு சொர்க்கம் கிடைக்க யாகங்கள். வேதம் ஒரு சிலருக்கு சொல்ல வரலையே? முக்குணங்கள் உள்ளவர்களுக்கும்தான். நீ சத்வமாக இருக்கணும். அதனாலே சிலதை செய்ய தேவை இல்லை என்கிறேன்.

ஒரு அம்மா. 3 குழந்தைகள். ஒத்தன் சாது பிள்ளை. ஒரு கோபக்கார பிள்ளை. ஒரு சோம்பலான பிள்ளை.

எல்லாருக்கும்தான் அவள் தாயார். பிள்ளைகளுக்கு தகுந்தபடிதானே புத்தி சொல்லுவாள்? சோம்பலான பிள்ளைக்கு வேறதான் சொல்லுவாள். மண்ணை தின்னாதே என்று சொல்லுவாள். சாது பிள்ளை கேக்கும். பிரச்சினை இல்லை. சோம்பலான பிள்ளைகிட்டே சொல்லும்போது அது கேட்காட்டா அப்போதைக்கு விட்டு விடுவாள். பின்னால வயித்து வலி வரும்போது "பாத்தியா அப்பவே மண் தின்னாதேன்னு சொன்னேன், கேக்கலை. இப்ப உனக்கு வயித்து வலி வந்துடுத்தே? என்பாள். அது போல அவரவருக்கு தகுந்ததைதான் செய்ய சொல்லுவாள்.

ஒருவர் சின்ன நோக்கத்தில் ஒரு விஷயத்தை ஆரம்பிக்கலாம். வேதத்தில் நம்பிக்கை இல்லைன்னு வெச்சுக்கலாம். இன்பம் வேண்டி ஒரு யாகம் செய்யறார். அது கிடைத்தபிறகு நம்பிக்கை வருது. அதுக்கும் மேலே ஒண்ணு தேடுரார். நேரடியா மோட்சத்தில ஆசை வராது. ஏதோ ஒண்ணை சொல்லிதான் நம்பிக்கை வருது. இதுக்கு மேலே கேக்கிறவருக்கு மோட்ச வழியை பகவான் காட்டுவார்.

இரட்டைகள் இன்ப- துன்பம், வெற்றி - தோல்வி இது மாதிரி. இந்த இரட்டைகளால பாதிக்கப்படக்கூடாது. இதைதான் துவந்தம் இன்மை என்பாங்க.

---

மதியம் திங்கள், அக்டோபர் 6, 2008

கர்ம வழி - 6 தொடர்ச்சி

முக்குணமில்லாமல் இருக்கணும். அதாவது ரஜோ தமோ குணங்களை தவிர்க்கணும். ரஜோ தமோ குணங்களை எப்படி நீக்கறது? இதை எல்லாம் கண்டு பிடிச்சு தொலைக்க முடியாது. பின்னே? சத்வ குணத்தை வளத்துக்கொண்டு போ. மத்தது கம்மியாயிடும்.

சத்வ குணத்தை வளர்ப்பது எப்படி? ஆத்ம சிந்தனையால் வரும். இதை தவிர ஏதும் வேண்டாம்ன்னு நினை. சுகமும் துக்கமும் வரத்தான் வரும். ஆனால் வந்தாலும் பாதிக்கக்கூடாது. கிடைப்பது/கிடைக்காதது,(யோகம்) நிலைப்பது/ நிலக்காதது (க்ஷேமம்) இதை எல்லாம் கண்டுக்காதே. ஆத்மா தவிர எதையும் கண்டு பிடிக்கவோ அனுபவிக்கவோ நினைக்காதே. இதுக்கு அடிப்படை ஆகார சுத்தி. (முன்னாலேயே பாத்தாச்சு இல்லையா?)

சுலோகம் 46
எங்கு நிறைநீ ரெழிற்றடத்து யாவர்க்கு
மிங்கு மருவுபய னென்னவா -மங்கனைத்து
வேதத்து மந்தணற்கு வேண்டுபய னவ்வளவாம்
போதத்துக் கீடாப் புணர்ந்து.

ஒரு சிறு கிணற்றால் பூர்த்தி செய்யப்படும் தேவைகளெல்லாமே, ஒரு பெரும் நீர்த்தேக்கத்தால் உடன் பூர்த்தி செய்யப்படும். அது போலவே, வேதங்களின் நோக்கங்களெல்லாம் அவைகளுக்குப் பின் உள்ள நோக்கங்களை அறிந்தவனால் அடையப்பெறும்.

எல்லா இடத்திலும் நீர் இருக்கும் நீர் நிலையில் இருப்பவன்கிட்டே என்ன பாத்திரம் இருக்கோ அது என்ன எவ்வளவு கொள்ள முடியுமோ அவ்வளவே எடுக்க முடியும். நமக்கு தேவையான

தண்ணி மட்டும் இல்லை. நிறையவே இருக்கு. அது போல வேதம் எல்லாருக்கும் சொல்லும். அவரவர்களுக்கு ஏற்புடையதை மட்டுமே எடுத்துக்கணும்.

இப்ப செய்யாதேன்னு சொல்வது இங்கே அர்ஜுனனுக்கு / அவனைப்போன்றவர்களுக்கு மட்டும்தான். அவன் மத்திய அதிகாரி. அதனால். சும்மா வெறும் ராஜ்யத்துக்காக சண்டை போடாதே. அது உன் கடமை என்கிறதாலே செய்.

ஆகவே ஆத்மாவில் நாட்டம் இருக்கிறவன் தேவையானதை மட்டுமே எடுத்துக்கணும்.

---

மதியம் செவ்வாய், அக்டோபர் 7, 2008

கர்ம வழி பொது -7

சுலோகம் 47

கருமத்தே யுன்ற னதிகாரங் கண்டாய்
வருமப் பயனிலணு மன்னா-தொருமித்து
மற்றதனுக் கேதுவா மன்னேல் கருமமலா
வெற்றமைவில் வேண்டா விருப்பு

> உனக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்ய மட்டுமே உனக்குப் பூரண உரிமை உண்டு. செயல்களின் பலன்களில் உனக்கு அதிகாரமில்லை. உனது செயல்களின் விளைவுகளுக்கு உன்னையே காரணமாகவும் எண்ணாதே. செயலற்ற நிலையிலும் விருப்பங் கொள்ளாதே.

இதைப்பத்தி ஏற்கெனெவே பாத்தாச்சு.

சுலோகம் 48

பேறிழவி லொத்தமைத்துப் பேணு நசைதுறந்து
தேறிவரும் யோகத்துச் சேர்ந்துநீ -யாறியமைந்
தித்தகைவி லாங்கரும மேந்தியநீ யோகந்தா
னெத்த லெனவுரைப்ப ரோர்ந்து.

> யோகத்தில் உறுதி கொள் அர்ஜுனா. வெற்றி தோல்வியின் பற்றைத் துறந்து கடமையைச் செய். இதுபோன்ற மன ஒருமையே யோகமென்றழைக்கப்படுகின்றது.

வெறும் ரிசுவலா இருக்கக்கூடாது. செயல் புத்தியுடன் தாழ்ந்த பலனில நாட்டம் இல்லாமல் மோட்சம் அடைய வேண்டுமென்ற நினைப்புடன் சமாக இருந்து செய்யணும். சுவர்க்கம் போன்ற பலனில் மனம் இல்லாமல், புத்தியிலே ஆன்ம நாட்டத்தை வை. பலத்துக்கு யார் காரணமாக நினைக்கிறானோ அவன் கிருபணன் -மீண்டும் மீண்டும் பிறப்பான்.

உத்தேச தியாகம், சமர்ப்பணம் கூட கர்ம யோகமாகாது. லாப நஷ்டங்கள்ல சம மனசோட செஞ்சாதான் அது கர்ம யோகமாகும். லாபம் வந்ததா சந்தோஷம், நஷ்டம் வந்ததா சந்தோஷம், இப்படி இருக்கிற நபர் முன்னேறிடுவான்.

உலக வாழ்க்கையில கூட திடம் நிச்சயம் வேணும். வியாபாரம் செய்யறேன்னு கடைய ஆரம்பிச்ச உடனே வேற வேலைக்கு போலாமா? அப்புறம் மேலே படிக்கலாமா ....இலக்கே நிர்ணயம் இல்லை.

கர்ம யோகம் ஆரம்பிச்சு கொஞ்ச நாள்ள மாறி சன்னியாசம் போகலாம்ன்னு யோசிச்சு போய்,

அப்புறம் மக்களுக்கு சேவை பண்ணலாம்ன்னு ஆரம்பிச்சு, அப்புறம் -அட இதுவும் லௌகீகம்தானே- தியானம் பண்ணு, அட! இது கஷ்டம், நாம சங்கீர்த்தனம் செய்யலாம்; இப்படி மாத்தி மாத்தி செஞ்சா?

அவரவர் குணத்தை பாத்து இதாண்டா உனக்கு, இதே செய்ன்னு ஒண்ணை கொடுத்துட்டா மனசு நிலைப்பட்டு ஒரே வழில போகும். அப்ப இதுல இருக்கிற லாபமோ நஷ்டமோ ஒரு வழி கிடைச்சுதுன்னு அதிலேயே நம்பி திடமா போய் இலக்கை அடைவான். உறுதியோட போவான்.

செய்கிற முறையிலே திடம் வேணும்.

---

மதியம் புதன், அக்டோபர் 8, 2008

கர்ம வழி பொது - 8

சுலோகம் 49

தக்கமரும் புத்தியோ கத்திற் றனஞ்சயனே
யக்கருமந் தூர வலங்கா- ணெக்கவரும்
புத்திக்கே நிற்கும் புகல்விருப்புப் புல்லியர்கா
ணத்தித்தே செய்யு மவர்.

> பக்தித் தொண்டால், பலன் நோக்குக் கருமங்களிலிருந்தெல்லாம் விடுபட்டு, பக்தி உணர்வுக்குப் பூரண சரணடையக் கடவையாக. தமது செயல்களின் பலனை அனுபவிக்க விரும்புபவர் கஞ்சர்களேயாவர்கள்.

சுலோகம் 50

இந்நிலையிற் புத்தியுட னேய்ந்தா ரிருமைவினை
தந்நிலையை யிங்கே தவிர்வர்கா -ணன்னிலையான்
மெய்கருதி யோகத்து மேவுதிநீ யோகங்காண்
செய்கருமத் தாகும் சிறப்பு.

> பக்தித் தொண்டில் ஈடுபட்டுள்ளவன், இந்த வாழ்விலேயே, நல்ல, தீய செயல்களின் விளைவுகளிலிருந்தும் தப்புகின்றான். எனவே எல்லாச் செயல்களின் செயற்கலையான யோகத்திற்காய்ப் பாடுபடுவாயாக, அர்ஜுனா.

ஒரு பணக்காரர் இருக்கிறார். அவரோட வீட்டிலே ஒரு பணிப்பெண் இருக்கிறாள். மாட மாளிகையிலும் கூட கோபுரங்களிலேயும்தான் புழங்குகிறாள். பட்டுத்துணிகளைதான் அந்த வீட்டு குழந்தைகளுக்கு போடுகிறாள். தினசரி விருந்துதான் சமைக்கிறாள். ஏசி கார்லதான் குழந்தைகளை பள்ளிக்கு கொண்டு விட்டுட்டு வருகிறாள். எதா இருந்தாலும் அவளுக்கு இது நிரந்தரம் இல்லைன்னு தெரியும். ஒரு நாள் இதை எல்லாம் விட்டுட்டு போகணும்ன்னு தெரியும். எப்ப வேணா எஜமானன் வீட்டுக்கு அனுப்பிடுவான்னு தெரியும். அதுக்கு அவ ரெடியாவே இருப்பா.

இது போலதான் சாதகன் இருக்கணும். எந்த மாதிரி சூழ்நிலையும் நிரந்தரம் இல்லை. ஒருநாள் பகவான் சட்டைய மாத்திக்கடான்னு சொன்னா மாத்திக்க ரெடியாதான் இருக்கணும்.

---

மதியம் வியாழன், அக்டோபர் 9, 2008

கர்ம வழி பொது - 9

சுலோகம் 51

தீர்ந்த மனத்துத் தெளிவுற்றார் செய்கருமத்
தார்ந்த பயனை யறத்துறந்து - சேர்ந்த
பிறப்பணையுங் கட்டவிழ்ந்து பெய்துயர் நோய் தீர்ந்த
சிறப்பணைவர் நன்மையினைச் சேர்ந்து.

சான்றோர், பக்தித் தொண்டில் ஈடுபட்டு, இறைவனிடம் அடைக்கலம் புகுந்து இகவுலகில் செயல்களின் பலன்களைத் துறப்பதால் ஜனன மரணச் சுழலிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்கின்றனர். இவ்விதமாக அவர்கள் துன்பங்களுக்கப்பாற்பட்ட நிலையை அடைய முடியும்.

சுலோகம் 52

எவ்வளவி னின்மோகத் திற்கலக்க மாமிதனை
யிவ்வகையே புந்தி யெழக்கடக்கு - மவ்வளவிற்
கேத மருவுதிநீ கேட்பதிலுங் கேட்டதிலு
மேத மிகும்பயனா மென்று.

மயக்கமெனும் இவ்வடர்ந்த காட்டை உன் அறிவு தாண்டிவிட்டால், இதுவரை கேட்டவை, இனிக் கேட்க வேண்டியவை இவற்றிற்கு, சமநிலையுடையவனாகி விடுவாய் நீ

யோகத்தின் லட்சணமே சம நிலைதான். பலன் சித்தித்தாலும் இல்லைனாலும் அது வீண் உழைப்பு இல்லை. சம புத்தி எப்படி வரும்? ராமரே பட்டாபிஷேகம் என்றால் தயாராகத்தானே இருந்தார்? சுமந்திரன் வந்து அப்பா கூப்பிடறார்ன்னு சொல்லும் போதும் அடடா இத்தனை பெரியவர் வந்து கூப்பிடராரேன்னு சந்தோஷமாவே போனாற். அங்கேயோ எதிர்பாராத செய்தி. காட்டுக்கு போகணும்ன்னு. இப்படி பட்ட நிலையிலே மூடன் அழுவான், மூர்க்கன் உதைம்பான். ராமர் என்ன சொன்னார்? தர்மமே பெரிசுன்னு கிளம்பிட்டார்.

அப்ப அவர் முகம் எப்படி இருந்ததுன்னு வால்மீகி சொல்றார். முகம் பிரசன்னமா இருந்ததாம். வெளியே பிரசன்னமா காட்டி உள்ளே புழுங்கிக் கொண்டு இருக்கலை. பின்னால பரதன் பொங்கி "என்ன இது" ன்னு கேட்டா, "இது சகஜம்- இயற்கைதானே" ன்னு சிரிச்சுண்டே சொல்றார். பகலும் இருட்டும் மாறி மாறி வரார்ப்போலே சுகம் துக்கம் மாறி மாறி வரது இயற்கைதானே. அதான் உலகத்தோட இயல்பு. இப்படி யார் கலங்காம இருப்பானோ அவனே சிறந்த கர்ம யோகி

.

இப்படி முக்கியமான ஸ்லோகங்களை பாத்தோம். அடுத்து கர்மயோகம் பத்தி கண்ணன் என்ன சொல்கிறான்னு பாக்கலாம். மூணாவது அத்தியாயம் கர்ம யோகம்.

---

மதியம் வியாழன், அக்டோபர் 23, 2008

கண்ணன் காட்டிய கர்ம வழி -1

மறந்திருக்க மாட்டேங்கன்னு நினைக்கிறேன். பகவத் கீதைல 2 ஆம் அத்தியாயத்திலே கண்னன் சில விஷயங்கள் சொன்னான். இப்ப 3 ஆவது அத்தியாயத்திலே மேலே கர்ம யோகத்தைப்பத்தி சொல்லப்போறான்.

முன்னாலே அர்ஜுனன் கேட்டான் ஏம்பா கர்ம யோகத்த விட ஞான யோகம்தானே உசந்தத்துன்னு சொன்னே? பின்ன ஏன் கோரமான யுத்தம் என்கிற கர்ம யோகத்தில ஈடுபடுன்னு எனக்கு சொன்னே?

39 -52 வரை கர்மயோகம் சொல்லி இப்படி கடைபிடிச்சா ஞான யோகம் வரும். அப்படி செஞ்சா ஆத்ம சாக்ஷாத்காரம் கிடைக்கும்ன்னு கண்ணன் சொன்னான். இது கீழ் தளத்திலேந்து பத்தாம் மாடிக்கு போனா அங்கேந்து 20 ஆம் மாடிக்கு போலாம் என்கிறது போல.
ஆனா அர்ஜுனன் கேட்கிறது ஏன் கீழ் தளத்துலேந்து 20 ஆம் மாடிக்கு நேரா போகக்கூடாது என்பது போல. அதுக்கு கண்ணன் பதில் சொல்கிறான். பல விதமாயும் மனிதர்கள் இருக்காங்க. அவங்க அவங்களுக்கு தகுந்தாப்போலதான் வழியும்.

அர்ஜுந உவாச |
ஜ்யாயஸீ சேத்கர்மணஸ்தே மதா புத்திர்ஜநார்தந |
தத்கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேஷவ || 3.1 ||
வ்யாமிஷ்ரேணேவ வாக்யேந புத்திம் மோஹயஸீவ மே |
ததேகம் வத நிஷ்சித்ய யேந ஷ்ரேயோ அஹமாப்நுயாம் || 3.2 ||

நாதா கருமத் தினன்றாகிற் புத்தியினை
யேதாக விக்கருமத் தேவுதி- சூதார்ந்த
வுன்னரையென் னுண்மயக்கு மொன்றுரையென் னன்றியெனத்
தன்னுரைசெய் தான்விசயன் றான்.

நாதா கருமத்தின் அன்றாகில் புத்தியினை
ஏதாக இக்கருமத்து ஏவுதி?- சூதார்ந்த
உன்னரை என்னுள் மயக்கும். ஒன்றுரையி என்னன்றி எனத்
தன்னுரை செய்தான் விசயன்தான்.

(அர்ஜுனன் சொன்னார்: " ஜனார்தன! கர்மத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது என்று உங்களால் கருதப்பட்டால் கேசவ! பின்னர் என்னை பயங்கரமான கர்மத்தில் ஏன் ஈடுபடுத்துகிறீர்கள்?
குழம்பிய போன்ற பேச்சினால் என் புத்தியைக் கலக்குகிறீர்கள் போலிருக்கிறதே! எதனால் நான் மேன்மையை அடைவேனோ அந்த ஒன்றைத் தீர்மானித்துக் கூறுங்கள்.)

சாங்கிய யோகத்திலே பகவான் முக்கியமா ஞான யோகத்தை சொன்னார். நடுவில கொஞ்சம் கர்ம யோகத்தை சொன்னார். ஞானியைப்பத்தியும் ஸ்திதப்ப்ரக்ஞன் என்று சொல்லும்போது ஞானியோட லக்ஷணங்களையும் சொன்னார். அதோட கர்மயோகம் மட்டம் என்று தொனிக்கிற மாதிரி வேற சொன்னார். அதனால அர்ஜுனன் கேட்கிறான்: கர்மங்கள் மட்டம்ன்னு சொல்லிட்டு ஏன் அதில போக சொல்லறே? நான் ஞானியா போகிறேன் என்கிறான் அர்ஜுனன். கோரமான கர்மவை வேற சொல்கிறானே! யுத்தம் செய், கொல்லு என்கிறான்.

கண்ணன் தெளிவாதான் சொல்கிறான். சும்மா கேட்கிறவனை கலக்கறத்துக்காக சொல்லலை. "தூரேண ஹ்யவரம் கர்ம புத்தியோகாத்" (ப.கீ 2:49) என்று சொன்னதுதான் கொஞ்சம் குழப்பும். ஞான யோகத்துக்கு கர்மா வெகு தூரம்ன்னு சொல்லிட்டான். அப்ப அதில ஏன் ஈடுபடச்சொல்றான்?

எந்த ஒரு கர்மாவை தூரம்ன்னு சொல்லி இருக்கு? பலனை கருதி செய்கிற கர்மாவைதான் அப்படி சொன்னது. சம புத்தியோட செய்கிற எல்லா கர்மாவுமே சரிதான். கர்ம யோகத்தையே தூரம்ன்னு சொல்லலை. ஸ்தித ப்ரக்ஞன் ஆவது ஞான யோகத்தாலேயும் முடியும், கர்ம யோகத்தாலேயும் முடியும்.

ஸ்ரீபகவாநுவாச |

லோகே அஸ்மிந் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயாநக |
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம் || 3.3 ||

அண்ணலவன் கேட்க வதனியல்க ளங்குரைத்தா
னெண்ணமருஞ் சாங்கியருக் கின்னறிவு- வண்ணநிகழ்
சீருடைய யோகிக்குச் செய்கரும மென்றிரண்டும்
பேருலகிற் சொன்னேன் பிரித்து.

அண்ணல் அவன் கேட்க அதன் இயல்கள் அங்கு உரைத்தான்
எண்ணம் அருஞ் சாங்கியருக்கு இன்னறிவு- வண்ண நிகழ்
சீருடைய யோகிக்குச் செய் கருமம் என்று இரண்டும்
பேருலகில் சொன்னேன் பிரித்து.

(ஸ்ரீ பகவான் கூறினார்: " பாவமற்றவனே! இவ்வுலகில் என்னால் இருவகைகள் கொண்ட நிஷ்டை முன்பே கூறப்பட்டன. அவற்றில் ஸாங்க்ய யோகிகளுக்கு நிஷ்ட ஞானயோகத்தினாலும் யோகிகளுக்கு நிஷ்ட கர்மயோகத்தினாலும் அமைகின்றன.)

அட, ஞான யோகத்தை பத்தி சொன்னா ஏன் குழப்பிக்கிற? இந்த உலகத்திலே எல்லாரும் ஒரே மாதிரியா இருக்காங்க? கர்ம யோகம் செய்யவும் ஞான யோகம் செய்யவும் இரண்டு வித தகுதி உள்ளவர்கள் இருக்கிறதால பிரிச்சு சொன்னேன்.

தத்வ விசாரம் செய்கிறவர்களுக்கு திட வைராக்கியம் உள்ளவர்களுக்கு (பற்றை விட்டவங்களுக்கு) ஞான யோகமும்; செயல் படுகிறவர்களுக்கு - பற்றை திடமா விடாதவங்களுக்கு -மந்த வைராக்கியம் உள்ளவர்களுக்கு- கர்ம யோகமும் சொன்னேன். இரண்டும் ஆத்ம சாக்ஷாத்காரம் என்கிற பலன் ஒண்ணிலேயேதான் கொண்டு விடும்.

அர்ஜுனன் இங்கே குழம்பிதானே இருக்கான். தன் கடமையான யுத்தத்தை செய்ய மாட்டேன் என்றுதானே வில்லை கீழே போட்டுட்டு உக்காந்து இருக்கான். அதனால இவன் கர்ம யோகத்துக்குதான் அதிகாரி. அதே மாதிரி நாமும் பற்று இல்லாம போய், அதுக்குன்னு ஒரு காலம் வர வரை ஞான யோகத்தை பத்தி ரொம்ப குழப்பிக்க வேணாம்.

கர்ம யோகம் செய்ய செய்ய சித்த சுத்தி - அதாங்க மனசு சுத்தமாகி- உலக விஷயங்கள்லே பற்று போகும். மனசு பகவானை பற்றி நிக்கும். இதானே வைராக்கியம்? அது வந்தாச்சுன்னா ஞான யோகத்திலே கொண்டு விடும். அதனால நாம் யார் என்கிற ஞானம் வந்துடும்.

---

மதியம் வெள்ளி, அக்டோபர் 24, 2008

கண்ணன் காட்டிய கர்ம யோகம் -2

ந கர்மணாமநாரம்பாந்நைஷ்கர்ம்யம் புருஷோ அஷ்நுதே ।
ந ச ஸம்ந்யஸநாதேவ ஸித்திம் ஸமதிகச்சதி ॥ 3.4 ॥

இட்டத்தாற்கன்மத் திழியார் வினையொழியார்
விட்டத்தாற் பேறதனை மேலடையார்- தொட்டொன்றைச்
செய்யா ரிறைப்பொ ழுதுநில்லார் செறிந்தியல்வர்
மெய்யார் குணத்தெவரு மிக்கு

இட்டத்தால் கன்மத்து இழியார் வினை ஒழியார்.
விட்டத்தால் பேறதனை மேல் அடையார்- தொட்டு ஒன்றைச்
செய்யார் இறைப் பொழுது நில்லார் செறிந்து இயல்வர்
மெய்யார் குணத்து எவரு மிக்கு

(மனிதன் கர்மங்களைச் செய்ய ஆரம்பிக்காமல் இருப்பதாலேயே நிஷ்கர்ம நிலையோ - கர்மயோக நிஷ்டையோ அடைவதில்ல. கர்மங்களைச் செய்யாமல் துறப்பதாலேயே ஸித்தியை அதாவது ஸாங்க்யயோக நிஷ்டையையும் பெறுவதில்லை.)

யாராவது "அட, ஏன்டா கர்ம யோகம் கஷ்டப்பட்டு செய்யணும்? கர்ம யோகம் செஞ்சு சித்த சுத்தி வந்துதான், ஞான யோகம் செஞ்சுதான் நாம யார்ன்னு புரிஞ்சுக்கணுமா? அப்ப நேரடியா ஞான யோகம் செய்யலாமே" ன்னு நினைச்சா,

கர்மாவை செய்யாமலே யாரும் அதிலிருந்து விடுபட முடியாது. அதெப்படி? அப்படின்னா கர்மாவை செஞ்சுண்டே விட முடியுமா என்ன? ஒரேயடியா விட்டாதானே அதை விடலாம்? அப்படியில்லை.

உடம்பு சரியில்லை. வைத்தியர்கிட்டே போறோம். மருந்து ஒண்ணு கொடுத்து "விடாம சாப்பிடு" என்கிறார். மருந்து சாப்பிட்டு கொண்டே இருக்கணும் என்கிறது அவரோட உத்தேசம் இல்லை. மருந்து சாப்பிட்டு கொண்டே இருந்தா அப்புறம் ஆரோக்கியம் வந்த பிறகு "போதும், மருந்து சாப்பிடாதே" ன்னு சொல்வார் வைத்தியர்.

ஆக அப்படிப்பட்ட காலம் வர வரை வேலைசெய்து கொண்டே இருக்கணும். கர்மாவை பலனை எதிர்பாக்காம செஞ்சு செஞ்சு அதில பலன் என்ன கிடைச்சாலும் சரின்னு ஏத்துண்டு போகிற மனப்பக்குவம் வந்தச்சுன்னா ஞான யோகத்துக்கு போகலாம். "கர்மண்யேவாதிகாரஸ்தே" ன்னு சொன்னவன் "சர்வ கர்மாண் பரித்யஜ்ய" என்று சொல்லும் நிலை வரட்டும்.

கர்மாக்களை விட்டு விட்டதாலேயே சித்தின்னும் இல்லை. பொறுப்பில்லாம தன் கர்மாக்களை விட்டுட்டு பயந்து ஓடறவன் ஞானியோ சித்தனோ ஆகிவிட முடியாது. வைணவப் பெரியார்களை பாத்தா குடும்பம் நடத்தி குழந்தைகள் பெற்று அவர்களுக்கு தேவையானதெல்லாம் செய்து முடித்து அப்புறமா சன்னியாசம் வாங்கிகொள்வர். ப்ரம்மசர்யத்திலேந்து நேரடியா சன்னியாசம் போகிறது ஒரு விதத்தில் நல்லது - முன்னேற்றம் சீக்கிரமா இருக்கும்னாலும்- அனுபவிக்காம விட்டதை பத்தி அப்பப்ப நினைவு வந்து மனசு கலைய வாய்ப்பு இருக்கவே இருக்கு. குறிப்பா இந்த கலி யுகத்திலே. சன்னியாசின்னு ஆரம்பிச்சு ஏதோ ஒரு மடம் போல அமைப்புன்னு போய் அங்கே விரும்பத்தகாத விஷயங்கள் எல்லாம் நடக்க ஆரம்பிக்கிறதை பாத்து கொண்டுதானே இருக்கோம்?

ஞான யோகம் போகணும்ன்னு ஆசை இருந்தா மட்டும் போதாது. அத செய்ய யோக்யதை- சக்தியும் வேணுமே?

> ந ஹி கஷ்சித்க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் ।
> கார்யதே ஹ்யவஷ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை: ॥ 3.5 ॥

> [வெண்பா முன்னதில் பின் பாகம் இதை சொல்லிவிட்டது]

(ஸந்தேஹமின்றி எந்த ஒருவனும் எக்காலத்திலும் ஒரு கணம்கூடச் செயல் புரியாமல் இருப்பதில்ல. ஏனெனில் மனித ஸமுதாயம் அனைத்தும் ப்ரக்ருதியிலிருந்து உண்டான குணங்களால் தன்வசமிழந்து வேறு வழியின்றிச் செயல் செய்யத் தூண்டப்படுகிறன.)

சும்மா இருக்கிறது என்கிறது சுலபமில்லை. பிறந்த குழந்தை கூட கை காலை உதைக்கிறதே? அதுக்கு என்ன தெரியும்? நாம் எல்லாருமே அறியாமலே பல விஷயங்களை செய்து கொண்டு இருக்கிறோம். இதயம் துடிக்கிறதுலேந்து, மூச்சு விடுகிறது போல பலது.

ஒரு கதை. ஒரு கோவில். புதுசா ஒரு மணியக்காரர் வந்தார். எல்லா விஷயங்களையும் ஒரு அலசல் செய்யணும்ன்னு பார்த்தார். கோவில்ல நடக்கிற ஒவ்வொரு காரியத்தையும் கவனித்தார்.

சுவாமிக்கு நைவேத்தியம் செஞ்ச பிறகு பிரசாத உருண்டை வினியோகத்தை பாத்தார். ஏதோ ஒரு நியமத்தில அதை எல்லாம் வினியோகிச்சாங்க. சும்மா கோவில் தூண்ல சாஞ்சு கொண்டு இருந்த ஒத்தனுக்கும் கொடுத்ததை பாத்தார். அப்புறமா அர்ச்சகரை கூப்பிட்டு "யார் அது? ஏன் கொடுத்தீங்க?" ன்னு கேட்டர். "அவர் ஒரு சாது. ரொம்ப நாளா கொடுத்து வரோம்'" ன்னு சொன்னாங்க. எதுக்கு தண்டமா இப்படி கொடுக்கிறீங்க, நிறுத்துங்கன்னு உத்திரவு போட்டார்.

அடுத்த நாள் சாதுவுக்கு உருண்டை கிடைக்கலே. என்ன விஷயம்ன்னு விசாரிச்சார். மணியக்காரர் "ஏன் சும்மா உக்காந்து இருக்கிறவனுக்கு பிரசாதம்? கொடுக்காதேன்னு உத்திரவு போட்டுட்டார்" ன்னு பதில் கிடைச்சது. "அப்படியா? அந்த மணியக்காரரை கூப்பிடு" ன்னார். மணியக்காரரும் வந்தார். "ஏம்பா, நீதான் சும்மா இருக்கிறவனுக்கு பிரசாதம் கொடுக்காதேன்னு சொன்னாயா?" ன்னு கேட்டர்." ஆமாம், அதுக்கு என்ன இப்போ?" "சரி, இங்க வா. இந்த தூண் பக்கத்திலே கொஞ்ச நேரம் அசையாம சும்மா உக்காரு" ன்னார். மணியக்காரரும் உக்காந்தார். நாலு ஐஞ்சு நிமிஷம் ஆச்சு. அவருக்கு இருப்பு கொள்ளலே. அசைய ஆரம்பிச்சார். "அட அசையறியே? நான் சும்மாதானே உக்கார சொன்னேன்?" திருப்பி முயற்சி பண்ண மணியக்காரருக்கு இது கஷ்டம்ன்னு புரிஞ்சு போச்சு. அர்ச்சகரை பாத்து "இனிமே இவருக்கு 2 உருண்டை கொடுங்க" ன்னு உத்திரவு போட்டார்.

அது மாதிரி யாராலேயும் ஒரு வேலையும் செய்யாம இருக்க முடியாது.

---

மதியம் திங்கள், அக்டோபர் 27, 2008

## கண்ணன் காட்டும் கர்ம வழி -3

> கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந் ।
> இந்த்ரியார்தாந்விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே ॥ 3.6 ॥

கரும கரணங்கள் காட்டித்தன் னெஞ்சில்
வருமப்பொருணினைந்து மன்னிப் - பெருமைவினைக்
கைம்மையினாற் பாவிக்குங் கள்ளக் கருத்துடையான்
பொய்ம்மையினா னென்றே புகல்.

கரும கரணங்கள் காட்டித் தன் நெஞ்சில்
வருமப் பொருள் நினைந்து மன்னிப் - பெருமை வினைக்
கைம்மையினால் பாவிக்குங் கள்ளக் கருத்துடையான்
பொய்ம்மையினான் என்றே புகல்.

(அறிவிலியான எவன் புலன்கள் அனத்தையும் வலுவில் - வெளித்தோற்றத்தில் அடக்கி விட்டு மனதினால் அந்தப் புலன்நுகர் பொருட்கள நினத்துக் கொண்டிருக்கிறானோ, அவன் பொய் நடத்தையுள்ளவன் - ஆஷாடபூதி எனக் கூறப்படுகிறான்.)

வாசனைகள மறையாமல் சம்சாரத்தை விட்டு விட்டு போனாலும் அது சன்னியாசம் ஆகாதே. துர் வாசனைகள் இவனை ஏமாத்தி வேறு மாதிரி திரும்பி வந்துடும். இது பொய் ஒழுக்கம் ஆகும். இந்திரியங்களால த்யாகம் பண்ணாலும் மனசால பண்ணலையே. இவனைவிட "ஆமாம் ஐயா, என்ன வேதாந்தம் கேட்டாலும் வைராக்கியம் வரலையே! இந்த கடமைகள் என்னை விட்டு போகாது போல இருக்கேன்" னு உண்மைய சொல்கிறவன் மேல்.

> யஸ்த்விந்த்ரியாணி மநஸா நியம்யாரபதே அர்ஜுந ।

கர்மேந்த்ரியை: கர்மயோகமஸக்த: ஸ விஷிஷ்யதே || 3.7 ||

நெஞ்சாற் புலனடக்கி நேர்கரும யோகத்தை
யெஞ்சா துழல்கரும விந்தியத்தாற் -றுஞ்சாது
தான்றொடங்கி நன்றியலுந்தன் மையுடன் றொத்தற்றான்
வான்றொடர்ந்த வண்புகழான் மற்று.

நெஞ்சால் புலன் அடக்கி நேர் கரும யோகத்தை
எஞ்சாது உழல் கருமவிந்தியத்தால் -துஞ்சாது
தான் தொடங்கி நன்றியலும் தன்மையுடன் தொத்து அற்றான்வான்
தொடர்ந்த வண் புகழான் மற்று.

(ஆனால் அர்ஜுன! எவனொருவன் மனதினால் புலன்களை வசப்படுத்திப் பற்றில்லாதவனாக எல்லாப் புலன்களாலும் கர்மயோகத்தைக் கடைப்பிடிக்கிறானோ அவனே சிறந்தவன்.)

நமக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை இருக்கு. அதை பயன்படுத்திக்கொண்டே நாம் ஆன்மீகத்திலே முன்னேற பார்க்கணும். ஒருத்தருக்கு கணக்கு ரொம்ப நல்லா வரலாம். இன்னொருத்தர் "கணக்கு, பிணக்கு, ஆமணக்கு" ன்னு சொல்லாம். இப்படி பிடித்த சமாசாரங்களும் திறமை இருக்கிற சமாசாரங்களும் ஆளுக்கு ஆள் வேறு படும்.

"மனசால யார் ஒருவன் புலன்களை நியமித்து" என்பதையும் கவனிக்கணும். அவை இழுக்கிற விஷயத்திலே நாம் போறது இல்லை. அப்படி செய்தா அது பற்றுல கொண்டுவிடும். இப்படி பற்று இல்லாம போனால் அது ஞான யோகத்துக்கு தகுதியை தரும். புலன்களை அடக்காம, மனசு பரிபக்குவம் இல்லாமல் சன்னியாசம் வாங்கிறதைவிட குடும்பத்தில இருந்து கொண்டே கர்மாவை செய்யலாம்.

இந்த பதிவுகளிலே சன்னியாசத்தை குறித்து சொல்கிற எதுவும் உள்நோக்கிலோ யாரையும் குறிப்பாக மனசில வைச்சுக்கொண்டோ சொல்லவில்லை. பொதுவாக நூல்களிலே சொல்லி இருக்கிறதையும், பெரியவர்கள் உபன்யாஸம் செய்ததையும், பல நாட்களாக கேள்விப்பட்ட தகவல்கள் அடிப்படையிலும்தான் எழுதி வருகிறேன்.
~~~~~~~~~~
அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

---

மதியம் புதன், அக்டோபர் 29, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -4

நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: |
ஷரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேதகர்மண: || 3.8 ||

நின்றுநீ செய்யு நியதக் கருமத்தை
யென்றுமிது மற்றறிவி லேற்றமுடைத்-துன்ற
னுடனடப்பு மோடா தொருகரும மற்றா
லடலடர்த்த தோளா யறி

நின்று நீ செய்யு(ம்) நியதக் கருமத்தை என்றும் இது மற்று அறிவில் ஏற்றமுடைத்து. உன்றன் உடல் நடப்பும் ஒடாது ஒரு கருமம் அற்றால்; அடல் அடர்த்த தோளா, அறி.

---
~~~~~~~~~~

(நீ சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட கர்மங்களை ஆற்றுவாயாக. ஏனெனில் கர்மங்கள் செய்யாமல் இருப்பதைக் காட்டிலும் கர்மங்களை ஆற்றுவது சிறந்தது. மேலும் கர்மம் செய்யாமல் இருப்பதால் உனக்கு உடலைப் பேணுவது கூட ஸாத்யமாகாது.)

கர்மாவையே நீ செய். இல்லைனா சரீர யாத்திரையே நடக்காது. எல்லாத்தையும் விட்டு ஞானம் சித்திச்சபின்தான் சரீர யாத்திரை பற்றி ஒத்தன் கவலை பட மாட்டான். ஞானம் வந்தவன் ஜடபரதர் போல ஒண்ணும் செய்யாம இருப்பான். சுகர் போன்ற ஞானிகள்தான் சாப்பாடு உடை இருக்க இடம் இதல்லாம் கிடைக்குதோ இல்லையோன்னு கவலை படாம இருப்பாங்க.

சன்னியாசிகள்ல ஞானியான சன்னியாசி, ஜிக்ஞாசுவான சன்னியாசி ன்னு இரண்டு உண்டு. (இதெல்லாம் விரிவா ஞான வழில பாப்போம்.)

ஞானம் சித்திச்சுதான் சன்னியாசம் என்று இல்லை. சன்னியாசத்தாலேதான் ஞானம்னும் இல்லை. யாருக்கு குடும்பத்தில் இருந்து கொண்டு ஞானம் தேடறது கஷ்டம்ன்னு தோணுதோ, திட வைராக்கியம் வந்தாச்சோ, சன்னியாச தர்மத்தை கடை பிடிக்க முடியும்ன்னு தன்னம்பிக்கை இருக்கோ அவன் குடும்பத்தை விட்டு விட்டு சன்னியாசம் வாங்கிக்கலாம். இது கஷ்டம் என்கிறதாலதான் சாஸ்திரங்கள்லே கலியுகத்திலே இதை செய்யாதேன்னு சொல்லி இருக்காங்க. குரு பரம்பரையை காப்பாத்தவும் உண்மையா வைராக்கியம் வந்தவங்களும் சிலர் சன்னியாசியா ஆகிறது சரிதான். மத்தவங்க சன்னியாசம் வாங்கிக்கிறது கொஞ்சம் பிரச்சினையானது. பெரும்பாலானவங்க வீட்டிலேயே இருந்து கொண்டேதான் ஞானம் பெற முயற்சி பண்ணணும்.

ஞானிகளை விட ஞானத்தை நோக்கி போகிறவர்கள்தானே -ஜிக்ஞாசு- நிறைய பேர்? இவர்களுக்கு சரீரத்தை காப்பாத்திக்க வேண்டி இருக்கிறதால சன்னியாசிங்களுக்கும் பிக்ஷை எடுத்து சாப்பிட கர்ம தர்மம் சொல்லி இருக்கு. பட்டினி கிடந்து சாகிறதால ஆத்ம சாக்ஷாத்காரம் கிடைக்காது. பசி இருக்கும் போது சாப்பிடாம இருந்தா அது ஆத்ம ஹத்தி தோஷம் ஆகும்.

இப்படி ஞானயோகிக்கும் கர்மம் முழுக்க விடறதில்லையே. மேலும் கர்ம யோகத்திலேயே அறிவும் ஞானமும் உண்டாச்சே!

மனைவி மக்களை விலக்கினாலும் சரீரமே ஒரு வீடா இருக்கு. ஞான கர்ம இந்திரியங்கள் எல்லாம் கூடவே வருதே! அது எல்லாம் மனசு மூலமா வெளியே வரத்தானே வரும்? அப்படி வரும்போது அவை கெட்ட சமாசாரங்கள்ள போகாம இருக்கணுமே! பசி தாகம் இருக்கவே இருக்குமே! அவை தங்களை கவனிக்க வேலை செய்ய தூண்டுமே!

ஞான யோகம் பழக்கம் இல்லாதது. கர்ம யோகம் சின்னதுலேந்து பழகியது.

ஞான யோகத்துக்கு பற்று இல்லாம இருக்கிறது துவக்கப்புள்ளி. அங்கேந்து மேலே முன்னேறலாம். ஆனா கர்ம யோகத்துக்கு அது கடைசி புள்ளி. கொஞ்சம் கொஞ்சம் பற்று இல்லாத நிலையிலேயே கர்ம யோகத்தை ஆரம்பிக்கலாம். அது சுலபமானதும் கூட. அனேகமா எல்லாரும் கொஞ்சம் முயற்சில கர்மாவை செய்துடலாம். இப்படி முயற்சி ஜெயிக்கிறதால மேல மேல தொடர்ந்து சாதனை செய்ய ஏதுவா இருக்கும். செயல்லேந்து நழுவுறது குறைவாவே இருக்கும்.

இப்படி எல்லாம் சொல்லி அர்ஜுனனை கர்மத்திலே ஈடுபாடு கொள்ள சொல்கிறான் கண்ணன்.

---

மதியம் வியாழன், அக்டோபர் 30, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி --5:

யஜ்ஞார்தாத்கர்மணோ அந்யத்ர லோகோ அயம் கர்மபந்தந: ।
ததர்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர ॥ 3.9 ॥

ஐவகைய வேள்வியினுக் காகாக் கருமங்கண்
மெய்வகையே கட்டு மிகவுலகை-யிவ்வகையா
யாங்கதனுக் காக வமைந்துன் னசையைவிடுத்
தீங்கிதனை நின்றே யியற்று.

ஐவகைய வேள்வியினுக்கு ஆகாக் கருமங்கள் மெய் வகையே கட்டும் இகவுலகை. இவ்வகையாய் ஆங்கு அதனுக்காக அமைந்து உன் ஆசையை விடுத்து ஈங்கு இதனை நின்றே இயற்று.

(யாகத்தின் பொருட்டுச் செய்யப்படுகின்ற கர்மம் தவிர வேறு செயல்களில் ஈடுபடுவதனாலேயே இம்மனித ஸமுதாயம் கர்மங்களால் பந்தப்படுகிறது. (ஆகையால்) அர்ஜுன! பற்றுதல் இல்லாமல் அந்த யாகத்தின் பொருட்டே கடைமையை நன்கு ஆற்றுவாயாக.)

கண்ணன் சொல்கிறான்: கர்மாவை விட்டதாலே மட்டும் லாபம் இல்லை. விட்டுவிடாததாலே மட்டும் அது தப்பும் இல்லை. கர்மாவோட பலனைதான் விடச்சொல்றேன்?

இங்கே யாகம் என்கிற சொல்லுக்கு கொஞ்சம் விரிவான அர்த்தமே எடுத்துக்கணும். பகவத் அர்ப்பணமா செய்கிற எல்லா கர்மாக்களையுமே அப்படி எடுத்துக்கலாம்.

கர்மா செஞ்சா அதோட பலன்- மேலும் விருப்பு, வெறுப்பு - மேலும் வேலை ன்னு ஒரு மாய சுழல்ல மாட்டிப்போமே என்பது கவலை. எதை செய்தால் அது நம்மை சம்சாரத்தில கட்டுப்படுத்தும், எதை செஞ்சா கட்டுப்பாடு செய்யாதுன்னு சரியாவே வரையரை செஞ்சு வெச்சு இருக்கான் பகவான். இததான் சாஸ்திரங்கள்ல சொல்லி இருக்கு. குடும்பத்தை நடத்த வேலை செய்வதும் அதுக்கான தேவையான வேலைகளை செய்வதும் க்ருஹஸ்த தர்மம். யார் யார் எந்த வேலை எப்படி எவ்வளவு செய்யணும்ன்னு விதிச்சாச்சு.

தேவ பூஜையா செஞ்ச எதுவும் ராகத்வேஷங்களை சம்பாதிச்சு கொடுக்காது. அப்படி இல்லாம சொல்லப்படாத ஏதேதோ வேலைகளை உன் பயனுக்காக செய்தால் அவை சம்சாரத்தில அழுத்தும்தான். உலகத்துக்கு நல்லதுன்னு செய்கிற எதுவும் அப்படி அழுத்தாது.

பயனை கருதாம ஆரம்பத்திலே இருப்போம்ன்னு இல்லை. முதல்ல ஏதோ ஒரு பயனை கருதிதான் செய்வோம். அப்புறமா முன்னேற முன்னேற பயன்கருதாம செய்வோம். அப்படி பயன்கருதாம செய்ய ஆரம்பிக்கிற போது கொஞ்சம் கொஞ்சமா விருப்பு வெறுப்பு போயிடும்.

---

மதியம் வெள்ளி, அக்டோபர் 31, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 6

தேவாந்பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: ।
பரஸ்பரம் பாவயந்த: ஷ்ரேய: பரமவாப்ஸ்யத ॥ 3.11 ॥

வேள்வியுடன் மானிடரை வேதாப் படைத்துமுனங்
கேள்வி யவர்க்குரைத்தான் கேண்மையுட-னூழ்வினையா
மித்தாலே துய்பய னுற்றிடுமி னுங்களுக்கிங்
கெத்தாலு மின் பளிக்கு மீது.

வேள்வியுடன் மானிடரை வேதாப் படைத்து முனம் கேள்வி அவர்க்கு உரைத்தான் கேண்மையுடன் ஊழ்வினையாம் இத்தாலே துய் பயன் உற்றிடும் உங்களுக்கு இங்கு எத்தாலும் இன்பளிக்கும் ஈது.

(இந்த வேள்வியினால் தேவதைகளை வளரச் செய்யுங்கள். அந்த தேவதைகள் உங்களை வளரச் செய்யட்டும், தன்னலம் கருதாத தன்மையுடன் ஒருவர் மற்றொருவரை வளரச் செய்த நீங்கள் மேலான நன்மையை அடைவீர்களாக.)

தேவதைகளுக்கு நாம் பூஜை செய்து உணவளிக்கிறோம். அவை மூலம் பகவான் நமக்கு வேண்டியதை தரான்.

இஷ்டாந்போகாந்ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞபாவிதா: |
தைர்தத்தாந ப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தேந ஏவ ஸ: || 3.12 ||

அன்னபெரு வேள்வியா லாங்கிறைஞ்சப் பட்டமார்
மன்ன பெரியவன மற்றளிப்ப - ரின்னே
யவர்தந்த போக மவர்க்களியா துண்பான்
கவர்கின்றான் கள்வனே காண்.

அன்ன பெரு வேள்வியால் ஆங்கு இறைஞ்சப் பட்டமார் மன்ன பெரியவன மற்று அளிப்பர். இன்னே அவர் தந்த போகம் அவர்க்கு அளியாது உண்பான் கவர்கின்றான். கள்வனே காண்.

(வேள்வியினால் வளர்ச்சியடைந்த தேவதைகள் உங்களுக்குக் கேட்காமலேயே விரும்பிய போகங்களை நிச்சயமாகக் கொடுப்பார்கள். இவ்விதம் அவர்களால் கொடுக்கப்பட்ட போகங்களை அவர்களுக்கு அர்ப்பணம் செய்யாமல் எவனொருவன் அனுபவிக்கிறானோ அவன் திருடனே.)

பார்க்கனும்னாலும் அக்னி உதவியாலதான் முடியும். மூச்சு விட்டாலும் வாயுவாலதான். தண்ணி குடிச்சாலும் அது வருணனாலதான். காலை வைத்து நடந்தாலும் அது பூமியாலதான். அன்னம் பூமியாலதான். மழை வேண்டும்னாலும் மேகங்களாலதான். இப்படி இந்த தேவைதைகளோட உதவி இல்லாம உலகத்திலே எந்த காரியமும் நடவாது.

இத்தனை உபகாரத்தை வாங்கிகிட்டு ஒரு நன்றிக்கடனா ஒரு சின்ன பூஜையை செய்யாட்டா என்ன பிரயோசனம்? ஆனா நாம் செய்கிற இந்த சின்ன கர்மாவாலதான் அவங்க ஜீவிச்சு இருக்க முடியும் என்கிறது இல்லை. அதுக்கு பகவான் இருக்கான்; பாத்துப்பான். கோவில்லே நாம ஒரு தீபம் போடறதாலேதான் ஈஸ்வரன்/ பெருமாள் நல்லா இருக்காரா? நாம் பூமாலை வாங்கி கொண்டு போய் போடறதாலேதான் நல்ல இருக்காரா? அப்படி ஒண்ணுமில்லே.

அந்த அந்த கோவில்கள்லே சரியா நடத்துகிற கர்மாக்கள் அந்த இடத்திலே நல்லா தெய்வ இருப்பை உண்டாக்கி அங்கே வர மனிதர்களுக்கு பயனாகும். இதிலே கோவில்ல இருக்கிற பகவானுக்கு ஆக வேண்டியது எதுவும் இல்லை.

ஒரே ஒரு சமித்தையோ ஒரே ஒரு ஸ்பூன் நெய்யையோ எவ்வளவு தேவதைகளை உத்தேசிச்சு ஹோமம் செய்கிறோம்? அதனால் அளவு என்கிறது அவ்வளவு முக்கியமில்லை. அந்த உத்தேசமேதான் தேவதைகளுக்கு சந்தோஷத்தை கொடுக்கிறதாம் - அப்படின்னு வித்யாரண்யர் சொல்கிறாராம். தேவதைகளை உத்தேசித்து செய்கிற இந்த த்ரவ்ய த்யாகமே நமக்கு தர்மம்.

தேவர்கள் கொடுக்கிறதை அவர்களுக்கும் பயனாகிறதா செய்யணும். ஹோமம் யாகம்ன்னு செய்ய முடியலைனாலும் உலக உபகாரமா அன்னதானம் மாதிரி செய்யணும். குறைந்த பட்சம் நாம் சாப்பிடும் போது அவனுக்கு அந்த உணவை அர்ப்பணம் செய்துவிட்டு சாப்பிடணும். யார் இப்படி நன்றி இல்லாம இருக்கானோ அவன் திருடன் அப்படின்னு கண்ணன் சொல்றான்.

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 7

யஜ்ஞஷிஷ்டாஷிந: ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை: |
புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத் || 3.13 ||

வேள்வியினின் மிக்கதனை யுண்பார் விடப்படுவ
ரூழ்வினைக ளின்றொடர்ச்சி யுண்ணின்றுங்-கேள்வியிலாத்
தன்னுடம்புக் காகச் சமைத்துண்பார் பாவத்தை
முன்னுடனே யுண்பார் முயன்று.

வேள்வியினின் மிக்கது அதனை உண்பார் ஊழ் வினைகளின் தொடர்ச்சி விடப்படுவர். உண்ணின்றும் கேள்வியிலாத் தன் உடம்புக்காக சமைத்து உண்பார் பாவத்தை முன் உடனே உண்பார் முயன்று.

(வேள்வியில் எஞ்சிய உணவை உண்கின்ற சான்றோர்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். ஆனால் எந்தப் பாவிகள் தம் உடலைப் பேணுவதற்காகவே உணவைச் சமைக்கிறார்களோ, அவர்கள் பாவத்தையே உண்கிறார்கள்.)

இந்த ஸ்லோகத்திலே கண்ணன் கொஞ்சம் ஓவரா போற மாதிரியே கூட தோணும்.

கணபதி ஹோமம் செய்கிறாங்க. மீதி இருக்கிற கொழுக்கட்டையை நமக்கு கொடுப்பாங்க. இஷ்டி பண்ணுகிறாங்க. புரோடாசம் என்கிற யக்ஞ மீதியை நமக்கு கொடுக்கிறாங்க. அது சாப்பிட ரொம்பவே உசந்தது.

பூஜை பண்ணுகிறோம். அவருக்கு சாத்தின ஒரு முழ பூவை எடுத்து நம்மகிட்டே கொடுக்கிறாங்க. கண்ணில ஒத்திகிட்டு அதை தலைல சூடிக்கிறாங்க. நிவேதனம் பண்ணி கேசரியை நம்மகிட்டே கொடுக்கிறாங்க. நாமும் பக்தியோட வாங்கி எல்லாருக்கும் விநியோகம் செய்துவிட்டு நாமும் சாப்பிடறோம். இப்படி எது நமக்கு கிடைத்தாலும் அதை முதல்ல பகவானுக்கு *கை காட்டிட்டு* (இந்த ப்ரேஸ் எனக்கு ரொம்ப பிடிச்சு போச்சு!வல்லி அக்காவுக்கு நன்னி.) நாம் எடுத்துக்கிறோம்.

நம்ம வீட்டில இருக்கிற தென்னை மரம் எவ்வளவு தேங்காய் நமக்கு கொடுத்தது? அதுக்கு என்னிக்காவது நன்னி சொல்லி இருக்கோமா? அவரை பந்தலுக்கு நன்னி சொன்னோமா? இப்படி எத்தனை நன்னி கெட்டவங்களா இருக்கோம்! சரி அதுகெல்லாம் நன்னி சொல்ல வேணாம். அதெல்லாத்தையுமே படைச்சு நமக்கு பயனாக்கின பகவானுக்காவது நன்னி சொல்லி சாப்பிடலாம்.

அந்நாத்பவந்தி பூதாநி பர்ஜந்யாதந்நஸம்பவ: |
யஜ்ஞாத்பவதி பர்ஜந்யோ யஜ்ஞ: கர்மஸமுத்பவ: || 3.14 ||

கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம் |
தஸ்மாத்ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம் || 3.15 ||

அன்னத்தாற் பூதங்க ளுண்டாகு மன்னந்தான்
மின்னத்தாழ் மாரியான் மிக்கியலு-மன்னத்தான்
மாரியது வேள்வியால் வந்தியலு மவ்வேள்வி
காரியம் தாலாகுங் காண்

இக்கருமங் காய மெனச்சேர் பிரமத்தா
மக்கருமஞ் சீவனா லாங்கதுவாஞ்-சிக்கெனவே

யெங்கு நிகழ்வுடலா மிப்பிரமம் வேள்வியிலே
தங்கு நிலையமருந் தான்.

அன்னத்தால் பூதங்கள் உண்டாகும். அன்னம்தான் மின்னத்தாழ் மாரியால் மிக்கு இயலும். அன்னத் தான் மாரி -அது வேள்வியால் வந்தியலும். அவ்வேள்வி காரியத்தால் ஆகும் காண் .

இக்கருமம் காயம் பிரமத்தால், அக்கருமம் சீவனால் ஆங்கு அதுவாம் எனச்சேர். சிக்கெனவே எங்கு நிகழ் உடலாம் இப்பிரமம் வேள்வியிலே தங்கும். ~~நிலைய மருந்தான். (??)~~ (யாராச்சும் சரியா பிரிச்சு சொல்லுங்கப்பா) ஜீவா:நிலை அமரும் தான்?

(உயிரினங்களனைத்தும் உணவிலிருந்து உண்டாகின்றன. மழையிலிருந்து உணவின் உற்பத்தி ஏற்படுகிறது. மழை வேள்வியிலிருந்து உண்டாகிறது. வேள்வி விதிக்கப்பட்ட கர்மங்களிலிருந்து உண்டாகிறது. கர்மங்களின் தொகுப்பு வேதத்தில் உண்டானவை. மேலும் வேதம் அழிவற்ற பரமாத்மாவிடம் தோன்றியவை என்று தெரிந்து கொள். ஆகவே எங்கும் நிறைந்த அழிவற்ற பரப்ரம்ம பரமாத்மா எப்பொழும் வேள்வியில் நிலை பெற்றிருக்கிறார் (என்பது இதிலிருந்தே தெரிகிறது).)

---

மதியம் செவ்வாய், நவம்பர் 4, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 8.

> யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மத்ருப்தஷ்ச மாநவ: |
> ஆத்மந்யேவ ச ஸம்துஷ்டஸ்தஸ்ய கார்யம் ந வித்யதே || 3.17 ||

தன் விரும்பித் தன்னுகந்து தன்னமைந்த ஞானிக்குப்
பின்விரும்பிச் செய்கருமம் பெற்றில்லை- முன்விரும்பிச்
செய்தத்தா லொன்றில்லை செய்யாத்தா தாலில்லை
வையத்தா தும்பயனின் மற்று.

தன் விரும்பித் தன் உகந்து தன் அமைந்த ஞானிக்கு பின் விரும்பி செய் கருமம் பெற்றில்லை. முன்விரும்பி செய்தத்தால் ஒன்றில்லை. செய்யாத்ததால் இல்லை. வையத்தால் ஏதும் பயன் இன் மற்று.

(ஆனால் எந்த மனிதன் ஆத்மாவிலேயே இன்புற்றிருப்பவனாகவும் மேலும் ஆத்மாவிலேயே த்ருப்தி கொண்டவனாகவும் ஆத்மாவிலேயே மகிழ்பவனாகவும் இருக்கிறானோ, அவனுக்குச் செய்ய வேண்டிய செயல் எதுவும் இல்லை.)

> நைவ தஸ்ய க்ருதேநார்தோ நாக்ருதேநேஹ கஷ்சந |
> ந சாஸ்ய ஸர்வபூதேஷு கஷ்சிதர்தவ்யபாஷ்ரய: || 3.18 ||

(அந்த மாமனிதன் இவ்வுலகில் கர்மங்களைச் செய்வதாலும் எந்தவிதமான பயனும் இல்ல. கர்மங்களைச் செய்யாவிட்டாலும் ஒரு பயனுமில்லை. அவ்வாறே உயிரினங்கள் அனைத்திலும் எதிலுமே அவனுக்குத் தனக்காக ஆக வேண்டிய என்ற தொடர்பு சிறிது கூட இல்ல.)

கர்மாவை செய்யணும் என்பதிலே சிலருக்குதான் எக்சப்ஷன் சொல்லி இருக்கு. யாருக்கு ஆத்ம தரிசனம் கிடச்சாச்சோ அவன் ஒண்ணுமே செய்ய வேண்டியது இல்லை. ஏன்? இதால எல்லாம் என்ன கிடைக்கணுமோ அதுதான் ஏற்கெனவே கிடைச்சாச்சே? வழிலே போய்கிட்டு இருகிறவங்களைதான் இப்படி போ, அப்படி போன்னு சொல்லலாம். போக வேண்டிய இடத்துக்கு போய்விட்டவனுக்கு அப்படி சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே?

ஆத்மாவையே கண்டு கேட்டு முகர்ந்து இருக்கிறவன் இவன். அவன் ஆத்மாவிலேயே ரமிக்கிறான்.

---

உதாரணமா சுக பிரம்ம ரிஷி இருந்தாரே. அவர் என்ன கர்மா செய்தார்? என்ன அனுஷ்டானம் செய்தார்? அவருக்கு அதெல்லாம் தேவை இல்லை.

அவர மாதிரி நானும் இருக்கேன்; ஒரு ஆசாரமும் அனுஷ்டானமும் வேண்டாம்ன்னு நாம் சொல்ல முடியாது. ஏன்?

கர்மா ஏதும் செய்யாத அதே சமயம் அவருக்கு சாப்பாடுன்னு ஒண்ணு கிடச்சாலும் சரி கிடைக்கலேனாலும் சரி, பிரச்சினை இல்லை. அப்படி ஒரு நிலைக்கு போய்விட்டவர். நாம் அப்படி இல்லையே? உலகத்திலே ஒண்ணு வேணும் என்கிற நிலை இருக்கிற வரை நமக்கான வேலையை செய்துதான் ஆகணும். இது நன்றி, தர்மம் என்கிறதுக்காக செய்யணும். பயனுக்காக இல்லை.

---

மதியம் வியாழன், நவம்பர் 6, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 10

கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய: |
லோகஸம்க்ரஹமேவாபி ஸம்பஷ்யந்கர்துமர்ஹஸி || 3.20 ||

முன்னஞ் சனகாதி யோகியரு மூண்டியன்ற
வன்ன கருமத்தா லானபயந் மன்னினர்கா
ணிந்த வுலக மிசைவகையும் பார்த்தியலா
யந்த வுயர்கரும மாய்ந்து.

முன்னம் சனகாதி யோகியரும் ஊண்டு இயன்ற வன்ன கருமத்தால் ஆன பயன் மன்னினர் காண். இந்த உலகம் இசை வகையும் பார்த்து இயலாய் அந்த உயர் கருமம் மாய்ந்து.

(ஜனகர் முதலிய ஞானிகளும் பற்றின்றிக் கர்மங்களைச் செய்ததன் மூலமே சிறந்த பேற்றை அடைந்தனர். அவ்விதமே உலகத்திற்கு வழிகாட்டுவது என்பதை நன்கு மனதில் கொண்டு நீயும் கர்மங்களைச் செய்வதுதான் உனக்கு உரிய செயலாகும்.)

பெரியவங்க இப்படி கர்மாவை செஞ்சே உயர்வடைஞ்சாங்கன்னு உதாரணம் காட்டறான் கண்ணன். இவர்களுக்கு கஷ்டமான ஞான வழிக்கு அதிகாரம் இருந்தும் கூட சுலபமான கர்ம வழில ஈடுபட்டு உயர்வடைஞ்சாங்க. ஜனகர் சும்மா ராமனுக்கு மாமனார் என்று இல்லை. மிதிலா அரசர்கள் எல்லாருக்குமே அப்படி பேர்தான். சீதையோட வளப்பு தந்தை ஒரு ஜனகர். அவரைதான் இங்கே சொல்கிறான் கண்ணன். அஸ்வபதி என்றும் ஒருவர்.

யத்யதாசரதி ஷ்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந: |
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்ததே || 3.21 ||

மேலொருவன் செய்த மிகுகருமந் தானெதுவென்
றேலுமதின் மற்றிங் கியல்சனமுஞ்-சாலவவன்
யாதைத்தன் னங்க மெனவியலும் மிவ்வுலக
மாதைப்பின் செல்லு மமர்ந்து.

மேலொருவன் செய்த மிகு கருமம்தான் எதுவென்றேலும் அதில் மற்று இங்கு இயல் சனமும் சால. அவன் யாதைத் தன் அங்கமென இயலும் இவ்வுலக மாதைப்பின் செல்லும் அமர்ந்து.

(உயர்ந்த மனிதன் எதை எதைச் செய்கிறானோ ஏனையோரும் அதை அதையே செய்வர். அவன் எதை ~~எடுத்து~~ நடந்துக்காட்டுகிறானோ மனித ஸமுதாயம் அனைத்தும் அதையே சான்றாக பின்பற்றி நடக்கிறனர்.)

நான் யாரோ ஊர் பேர் தெரியாத ஆசாமின்னு வெச்சுக்கலாம். அப்ப நான் என்ன செய்யறேன்

செய்யலை என்கிறது ரொம்ப ஒண்ணும் பிரச்சினை இல்லை. ஏன்னா பாதிக்கப்படுகிறது நான் மட்டும்தானே? இன்னும் மேலே போனா என் குடும்பம் பாதிக்கப்படலாம். அதுக்கு மேலே பாதிப்பு வரது எப்போதாவதுதான் நடக்கும்.
அதுவே நான் ஏதோ சமுதாயத்தில ஒரு ஸ்தானத்துல இருக்கேன், நல்ல பேர் வாங்கினவன், பலர் மதிப்பு வைத்து இருக்காங்க அப்படின்னு - சும்மா ஒரு பேச்சுக்குத்தான்- வெச்சுப்போம். அப்ப நான் செய்கிறதை பாத்து அவர்களும் அப்படியே செய்வாங்கன்னா, எதை செய்கிறேன் என்பதில நான் ஜாக்கிரதையா இருக்கணும். அவங்களால என்ன முடியுமோ அதைதான் நான் வெளிப்படையா செய்யணும். இல்லாட்டா அவங்களால முடியாத விஷயத்தை ஆரம்பிச்சு கஷ்டப்படுவார்கள். அதே போல எனக்கு ஆசார அனுஷ்டானம் இல்லைனா "அட, இவரே இப்படி ஆசார அனுஷ்டானம் இல்லாம இருக்காரே, நமக்கு என்ன?'' அப்படின்னு விட்டுடுவாங்க.

இந்த சமயத்திலே ஒரு விஷயத்தை பாக்கலாம். ஸ்ரீதர ஐயாவாளை நிறைய பேருக்கு தெரியும்.

சிராத்த தினத்திலே சண்டாளன் ஒத்தன் பசின்னு வர, இவர் பாட்டுக்கு சிராத்தத்துக்கு சமைச்சதை கொடுத்துட்டார். சிராத்தத்துக்கு வந்தவங்க இது மகா தப்புன்னு போயிட்டாங்க. இவரோ திருப்பி எல்லாத்தையும் தயார் பண்ணி சிராத்தத்துக்கு கூப்பிட்டா யாரும் வரத்தயாரா இல்லை. அதனால கூர்ச்சத்தை போட்டு மும்மூர்த்திகளையும் அழைச்சு வரிச்சு சிராத்தத்தை முடிச்சார். அதுக்கு அடுத்த சிராத்தத்துக்கு கூப்பிட்டப்பாதான் பிராமணர்கள் "வர முடியாது நீ பிராயச்சித்தம் செய்யணும்" ன்னு சொல்ல கங்கையை கிணத்திலே வர வெச்சது நடந்தது.

http://us.geocities.com/sri_ayyaval/history/sridhara6.htm

இதை மேற்கோள் காட்டி சிலர் விதண்டாவாதம் செய்யலாம். அவரே சிராத்த சமையலை சண்டாளனுக்கு கொடுத்தாரே நாம மத்தவங்களுக்கு கொடுத்தா என்ன? தாராளமா கொடேன்! அவரால மும்மூர்த்திகளை அழைச்சு சிராத்தம் செய்ய முடிஞ்சதே, கங்கையை கிணத்திலே வரவழைக்க முடிஞ்சதே - அப்படி உன்னால முடியுமானா நீயும் அவர மாதிரி செய்யலாம்.

இந்த மாதிரி வாதம் வரக்கூடாது என்கிறதாலதான் மத்தவங்க உன்னை பாத்து மாறுவாங்களா, அப்படின்னா என்ன செய்கிறாய் என்பதில ரொம்பவே கவனமா இரு என்கிறது.

அதனால உன்னை பாத்து பலர் கடைபிடிப்பாங்கன்னா அவ்வங்களுக்கு பொருத்தமா இருக்கிற கர்ம யோகத்தையே செய் என்கிறான் கண்ணன்.

இதிலே கவனிக்க வேண்டியது ஒரு சமாசாரம் இருக்கு. கண்ணன் எதை கடைபிடிக்கிறாங்களோன்னு சொன்னான்னே தவிர எதை சொல்கிறாங்களோன்னு சொல்லலை. உதாரணமா நடந்து காட்டுகிறது ஆயிரம் முறை சொல்கிறதைவிட நல்லது.

---

மதியம் வெள்ளி, நவம்பர் 7, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 11

> ந மே பார்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிம்சந । நாநவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி॥ 3.22 ॥

மூவுலகுந் தன்னுள்ளு முன்பெய்த தாய்ப்பின்பு மேவுமியல் பாலெய்த வேண்டுவதொன் - றாவதெனக் கில்லையா யேயிருக்க வெல்லாக்கருமத்து மொல்லையா னின்றியல்ல னோர்ந்து.

மூவுலகும் தன் உள்ளுமுன் பெய்ததாய், பின்பும் ஏவும் இயல்பால் எய்த வேண்டுவதொன்று ஆவது எனக்கில்லையாயே இருக்க, எல்லாக் கருமத்தும் ஒல்லை யான் இன்றி அல்லன் ஓர்ந்து.

(அர்ஜுன! எனக்கு மூவுலகங்களிலும் செய்ய வேண்டிய கடமை ஒன்றுமில்லை. அடைய

வேண்டிய எதுவும் அடையப்படாமலுமில்லை. ஆயினுங்கூட நான் கர்மத்திலேயேதான் ஈடுபட்டுள்ளேன்.)

யதி ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித:। மம வர்த்மாநுவர்தந்தே மநுஷ்யா: பார்த ஸர்வஷ:॥ 3.23 ॥ உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம்। ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா:॥ 3.24 ॥

யானியலாதிங் கொழியி லென்வழியைப் பின்செல்வர் மானிடர்மற் றிவ்வுலக மாயுமாற்-றானிலைசேர் நன்மரபு தான்கலக்கிநானே யிவர்தம்மைப் புன்மையினி லுய்தேனாய்ப் போம்.

யான் இயலாது இங்கு ஒழியில், என் வழியைப் பின்செல்வர் மானிடர். மற்று இவ்வுலக மாயுமால் தானிலை சேர் நன்மரபுதான் கலக்கி, நானே இவர் தம்மைப் புன்மையினில் உய்தேனாய்ப் போம்.

(நான் கர்மங்களைச் செய்யாமல்விட்டால் இம்மனிதர்கள் அனவரும் சீர்குலைந்து போவார்கள். மேலும் நான் சீர்குலைவு செய்கிறவனாகவும் இம்மாந்தர் அனைவரையும் அழிப்பவனாகவும் ஆவேன். ஏனெனில் பார்த்த! ஒருகால் நான் கவனத்துடன் கர்மங்களில் ஈடுபடாமல் இருந்தால் பெரிய தீங்கு விளயும். ஏனெனில் மனிதர்கள் எல்லாவிதங்களிலும் என்னுடைய வழியையே பின்பற்றுகிறார்கள்.)

சாதாரணமா முன் காலத்து உதாரணங்களைவிட தற்கால உதாரணம் நல்லா எடுபடும். அதுக்காக கண்ணன் அந்த நிகழ் காலத்து உதாரணத்தையே சொல்கிறான். ஜனகாதின்னு ஏன் யாரையோ சொல்லணும். என்னையே பாரேன். நான் எந்த கர்மாவ பண்ணி எனக்கு என்ன ஆகப்போறது?

நாரதரே சாட்சி. வீடு வீடா போய் பார்த்தார். 10108 மனைவிகள். எப்படி ஒருத்தன் சரியா அத்தனை குடும்பங்கள் நடத்த முடியும்? மெதுவா போய் எட்டிப்பார்த்தார். ஒரு வீட்டிலே குளிச்சுகொண்டு இருக்கான். அடுத்த வீட்டிலே பாத்தா அங்க ஒரு கண்ணன் சந்தியாவந்தனம் செய்கிறான். அடுத்த வீட்டிலே எட்டிப்பாத்தா பூஜை செய்கிறான். அடுத்த வீட்டுக்கு போனா வரவேத்து அதிதி உபசாரம் செய்கிறான். அடுத்த வீடு போனா அங்கேயும் ஒரு கண்ணன் வரவேற்கறான். இப்பதானே பாத்தேன்னு சொல்லலை! இப்படி ஒவ்வொரு வீட்டிலேயும் சரியா க்ஹஸ்த தர்மத்தை அனுசரிக்கிறானாம். இப்படி பாகவதம் சொல்கிறது.

சட்ட திட்டங்கள் எல்லாம் பகவானுக்கும் அப்ளை ஆகுமா? அதையெல்லாம் உருவாக்ினவனே அவன்தானே? அவன் எதை செய்கிறானோ அதுவே சரியா இருக்கும். நல்லதாவே இருக்கும். அவனுக்கு மேலே அப்பீலே இல்லையே? இருந்தாலும் அவன் இந்த சட்ட திட்டங்களை மீறுகிறது இல்லை. அவனே மதிக்கலைனா மத்தவங்க எப்படி மதிப்பாங்க? அதனாலதான் - ஹிரண்யனை கொல்லனுமா? சரி, அவன் பிரம்மாகிட்ட வாங்கி இருக்கிற வரங்களுக்கு உட்பட்டே அவனை கொல்கிறான்.

அவன் கீதையை சொல்லனும், அர்ஜுனனை தூண்டி போர் செய்யணும்; அவதாரம் எடுத்த வேலையான பூமி பாரத்தை குறைக்கிறதை செய்ய அவன் இவ்வளோ கஷ்டப்பட வேண்டாமே! நினைச்ச மாத்திரத்திலேயே செஞ்சுடலாமே? ஆனா அவன் அப்படி செய்யலே. மத்தவங்க மாதிரியே செயல் பட்டுதான் வேலையை முடிக்கிறான். தன்னை பின்பற்றுகிறவங்க இருக்காங்கன்னா எப்படி நடந்துக்கணும் என்கிறதுக்கு கண்ணனே நல்ல உதாரணம்.

இதுக்கு லோக சங்கிரஹம் என்கிறாங்க.

---

மதியம் திங்கள், நவம்பர் 10, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 12

இந்த பதிவை ஆரம்பிச்சபோது தமிழ்லேந்து ஏதாவது கோட் பண்ணனும்னு தோணி பகவத் கீதை வெண்பான்னு சமீபத்திலே பாத்து போட்டோ எடுத்ததை போட ஆரம்பிச்சேன். அப்புறம் பாத்த அது கடின தமிழ்லே இருந்தது மட்டும் இல்லாம வார்த்தைகளை முன்பின் மாத்தினாதான் அர்த்தம் புரியும்ன்னு இருக்கிறது தெரியவந்தது. முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மாதிரி எல்லத்தையும் தட்டச்சி பிரிச்சு - அப்பவும் திருப்தி ஏற்படாம ஒரு குழு அறிஞர்கிட்டே கொடுத்து திருத்தி வாங்கி...ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் அப்பாடா!

உதவி செய்தவர் ரொம்ப சுலபமா ஒரு வாக்கியம் சொன்னார். "அப்பா, பகவத் கீதை பத்தி எழுதறதானா என் இப்படி கடும் தமிழ் வெண்பாவை எழுதறாய்? எல்லாருக்கும் புரியறமாதிரி மொழில எழுதேன்?"

சரிதானே! அனேகமா எல்லாரும் (ஜீவாவை தவிர) அதை விட்டுட்டு அடுத்த பாரவை படிச்சு இருப்பீங்கன்னு தோணுது! அதனால ஸ்ரீ அழகிய மணவாள ஜீயருக்கு ஒரு நமஸ்காரம் பண்ணி அனுப்பிட்டு,
வாங்க முத்து ஐயர், கொஞ்சம் புரியற மாதிரி வெண்பா சொல்லுங்க.
அட எனக்கே புரியுதே!

ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத ।
குர்யாத்வித்வாம்ஸ்ததா அஸக்தஷ்சிகீர்ஷுர்லோகஸம்க்ரஹம் ॥ 3.25 ॥

ஆசையினாற் பாமரர்கள் ஆற்றுதல்போல ஆர்பயனில்
ஆசைதனை கைவிட் டறிவுடையோர்- ஆசகலும்
கன்மங்க ளைப்புவியின் நன்மை கருதினராய்த்
தின்மையறச் செய்தல்கடன் தேர்.

ஆசையினாற் பாமரர்கள் ஆற்றுதல் போல ஆர்பயனில் ஆசைதனை கைவிட்டு அறிவுடையோர்- ஆசகலும் கன்மங்களைப் புவியின் நன்மை கருதினராய்த் தின்மையறச் செய்தல் கடன் தேர்.

(பரதகுலத் தோன்றலே! கர்மங்களில் பற்றுக் கொண்ட அஞ்ஞானிகள் எவ்விதம் கர்மங்களைச் செய்கிறார்களோ பற்றில்லாத தத்வஞானியும் உலகத்திற்கு வழிகாட்டுதலைச் செய்ய விரும்பி அவ்விதமே கர்மங்கள் செய்யவேண்டும்.)

கிராமங்கள்லே நெல் உலர்த்துவது வழக்கம். ஒரு கிராமத்திலே ஒத்தர் அந்த மாதிரி உலர்த்தி இருந்தார். அப்ப ஒரு அதிதி வந்தார். அவரை சந்தோஷமா வரவேத்து உபசாரம் பண்ணி கொஞ்ச நேரத்திலே உணவு தயாராயிடும் சாப்பிட்டு போகலாம். நான் போய் வாழை இலை வாங்கி வரேன்னு சொல்லிட்டு போகிறார். அப்ப நெல்லை ஒரு மாடு வந்து மேயறது. அதிதி அதை பாத்துட்டு விரட்டறார். இதுல அப்படி செய்யறது ஒரு பற்று இல்லாம அது நம்ம கடமை ன்னு நினைக்கறாதாலதான். கிருஹஸ்தர் விரட்டினா நம்ம நெல்லுன்னு ஒரு அபிமானம். காரியம் என்னவோ நடந்தது. ஆனா ரெண்டு பேர் மனப்பான்மையும் வித்தியாசம். ஒத்தருக்கு அது கடமை. ஒத்தருக்கு அது அபிமானம். இப்படியே ஞானியா இருந்தாலும் பற்று இல்லாம கடமை என்கிறதுக்காக செய்யணும்.

ந புத்திபேதம் ஜநயேதஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் ।
ஜோஷயேத்ஸர்வகர்மாணி வித்வாந்யுக்த: ஸமாசரந் ॥ 3.26 ॥

ஆசையினாற் கன்மஞ்செய் அஞ்ஞானி யர்க்குளத்திற்
பேசுமொரு பேதம் பிறப்பித்தல்- மாசதனால்
நல்லறிஞன் செய்கருமம் நாள்தோறும் தான் செய்து
மல்லலுறச் செய்வித்தல் மாண்பு.

ஆசையினால் கன்மஞ் செய் அஞ்ஞானியர்க்கு உளத்தில் பேசும் ஒரு பேதம் பிறப்பித்தல் மாசதனால் நல் அறிஞன் செய் கருமம் நாள் தோறும் தான் செய்தும் அல்லலுறச் செய்வித்தல் மாண்பு.

(பரமாத்ம ஸ்வரூபத்தில் நிலைத்து நிற்கின்ற ஞானி சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைப் பற்றோடு செய்யும் அஞ்ஞானிகளின் புத்தியில் குழப்பத்தை அதாவது கர்மங்களையாற்றுவதில் ச்ரத்தையின்மையை உண்டாக்கக் கூடாது. மாறாகத் தானும் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செவ்வனே ஆற்றி அவர்களையும் செய்யச் செய்யவேண்டும்.)

தத்வ ஞானிக்கு ஒரு வேலையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லைதான். ஆனாலும் அவன் காட்டிலே தனியா இல்லாம சமுதாயத்திலேயே இருந்தா தகுந்த கர்மாவை செய்யணும். தீபாவளி வரதா? தன் பங்கா மக்களை வாழ்த்தி சில நல்ல விஷயங்களை சொல்லி கடை பிடிக்க சொல்ல வேண்டும்.

ரமணர்கிட்டே ஒத்தர் வந்து "நான் தினசரி ஜபம் செய்யறேன்" என்பார். அவரும் "ஆஹா! ரொம்ப நல்லது. அப்படியே செய்" என்பார். இன்னொருத்தர் வந்து "நான் தினசரி சிவ பூஜை செய்யறேன்" என்பார். ரமணரும் "ஆகா, ரொம்ப நல்ல காரியம். அப்படியே செய்" என்பார். இப்படி மகா பெரியா ஞானியா இருந்தவர் கூட சாதாரண ஜனங்களை போலவே அவங்களோட பழகி அவரவர் அவங்களோட வழில முன்னேற தூண்டினார்.

எப்பேர்பட்ட ஞானியானாலும் நல்லது கெட்டது என்பதை எல்லாம் வேறுபடுத்தி பார்த்து ஜனங்களை நல்ல சமாசாரத்திலே தூண்டணும். அப்படி இல்லாம "நல்லதா? கெட்டதா? அதெல்லாம் மாயை!'' ன்னு சொல்லக்கூடாது.

இது மற்றவர்களுக்காக. தான் தன் ஆத்ம முன்னேற்றத்துக்கு என்ன செய்யணுமோ அதை செய்து கொண்டேதான் இருக்கணும். அப்ப ரெண்டு வேலையாச்சேன்னா, ஆமாம், அதனாலதான் இப்படி செய்ய முடியாதுன்னா சமுதாயத்திலேந்து விலகியே தன் ஆத்ம முன்னேற்றத்தை கவனிக்கணும்.

முழுக்க ஞானம் வராம அந்த பாதையிலே பயணிக்கிறவங்களுக்கும் கர்மா முழுக்க விடாது. ஆகையால் அதை செஞ்சு கொண்டேதான் ஞானத்தை தேடணும்.

கர்மாவை செய்து முன்னேறிடலாம்ன்னு நினைக்கிற சாதாரண மக்களை "இல்லை, ஞானம் இல்லாமல் ஆத்ம தரிசனம் கிடைக்காதுன்னு ஏதாவது சொல்லி குழப்பக்கூடாது.'' மாறாக ஞானிகள் கொஞ்சம் கூட குறையாத உற்சாகத்தோட வேலை செய்து காண்பிப்பாங்க. எப்படி?

ஞானியா ஆனதால பலன்ல ஆசை இருக்காது என்பதால குறையாத உற்சாகத்தோட செய்து காண்பிக்க முடியும்.

சிலர் கல்யாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்திக்கொண்டு இருக்கிறப்ப திடீர்ன்னு ஆன்மிகத்திலே நாட்டம் வந்து அதிலே சன்னியாச ஈர்ப்பு வந்து "குடும்பம் எப்படியோ போகட்டும். சம்பாதிச்சு போட்டுட்டா அதோட என் கடன் முடிஞ்சது. ஆள விடுங்க, நான் ஜபம், தவம்ன்னு செய்யணும்" என்று பொறுப்ப விட்டுடக்கூடாது.

குடும்பம் இரட்டை மாட்டு வண்டியானதாலே தானும் இழுக்கிற வேலையை செய்தே ஆகணும். வேலையை செய்து கொண்டேதான் ஞானத்தையும் தேடணும். சன்னியாசம் மனசிலேதான் முக்கியமா இருக்கு. குடும்ப பாரத்தை இழுத்துக்கொண்டே மனசில சன்னியாசத்தோட இருக்கிறதுல முரண்பாடு இல்லை

---

மதியம் செவ்வாய், நவம்பர் 11, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 13

ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வஷ: |
அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே || 3.27 ||

எண்ணும் பகுதிக் குணங்களினால் எவ்வகையும்
பண்ணும் கருமத்தைப் பாவிப்பன் -நண்ணும்
அகங்காரத் தால்மனதில் ஆர்மயக்கங் கொண்டோன்
மகிழ்ந்திதுநான் செய்வன் என மற்று.

எண்ணும் பகுதிக் குணங்களினால் எவ்வகையும் பண்ணும் கருமத்தைப் பாவிப்பன் -நண்ணும் அகங்காரத்தால் மனதில் ஆர்மயக்கங் கொண்டோன் மகிழ்ந்து இது நான் செய்வன் என மற்று.

(எல்லாச் செயல்களும் எல்லா விதங்களிலும் ப்ரக்ருதியின் குணங்களால் செய்யப்படுகின்றன. ஆயினும் அஹங்காரத்தால் மழுங்கிய அறிவை உடைய அஞ்ஞானி நான் கர்த்தா என்று நினத்துக் கொள்கிறான்.)

நம்ம வாழ்க்கையிலே இயற்கையா பல விஷயங்கள் நடக்குது.. கண் தானா பாக்கும், காது தானா கேட்கும். அரிச்சா தானா சொறிஞ்சுக்கிறோம். இதுல எல்லாம் செய்யணும்ன்னு ஒரு சங்கல்பம் -நினைப்பு- தேவை இல்லை. நாமோ ஓடுகிற ஒரு ரயில் வண்டிலே சும்மா உட்கார்ந்தபடி இருக்கலாம். போல இந்திரியங்கள் தானா அவற்றோட வேலைகளை செய்யும். அதுகளுக்கு என்ன செய்யணும்ன்னு அநாதிகாலமா வர வாசனைகளாலே - உணர்வுகளாலே தெரியும்.

நாலு குழந்தைகள் இருக்கும் குடும்பத்திலே எல்லாமே ஹைபர் ஆக்டிவா போயிட்டா நாலும் நாலு வேலைகளை செய்யும். சண்டை போட்டுக்கும். அடிச்சுக்கும், கடுச்சுக்கும், குலாவிக்கும். இன்னொண்ணு அது பாட்டுக்கு அதோட காரியத்தை கவனிச்சு கொண்டு இருக்கும். இதுகளை கட்டுப்படுத்தப்பாத்தா நாளுக்கு 48 மணி நேரம் போதாது! இப்படி பல விதமா குழந்தைகள் நடந்து கொண்டாலும் அவற்றோட அம்மா வெறும் சாட்சி மாத்திரமா இதுகள் இப்படித்தான் இருக்கும்ன்னு பார்க்கிறாப்போலே இந்திரியங்கள் பாட்டுக்கு அததோட வேலையை செய்யும் போது விலகி பாக்கணும்.

நாம் செய்கிற எல்லா செயல்களையும் நானே செய்கிறேன் ன்னு நினைக்கக்கூடாது. அப்ப யார் செய்கிறாங்க? செய்கிறது நாம்தான்; ஆனாலும் தூண்டுகிறது முக்குணங்கள்தான். சத்வம், ரஜஸ், தமஸ் என்கிற இவை நம்மோட பிறந்தவை. இவற்றை கொஞ்சம் கொஞ்சம் மாத்த முடியும் ஆனாலும் அனேகமா அவை அப்படியேதான் இருக்கும்.

செய்தி பத்திரிகையிலே ஒரு விஷயம் படிக்கிறோம். இன்னார் இந்த போட்டியிலே இப்படி சாதனை செய்தார் ன்னு படிக்கிறோம். அட அப்படியான்னுட்டு அடுத்த செய்திக்கு போயிடுவோம். இதுவே நாம் லீக் கிரிக்கெட்டிலே பிசாத்து 25 ரன் அடிச்சு பேப்பர்லே செய்தி வந்தா அதை கட்டிங் எடுத்து ஆல்பத்திலே ஒட்டி வைப்போம். ஏன்? முன்னே படிச்ச சாதனை ரொம்பவே பெரிசானாலும் அதை நாம் செய்யலே.

நாமும் "நானா இதை செய்யலை, இந்த முக்குணங்களால தூண்டப்பட்டு செய்கிறேன்" என்கிற நினைப்போட செய்யணும். அப்ப கர்மாவிலே பலனை எதிர்பாக்கிறதிலே கொஞ்சம் கொஞ்சமா பற்றுவிட்டு போகும். கர்மா முக்குணங்களாலே செய்யப்பட்டதுன்னு தோணறப்ப அதை ஆல்பத்திலே ஒட்டி வைக்க மாட்டோம்.

அப்ப இப்படி செய்யலாமா? யாரையான நாலு சாத்து சாத்திட்டு அட! நானா அடிச்சேன்?

உள்ளே இருக்கிற பகவான்தான் முக்குணங்களாலே தூண்டினான். அடிச்சது மட்டும்தான் இந்த உடம்பு என்கலாமா?

செய்யலாம். ஆனா ஒரு நிபந்தனை இருக்கு! இதை கேட்டுட்டு "நீ சொல்கிறது சரிதான். செஞ்சது மட்டும்தானே இந்த உடம்பு. அதனால இந்த உடம்பை மட்டுமே திருப்பி அடிக்கிறேன்" னு அடிச்சா அதை எதிர்ப்பில்லாம வாங்கிக்க முடியும்னா அப்படி செய்யலாம்!

ஒரு சாது மேல்நாட்டிலே வேதாந்த பாடம் எடுத்தார். கேட்டுகிட்டு இருந்த ஒத்தர் இப்படி கேள்வி கேட்டார்.
" அப்ப நீங்க இந்த உடம்பில்லையே?"
" இல்லை. "
"அப்ப இந்த உடம்பை நான் அடி அடின்னு அடிச்சா நீங்க வேடிக்கை பாத்துக்கொண்டு சும்மா இருப்பீங்களா? "
"இருப்பேன். அது மட்டுமில்லே அதை பாத்துட்டு இங்கே இருக்கிற மத்த உடம்புங்க உன் உடம்பை அடி அடின்னு அடிச்சாலும் வேடிக்கை பாத்துகொண்டு சும்மா இருப்பேன்."

---

மதியம் புதன், நவம்பர் 12, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 14

> தத்வவித்து மஹாபாஹோ குணகர்மவிபாகயோ: |
> குணா குணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே || 3.28 ||

சொற்ற குணத்தின் தொழிலின் பிரிவதனைப்
பற்றியநல் உண்மையினைப் பாங்கறிவான் - மற்றவைதாம்
இந்தியங்கள் தம்விடயத் தேயியங்கல் என்றுணர்ந்து
மைந்துதரும் பற்றடையான் மற்று.

சொற்ற குணத்தின் தொழிலின் பிரிவு அதனைப் பற்றிய நல் உண்மையினைப் பாங்கு அறிவான் - மற்றவை தாம் இந்தியங்கள் தம் விடயத்தே இயங்கல் என்று உணர்ந்து ஐந்து தரும் பற்றடையான் மற்று.

(ஆனால் நீண்ட புஜங்கள் உடையவனே! குணங்களின் பிரிவு, கர்மங்களின் பிரிவு - இவற்றின் தத்வம் அறிந்த ஞானி -யோகி குணங்கள் அனைத்தும் குணங்களில் செயல்படுகின்றன என்று அறிந்து அவற்றில் பற்றுக் கொள்ளாதிருக்கிறான்.)

நல்ல விஷயங்களை படிக்கிறது, பளிச்சுன்னு புரிஞ்சுகிறது, மேலே மேலே சாஸ்திரங்கள் சொன்ன நல்ல காரியங்கள்ள ஈடுபடறது, மற்றவங்களுக்கு உதவறது, அமைதியா இருக்கிறது. இப்படிப்பட்டது எல்லாம் சத்வ குணத்தால வருது. இதில வர தெளிவு, ஊக்கம், முயற்சி, அமைதி எல்லாம்தான் அந்த குணத்தோட கர்ம வெளிப்பாடு.

ரஜோ குணம் கோபம், ஆசை, மேலே மேலே தேவைகளை பெருக்கிவிடறது. இந்த கோப தாப உணர்ச்சிகள் கொப்பளிப்பு உள்ள காரியங்கள் ரஜோ குண கர்ம வெளிப்பாடு.

தமோ குணம் ஊக்கமில்லாம இருக்கிறது, தூக்கம், சோம்பல், மயக்கம், குழப்பம் இதெல்லாம் தருது. இந்த குணத்தோட வெளிப்பாடு எப்படி இருக்கும்ன்னு ஊகிக்கமுடியுது இல்ல?

இதில மூன்று வித மனிதர்கள், மூணு குணங்கள்ன்னு கிடையாது. ஒத்தருக்கே இந்த மூணும் இருக்கும். ஏன் நாம எல்லாருமே இந்த மூணு குணங்களும் இருக்கிறவங்கதான். என்ன ஒவ்வொத்தருக்கு ஒவ்வொண்ணு அதிகமா இருக்கும்; குறைச்சலா இருக்கும். இன்னும்

சொல்லப்போனா ஒத்தருக்கே எல்லா நேரமும் ஒரே மாதிரி குணம் இருக்கிறது இல்லை. அப்பப்ப கோபப்படுகிறோம்; அமைதியா இருக்கிறோம்; தூங்கி வழிகிறோம். "என்னடா ஆச்சு இவனுக்கு இன்னிக்கு ஒரேயடியா தூங்கி வழியறானே/ கோபப்படறானே!" இப்படி எல்லாம் நாமே சொல்கிறது உண்டு இல்லியா?

இந்த குணங்கள்தான் ஒரு குறிப்பிட்ட நேரத்திலே நாம எப்படி செயல்படுவோம் ன்னு நிர்ணயம் செய்யும். நமது வேலை அதன்படி அமையும். "அந்த நேரத்திலே நான் கோபப்பட்டு இருக்கக்கூடாது. நிதானமா பதில் சொல்லி இருக்கணும்; பயந்து இருக்ககூடாது, வீரத்தோட எதிர்த்து இருக்கணும்; ஏன் அப்படி செஞ்சேன்னு புரியலே" இப்படி எல்லாம் நாமே யோசிக்கிறது உண்டு இல்லையா?

ஆக குணங்களாலே தூண்டப்பட்டுதான் பல விஷயங்களை செய்யறோம். இதை புரிஞ்சு கொண்டே வேலைகளை செய்யணும். அப்படி செய்ய செய்ய கர்மத்திலே பற்று விட்டுப்போகும். பற்றில்லாத கர்மா நம்மை முன்னேற்றும்.

ப்ரக்ருதேர்குணஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு |
தாநக்ருத்ஸ்நவிதோ மந்தாந்க்ருத்ஸ்நவிந்ந விசாலயேத்|| 3.29 ||

பகுதிக் குணத்தாலே பற்றிமயக் குற்றார்
புகலக் குணத்தொழிலில் புந்தி- மிகவுறுவர்
எல்லாம் உணர்ந்திடுவான் அவ்வுணர்ச்சி இல்லாரை
ஒல்லாது காண்கலக்கல் உற்று

பகுதிக் குணத்தாலே பற்றி மயக்குற்றார் புகலக் குணத்தொழிலில் புந்தி மிகவுறுவர் எல்லாம் உணர்ந்திடுவான் அவ்வுணர்ச்சி இல்லாரை ஒல்லாது காண் கலக்கல் உற்று.

(ப்ரக்ருதியில் உண்டான குணங்களால் மிக்க மயக்கம் அடைந்துள்ள மனிதர்கள் குணங்களிலும் கர்மங்களிலும் ஈடுபடுகிறார்கள். முற்றும் அறிந்திராத குறைமதியுடைய அந்த அஞ்ஞானிகளை முழுமையான அறிவு பெற்றுள்ள ஞானி தடுமாறச் செய்யலாகாது.)

குணங்களாலே தூண்டப்பட்டுதான் வேலை செய்கிறேன்ன்னு புரிஞ்சுக்காதவங்களைதான் இங்கே அஞ்ஞானி என்கிறான் கண்ணன். இவர்களுக்கு அந்த வேலைகளால இன்ப துன்பங்கள் உண்டாகும். யார் அதை புரிஞ்சு கொண்டாங்களோ அவர்களுக்கு இன்ப துன்பங்கள் உண்டாகாது. அவர்கள் ஞான வழில முன்னேறுவாங்க.

அறிவு இருக்கிற ஞானி ஒவ்வொத்தருக்கும் தகுந்தபடி உபதேசம் செய்யணும்.

"இதெல்லாம் நல்ல காரியம் செய்யணும்பா" ன்னோ, "வேலை செய்கிறதுதான் செய்யறே, பற்றில்லாம பண்ணுப்பா" ன்னோ, புரிஞ்சுக்ககூடியவங்களுக்கு இதையும் சொல்லி ஏன் அப்படின்னும் சொல்லாம். எல்லாருக்கும் ஒரே விஷயத்தை சொல்லி அவங்களை குழப்பக்கூடாது. இல்லைனா "ஞான மார்க்கம் எவ்வளோ உசத்தி தெரியுமா?"ன்னு சொல்லி குழப்பக்கூடாது.

---

மதியம் வியாழன், நவம்பர் 13, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 15

மயி ஸர்வாணி கர்மாணி ஸம்ந்யஸ்யாத்யாத்மசேதஸா |

நிராஷீர்நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர:|| 3.30 ||

கன்மமெல்லாம் என்பாற் கருதிச் சமர்ப்பித்து
நின்மலமாம் ஆன்மாவில் நெஞ்சிருத்தி- என்னதெனும்
பற்றகற்றி ஆசை பறித்துப் படரொழித்திங்
குற்றதொரு போர் புரிவாய் ஊங்கு.

கன்மமெல்லாம் என்பாற் கருதிச் சமர்ப்பித்து நின்மலமாம் ஆன்மாவில் நெஞ்சிருத்தி என்னதெனும் பற்றகற்றி ஆசை பறித்துப் படரொழித்திங்கு உற்றதொரு போர் புரிவாய் ஊங்கு.

(அந்தர்யாமியான பரமாத்மாவாகிய என்னிடம் ஒன்றிய மனத்துடன் எல்லா கர்மங்களையும் என்னிடம் அர்ப்பணம் செய்துவிட்டு ஆசையற்றவனாக மமகாரமற்றவனாக மேலும் தாபமற்றவனாக ஆகி யுத்தம் செய்.)

ஆத்மாவை பற்றிய உண்மையான அறிவு கொண்டவன் யாரோ அவன் பகவான்தான் நம்மை தூண்டி செய்கிறான், தான் தானாக செய்கிறவன் இல்லைன்னு புரிஞ்சு கொண்டு வேலை செய்வான். இது "நான் செய்யறேன்" என்ற நினைப்பை விடுவது.

பலன் என்ன கிடைக்கும் என்கிறதுல ஆசையை விட்டுவிடுவான். "கண்ட கண்ட தாழ்ந்த விஷயத்துக்காக நான் ஏதும் செய்யலை; உயர்ந்த மோக்ஷம் வேணும் என்கிறதுக்கு அவன் தூண்டறான், செய்யறேன்" என்று பண்ணுவான். இது தாழ்ந்த பலன்ல ஆசை விடுவது.

தான் ஆசை பட்ட பலனை வாங்கித்தருது என்கிறதால் "இந்த கர்மா என்னோடது" என்கிற ஒரு நினைப்பு இருக்கு இல்லையா? இதுவும் (மமகாரம்) போயிடும். இப்படி நான் செய்யறேன் என்கிற எண்ணமும், ஆசையும், அகங்காரமும் இல்லாத காரியங்களை செய்து கொண்டு போகணும்.

இப்படி நான் செய்கிறேன் என்கிற கர்த்ருத்வம், தாழ்ந்த பலனில் ஆசை, என் கர்மா என்கிற மமகாரம் மூன்றும் விடணும்.

இப்படி இருந்தால் மேலே ஒரு தாபமும் இருக்காது.

கிழக்கே போகிறதை நிறுத்த மேற்கே போகணும். அதனால "நான் கர்த்தா" என்கிறதை தொலைக்க "நீதான் கர்த்தா"ன்னு நினைச்சாதான் நடக்கும். "நான் செய்யறேன்தான். இருந்தாலும் நீதானே செய்விக்கிறாய்!" என்று நினைக்கணும். அம்மா குழந்தைக்கு அனா ஆவன்னா சொல்லிக்கொடுக்கிறா. சிலேட்டுல அ ன்னு எழுதி, இது மேலே எழுது பாக்கலாம் என்பாள். அது உடனே அப்படி எழுதுமா? அதன் கையை பிடிச்சு சிலேட்டுல எழுதுவா. எழுதின அப்புறம் "அட நல்லா எழுதி இருக்கியே" ன்னு மார்க்கும் போடுகிறாப்போல;

பகவான் நம்மை கர்மா செய்யத்தூண்டறான். செய்யவும் வைக்கிறான். அப்புறம் அதுக்கு ஒரு பலனையும் தரான். இதை புரிஞ்சுக்கணும்.

அம்மா கையை பிடிச்சு எழுதும் போது எந்த குழந்தை கையை வேற திசைல இழுத்து கொண்டு போகாம இருக்கோ அது நல்லா எழுதும்.

இப்ப ப்ளாக் எழுதறோம். "ஏதோ பகவான் தூண்டறான் எழுதறோம்" என்கிறதாக தோன்றினால் "எவ்வளோ பேர் படிக்கிறாங்க, இவங்க இப்படி நினைப்பாங்களோ, அவங்க அப்படி நினைப்பங்களோ, இன்னிக்கு எழுதியே ஆகணுமே - நேரம் இல்லையே!" இப்படி எல்லாம் அவஸ்தை படாம எழுதுவோம். நான் செய்யறேன் என்கிற நினைப்பு இருந்தா இதெல்லாமும் வரும் இன்னமும் வரும்! "பின்னூட்டம் 100 தாண்டணுமே; 200 தாண்டணுமே; தமிழ்மணம் சூடான பதிவுகள்ல பேர் வரணுமே; என்னை இப்படி திட்டி எழுதிட்டாங்களே!" ன்னும் இன்னும்

ஏதேதோவும் தோணும். :-))

மதியம் வெள்ளி, நவம்பர் 14, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 16

யே மே மதமிதம் நித்யமநுதிஷ்டந்தி மாநவா: |
ஷ்ரத்தாவந்தோ அநஸூயந்தோ முச்யந்தே தே அபி கர்மபி:|| 3.31 ||

யான்புகலிக் கொள்கைதனை என்னார் சிரத்தையொடு
பான்மையினால் உள்ளழுக்கம் பற்றாது-மேன்மையுற
எப்பொழுதும் கொண்டொழுகும் எண்ணுடையார் அன்னாரும்
தப்புவர்காண் கன்மத்திற் றாம்

யான் புகல் இக் கொள்கைதனை என்னார் சிரத்தையொடு பான்மையினால் உள்ளழுக்கம் பற்றாது-மேன்மையுற எப்பொழுதும் கொண்டொழுகும் எண்ணுடையார் அன்னாரும் தப்புவர் காண் கன்மத்திற்றாம்.

(எந்த மனிதர்கள் குற்றங்குறை காணாதவர்களாக, ச்ரத்தை உடையவர்களாக, என்னுடைய இக்கொள்கையை எப்பொழுதும் பின்பற்றுகிறார்களோ அவர்களும் அனைத்துக் கர்மங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள்.)

இங்கே என் மதம்ன்னு சொல்லுகிறது கர்ம யோகத்தைதான். முதல்ல கடைப்பிடிக்கிறார்களோன்னு சொன்னான். ஆனா மக்கள் "அட கண்ணன் சொல்கிறது நல்லாதான் இருக்கு. ஆனா யார் செய்கிறது? முடியுற காரியமா?" ன்னு நினைக்கலாம். அதுக்காக யார் சிரத்தை வைக்கிறாங்களோன்னு அடுத்து ஒரு சலுகை கொடுக்கிறான். அப்பவும் போதாதோன்னு சந்தேகம். அதுக்காக யாருக்கு இதில் குற்றம் குறை பாக்கலையோன்னு இன்னும் ஒரு சலுகை.

இப்படி சலுகையா கொடுத்தா என்ன அர்த்தம்ன்னு நினைக்கலாம். முதல்ல குற்றம் குறை பாக்கலைனா அப்புறம் பகவான் அனுக்கிரகத்தால சிரத்தை - ஆர்வம் வந்துடும். ஆர்வம் வந்தா அப்புறம் கடைபிடிக்க ஆரம்பிச்சுடுவோம்! ஆக அதெல்லாம் வேற படிகள், அவ்ளோதான்.

கர்மம் செய்யறதாலதான் ஈஸ்வரன். இல்லாட்டா அதுக்கு தேவையே இல்லாம பிரம்மமாவே இருக்கும். லோகத்தை சிருட்டி செய்யறதுல ஈஸ்வரனுக்கு என்ன பலன்? ஒண்ணுமில்லை. பலன் பாக்காத செய்யறதால்தான் அவன் சிறந்த கர்ம யோகி. நல்லவங்களா இருப்போம் என்கிற நம்பிகைலதான் அவன் நம்மை இந்த உலகத்துக்கு அனுப்பறான். நாம அப்படியா இருக்கோம்? இல்லாம போனா அவனுக்கு என்ன நஷ்டம்? இருந்தா அவனுக்கு என்ன லாபம்? அதனால அவனே அப்படி பலனை இப்படிதான் இருக்கணும்ன்னு பாக்காம இருக்கிறப்ப நாமும் இருக்க வேணாமா?

யே த்வேததப்யஸூயந்தோ நாநுதிஷ்டந்தி மே மதம் |
ஸர்வஜ்ஞாநவிமூடாம்ஸ்தாந்வித்தி நஷ்டாநசேதஸ: || 3.32 ||

கூறியவிக் கொள்கைதனைக் கூடும் பொறாமையினால்
பேறுபெறப் பின்பற்றிப் பேணாதார்- வீறுதரும்
நல்லறிவி னெல்லாம் மயங்கினராய் நாசமுறற்
கொல்லைவிரை வாருணர்வின் றூங்கு.

கூறிய இக் கொள்கைதனைக் கூடும் பொறாமையினால் பேறு பெறப் பின்பற்றிப் பேணாதார்-

வீறு தரும் நல்லறிவின் எல்லாம் மயங்கினராய் நாசம் உற கொல்லை விரைவார் உணர்வின்று ஊங்கு.

(ஆனால் எந்த மனிதர்கள் என்னிடம் குறை காண்பவர்களாக என்னுடய இந்தக் கருத்தை ஏற்று நடப்பதில்லையோ, அந்த மூடர்களை முழுமையான ஞானத்தில் அறிவு மயக்கம் அடைந்தவர்கள் என்றும், சீரழிந்து போனவர்கள் என்றும் அறிந்து கொள்.)

பகவான் வார்த்தையிலேயே நம்பிக்கை இல்லைன்னா அப்புறம் என்ன இருக்கு? அப்படி இருக்கிறவங்க எந்த அறிவு இருந்தாலும் இல்லாதவனாக ஆகிறாங்களாம். வாழ்க்கையே போயிடுமாம். மனசு இருந்தும் இல்லாம போனவங்களாம். இப்படி கண்ணன் சொல்கிறான்.

இங்கே கர்மா தியரியை நாம கொஞ்சம் புரிஞ்சுக்கணும்.

நாம செய்கிற புண்ணிய காரியங்கள் பாபங்கள் நம்மை தொடர்ந்தே வரும். உப்பை தின்னா எப்படி தாகம் எடுத்து தண்ணியை குடிக்க வேண்டி இருக்கோ அத போல செய்கிற செயல்கள் எல்லாத்துக்கும் ஒரு விளைவு இருக்கும். அதை நாம அனுபவிச்சே ஆகணும். நம்ம நாட்டு பிலாசபி படி இந்த விளைவுகள் ஒரு பிறவில அனுபவிச்சு முடிக்கலைனா அடுத்த பிறவிக்கும்கூட வரும்.

இந்த புண்ணிய பாவம் பட்டியல்லே செய்ததும் அதுக்கு அனுபவிக்கிரதும் பாலன்ஸ் பூஜ்யத்துக்கு வர வரை இதெல்லாம் தொடர்ந்துண்டேதான் இருக்கும். எப்ப இது பூஜ்யம் ஆகிறதோ அப்பதான் பிறவி என்கிறது ஒழியும். சரி நான் பத்து புண்ணியம் பண்ணேன். நான் செய்யற பத்து பாவத்துக்கு ஈடா வெச்சுக்க ன்னு சொன்னா, அப்படி நடக்காது. செய்த பாவத்துக்கும் அனுபவிச்சுதான் தீரணும்; புண்ணியத்துக்கும் அனுபவிச்சுதான் தீர்க்கணும்.

சரி, சரி, அதான் புண்ணியத்துக்கு சொர்கம் போய் அனுபவிப்போம், பாவத்துக்கு நரகத்துக்கு போய் கஷ்டப்படுவோம்ன்னு சொல்லறாங்களே? அப்ப திருப்பியும் ஏன் கஷ்டப்படணும்?

நல்ல கேள்வி. அப்படி சொர்க்க/ நகரத்திலே அனுபவிச்சாலும் முழுக்க காலி ஆகிறதில்லை. கொஞ்சம் மீதி இருந்து பிறவி எடுத்தே அதையும் தீர்க்க வேணும்.

சரிய்யா. இது அநியாயமா இருக்கே? என்ன செஞ்சாலும் அது புண்ணியமோ பாவமோவாதானே இருந்து தீரும். அப்ப எப்பதான் கரை சேருகிறது?

அதுக்குத்தான் கண்ணன் இங்கே வழியை சொல்றான். பலனை கருதாதே; நீ செய்யலை; என்னால தூண்டப்பட்டு குணங்களாலேதான் செய்கிறாய். இப்படியே நினைச்சு வேலை செய்து வந்தா அந்த கர்மம் உன்னை ஒட்டாது; என்னைதான் ஒட்டும்.

இப்படி புரிஞ்சு கொண்டு வேலை செய்யலைனா மேலே மேலே கர்ம மூட்டை சேர்ந்து சீரழிஞ்சுதான் போவாய்.

---

மதியம் திங்கள், நவம்பர் 17, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 17

ஸத்ருஷம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர்ஜ்ஞாநவாநபி |
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி || 3.33 ||

அறிவுடையோ னேனும் அவனியற்கைக் கொத்த
நெறியே நடந்திடுவன் நீடும்-திறலுடையாய்
பல்லுயிரும் அவ்வவற்றின் பண்பினையே பற்றியுறும்

---

வெல்லும்வகை யிற்றடுத்தல் வீண்.

அறிவுடையோனேனும் அவன் இயற்கைக்கு ஒத்த நெறியே நடந்திடுவன் நீடும்-திறலுடையாய் பல்லுயிரும் அவ்வவற்றின் பண்பினையே பற்றியுறும் வெல்லும் வகை இற்றடுத்தல் வீண்.

(எல்லா உயிரினங்களும் இயல்பை அடைகின்றன - அதாவது தம் இயல்புக்கேற்றவாறு தம்வசம் இன்றிச் செயல் புரிகின்றன. ஞானியும் தமது இயல்புக்கு ஏற்றுவாறு செயல் புரிகிறார் என்றால் இதில் ஒருவரை பலவந்தமான பிடிவாதம் என்ன செய்யும்?)

அடுத்த சில பாடல்கள்லே ஞான வழில இருக்கிற சில பிரச்சினைகளை சொல்கிறான் கண்ணன்.

பூர்வ வாசனையால் வரும் சுபாவம் விவேகிகளைக்கூட சமயத்துல கவுத்துடும். வாசனை அவ்வளோ பலம் உள்ளது. முயற்சியை விட வாசனை பலமானா முயற்சியை தோக்கடிக்கும். மாறாகவும் இருக்கலாம். இதை ஜாக்கிரதை படுத்ததான் இதை சொல்லறது. உற்சாகத்தை குறைக்க இல்லை. ஈசனை நாடிதான் இதை ஜெயிக்கணும். வாசனா பலத்தால அஜாமிளன் கெட்டு போனாலும் பகவானை நாடியதால கடை தேர்ந்தான்.

ஒவ்வொரு உயிரினத்துக்குமே ஒரு அடிப்படை உணர்வு உண்டு. இன்ஸ்டிங்ட் என்கிறார்களே, அது. அதை ஒட்டிதான் எல்லா பிராணிகளுமே செயல்படுகின்றன. மனுஷன் ஒத்தன்தான் இதுக்கு மாறா செயல்படுகிறவன்னு நினைச்சாலும் அப்படி உறுதியா கிடையாது. ஞானியே வெகு காலமா கூட வர இயல்பு படி நடந்துக்கிறான் அப்படின்னா மத்தவங்க எந்த மாத்திரம்? அடக்குமுறையால லாபம் கிடையாது.

ஒரு கூடையிலே ஒரு மணி நேரம் பூக்களை வெச்சு இருந்தாலே அதன் வாசனை கொஞ்ச நேரம் இருக்கே. கெட்ட வாசனைனா இன்னும் அதிக நேரம் இருக்கும். இப்படி இருக்கிறப்ப ஜன்ம ஜன்மமா வருகிற இந்த இயல்பு எங்கே போகும்?

ஒவ்வொத்தருக்கு ஒரு விஷயம் சிறப்பா இருக்கும். இதுதான் அவங்களோட இயல்பு. ஆனா நாம் யார் இந்த சிறப்புத்தன்மை என்னன்னு பாத்து அதோட போய் பலனடைகிறோம்? குறிப்பா இப்ப எல்லா குழந்தைகளையும் ஐடி எஞ்சினீர் ஆக்கணும், டாக்டர் ஆக்கணும்ன்னு முயற்சி செய்யறோம். அவங்களுக்கு என்ன பிடிக்கும், அவங்க திறமை எதுல இருக்குன்னு யார் யோசனை செய்யறோம்?

(அதனால அர்ஜுனா, க்ஷத்திரியனான நீ உன் இயல்புக்கு மாறா ஞானயோகத்திலே போக முயற்சி செய்யாதே என்கிறான் கண்ணன்.)

---

மதியம் செவ்வாய், நவம்பர் 18, 2008

## கண்ணன் காட்டும் கர்ம வழி -- 18

> இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ |
> தயோர்ந வஷமாகச்சேத்தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ || 3.34 ||

இந்தியங் களின்விடயத் தென்றும் இயல்விருப்பும்
புந்திவிழை யாவெறுப்பும் புக்குளவால்-சிந்தித்
தவைக்குவசம் ஆகாமல் ஆர்ந்திடுக அன்னாரும்
தவிர்க்கரிய சத்துருவென்றாய்ந்து.

இந்தியங்களின் விடயத்து என்றும் இயல் விருப்பும் புந்தி விழையா வெறுப்பும் புக்கு உளவால்

சிந்தித்து அவைக்கு வசம் ஆகாமல் ஆர்ந்திடுக அன்னாரும் தவிர்க்கரிய சத்துரு என்று ஆய்ந்து.

(ஒவ்வொரு புலனுக்குரிய நுகர்ச்சிப் பொருளிலும் விருப்பு-வெறுப்புகள் மறைந்து இருக்கின்றன. மனிதன் அவ்விரண்டின் பிடியிலும் அகப்படக் கூடாது. ஏனெனில் அவ்விரண்டும்தான் இவனுடைய மேன்மைப் பாதையில் இடையூறு விளைவிக்கும் பெரும் எதிரிகள்.)

ராகத்வேஷங்கள் (விருப்பு வெறுப்புகள்) உள்ளேயே இருக்கிற எதிரிகள்.

ரொம்ப காலமா கூடவே இருக்கிறதை எல்லாம் சட்டுன்னு விட முடியாது. வேதங்களிலேயும் சாஸ்திரங்கள்லேயும் சொல்லப்பட்ட படி உடனடியா திருந்த முடியாது. அனாதி காலமா வாசனைகள் பின்னாலேயே போய் கொண்டு இருக்கிறதால அது கஷ்டம். கொஞ்சம் கொஞ்சமாதானே திருத்திக்க முடியும். இந்த புலன்கள்தான் விருப்பு வெறுப்புக்கு காரணமா ரொம்ப நாளா ஆட்டி வைச்சு கொண்டு இருக்கு. இதுக்கு அடிமைப்பட்டோம்னா பற்று இருக்கிற செயல்களை துவக்கும். அதோட பலன், அதை அனுபவிக்கிறது, மேலே பற்று என்று ஆரம்பிச்சுடும். பற்று வச்சது கிடைச்சதுன்னா காமம் மேலிடும். கிடைக்கலேனா கோபம் - குரோதம் வரும். இது ஞான வழில இருக்கிற பிரச்சினைகள்.

---

மதியம் புதன், நவம்பர் 19, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 19

ஷ்ரேயாந்ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் ।
ஸ்வதர்மே நிதநம் ஷ்ரேய: பரதர்மோ பயாவஹ:॥ 3.35 ॥

குறைந்திடிலுந் தன்கருமங் குற்றமா மேலா
நிறைந்தியலு மற்றையதி னேரே - மறைந்திறந்து
தன்கருமத் தைசெயினுந் தானன்று வேறான
வன்கருமத் தச்சம் வரும்.

குறைந்திடிலும் தன் கருமம் குற்றமா மேலா நிறைந்தியலும் அற்றையது நேரே மறைந்து இறந்து தன் கருமத்தை செயினும். தான் அன்று வேறானவன் கருமத்து அச்சம் வரும்.

(நன்கு கடைப்பிடிக்கப்பட்ட பிறருடைய தர்மத்தைக் காட்டிலும் குணக்குறைவிருப்பினும் தன்னுடைய தர்மம் மிகவும் உயர்ந்தது. ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிப்பதில் இறப்பதும் மேன்மையே தரும். பிறருடைய தர்மம் பயத்தை விளைவிக்கும்.)

ஞானவழியிலே இருக்கிற கஷ்டங்களை கண்ணன் சொன்னான். இப்ப கர்ம யோகத்திலேயே இருக்கிற கஷ்டங்களை சொல்கிறான்.

சாதாரணமா பார்க்கிறப்ப கெட்டதுன்னு தோணுவது கூட சுய தர்மத்தாலே சரியானதா ஆயிடும். இல்லைனா எப்படி சண்டை போடுவதும் கசாப்பு கடை வைக்கிறதும் சரியாகும்? இடத்துக்கும் காலத்துக்கும் தகுந்தாப்போல தர்மம் மாறும். அயோத்தியா காண்டத்திலே பாத்தோம்னா க்ஷத்திரிய தர்மத்திலே அது ராமன் கடமையானதாலே அதுல கருத்தா இருந்தார் என்பது புரியும். இத்தனைக்கும் அவர் கருணாமூர்த்தி!

யார் யார் எதை செய்யணும்ன்னு வேதத்திலேயும் சாஸ்திரங்களிலேயும் சொல்லி இருக்கோ அப்படி எல்லாம் கொஞ்சம் கூட குறையாம செய்யணும். என்ன என்ன செய்யணும்ன்னு பட்டியல் பாத்தாலே தலையை சுத்தும். ஆயிரத்து எட்டு இருக்கே! நாமோ ஒரு அவசர உலகத்திலே இருக்கோம். பத்து மணிக்கு உள்ளூர் அரசு அலுவலகத்துக்கு போன காலம் போச்சு. இப்ப பலருக்கு வேலை பாக்கிற இடத்துக்கு போகவே ரெண்டு மணி நேரம் ஆறது.

---

இதிலே எங்கே அத்தனை கர்மாக்களையும் செய்கிறது? அப்படியே செய்தாலும் எங்கே குறைவில்லாமல் செய்கிறது? ஏதோ தப்புங்க நடக்க வாய்ப்பு எப்பவுமே இருக்கே?

கண்ணன் என்ன சொல்கிறான்? நீ செய்கிறது உனக்கு கொடுத்த வேலையா? அத செய்ய ஒழுங்கா முயற்சி செஞ்சயா? அப்படி செஞ்சும் முழுக்க முடியலையா? பரவாயில்லை. நல்லா முயற்சி பண்ணே. உனக்கு நல்ல மார்க் போட்டுடறேன்.

நீ செய்தது உனக்கு கொடுத்த வேலை இல்லையா? ரொம்ப நல்லாதான் பண்ணாயா? இருந்தாலும் உனக்கு கொடுத்த வேலை இது இல்லியே? ஏன் செஞ்சாய்? உனக்கு குறைவான மார்க்தான்.

அதனால நமக்கு விதிக்கப்பட்டதை செய்யாம மத்த வேலைகளை செய்கிறது சரியில்லைதான்.

பல வருஷங்கள் முன்னே என் தலைமுடியை சீர்திருத்திக்கிற வேலையை நானே பண்ணிக்கொண்டேன். அதுக்கு சில காரணங்கள் இருந்தன. முக்கியமா நேரம் இல்லாதது. இப்படி இருக்கும் போது ஒரு நாள் வேலை களத்திலேந்து வேலை முடித்து போகிற நேரத்திலே "சீக்கிரம் போகணும். தலை முடி வெட்டணும்" ன்னு சொன்னேன். கிட்ட இருந்த ஒரு உதவியாளர் "அப்படியா, எந்த சலூன் போறிங்க" ன்னார். "இல்லைப்பா, நானே செஞ்சுப்பேன்" ன்னேன். அப்ப இதையே தொழிலா வெச்சு இருக்கிறவங்க என்ன ஆறது? ன்னு கேட்டார். "என்ன செய்யறது? எனக்கு குறிப்பிட்ட நாள்லேதான் செஞ்சுக்கணும். அன்னைக்கு கிடைக்கிற நேரத்திலே சலூன்ல ஆளில்லாம இருக்கணும். இது சாத்தியமா இல்லையே" ன்னேன். "அப்படி பிரச்சினைனா சொல்லுங்க நானே வந்து வெட்டிவிடறேன். அதுக்காக இப்படி செய்யக்கூடாது" ன்னார். சொல்கிறது சரிதானேன்னு நினைச்சுண்டேன்.

இதைதான் யார் யாருக்கு எந்த கர்மாவிலே அதிகாரம்ன்னு பெரியவங்க வகுத்து வெச்சாங்க. வேலைகள் மாறிட்டாலும் அடிப்படை விஷயம் ஒண்ணுதான். அவரவர் வேலையைதான் செய்யணும்.வக்கீலுக்கு படிச்சவர்தான் அந்த தொழிலை பண்ணலாம். டாக்டருக்கு படிச்சு வந்தவர்தான் வைத்தியம் பாக்கணும். இப்படி பல சட்ட திட்டங்கள் இப்பவும் இருக்கே! அதுவும் நாமே ஏதாவது மருந்து சாப்பிட்டுட்டு, பிறகு டாக்டர்கிட்டே போனா திட்ட வேற திட்டறாங்க!

---

மதியம் வியாழன், நவம்பர் 20, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 20

**அர்ஜுந உவாச।**
அத கேந ப்ரயுக்தோ அயம் பாபம் சரதி பூருஷ:।
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:॥ 3.36 ॥

தீவினைதான் ஓர் புருடன் செய்ய விருப்பிலனாய்
மேவினுமென் அவ்வினையை வெவ்வலியால் - ஏவப்
படுத்தகையன் போலியற்றல் பாரளந்து கொண்ட
நெடுந்தகையாய் ஈது நிகழ்த்து

தீவினைதான் ஓர் புருடன் செய்ய விருப்பிலனாய் மேவினும் என், அவ்வினையை வெவ்வலியால் - ஏவப் படுத்தகையன் போல் இயற்றல் பார் அளந்து கொண்ட நெடுந்தகையாய் ஈது நிகழ்த்து.

(அர்ஜுனன் கூறினார்: 'க்ருஷ்ண! பின் இந்த மனிதன் தான் விரும்பாவிட்டாலும் பலவந்தமாகத் தூண்டப்பட்டவன்போல எதனால் ஏவப்பட்டுப் பாவத்தைச் செய்கிறான்?)

என்னை முக்கிய கர்த்தான்னு நினைன்னுதானே சொன்னே? எல்லாரும் நீயே தூண்டி செயல் செய்வதானா பாவ காரியங்கள் நடக்காதே? ஆனாலும் ஏன் மனுஷன் பாவம் செய்யறான்? அப்படி யாரும் பாவம் வேணும்னு ஆசையோட பாவத்தை செய்கிற மாதிரியும் தெரியலையே?

அப்ப ஏதோ ஒண்ணு வலுக்கட்டாயமா அவனை இப்படி செய்ய வைக்குதே? அது என்ன?

இப்படி கேட்கிறான் அர்ஜுனன்.

அக்ரூரர் கேட்க்கிறாராம் "ஏம்பா திருதராஷ்ட்ரா, உனக்கு 105 பிள்ளைகள் ன்னு ஏன் நினைக்கக்கூடாது?" பதில் வந்தது "உன்னை அனுப்பினவன்தான் இப்படிப்பட்ட புத்தியும் கொடுத்தான்." :-)

ஏன் கொலை செய்கிறான்? கோபத்தால. ஏன் திருடினான்? காமத்தாலே? காரணம் உடனே தெரியறதே?

**ஸ்ரீபகவாநுவாச |**
காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: |
மஹாஷநோ மஹாபாப்மா வித்த்யேநமிஹ வைரிணம் || 3.37 ||

ஏதுவினைச் செப்பின் இராசத்தால் உற்றதொரு
தீதறுவெங் காமம் சினமுமது - யாதினையும்
உண்மடுப்ப தைய ஒழியாத பாவமுமாம்
எண்மதியீ தைப்பகையென் றீங்கு

ஏதுவினைச் செப்பின் இராசத்தால் உற்றதொரு தீது அறு வெங்காமம் சினமும் அது - யாதினையும் உண் மடுப்பதைய ஒழியாத பாவமுமாம் எண்மதி ஈதைப் பகை என்று ஈங்கு.

(ஸ்ரீ பகவான் கூறினார்: ரஜோ குணத்திலிருந்து உண்டாகிய இந்த காமம்தான் கோபமாகும். இது பெருந்தீனிக்காரன். போகங்களில் 'போதும்' என்ற எண்ணமில்லாதவன். மேலும் பெரிய பாவி. இதையே இந்த விஷயத்தில் பகைவனாக அறிந்து கொள்.)

மனுஷனுக்கு இருக்கிற காமமும் அதிலேந்து வருகிற கோபமும்தான் இதுக்கு காரணம்.

இப்படி சிலர் சொல்லலாம். ஆசையை முழுக்க ஒழிக்க முடியாது. கொஞ்சம் அதுக்கும் தீனி போடணும்தான்.

ஆசையை முழுக்க உடனே ஒழிக்க முடியாதுதான். ஆனால் அதுக்கு தீனி போட்டு அடக்கிடலாம் ன்னு நினைக்கிறது தப்பு. ஒத்தர் 5000 ரூபாய் சம்பாதிக்கிறார். இன்னும் ஒரு 1000 கூட சம்பாதிச்சா நல்லா இருக்கும்ன்னு நினைக்கிறார். அப்படியே ஏதோ ஒரு வழில கொஞ்சம் கூடுதலா வருமானம் வந்து அந்த ஆயிரம் ரூபாய் கிடைக்கிறதுன்னு வெச்சுக்கலாம். அப்ப அவருக்கு திருப்தி வரணும் இல்லையா? அப்படி சாதாரணமா நடக்கிறது இல்லை. இன்னும் ஒரு 2000 கிடைச்சால் பரவாயில்லையேன்னு தோணும். இதுக்கு ஒரு எல்லையே கிடையாது. நெருப்பிலே தீனி போடப்போட அது வளந்துகொண்டே போகிற மாதிரி காமம் வளந்து கொண்டேதான் போகும்.

இந்த காமத்திலேந்து பிடித்தது விலகிடுமோ இல்லை பிடிக்காதது நடந்துவிடுமோ என்கிற பயமே கோபமாக வெளிப்படும். அதாவது காமமேதான் இன்னொரு வேஷம் போட்டுக்கொண்டு கோபமா வருது.

---

மதியம் வெள்ளி, நவம்பர் 21, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 21

தூமேநாவ்ரியதே வஹ்நிர்யதாதர்ஷோ மலேந ச |
யதோல்பேநாவ்ருதோ கர்பஸ்ததா தேநேதமாவ்ருதம் || 3.38

தூமத்தாற் றீயும் துகளாற் றருப்பணமும்
சேமக் கருப்பையா லேசிசுவும்- மாமை
அறப்பொதியப் பட்டதுபோல் ஆசையால் ஞானம்
உறப்பொதியப் பட்டிடுமென் றோர்

தூமத்தால் தீயும் துகளால் தருப்பணமும் (=கண்ணாடியும்) சேமக்கருப்பையாலே சிசுவும்- மாமை அறப்பொதியப் பட்டதுபோல் ஆசையால் ஞானம் உறப் பொதியப் பட்டிடும் என்று ஓர். (மாமை= அழகு)

(எவ்விதம் புகையால் நெருப்பும், அழுக்கினால் கண்ணாடியும் மறைக்கப்படுகின்றனவோ மேலும் எவ்விதம் கருப்பையினால் - தசைமூட்டத்தினால் கரு மறைக்கப்படுகிறதோ, அவ்விதமே அந்தக் காமத்தினால் இந்த ஞானம் மறைக்கப்பட்டிருக்கிறது.)

வேற ஜன்மம் எடுத்தாலும் உடலோடேயே எப்பவும் குணங்களும் வந்து கொண்டு இருக்கும். அதில இருக்கிற ரஜோ குணம்தான் இந்த காமத்தை தூண்டுகிறது. இந்த ரஜோ குணத்துக்கு வலிமை மத்த குணங்களைவிட அதிகம். இதனாலதான் காமும் அதிலேந்து வர குரோதமும் ரொம்பவே வலிவா இருக்கு.

அக்னியை புகை மூடினது போல – கொஞ்சம்தான் மறைப்பு, ஊதினா போயிடும். கண்ணாடியை அழுக்கு மூடினது போல. கொஞ்சம் அதிக மறைப்பு துடைச்சா போயிடும். கர்ப்பபை மூடி இருக்கிற சிசு. சிரமப்பட்டுதான் விலக்கணும். ஆபரேஷன் செஞ்சு குழந்தையை எடுக்கிறாப்போல.

நெருப்பு புகையால மூடப்பட்டு இருக்கு. இது ரெண்டும் ஒண்ணா கூடவேதான் வரும். புகை இருக்கிற இடத்திலே நெருப்பு இருக்கும். நெருப்பு இருக்கும் இடத்திலே புகை இருக்கும். அது போல ஆத்மாவோடயே காமமும் கூடவே வரும். அப்பதான் அது ஆத்ம உணர்வை மறைக்க முடியும். அதுதான் இயற்கை நியதி. அப்பதான் உலகம் என்று ஒன்றுக்கு வாய்ப்பு இருக்கும்.

ஞான வழியில இதை ஆவரண சக்தி என்கிறாங்க. அதை அப்புறம் பாக்கலாம்.

கண்ணடி அழுக்கால மூடப்படும். அதை துடைச்சுட்டா தெளிவா தெரியும். ஆனா தொடர்ந்து துடைச்சுகொண்டே இருக்காட்டா அது திருப்பியும் அழுக்காயிடும். அது போல திருப்பி திருப்பி ரஜோகுணத்தை அழிச்சு காமத்தை தொலைக்க, காமம் திருப்பி திருப்பி வந்து கொண்டேதான் இருக்கும்.

கர்ப்பம் கர்ப்பப்பையை உடைச்சு கொண்டு வெளியே வர வேண்டி இருக்கு. அது தானே அப்படி பண்ண முடியாது. தாய்க்கு பிரசவ வலி ஏற்பட்டு கர்ப்பப்பை சுருங்கி விரிய ஆரம்பிச்சுதான் அது வெளியே வரணும். அது போல காமத்தை விட்டு வெளியே வந்து ஆத்மாவை தெரிஞ்சுக்க வெளிலேந்து பகவானோட அனுகிரஹம் என்கிற ஒரு சக்தி வேணும்.

---

மதியம் திங்கள், நவம்பர் 24, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 22

ஆவ்ருதம் ஜ்ஞாநமேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா ।
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணாநலேந ச ॥ 3.39 ॥

கொள்ள நிரம் பாத கொடுந்தழலாய் ஞானியர்க்குத்
தள்ளரிய வெம்பகையாய்ச் சார்ந்திடுமிவ் - எள்ளரிய
ஆசையினால் ஞானம் அறப்பொதியப் பட்டிடுமே

தேசழிய நீயிதனைத் தேர்

கொள்ள நிரம்பாத கொடுந்தழலாய், ஞானியர்க்குத் தள்ள அரிய வெம்பகையாய்ச் சார்ந்திடும். இவ் - எள்ளரிய ஆசையினால் ஞானம் அறப்பொதியப் பட்டிடுமே. தேசு அழிய, நீ இதனைத் தேர்.

(மேலும் அர்ஜுன! த்ருப்தி அடையாத நெருப்பைப் போன்றதும் காமம் என்ற வடிவத்தில் உள்ளதும் ஞானிகளுக்கு என்றுமே பகைவனுமாகிய இந்தக் காமத்தினால் மனிதனுடைய ஞானம் மறைக்கப்பட்டிருக்கிறது.)

அதனால் அது போன போக்குக்கு விடக்கூடாது. அக்னி எவ்வளவு போட்டாலும் எரிகிற மாதிரி காமம் நிறைவே அடையாது. மேலும் மேலும் கிளம்பும். அனுபவிக்க அனுபவிக்க தீர்க்கவே முடியாது. "சீ இவ்வளவோதானா!" ன்னு தோணாது. அரிதாதான் அப்படி தோணும். இது அடுத்த ஜன்மாவிலேயும் தொடரும். கோடி ஜன்மத்திலேயும் போகாது. வளந்து கொண்டேதான் இருக்கும்.
ஞான வழியிலே கரை தேறிவிட்டவரை இங்கே சொல்லலை. அவர் காமத்தை ஜெயிச்சவர். ஞான வழில இருக்கிற நபருக்கு இந்த காமம்தான் என்னிக்குமே பகைவனா இருக்கு. அது ஆத்மா பத்திய அறிவை மறைக்குது. ஆனா உலக அறிவை மறைக்கலை. ஏன்னா அப்பதான் அவன் உலக விஷயத்திலே போய் சலனப்படுவான்? அததான் காமம் உத்தேசிக்கிறது.

இந்த்ரியாணி மநோ புத்திரஸ்யாதிஷ்டாநமுச்யதே ।
ஏதைர்விமோஹயத்யேஷ ஜ்ஞாநமாவ்ருத்ய தேஹிநம் ॥ 3.40 ॥

இந்தியங்களோடு மனம் புத்தி என்னுமிவை
சந்ததமும் காமம் தனக்கிடமாம் - முந்துமது
மற்றவற்றால் வாலறிவை மாய மறைத்துயிரை
முற்ற மயக்கிடுமே முன்

இந்தியங்களோடு மனம் புத்தி என்னும் இவை சந்ததமும் காமம் தனக்கு இடமாம் - முந்தும் அது மற்றவற்றால் வாலறிவை மாய மறைத்து உயிரை முற்ற மயக்கிடுமே முன்.

(புலன்கள், மனம், புத்தி இவையெல்லாம் இந்தக் காமத்தின் இருப்பிடம் என்று சொல்லப்படுகிறது. இந்தக் காமம்தான் மனம், புத்தி, புலன்களைக் கொண்டு ஞானத்தை மறைத்து ஜீவாத்மாவை மோகத்திற்கு உட்படுத்துகிறது.)

நம்மோட கண், காது, மூக்கு, நாக்கு, தோல் இதை எல்லாம் காமம் வசப்படுத்திக்கும். அதற்கு மேல் அது மனசை பிடிச்சுக்கும். சலனம் உள்ளது மனசு. சலனம் இல்லாதது புத்தி. மனசு ஏன் இவ்வளவு அலை பாயுதுன்னு கேக்கிறோம். சலனம்தான் அதோட முக்கிய குணம். புத்தி நல்லதாக இருக்கலாம். அல்லது கெட்டதாகவும் இருக்கலாம். "ஏண்டா புத்திகெட்டு அலையிற?" ன்னு கேட்கிறது உண்டு இல்லையா? அதே போல "அவனுக்கு ரொம்ப நல்ல புத்தி" ன்னு சொல்கிறோம். "அவனுக்கு ரொம்ப நல்ல மனசு" ன்னு சொல்கிறோம். இரண்டும் ஒண்ணு இல்லே. நல்ல புத்திசாலியா இருக்கிற ஆசாமியும் மனசு கொஞ்ச நேரம் கெட்டு போய் தப்பு செய்கிறது உண்டு. அடிக்கடி இப்படி ஆச்சுன்னா புத்தியே கெட்டு போயிடும். காமத்துக்கு நல்ல புத்தியை கெட்ட புத்தியாக்கிட சக்தி இருக்கு.
குறைந்த பட்சம் உடம்பைதான் நான் ன்னு நினைக்க வைக்குது. பல அனர்த்தங்களுக்கு அது போதாதா!

---

மதியம் செவ்வாய், நவம்பர் 25, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 23

தஸ்மாத்த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப |
பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாநநாஷநம் || 3.41 ||

ஆகையினால் ஐம்பொறியும் ஆர்த்தடக்கி ஆரமரில்
வாகைபெரு பாரதர்க்கு மாணரசே - மோகமுற
ஞானவிஞ்ஞா னத்தை நலிந்துபவத் திற்கேது
ஆனவிதை விட்டொழிவாய் ஆங்கு.

ஆகையினால் ஐம்பொறியும் ஆர்த்து அடக்கி ஆரமரில் வாகை பெரு பாரதர்க்கு மாணரசே மோகமுற ஞான விஞ்ஞானத்தை நலிந்து பவத்திற்று ஏது ஆன விதை விட்டொழிவாய் ஆங்கு.

(ஆகவே அர்ஜுன! நீ முதலில் புலன்களை வசப்படுத்தி ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் அழிக்கின்ற இந்தப் பெரும் பாவியான காமத்தை நிச்சயமாக வீறுடன் ஒழித்துவிடு.)
.

இந்த்ரியாணி பராண்யாஹுரிந்த்ரியேப்ய: பரம் மந: |
மநஸஸ்து பரா புத்திர்யோ புத்தே: பரதஸ்து ஸ: || 3.42 ||

இந்தியங்கள் மேலனவாம் என்றுறைப்ப இந்தியத்திற்
சிந்தைமிக மேலதனிற் சீருடைத்துப்-புந்திதான்
மன்னியவப் புந்தியினும் மாண்புடையான் அன்னானே
கன்னவிலும் தோளாய்நீ காண்

இந்தியங்கள் மேலனவாம் என்றுறைப்பர். இந்தியத்தில் சிந்தை மிக மேல். அதனிற் சீருடைத்துப்-புந்திதான் மன்னி, அவப் புந்தியினும் மாண்புடையான் அன்னானே கன்னவிலும் தோளாய் நீ காண்.

(புலன்கள் உடலைக் காட்டிலும் மேலானவை என்று கூறுகிறார்கள். அவை உயர்ந்தவை; பலமுள்ளவை; நுண்ணியவை. இந்தப் புலன்களைக் காட்டிலும் மனம் மேலானது. மனதைக் காட்டிலும் புத்தி மேலானது. மேலும் எது புத்தியைக் காட்டிலும் மிகவும் மேலானதோ அதுவே ஆத்மா.)

காமம் மட்டுமே திருடனா? வேற இருக்காங்களா? திருடங்க 4 பேர். இந்திரியங்கள், மனசு, புத்தி, காமம். முக்கியமானது காமம். மத்தவங்க கொஞ்சம் வலிவு குறைஞ்ச உதவியாளர்கள். இந்த்திரியங்களை விட மனசு வலிவானது. அதைவிட புத்தி வலுவானது. எல்லாத்தையும் விட காமம் வலியது.

முன் காலத்திலே ஒரு ராஜா இன்னொரு ராஜாவோட சண்டை போடுவார். அப்ப நேரிடையா மத்த ராஜாவை தாக்கமுடியாது. அவரை சுத்தி பல பேர் இருப்பாங்க. அவர்களை முதல்ல ஓரங்கட்டிதான் ராஜாகிட்டே போக முடியும். அப்புறம் அவரோட தேர்பாகனை தீத்து, தேரை உடைச்சு அப்புறமா ராஜா மேலே அம்பு போடுவாங்க. அது போலதான் இதுவும். நேரிடையா காமத்தை ஒழிக்கறது கஷ்டம். அதனால முதல்ல இந்திரியங்களை வசப்படுத்தி, மனசை புத்தியாலே ஜெயித்து அப்புறம்தான் காமத்தை ஜெயிக்கலாம்.

அப்ப காமத்தை ஜெயிக்க முதல்ல அதோட உதவியாளர்களை ஒழிக்கிறது போல இந்திரியங்கள், மனசு, புத்தியை கட்டுப்படுத்தணும். காலம், இடம் முதலியனவும் தடையா இருக்கலாம். ஆனா அவை ரொம்ப சின்ன தடைகள்.

ஏன் இந்திரியங்களை விரோதி என்கிறோம்?

கை கால் வலுவா இருந்தாதான் நல்ல விஷயங்களை செய்ய முடியும். காது நல்லதையே கேட்கணும். கண் நல்லதை பாக்கணும். ஆனா இவை எல்லாம் எப்பவுமே கெட்டதை நோக்கி போகப்பாக்கும். கெட்டதுக்குதான் இயல்பா ஈர்ப்பு அதிகம்.

ஆனாலும் இதை எல்லாம் ஓரளவு கட்டுப்படுத்தலாம். கெட்டதை கேட்கிற காதை மூடிக்கலாம். கெட்டதை பேசற வாயை மூடிக்கலாம். இப்படி கர்மேந்த்ரியங்களை ஓரளவு கொஞ்ச திடமா இருந்தாலே கட்டுக்கு கொண்டு வரலாம். ஆனா மனசை எதால மூட முடியும்? அதை ஒரு வழியா தூங்க வெச்சாலும் உள்ளுக்குள்ளே சில விஷயங்களை அனுபவிக்கணும் என்கிற உறுதி இருக்கும்.

தூங்கறோம். அப்ப மனசு ஓய்வெடுக்க போயிடுத்து. எழுந்திருக்கிறோம். அப்ப சரி நல்ல விஷயங்கள்லே ஈடு படுவோம்ன்னு மனசுக்கு தோணுமா? பழைய படி பல பழக்கமான விஷயங்கள்லேதான் மனசு போகும். ஏன்னா இதைதான் வேணும்ன்னு நாம உறுதியா உள்ளே நினைக்கிறோம். உறுதியா இருக்கிற இதுதான் புத்தி. இந்த உறுதி எங்கேந்து வந்தது? ஜன்ம ஜன்மமா பின்னாடியே வருது. இதைதான் வாசனை என்கிறோம்.

ஒரு வேளை பல விஷயங்களை யோசிச்சு புத்தியை திடப்படுத்திக் கொண்டோம்னாலும் காமம் தடையா இப்ப இருக்கு. அதையும் கட்டுப்படுத்தணும்.

இப்படி எல்லாத்தையும் கட்டுப்படுத்தணும்ன்னு சொல்லியாச்சு சரி, ஆனா எப்படி செய்கிறது,?

இந்திரியங்கள், மனசு, புத்தி இவற்றை கர்ம யோகத்திலே ஈடுபடுத்தி வேலை கொடுக்கணும். இந்திரியங்களை கர்ம யோகத்திலே ஈடுபடுத்தி திசை திருப்பி விடலாம். வேலை இல்லாத ஆசாமிதானே ஏதாவது போட்டு உழப்பிண்டு பிரச்சினைகளை உண்டு பண்ணுவான்? வேலையிலே ஈடு படுகிற ஆசாமிக்கு மத்ததைப்பத்தி யோசிக்க நேரம் இல்லை. ஏதாவது பாக்கணுமா பகவானை பார். கேட்கணுமா, பகவான் நாமத்தை கேளு - இப்படி அதை எல்லாம் திசை திருப்பி கட்டுப்படுத்தலாம்.

ரஜோ குணத்தை சாப்பாட்டை கட்டுப்படுத்தி அதனால கொஞ்சம் மாத்தலாம். அப்ப மனசு சத்துவத்திலே நிக்கும். புத்தியும் நல்லதாகிடும். இப்படி எல்லாம் செய்ய காமத்துக்கு துணையா இருக்கிற கருவிகள் இல்லாம போயிடும். இருக்க இடமே இல்லாம காமமும் ஒழிஞ்சுபோகும்.

---

மதியம் செவ்வாய், நவம்பர் 25, 2008

பரிட்சை!

பயப்படதீங்க ! பரிட்சை எனக்குத்தான்! :-)

நாளைய பதிவோட கர்ம வழி ஒரு வழியா நிறைவுக்கு வரும். ஆரம்பிச்சப்ப இவ்வளவு விரிவா எழுத நினைக்கவே இல்லை. அது பாட்டுக்கு இழுத்து கொண்டு போய்விட்டது. ம்ம்ம்ம்.. சரி, இவ்வளோ நாள் எழுதினோமே புரிகிறா மாதிரி எழுதினோமா என்ன ன்னு ஒரு சின்ன சந்தேகம். அதனால ஒரு பரிட்சை.
இந்த கர்ம வழி பதிவுகளை படிச்சதிலேயும் முன்னமே தெரிந்ததிலேயும் சுருக்கமா (ஒரு 500 வார்த்தை?) அதைப்பத்தி உங்க வார்த்தைகளிலேயே எழுதுங்க. what is your take on karma yoga?) அதை படிச்சா நான் ஒழுங்கா வேலை செஞ்சேன்னான்னு தெரிஞ்சுடும். பின்னூட்டமாவும் இடலாம். தனி அஞ்சலாவும் அனுப்பலாம். இல்லை உங்க ப்ளாக்லேயும் எழுதலாம். எப்படி வேண்ணா பண்ணலாம். நேரமில்லைன்னு கட் அடிக்கப்படாது அம்பி, சொல்லிட்டேன்!
அனுப்ப கடைசி நாள் வருகிற ஞாயிறு இரவு (இந்திய நேரப்படி).
மின்னஞ்சல் அனுப்பறவங்க எழுதறதை வெளியிடலாமா கூடாதான்னும் அவங்க குறிப்பு எழுதணும். வேண்டாம்ன்னு எழுதாட்டா அதில இருக்கறது வெளீயிட்டாலும் வெளியிடுவேன்.
திங்கள் கர்ம யோகம் பத்தி என்னோட ஸம்மிங் அப் இருக்கும். செவ்வாய் பரிட்சை ரிசல்ட்!
(பிள்ளையாரே, உனக்கு ஒரு தேங்காய் உடைக்கிறேன், நான் பரிட்சைலே பாசாகணும்!)

---

:-))

---

மதியம் புதன், நவம்பர் 26, 2008

கண்ணன் காட்டும் கர்ம வழி -- 24

ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மாநமாத்மநா |
ஜஹி ஷத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்|| 3.43 ||

புத்தியிலும் மேலாம் பொருளையறிந் திவ்வண்ணம்
சித்தமதை ஆன்மாவாற் றீதறவே - வைத்தடக்கிக்
காமமெனும் வெய்ய கடத்தற் கரும்பகையை
நாமநெடு வேலாய் நலி.

புத்தியிலும் மேலாம் பொருளை அறிந்து இவ்வண்ணம் சித்தம் அதை ஆன்மாவால் தீது அறவே - வைத்தடக்கிக் காமமெனும் வெய்ய கடத்தற்கு அரும் பகையை நாம நெடு வேலாய் நலி.

(நீண்ட புஜங்களுடையவனே! இவ்விதம் புத்தியைக் காட்டிலும் ஆத்மா மிகவும் மேலானவன்; நுண்ணியவன்; பலம் உள்ளவன் என்று அறிந்து புத்தியினால் மனதை வசப்படுத்தி, காமம் என்ற வெற்றி கொள்ள முடியாத சத்ருவைக் கொன்றுவிடு.)

{இந்த பதிவு கொஞ்சம் அரைச்ச மாவை அரைக்கிறாப்போல இருக்கலாம். முன் பதிவு விஷயமே கொஞ்சம் வேற மாதிரி சொல்லி இருக்கு. கருத்து பலமா பதியணும்ன்னுதான்.}

காமம் என்கிறது ஒரு எதிரி. சீவன் ராஜா போல. சரீரம் என்கிறது தேசம் போல. மனசு, புத்தி இந்திரியங்கள் என அவன் கீழ் ஒத்தருக்கு ஒத்தர் கீழ் வேலைக்காரர்கள். இந்திரியங்கள் பிரதேசம் போல. மனசு மேலே உள்ள சேனாபதி. புத்தி அதுக்கு மேலே உள்ள மந்திரி. ராஜாவா சீவன். ஒரு தேசத்தை கைபத்தனும்மா மெள்ள உள்ளே வர இன்னொரு தேசம் போல, காமம் கண் காது போன்ற இந்திரியங்களை சுவாதீனப்படுத்திக்கொண்டு ஒவ்வொவொன்னா ஆக்கிரமிக்கும். இந்திரியங்கள் வழியா மத்ததை ஆக்கிரமிக்கும். முதல்ல மந்திரியையோ சேனாதிபதியையோ கைல போட்டுக்கிற போது எல்லாரும் சேந்து அப்புறம் ராஜவை கவுக்கிறா மாதிரி, மந்திரி சேனாதிபதி போன்ற மனசையும் புத்தியையும் சுவாதீனப்படுத்தினா ராஜாவை கவுத்துடலாம். ராஜா எப்படி மந்திரி சேனாதிபதியை தன் பக்கம் வெச்சு இருக்கிற வரை தன் பிரதேசத்தை மத்தவங்க ஆக்கிரமிக்கவிடாம தடுக்க முடியுமோ அப்படி சீவன் மனசையும் புத்தியையும் தன் வசம் வைத்து இருந்தா, காமம் இந்திரியங்களை பிடிக்காம தடுத்துடலாம். ஆனா சாதாரணமா சீவன் அப்படி மனசையும் புத்தியையும் வெச்சுக்கலியே? அவங்க துரோகியா இல்ல இருக்காங்க! அப்ப ஒண்ணு தன் பலத்தை நினைத்து நம் தயவு இல்லாம இவை வேலை செய்ய முடியாதுன்னு புரிஞ்சு அவற்றை அடக்கணும். தன்னை அல்பமா நினைக்கக்கூடாது. முயற்சியை அதிகப்படுத்தி அவங்களை வசப்படுத்தணும் அல்லது தன்னைவிட கூடுதல் பலத்தை வேண்டணும். அது பகவான்தான்.

உறுதியா நிக்கிற புத்தி என்ன சொல்லுகிறதோ அப்படிதான் மனசும் கேக்கும். புத்தியைவிட வலுவா இருக்கிறது ஆத்மாதான். இதை புரிஞ்சு கொண்டு புத்தியால மனசை ஜெயிக்கணும். அப்படி செஞ்சா காமம் காணாமல் போயிடும்.

அனாதி காலமா செய்து வருகிறவை எல்லாம் வாசனைகள். இவை சின்ன விதை மாதிரி. அவை ரஜோ குணம் என்கிற தண்ணி ஊத்தறதால காமம் என்கிறதா முளைக்கும். காமம் இந்திரியங்கள், மனம், புத்தி மூணையும் வசப்படுத்துறதால ஆத்ம விஷயத்தை மறைக்கும். அதில ஈடுபடாமல் மனசுக்கும் புத்திக்கும் தப்பான வழியை காட்டும்.

---

இதை ஜெயிக்க காமத்தோட வேலையாளுங்களுக்கு வேற வேலை கொடுக்கணும். அதாவது இந்திரியங்கள், மனசு, புத்தி இவைகளுக்கு வேற வேலை தரணும். இதுதான் கர்ம வழி.

உணவை கட்டுப்படுத்தி ரஜோ குணத்தை குறைக்கணும். விருப்பு வெறுப்பு குறையும். அப்ப காமத்துக்கு தண்ணி ஊத்த ஆள் இல்லாம போயிடும். அப்ப வாசனைகள் முளை விடறதை தடுக்கலாம்.

பகவானையும் வேண்டிக்கணும். அப்ப அவர் நம்மோட இருக்கிற காமத்தை தொலைப்பார். காமம் இல்லைனா பாவம் பண்ண மாட்டோம். பாவம் இல்லைனா வாசனை போயிடும். இப்படி 3-4 வழில ஜெயிச்சுடலாம்.

---